# கிராமங்களுக்கு

## வசதி

## கிராம நலம்

ாண்டுகளில்

க்குள்]

மீதியுள்ள
4441 கிராமங்களுக்கும்,
குடிநீர் வசதி

ாங்களுக்கும்,

திக் குறையும் இல்லாமல்,

் வசதிகள்

ழுவதிலும்,

சாயத்துக்களின்

கை:

,000.

தொகை:

ES & HAMLETS

ள் உள்பட)

1



குடிநீர் கிணறுகள் உள்ள கிராமங்கள்:
(மஜிரா கிராமங்கள் சேர்த்து)

**50,090.**




## தமிழ் நாட்டின் தலைநகரில்
## குடியரசு தின விழா—

அலங்கார அணிவகுப்பில் ஒரு காட்சி (காலத்திற்கேற்ற கடமையை நினைவூட்டும்)

கிராமநலம்

கதிர் 12 பிப்ரவரி, மார்ச் 1967 நெல் 5-6

# முன்னேறும் தமிழகத்தின்

தமிழ்நாடு சென்ற பதினைந்து ஆண்டுகளில், பல்வேறு துறைகளிலும், சிறப்பான முன்னேற்றம் அடைந்திருக்கிறது. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் விளைவாக, விவசாய வளர்ச்சியிலும், மின்சாரம், பாசனம், கல்வி முதலிய வசதிகளிலும் தமிழகத்தின் சாதனைகள், தேசிய சராசரியைக் காட்டிலும் மிக உயர்ந்து நிற்கின்றன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மாநிலத்தில் மத்திய திட்டங்களையும் சேர்த்து, மொத்தம் ரூ. 600 கோடிக்கு மேல் செலவிடப்படும். பல்வேறு துறைகளிலும், சீரான வளர்ச்சிக்கு, இது வழி வகுக்கும்.

## பொன்னான வாய்ப்புகள்

விவசாய வளர்ச்சிதான், மாநிலப் பொருளாதாரத்தின் ஜீவநாடியாக விளங்குகிறது. திட்டமிட்ட அபிவிருத்தி ஆரம்பமாகும்வரை, மாநிலம், உணவு தானியங்களில் பற்றுக் குறைப் பிரதேசமாகவே இருந்துவந்தது. சென்ற பத்து ஆண்டுகளில் நமது முயற்சிகளின் பயனாக நிலைமை வெகுவாக மாறிவிட்டது. சாதாரணமாக, மழை இருக்கும் ஆண்டில் ஓரளவு உபரியாகவே தானிய உற்பத்தி செய்யும் நிலையை மாநிலம் அடைந்திருக்கிறது.

முதல் ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தில், மாநிலத்தின் உணவு உற்பத்தி, சுமார் 38 லட்சம் டன்கள்தான். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்கு ஓர் ஆண்டுக்கு முன்பே தானிய உற்பத்தி 58 லட்சம் டன்களாக உயர்ந்தது. முக்கியமான பயிர் வகைகளின் ஏக்கர் விகித மகசூலும் கணிசமாக உயர்ந்திருக்கிறது. பெரிய, சிறிய பாசனத் திட்டங்களைத் தவிர்த்து, உயர்தர விதைகள், ரசாயன உரங்கள் முதலியனவும் உற்பத்திப் பெருக்கத்துக்குப் பேருதவியாக இருந்தன. முதல் திட்ட ஆரம்பத்தில், மாநிலத்தின் ரசாயன உர உபயோகம், அம்மோனியம் சல்பேட்டைப் பொறுத்தவரையில், 50,000 டன்னாக இருந்தது. மூன்றும் திட்ட முடிவில் இந்த உர உபயோக அளவு 3·6 லட்சம் டன்னாக, அதாவது 7 மடங்காக உயர்ந்தது. அரசாங்கம் முயன்று இந்த வசதியை ஏற்படுத்திக் கொடுத்தது. விவசாயிகளும் இந்த வசதியைப் பாங்குறப் பயன்படுத்திக்கொண்டனர்.

### தீவிர சாகுபடித் திட்டம்

நோய் நொடிக்கு இலக்காகாமல் அதிகமான பலனும் அளிக்கும் ஏ.டி.டி 27 போன்ற புதிய உயர்தர விதைகள், அமோகமான மகசூல் அளிக்கின்றன. நான்காம் திட்டக்காலத்தில் இத்துறையில் விஸ்தரிப்பு வேலைகள் தீவிரமாக்கப்படும். நெல் சாகுபடி நிலங்களில் 60 லட்சம் ஏக்கரிலும் புன்செய் தானிய சாகுபடி நிலங்களில் 28 லட்சம் ஏக்கரிலும் பொறுக்கு விதைகளைப் பயன்படுத்தும்படியான அளவில், அபிவிருத்தி வேலைகள் நிறைவேற்றப்படும்.

ஊரெங்கும் பாசனக் கிணறுகளுக்கு மின்சார பம்பு செட்டு அமைத்திருப்பது, தமிழ் நாட்டின் மிக முக்கியமான அபிவிருத்தி வேலைகளில் ஒன்றாக விளங்குகிறது. முதல் திட்ட ஆரம்பத்தில் சுமார் 14,000 கிணறுகளில்

தான் மின்சார பம்பு செட்டு வசதி இருந்தது. மூன்றும் திட். முடிவில் இந்த வசதிபெற்ற கிணறுகள் எண்ணிக்கை கிட்டத்தட்ட இரண்டரை லட்சமாக உயர்ந்திருக்கிறது. எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி அளித்தாக வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை. நான்காம் திட்டக் காலத்தில் மேற்கொண்டு இரண்டரை லட்சம் கிணறுகளுக்கு மின்சார சப்ளை அளிக்கப்படும்.

**சலுகைகளும் உண்டு**

விவசாயிகளுக்கு மின்சார வசதி தந்தது மட்டுமல்ல, கட்டணச் சலுகைகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன. விவசாயிகளிடமிருந்து யூனிட்டுக்கு 8·25 காசுதான் வசூலிக்கப்படுகிறது. விசேஷ குறைந்தபட்ச உத்தரவாதத் தொகை கேட்பது நிறுத்தப்பட்டிருக்கிறது. சப்ளை முறையில் நேரக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன. இந்தச் சலுகைகளின் விளைவாக, மாநிலத்தில் இறைவைப் பாசன வசதி மேலும் பெருக வழி ஏற்பட்டுள்ளது. மின்சார வசதி கிடைக்காத ஒரு சில இடங்களில், நீர் இறைக்க டீசல் பம்பு செட்டுகளை அமைப்பதில் விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கப்படும். டீசல் பம்பு செட்டுகள் விலை ஏறுத படி தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**கிணறு வெட்டும் யந்திரம்**

தற்போதுள்ள பாசனக் கிணறுகளுக்கு மின்சார வசதி அளிப்பதோடு, புதிதாக ஏராளமான கிணறுகளையும் குழாய்க் கிணறுகளையும் வடிமுனைக் கிணறுகளையும் அமைக்க ஒரு பெருந்திட்டம், நிறைவேற்றப்படும். நான்காம் திட்டத்தில் மாநிலத்தில் சிறுபாசனம் சம்பந்தப்பட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்காக சுமார் 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மூன்றும் திட்டக் காலத்தில் இந்த வகையில் செலவிட்டதுபோல இது இரண்டு மடங்கு ஆகும். வேறு உதவி இல்லாமல் சுய முயற்சியில் கிணறு வெட்டும் குடியானவர்களுக்கு உதவவும் ஒரு தனி ஏற்பாடு செய்யப்படுகிறது. இத்திட்டப்படி, கிணறு தோண்டும் துளை யந்திர சாதனங்களைக் கொண்ட தொழில் நுட்பக் குழுக்கள் ஏற்படுத்தப்படும். சாதாரண பாசனக் கிணறுகளையும் ஆழமான குழாய்க் கிணறுகளையும் தோண்டுவதில் இவர்கள் உதவி புரிவார்கள். கட்டிடம் கட்டி காரை போடுவது போன்ற வேலைகளை, அந்தந்த விவசாயிகள் கவனித்துக்கொள்ளலாம்.

நான்காம் திட்டக்காலத்தில் மேற்கொண்டு புதிதாக 12 லட்சம் ஏக்கருக்கு பாசன வசதி ஏற்படுத்துவதின் மூலம், விவசாயிகள், வானத்தை நம்பியிருக்கும் நிலை மாறும்; ஸ்திரமான வருவாய் கிடைக்க வழி ஏற்படும். பாசன வசதி பெருகுவதைத் தொடர்ந்து, ரசாயன உரம் உபயோகிப்பதில் நாட்டம் அதிகரிக்கும். இயற்கை உரங்களோடு ரசாயன உரங்களைச் சீரான முறையில் உபயோகித்தால் மிகக் குறைந்த காலத்தில் உற்பத்தியைக் கணிசமாக அதிகரிக்க இயலும். நீரும் உரமும் மட்டுமல்ல; உற்பத்தியைப் பெருக்குவதில் மண் கூறு ஆராய்ச்சியும் குறிப்பிடத்தக்க ஒன்று. விரிவான அளவில் மண் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, எந்த மண்ணுக்கு எந்த உரம் ஏற்றது என்பதில் விவசாயிகளுக்கு ஆலோசனைகள் கூறப்படும். மண் கூறு பரிசோதனைக்காக, மோட்டார் யூனிட்டுகளைப் பரவலாகப் பயன்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**விவசாய யந்திரங்கள்**

மாநிலத்தில் ரசாயன உர விநியோகத்துக்காக ஏற்கெனவே 4,000 இடங்களில் சில்லறை விற்பனை வசதி உள்ளது. ஆங்காங்கே மாட்டு வண்டிகள் எளிதில் வந்து பெற்றுப்போகும் வண்ணம், இந்தக் கிளைகளின் தொகை அதிகரிக்கப்படும். பயிர்ப்பாதுகாப்பு அணிகள் அமைக்கப்படும். பயிர்ப் பாதுகாப்புப் பரப்பு 22.5 லட்சம் ஏக்கரிலிருந்து 48 லட்சம் ஏக்கராக அதிகரிக்கும். சலுகை விலையில் நவீன விவசாயக் கருவிகள் வழங்கும் முறை நான்காம் திட்டக் காலத்தில் மேலும் விரிவடையும். அண்மையில் அமைக்கப்பட்ட விவசாயத் தொழில் கருவிகள் கார்ப்பரேஷன், குடியானவர்களுக்குத் தேவைப்படும் யந்திரக் கருவிகளை உருவாக்கிக் கொடுப்பதில் தனிக் கவனம் செலுத்தும். மின்சார மோட்டார்கள், பம்பு செட்டுகள், டிராக்டர்கள் ஆகியவைகளை விரைவில் பழுது பார்த்துக் கொடுக்கவும், யந்திர விவசாய முறை துரிதமாகப் பரவவும் வசதியாக தொழில்துறையின் உற்பத்திக் கூடங்களிலும், கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களிலும் பழுதுபார்க்கும் பிரிவுகள் ஏற்படுத்தப்படும்.

புதிதாக பாசன வசதி பெறும் பிரதேசங்களில் பருத்தி, எண்ணெய் வித்துக்கள் போன்றவைகளின் சாகுபடியை அரசாங்கம் ஊக்குவிக்கும். வசதியான இடங்களில் உருளைக் கிழங்கு, இதர கிழங்கு வகைகள் ஆகியவற்றின் சாகுபடிக்கு ஊக்கமளிக்கப்படும். விவசாயம் இப்படிப் பல கிளைகளிலும் செழித்து வளர்ந்தால், தொழில் நுட்பம் தெரிந்தவர்கள், சாதாரண தொழிலாளர்கள் பலருக்கு வேலை வசதி ஏற்படுவதோடு, விவசாயிகள் வருமானமும் அதிகரிக்கும்.

**கடன் வசதி**

நான்காம் திட்டத்தில் எண்ணியபடி, தீவிர விவசாய அபிவிருத்தி ஏற்படவேண்டுமானால், விவசாயிகளுக்குப் போதிய கடன் வசதி செய்வது இன்றியமையாதது என்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. ஏற்கனவே கண்டுள்ள சாதனைகள் மிகச் சிறப்பானவை. இரண்டாம் திட்ட ஆரம்பத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய கடன் சுமார் 6 கோடி ரூபாய். மூன்றும் திட்ட முடிவில் இத்தொகை அளவு ரூ. 50 கோடியாக உயர்ந்திருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் குறுகிய கால, நடுத்தரக் கால கடன் வசதி, நான்காம் திட்டக் காலத்தில் ரூ. 80 கோடி என்ற அளவுக்கு உயரும். கூட்டுறவு இயக்கத்தில் அதிக உறுப்பினர்கள் சேர்க்கப்படுவார்கள். குறிப்பாக குத்தகை சாகுபடியாளர்கள் அதிக அளவில் சேருவதற்கு இடமேற்படும். சிறு விவசாயிகளின் ரசாயன உரத் தேவைகளுக்கும் மின்சாரக்கட்டணச் செலவுகளுக்கும் கடன் உதவி தர ஒரு தனித் திட்டம் தொடங்கப்படும். இப்படி வழங்கப்படும்கடனை, விவசாய மகசூல் எடுத்த பின்பு திருப்பிச் செலுத்தலாம். அரசாங்க வர்த்தகத் திட்டத்தின்கீழ் குடியானவர்களின் விளைபொருள்களை வாங்கிக்கொள்ள வசதி செய்யப்படும்.

[45-ம் பக்கம் பார்க்க]

# வறண்ட பூமிக்கு ஒரு வானமுதம்!

பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டம், தமிழ் நாட்டின் வரண்ட பகுதிக்கு ஒரு வானமுதம்! கோவை மாவட்டத்தின் தென் பகுதியில் மழை குறைந்து, வரட்சி மிகுந்து கிடந்த நிலப்பரப்பில் 2·4 லட்சம் ஏக்கர் பாசனம் பெறுவது, இத்திட்டத்தின் முக்கியமான ஒரு பயன்.

### புதுமையான திட்டம்

இந்தத் திட்டம் இந்தியாவிலேயே ஒரு புதுமையான திட்டம். மலைகளிலும் மேடுகளிலும் ஓடும் எட்டு ஆறுகளின் நீர், எட்டு அணைகள் மூலம் இணைக்கப்பட்டு, சிதறிக் கிடந்த நீர்வளம் ஒன்று திரட்டப்பட்டுள்ளது. மலையின் மேற்குச் சரிவில் இறங்கிக் கொண்டிருந்த ஆற்று நீர், சுரங்கக் குடைவுக் கால்வாய்கள் மூலம் மலையின் கிழக்குச் சரிவுக்குத் திருப்பப்பட்டுள்ளது. பாசன இஞ்சினீரிங்கில் இது ஒரு பெரிய சாதனை.

### ஒத்துழைப்பின் அற்புத சின்னம்

முதல் இரண்டு திட்டக் காலங்களில் தமிழ் நாட்டில் ஆற்று நீர் வளங்கள் அனைத்தும் பயன்படுத்தப்பட்டு விட்டன. ஆனால் அப்படியும் விவசாயப் பெருக்கத்துக்காக பாசனத் தேவைகள் வளர்ந்தபடி இருந்தன. குறிப்பாக, கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பல்லடம், தாராபுரம் வட்டங்களின் வரட்சியும் வாட்டமும் தீரவில்லை. இதை யொட்டி தமிழ்நாடு, கேரளம் ஆகிய இரண்டு மாநிலங்கள் வழியாக ஓடும் ஆறுகளைப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கேரள அரசாங்கமும் ஒத்துழைத்தது. அதைத் தொடர்ந்து மாநிலங்களுக்கிடையே ஒத்துழைப்பின் அற்புதச் சின்னமாக, பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டம் உருவெடுத்தது.

### துன்பம் தீர்ந்தது

இத்திட்டத்தின் ஆயக்கட்டாக அமையும் நான்கு வட்டங்களும் பன்னெடுங் காலமாக வரட்சியின் கொடுமை முழுவதையும் கண்டவை. இங்கு சில பகுதிகளில் ஆண்டு சராசரி மழை 22 அங்குலத்துக்கும் குறைவு. அவ்வப்போது நேரும் மழையில்லாப் பஞ்சத்துக்கு இப்பகுதியே முதல் இலக்காக நின்றது. எனவே மக்கள் கடும் உழைப்பாளிகளாக இருந்தும்கூட, தீராத கஷ்டம் நீடித்தது.

இயற்கையின் இப்போக்கை மாற்றியமைக்க, தமிழ்நாடு அரசாங்கம் மேற்கொண்ட பெரும் முயற்சியின் வடிவம் தான் பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டம். மற்ற பாசனத் திட்டங்களில் ஓர் ஏக்கருக்கு பாசனம் கிடைக்க ஆன முதலீட்டுச் செலவு சுமார் ஆயிரம் ரூபாய் அல்லது அதற்கும் குறைவு. ஆனால் மக்கள் கஷ்டம் தீரவேண்டும் என்பதற்காக ஏக்கருக்கு ரூ. 1,612 என்ற அளவில் செலவு பிடிக்கும் இத் திட்டவேலை மேற்கொள்ளப்பட்டது. திட்ட மொத்தச் செலவு ரூ 59 கோடி.

இத்திட்டத்தின் விளைவாக, தமிழ்நாட்டின் விவசாய பாசன வளத்தில் புதிய சகாப்தம் ஆரம்பமாகிறது நான்கு வட்டங்களில் விவசாயிகள் புன்செய் தானியங்களையும், நிலக்கடலை, பருத்தி ஆகியவைகளையும் வானம் பார்த்த பயிராக, வேளாண்மை செய்யும் நிலைமாறத் தொடங்கிவிட்டது. புன்செய்ப் பயிர்களுக்குப் பாசன வசதி கிடைக்கிறது. உழைப்பவர்கள் தங்கள் உழைப்பின் முழுப் பயனையும் பெற வழி பிறந்துவிட்டது.

திட்டத்தினல் அதிகமான நிலப்பரப்பும், அதிகமான மக்களும் பயனடைய வேண்டும் என்பதற்காக, சுமார் 20 சதவிகித ஆயக்கட்டுதான் நன்செய் ஆக மாறும். மற்ற நிலங்கள் பாசனம் பெறும் புன்செய் ஆக விளங்கும். கேரள மாநிலத்தில் சித்தூர் பகுதிக்கும் ஓரளவு பாசனம் கிடைக்கும்.

### ஆறு தேக்கங்கள்

இரண்டாம் திட்டக் காலத்

---

கோவை மாவட்டத்தில் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் உருவாக்கப்பட்டு, அத் திட்ட வேலையின் நிறைவு ஆரம்ப விழா, ஜனவரி 12–ம் தேதி நடைபெற்றது. இந்த அணைத் திட்ட வேலைகளை 1961-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7–ம் தேதியன்று அமரர் நேருஜி துவக்கி வைத்தார்.

நீர்த் தேக்கங்களும், நீர்ச் சுரங்கங்களும், கால்வாய்களும் அமையப் பெற்ற பரம்பிக்குளம்—ஆளியாறு அணை, தென்னிந்தியாவின் பாசன ஆதார வளர்ச்சியில் ஒரு முக்கிய மைல் கல்லாகும். மாநிலங்களுக்கிடையேயான ஆறுகளை, பரஸ்பர ஒத்துழைப்புடன் பாசனத்திற்குப் பயன்படுத்துவதில்; கேரள மாநிலமும் தமிழ்நாடும் இணைந்து நின்ற தேசிய ஒருமைப்பாட்டுணர்வுக்குச் சிறந்த சான்றாகும்.

---

தில் இத்திட்ட வேலை மேற்கொள்ளப்பட்டது. மூன்றும் திட்டக்காலத்தில் தொடர்ந்து வேலைகள் நடைபெற்று, பெரும்பகுதி வேலைகள் முடிவடைந்துவிட்டன. இத் திட்டத்துக்கு உட்பட்ட எட்டு ஆறுகளில் பரம்பிக்குளம், தூணக்கடவு, திருமூர்த்தி, ஆளியாறு ஆகியவைகளுக்கு அணைகள் கட்டப்பட்டுவிட்டன. ஆளியாறு தேக்கம் 1962-லேயே பாசனத்துக்குத் திறந்து விடப்பட்டது. அணைத்தேக்க வேலைகள் நடை பெற்று வரும்போதே பாசனத்துக்கு நீர் விடுவது இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இவ்வாறு நீர் விடுவது ஆரம்பமுதல் தமிழக அரசாங்கத்தின் நடைமுறைக் கொள்கையாக இருந்து வருகிறது. சோலையாறுக்குக் குறுக்கே மிகப் பெரிய அணை உருப்பெற்று வருகிறது, 1967-ம் ஆண்டு இறுதியில் சோலையாறு தேக்கம் பூர்த்தியாகும். பெருவாரிப் பள்ளம் தேக்க வேலை ஆரம்பமாகியிருக்கிறது. நீராறு, தேக்கடி அணை வேலைகள் கேரள அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் விரைவில் ஆரம்பிக்கப் படும்.

இந்தத் திட்டத்தில் திருமூர்த்தி தேக்கம், மொத்தம் 1,87,281 ஏக்கருக்குப் பாசனம் அளிக்கும். ஆளியாறு தேக்கம் 45,451 ஏக்கருக்குப் பாசனம் தரும். இதர சிறு அமைப்புகள் மூலம் 7,208 ஏக்கர் நீர் வசதி பெறும். பரம்பிக்குளம், சோலையாறு ஆகிய தேக்கங்கள் மற்ற தேக்கங்களுக்கு நீரைத் தருபவை.

திட்டத்துக்கு மொத்தச் செலவு ரூ. 58·85 கோடியில் ரூ. 37 கோடி பாசன கட்டுமான வேலைகளுக்கும் 21·85 கோடி மின்சார உற்பத்திக்கும் பயன்படும். இதில் மூன்றும் திட்ட இறுதிவரை பாசன வகையில் ரூ. 30·30 கோடி செலவிடப்பட்டிருக்கிறது. தற்சமயம் பாசனம் பெற்றுள்ள பரப்பு சுமார் 24,000 ஏக்கர்.

**அரிய சாதனை**

இத்திட்டத்தில் ரத்தநாளம் போன்ற 'காண்டூர் கால்வாய்' பாசன இஞ்சினீரிங் துறையில் ஓர் அரிய சாதனை. நில மட்டத்திலிருந்து 300 அடி உயரத்தில் கரடுமுரடான மலைச்சரிவில், மலை இடுக்குகள்; பள்ளத் தாக்குகளைக் கடந்துவரும் இக்கால்வாயின் நீளம் 33 மைல். இந்த மலைக் குடைவுக் கால்வாய், நீர் இல்லாத போது ஒரு மோட்டார் தாராளமாகப் போகக்கூடிய அளவில் அமைந்துள்ளது. ஓரங்களில் பலமான சிமெண்ட் கான்கிரீட் போடப்பட்டிருக்கிறது.

இப்போது கட்டி முடிக்கப்பட்டுள்ள பரம்பிக்குளம் தேக்கம்தான், இத்திட்டத்திலேயே மிகப்பெரிய தேக்கம். இது 1,782 கோடி கன அடி நீரைத் தேக்கும் திறன் உடையது. இத்தேக்கத்தில் நீர்ப்பிடிப் பரப்பு 89 சதுர மைல். அப்பகுதியில் ஆண்டு ஒன்றுக்கு 90 அங்குல மழை பெய்கிறது. திருமூர்த்தி தேக்கம் 183 கோடி கன அடி நீரைத் தேக்க வல்லது.

**சர்க்கார்பதி மின்சாரம்**

சோலையாறு குடைவுக் கால்வாய் முடிவில் 1,300 அடி உயரத்திலிருந்து இறங்கும் நீரை மின்சார உற்பத்திக்குப்

[6-ம் பக்கம் பார்க்க]

## சத்துணவு விஸ்தரிப்புத் திட்டம்

## (APPLIED NUTRITION PROGRAMME)

**குறிக்கோள் :**

நமது மாநில அரசாங்கம், சர்வதேச உணவு விவசாய ஸ்தாபனம், உலக சுகாதார ஸ்தாபனம், குழந்தைகள் சேமநல நிதி ஸ்தாபன (UNICEF) உதவிகளுடன் பஞ்சாயத்து மூலமாக, மக்கள் தங்களுக்குத் தேவையான சத்தான உணவுகளைத் தங்கள் சுய முயற்சியால் வீடுகள் தோறும், கிராமங்கள் தோறும் உற்பத்தி செய்து, சத்தான உணவை உட்கொண்டு, உடல் நலத்தைப் பேணி, நாட்டைக் காக்கும் பணிக்குத் திடகாத்திரமான வீரராக விளங்குவதோடு, நமது வருவாயையும் பெருக்குவதற்காக செயல்படுத்திவரும் சிறந்ததொரு திட்டம், இது.

**செயல்படும் முறை :**

இத்திட்டத்தின் கீழ், கிராமங்கள் தோறும், பள்ளிக்கூடங்களிலும் வீடுகளிலும் காய்கறித் தோட்டங்கள் அமைத்தும் கோழிப் பண்ணைகள் அமைத்தும், கிராமங்கள் தோறும் உள்ள குளம், குட்டைகளில் மீன் வளத்தைப் பெருக்கியும் கர்ப்ப ஸ்திரிகளுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் இரண்டு முதல் ஐந்து வயது வரையுள்ள குழந்தைகளுக்கும் காய்கறிகள், முட்டை, மீன், பால் விநியோகம் செய்து நாளடைவில் இச்சத்தான உணவுகளைத் தங்கள் குடும்பங்களின் உணவுப் பழக்கத்தில் கைக்கொள்ள ஊக்குவிக்கப்படுகிறது.

**செயல்படும் இடங்கள் :**

தற்பொழுது தமிழ்நாட்டில் பவானிசாகர், கிருஷ்ணகிரி, ஆரணி, பட்டுக்கோட்டை, திருவிடமருதூர், கல்லுப்பட்டி, கோவில்பட்டி ஆகிய பஞ்சாயத்து யூனியன்களில் 1963-64லிருந்து நடைமுறையில் உள்ளது. மேலும் பூவிருந்தவல்லி, ஆத்தூர்-1, சாத்தூர் அகஸ்தீஸ்வரம், பெரியநாயக்கன் பாளையம் ஆகிய பஞ்சாயத்து யூனியன்களிலும் இவ்வாண்டில் விஸ்தரிக்கப்படும் நிலையில் உள்ளது. நாம் ஒவ்வொருவரும் சத்தான உணவை உற்பத்தி செய்து, உட்கொண்டு, மற்றவர்களையும் ஊக்குவித்து, நமது உடல் நலத்தையும், நாட்டின் சுகாதார நிலையையும் உயர்த்துவோம் என்று உறுதி கொள்வோமாக.

# கேள்வியும் - பதிலும்

**பஞ்சாயத்து யூனியன் மன்றக் கூட்டங்கள்—தலைவர், துணைத் தலைவர் இல்லாதபோது, கூட்டத் தலைமை பற்றி விளக்கம்**

**கேள்வி :**—பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் கூட்டத்திற்கு தலைவரும், துணைத் தலைவரும் வராமல் இருந்தால், வந்துள்ள உறுப்பினர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒருவர் அக்கூட்டத்திற்கு தலைமை வகிப்பார் என்றும், அப்படித் தலைமை வகிப்பவருக்கு, அந்தக் கூட்டத்தில் அவர் தலைமை வகிக்கின்ற நேரத்தில், தலைவருக்கு உரிய எல்லா அதிகாரங்களும் உண்டு என்றும் 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. அப்படி கூட்டம் ஆரம்பமாகி நடந்து கொண்டிருக்கும்போது, தலைவரோ, துணைத் தலைவரோ, அக்கூட்டத்திற்கு வந்து விட்டால், கூட்ட ஆரம்பத்தில் தலைமை வகிக்கத் தெரிந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் தாமே தொடர்ந்து தலைமை வகிக்க உரிமை கொண்டாட முடியுமா ?

"அந்தச் சமயத்திற்கு", 'தலைமை வகிக்கின்ற நேரத்தில்' என்ற பதப் பிரயோகங்கள் சட்டத்தில் இருப்பதை நோக்கும்போது, " தலைமை வகிக்கத் தெரிந்தெடுக்கப்பட்ட உறுப்பினர், தலைவரோ துணைத் தலைவரோ வராத வரையில் தான் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கலாம்" என்ற கருத்து தெளிவாக இருக்கிறது. எனவே, தலைவரோ, துணைத் தலைவரோ கூட்டத்திற்கு வந்ததும், தலைமை வகிக்கும் உறுப்பினர், தலைமைப் பீடத்திலிருந்து விலகிக்கொள்ளவேண்டும்.

(இது பற்றிய விவரங்களை, கிராமநல—தல நிர்வாகத் துறையின் 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 73586/C. 1/66–5-ல் காணலாம்.)

**கேள்வி.**—தமிழ்நாட்டில் உள்ள வட்டாரங்களின் எண்ணிக்கை 375 என்று குறிப்பிடப்படுகிறது. ஆனால், பஞ்சாயத்து யூனியன்களின் எண்ணிக்கை 374 என்று விவரம் தரப்படுகிறது. அண்மையில், பொள்ளாச்சி பஞ்சாயத்து யூனியன் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அப்படியிருக்க, பஞ்சாயத்து யூனியன்களின் எண்ணிக்கைமட்டும் எப்படி 374 ஆக இருக்கமுடியும் ? சரியான விவரம் தெரிவிக்கவும்.

தமிழ்நாட்டில் உள்ள வட்டாரங்களின் எண்ணிக்கை 375 தான். இந்த 375 வட்டாரங்களில் 374 வட்டாரங்கள் பஞ்சாயத்து யூனியன்கள் ஆகி விட்டன. ஒரே ஒரு வட்டாரம் மட்டும் (கல்ராயன் குன்று—தென் ஆர்க்காடு மாவட்டம்) இன்னும் பஞ்சாயத்து யூனியன் ஆகவில்லை. பொள்ளாச்சி பஞ்சாயத்து யூனியன், இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஆனால், கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள 'சிங்காநல்லூர் பஞ்சாயத்து யூனியன் " சமீபத்தில் முனிசிபாலிட்டியாக மாறியது. ஆக, தமிழ்நாட்டில், இப்போது இயங்கி வரும் பஞ்சாயத்து யூனியன்கள் 374; வட்டாரங்கள் 375.

வறண்ட பூமிக்கு ஒரு வானமுதம்:

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

பயன்படுத்தும் சோலையாறு 1-வது மின்விசை நிலைய வேலைகள் நடைபெற்று வருகின்றன. சர்க்கார்பதி குடைவுக் கால்வாயின் வெளிக்கோடியில் 300 அடி கீழே இறங்கும் நீரை மின்சார உற்பத்திக்குப் பயன் படுத்த, சர்க்கார்பதி மின்விசை நிலைய வேலை முடிக்கப் பட்டு உற்பத்தி தொடங்கி விட்டது. ஆளியாறு மின்விசை நிலையம் அமைக்கும் வேலைகளின் தொடர்பாக மேல் ஆளியாறு அணை வேலைகள் நடைபெற்று வருகின்றன. சோலையாறு 2-வது மின்விசை நிலைய வேலைகளும் நடந்து வருகின்றன. இந்த நான்கு மின்விசை நிலையங் களில் மொத்த உற்பத்தித் திறன் 185 மெகாவாட். இதன் விவரம் வருமாறு:

| | மெ.வா. |
|---|---|
| சோலையாறு மின்விசை நிலையம் I | 70 |
| சோலையாறு மின்விசை நிலையம் II | 25 |
| சர்க்கார்பதி மின்விசை நிலையம் | 30 |
| ஆளியாறு மின்விசை நிலையம் | 60 |
| | 185 |

**பலன் என்ன ?**

பரம்பிக்குளம்–ஆளியாறு பல்நோக்குத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் இதர சிறப்பான பலன்கள் பின் வருமாறு:—

| | |
|---|---|
| பாசனம் பெறும் பரப்பு | 2,40,000 ஏக்கர் |
| அரிசி | 24,000 டன்கள் |
| புன்செய் தானியங்கள் | 38,000 டன்கள் |
| பருத்தி | 7,400 ,, |
| ஆண்டு ஒன்றுக்கு உற்பத்தியாகும் விளை பொருள்களின் மதிப்பு | ரூ. 5·03 கோடி |
| ஆண்டு ஒன்றுக்கு உற்பத்தியாகக் கூடிய மொத்தச் செல்வ மதிப்பு | ரூ. 60·34 கோடி |
| திட்டம் மூலம் கிடைக்கும் ஆதாய விகிதம் | 5·07 சதவிகிதம் |

வட்டாரவாரியாகப் பாசனம் பெறும் பரப்பு பின் வருமாறு:—

| வட்டத்தின் பெயர் | பாசனம் பெற இருக்கும் மொத்தப் பரப்பு (ஏக்கர்) |
|---|---|
| தாராபுரம் | 40,000 |
| பொள்ளாச்சி | 84,375 |
| உடுமலைப்பேட்டை | 65,605 |
| பல்லடம் | 50,000 |
| | 2,40,000 |

திட்ட அனுகூலங்களை இணைப்பான முறையில் பயன் படுத்திக் கொள்ளவும், ஆயக்கட்டை நல்ல முறையில் அபிவிருத்தி செய்யவும், மாநில அளவில் இணைப்பு போர்டும், திட்ட அளவில் பயன்பாடு போர்டும் அமைக் கப்பட்டுள்ளன. பாசன வசதியோடு புன்செய்ப் பயிர்களை விளைவிக்கும் சிறந்த முறைகளை எடுத்துக் காட்ட, 30 செயல்முறைப் பண்ணைகளைத் தொடங்கவும் வழி செய்யப் பட்டுள்ளது.

---

பதினைந்தாண்டுகளில்

## தமிழகத்தில்

# சிறுரகத் தொழில் வளர்ச்சி

**தொழிற் பேட்டைகள்**

அமையப்பெற்றுள்ள இடங்கள்: 22

(கிண்டி, பேட்டை, திருச்சி, அம்பத்தூர், தேனி, கோயில்பட்டி, அரக்கோணம், மதுரை, மார்த்தாண்டம், தஞ்சாவூர், மாதவரம், திண்டுக்கல், புதுக்கோட்டை, சிவகங்கை, விருதுநகர், காட்பாடி, ஈரோடு, விருத்தா சலம், காரைக்குடி, கிருஷ்ணகிரி, நாகர்கோயில், கும்பகோணம்.)

1965–66 ல் இத்தொழிற்பேட்டைகளில் வேலை வாய்ப்புப் பெற்றுர் —4,600

இத்தொழிற்பேட்டைகளில் ஆண்டொன் றுக்கு உற்பத்தியாகும் பொருள் களின் மதிப்பு சுமார்— 8½ கோடி ரூபாய்.

## தித்திக்கும் செய்தி

### தமிழகத்தில்

| | |
|---|---|
| 1956-ல் இருந்த சர்க்கரை ஆலைகள் | 4 |
| தற்போதுள்ள ஆலைகள் | 15 |
| இந்த 15-ல் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் | 6 |

கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் அமையப் பெற்றுள்ள இடங்கள்:

1 படாளம் — செங்கற்பட்டு மாவட்டம்
2 கள்ளக்குறிச்சி — தென் ஆர்க்காடு மாவட்டம்.
3 ஆம்பூர் — வட ஆர்க்காடு மாவட்டம்.
4 மோகனூர் — சேலம் மாவட்டம்.
5 நிலக்கோட்டை — மதுரை மாவட்டம்.
6 உடுமலைப்பேட்டை — கோயமுத்தூர் மாவட்டம்.

1965-ல் 12 ஆலைகளில் சர்க்கரை உற்பத்தி: 2·13 லட்சம் டன்.

அகில இந்திய உற்பத்தி 35 லட்சம் டன்,

# மக்கள் உணர்வைப் பண்படுத்தி, பரவச மூட்டும் கிராமக் கலைகள்

[திரு எஸ். டி. சுந்தரம், எம். எல். சி., செயலாளர், தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம்]

[இவ்வாண்டு பொங்கல் விழா " ஏர்முனை விழா "வாக எல்லாக் கிராமங்களிலும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது அனைவரும் அறிந்ததே. அதையொட்டி, சென்னையிலும் ஜனவரி 14, 15, 16 தேதிகளில் "கிராமக் கலைகள் விழா " நடைபெற்றது. தமிழ்நாடு அரசாங்கத்தின் ஆதரவில், தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம், இவ்விழாவினை மிகச் சிறப்பாக நடத்தியது. சென்னைப் பல்கலை கழகத் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் மு. வரதராசனுர் விழாவுக்குத் தலைமை தாங்கினுர்.

கலைவளம் மிக்கது தமிழகம். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகப் பண்பட்ட முதிர்ச்சியுடன் கூடிய கிராமக் கலைகள் நம் நாட்டில் வளர்ந்தோங்கி செழித்து வளர்ந்துள்ளன. இவை, நமது நாட்டின் அழியாத அரும் பெரும் பொக்கிஷங்களாகும். தமிழகத்துக் கிராமக் கலைகளின் சிறப்பியல்புகளை, தமிழ்நாடு சங்கீத நாடகச் சங்கச் செயலாளர், திரு எஸ். டி. சுந்தரம், M. L. C., அவர்கள் மிகத் தெளிவாக, இக்கட்டுரையில் எடுத்துக் கூறியுள்ளார்.

—ஆசிரியர்]

இந்தியாவின் ஆத்மா கிராமங்களில்தான் இருக்கிறது என்பது அண்ணல் மகாத்மாவின் அருள்மொழி. அந்த ஆத்ம ஜோதியை அணையாமல் காப்பது நமது உழவர் பெரும்படை. பட்டணவாசிகள் பட்டினிவாசிகளாகி விடாமல் உணவு படைக்கும் உழவர் பெருமக்களின் திருவிழா தான் பொங்கல் விழா! அன்று நாடெங்கும் உழவர் பெருமக்கள் மகிழ்ச்சி கொள்ளும் திருநாள் ஆண்டு முழுவதும் அவர்கள் செய்த உழைப்பின் பலனை கண்ணுரக் கண்டு களிக்கும் நல்ல நாள்.

வயல்களில் எங்கும் அறுவடை விழா. கதிர் அறுத்துக் களமடித்துப், போரடித்துக் களஞ்சியங்கள் நிறைகின்ற நல்ல நாள் பொங்கல் திருநாள்.

### உழவுக்குப் பெருமை அளிக்கும் திட்டம்

இந்த நல்ல நாளை ஏர்முனைத் திருவிழாவாக நாடெங்கும், ஊரெங்கும் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் நடத்தி, உழவுத் தொழிலை உயர்வுபடுத்தும் நற்பணியை நமது அரசு மேற்கொண்டிருக்கிறது. இது ஒரு நல்ல திட்டம். இதனுல் கிராமங்களில் நமக்காக வாழும் கோடானுகோடி உழவர் பெருமக்களது மனம் மிகவும் மகிழும். புதிய உற்சாகத்தைப் பெறும். உற்பத்தி பெருகும்.

பார் சிறக்க வேண்டில் ஏர் சிறக்கவேண்டும்
சீர் சிறக்க வேண்டில் ஏர் சிறக்கவேண்டும்.

ஒரு நாட்டின் பண்பாடு பெருகு வேண்டுமானுல் "பயிர்த் தொழில்" பெருகவேண்டும். (Agriculture is the culture of all cultures).

நமது விவசாயப் பெருமக்கள் கடுமையான உழைப்பில் மட்டும் வல்லவர்கள் அல்ல. அருமையான கலையுணர்ச்சியிலும் வல்லவர்கள் என்பதை நாமறியவேண்டும். அவர்களது கலையுணர்ச்சியை நகர மக்களும் கண்டுகளிக்க வேண்டும். உரிய பாராட்டை வழங்கவேண்டும்.

### கலையும் செயலும் இணைந்து....

நகர மக்களைப்போல், கலை வேறு, காரியம் வேறு என்று கிராம மக்கள் பிரித்து வைக்கவில்லை. காரணம் அவர்களது உழைப்பு ஓய்வறியாதது. அவர்கள் காலம், மிகவும் அரியது. அவர்கள் நிமிட நேரத்தையும் வீணுக்காமல், நிலத்தில் பாடுபட்டால்தான், நிலம் விளையும்; பயன் பெருகும்.

வயலில் நாற்று நட்ட பின் அதை அறுத்து களஞ்சியத்தில் சேர்க்கும்வரை நிலத்தை விட்டு நகர முடியாது. எப்படி ஒரு வீட்டன்னை உலையில் அரிசியைப் போட்டுவிட்டு




நடுவில் வேறு வேலை பார்க்க முடியாதோ, அதேபோல் நிலத்தில் நடவு செய்துவிட்டால் அறுவடை முடியும் வரை வேறெதிலும் விவசாயிகள் ஈடுபட முடியாது. அதனால் விவசாயப் பெருமக்கள் தங்கள் கலையை, தாங்கள் செய்யும் வேலையுடன் கூடவே இணைத்துக் கொள்கின்றனர்.

அங்கே வேலையோடு கீதம் கேட்கும்—உழவோடு முழவும் முழங்கும்—நடவோடு நாட்டியம் நடக்கும்—ஏற்றத்தோடு எழிசை முழங்கும். ஆயிரம் மந்தை மேயும்; அங்கே ஆயன் குழலிசை ஊதும். ஆம்! பரந்த பூமியே அவர்களது அரங்க மேடை. ஆகாயமே அணி வேய்ந்த கூரை. சூரியனும், சந்திரனும், சுடர்கின்ற நட்சத்திரங்களும் அவர்கள் அரங்கத்தின் ஒளிச் செய்யும் ஆர்க் விளக்குகள்.

### ஒரே பாட்டு மயம்தான்

பயிர்த் தொழிலிலும் பாட்டு, பண்ணை வயலிலும் பாட்டு, தோப்புத் துரவிலும் பாட்டு, வாய்க்கால் வரப்பிலும் பாட்டு, வண்டிப் பாட்டு, பறம்படிக்கும் பாட்டு—ஆலோலப் பாட்டு—அறுவடைப் பாட்டு. இப்படி பாட்டாளிகள் வாழும் கிராமம் முழுவதும் ஒரே பாட்டு மயமாக இருக்கும். அறுவடை முடிந்ததும் திருவிழாக்கள் துவங்கும் அந்த பக்திப் பரவசத்தோடு, ஆண்டவன் வழிபாட்டுடன் அவர்களுடைய கலைகள் இணைந்து விடுகின்றன.

தை மாதம் வரை கிராம மக்களின் உழைப்போடு இணைந்திருந்த கலையுணர்ச்சி மாசி, பங்குனி மாதங்களில் இறைவன் பக்தியோடு சங்கமமாகி விடுகின்றது.

அறுவடை வரையில் பாடல் மயமாயிருந்த மக்கள் கலை இப்போது நாட்டிய மயமாக மாறுகிறது.

சதா இயங்கிக் கொண்டே இருக்கும் சுறு சுறுப்பான சுபாவம் படைத்தவர்கள் அல்லவா அவர்கள். ஆதலால் உழவின் இயக்கம் முடிந்ததும், இறைவன் இயக்கமாக தங்களது கலைகளை மாற்றி கொள்ளுகிறார்கள்.

இந்த மூன்று மாதங்களில் (மாசி முதல் சித்திரை வரை) கிராமங்களில் எங்கும், வாலிபர்கள் மஞ்சி விரட்டு முதலிய வீர விழாக்களை நடத்துவார்கள். அவை முழங்கும் பறையுடன் துவங்கும்—கிராமங்களிலிருக்கும் சிறு சிறு கோயில்கள் புதுப்பிக்கப்படும். அந்தக் கோயில்களில், பொங்கல் அடுப்பு சூடேறி ஒளிவிடும். குமரிப் பெண்கள் கும்மி கொட்டுவர்—கோலாட்டம் போடுவர்—கூட்ட நடனமாடுவர். அதற்குப் பின் நடுத்தர வயதினர் குறிஞ்சி நிலக் கடவுள் குமரனுக்குக் காவடி எடுப்பர். ஆயிரமாயிரம் காவடிகள் அணி அணியாகக் கிளம்பி தாளந் தவறாத அற்புத நடனத்தை துவக்கும்.

அம்மனுக்கு கரகம் எடுப்பார்கள்—அம்மன் கரக ஆட்டத்தின் அழகை இன்றைக்கெல்லாம் பார்த்தாலும் சலிக்காத பேரின்பமாயிருக்கும். தெய்வீகப் பேரெழுச்சி உண்டாகும். தேர் திருவிழாக் காலங்களில் புரவி, நாட்டியம், காளை நடனம், மயிலாட்டம், ஒயில் கும்மி, முதலியன நடைபெறும்.

மற்றொருபுறம் தர்க்கப் பாடல், லாவணி என்ற பெயரில் இரவு முழுவதும் நடக்கும்—கிராமத்து மக்களுக்கு தர்க்க சாஸ்திரத்தைப் போதிக்கும் வகுப்பு இது தான் போலும்!

அடுத்தது வில்லுப்பாட்டு. இதை மக்களின் சரித்திர வகுப்பு என்று கூறலாம். கட்டபொம்மன் கதை முதல் காந்தி மகான் கதை வரையில், வில்லுப்பாட்டால் பாடப்படும். விளக்கங்களும், விரிவுரைகளும் இரவு முழுவதும் நடக்கும்.

### நாடகக் கலையின் ஆதி உருவம்

அதற்குப் பின் தெருக்கூத்து, இதுதான் நாடகக் கலையின் ஆதி உருவம். இவர்களுக்கு மைக், ஸ்பீக்கர், இரவல் குரல் இவை எதுவும் தேவையில்லை. அவர்களே பாடுவார்கள். முன்பெல்லாம் இவர்கள் குரல் பல மைல் தூரம் கேட்கும். இப்போதும் ஒருமைல் சுற்றளவுக்குக் கேட்கும்படி கணீரென்று சுதியோடும் சேர்ந்து பாடுவார்கள். பார்ப்பதற்கு கூட்டமிருந்தால் போதும்—விடிய விடிய கொட்டி முழங்கும் கோல எழிற் கூத்து நடக்கும். அடேயப்பா! ஒவ்வொரு அங்க அசைவிலும், நடிப்பின் அஸ்திவாரத்தை போட்டுக் காட்டும் ஆற்றல் படைத்தவர்கள்! இவைகளை எல்லாம் பிரதிபலிப்பதைப்போல், மற்றொரு பக்கம் பொம்மலாட்டம் நடைபெறும்.

இவ்வாறெல்லாம் இன்றளவும் உயிர்த்திருக்கும் கிராமியக் கலைகளை, நாம் இன்னும் சரியாக உற்சாகமளித்துக் காப்பாற்றவேண்டும்.

[படங்கள் 18—19-ம் பக்கங்கள்]

# வசந்தம் வந்தது, மலர்ஊழியில்!

[ அகிலன் ]

[சோவியத் நாட்டு ''உஸ்பெக்'' பகுதி கிராம நடனக்குழுவினர், கடந்த ஜனவரி முதல் வாரத்தில் (2, 3, 4 தேதிகளில்) சென்னையில் கலை விருந்தளித்தனர். தெவிட்டாத கலை விருந்தாக அமைந்த அதனை, எல்லோரும் மகிழ்ந்துண்ணும் வகையில், அதைப்பற்றி ஓர் அழகான எழுத்தோவியத்தை, இங்கே அளித்துள்ளார், தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர், திரு அகிலன் அவர்கள். சென்னை வானொலி வாயிலாக சிறந்த இலக்கியப் பணி புரியும் பேறு பெற்றுள்ள இவர், நமது 'கிராம நலம்' வாசகர்களுடன் சோவியத் நாட்டுக் கலை நிகழ்ச்சி பற்றிய அநுபவத்தைப் பகிர்ந்துகொள்கிறார்.

சமீப கால உலக வரலாற்றில், தனியிடம் பெற்றது, உஸ்பெக் பகுதியின் தலைநகரான தாஷ்கெண்டில் நடைபெற்ற 'தாஷ்கண்ட் ஒப்பந்தம்' (ஜனவரி '66). அப்பகுதியிலிருந்து வந்த சோவியத் நாட்டுக் கலைஞர்களுக்கு, தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம், சென்னை நகரில் மிகச் சிறந்த வரவேற்பளித்தது. சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில், மூன்று நாட்கள் நடைபெற்ற இந்தக் கலை நிகழ்ச்சிகள், உலக மக்கள் அனைவரிடையே உள்ள இயற்கையான உணர்வுகளை, அற்புதமாக அள்ளி வீசின. —ஆசிரியர்.]

வசந்தம் எங்காவது குளிர் காலமான மார்கழி மாதத்தில் வருவதுண்டா? ஆனால் இந்த வசந்தம், சென்னைக்கு மார்கழி மாதத்தில் தான் வந்தது. அதுவும் ருஷ்யாவில் இருந்து வந்தது. ஜனவரி 2-ம் வ முதல் மூன்று நாட்கள் சென்னைக்கு வந்து கலை விருந்தளித்த வசந்தம் என்னும் பெயர் கொண்ட ருஷ்ய நாட்டு நடனக் குழுவைத்தான் சொல்கிறேன்.

ருஷ்யாவின் பகுதியான உஸ்பெக் பிராந்தியத்தின் கிராமிய நடனக் குழுவுக்கு 'வசந்தம்' என்ற பெயர் முற்றிலும் பொருத்தமானது தான். சுமார் அறுபது பேர்களுக்கு மேல் கொண்ட அந்தக் குழுவில் முக்கால் வாசிப்பேர்களுக்கு மேல் பெண்கள். அதிலும் வாழ்க்கையின் வசந்த காலப் பருவத்திலுள்ள இளம் பெண்கள்; எழில் தவழும் அழகிய பெண்கள். அவர்களுடைய நடனங்களும் பெரும்பாலும் வசந்த காலத்தை நினைவூட்டும் சிருங்காரச் சுவை நிறைந்த நடனங்களாகவே இருந்தன.

### அரங்கத்தில் மலர் வனமா?

ருஷ்ய நாட்டிலே பனிக்காலம் முடிந்த பிறகு இளவேனில் காலம் தளிர்களைச் சிலிர்க்கச் செய்துகொண்டும், மலர்களை மடலவிழச் செய்துகொண்டும் வருகிறதல்லவா? அதை அப்படியே பிரதிபலித்தது அவர்களுடைய முதல் நடனம். குயில்கள் கூவும் சிலிர்ப்புமிக்க இன்னிசையோடு தொடங்கப்பெற்ற அதில், ஒவ்வொரு பெண்ணுமே ஒரு பூங்கொத்துச் சுமந்த மென்கொடியாகத் தென்றலின் நளினத்தோடு ஆடுகிறாள். பல வகை வண்ணமலர்கள் பூத்துக் குலுங்கும் மலர் வனம் ஒன்றே அரங்கத்தில் முளைத்து விட்டது போன்ற பிரமை நமக்கு ஏற்படுகிறது.

பொம்மைக்குச் சாவி கொடுத்துக் குழந்தைகள் அதை ஆட்டுவிப்பதை நாம் கண்டிருக்கிறோம். ஆனால் பொம்மையாகவே மாறி, பொம்மையைப் போன்றே கை கால்கள் கண்களைச் சுழற்றி ஆடும் பெண்மணியைக் கண்டிருக்கிறோமா?—வசந்தத்தின் பொம்மை நடனத்தில் நாம் அவளைக் கண்டு வியப்படைகிறோம்.

இடைச் சிறுவனை வந்து நடிக்கும் நங்கை தன் ஆடுகளை எண்ணிப் பார்க்கிறாள். ஒன்றோ இரண்டோ குறைகிறது. மீண்டும் மீண்டும் பரபரப்போடு எண்ணிப் பார்க்கிறாள். பதறுகிறாள். பின்பு காணாமற்போன வற்றைகண்டுபிடித்து விடுகிறாள். அப்போது அவளுக்கு ஏற்படும் ஆனந்தத்தைக் காண வேண்டுமே! சுழன்று சுழன்று பம்பரமென அவள் ஆடும் ஆனந்த நடன மிருக்கிறதே, அது மிக மிக அற்புதமானது.

அந்த நடனக்குழுவின் தலைவி வயதில் மூத்த பெண் மணிதான். ஆனாலும் அவர் ஆடிய நடனம் ஆழ்ந்த உணர்ச்சிகளை வெளியிடும் கலைநயம் நிறைந்த உஸ்பெக் நடனமாகும்.

**வலிமை மிக்க ஆயுதம்!**

இந்திய-சோவியத் நட்புறவு நடனத்தில் அந்தப் பெண் களில் பாதிப்பேர் இந்தியப் பெண்மணிகளாகவே மாறி விட்டார்கள்; நடை, உடை, நெற்றிப்பொட்டு முதலிய எல்லாவற்றிலுமே அவர்கள் நம் நாட்டுப் பெண்மணி களை மிஞ்சிவிட்டார்கள். அவர்கள் சேர்ந்து ஆடிய நடனம் நூறு பொதுக் கூட்டங்கள்—நூல்கள் தராத நட்புணர்வைத் தூண்டிவிட்டது என்றால், அது மிகை யாகாது. கலை என்ற நளினமான வலிமை மிக்க ஆயு தத்தை, எவ்வளவு உயர்தரமாக, நுணுக்கத்தோடு, பயன்படுத்தியிருக்கிறார்கள் அவர்கள்!

கலைஞர் ஒருவரின் புல்லாங்குழல் வாசிப்பும் மற்றொரு வரின் 'டேப்' (பெரிய கஞ்சிரா) வாசிப்பும் மிகச் சிறப்பாக அமைந்திருந்தன. மெல்லிய, மிக மெல்லிய நாதம் எழுப்பிய மறுகணத்தில் பரபரப்பு மிக்க ஓசையும் அதே டேப்பில் அவர் எழுப்பிக் காட்டினார். விரல் நுனியில் டேப்பைச் சுழலவிட்டபடியே அதில் இசை எழுப்பிச் சாக சங்கள் செய்தார்.

மற்றும் ருஷ்யாவின் பல பிரதேசங்களைச் சேர்ந்த விதமான நடனங்களையும் அவர்கள் கூட்டங்கூட்டமாக நடித்துக் காட்டினர். உடை அணிகளில் அவர்கள் செலுத்தியிருந்த கவனம் பாராட்டத்தக்கது. அவர்கள் பலர் சேர்ந்து ஆடும்போது, எப்படி வண்ணங்களைப் பயன் படுத்துவது என்பதில் தனியான அக்கறை காட்டி யிருந்தார்கள்.

இந்த நடனத்தைக் கண்டபோது, எனக்கேற்பட்ட எண்ணங்கள் சில:—

ருஷ்ய கிராமிய நடனங்கள், நமக்கு அன்னியமானவை யாகவே தோன்றவில்லை. அவர்களுடைய இசையும் நடனக் கருத்தும், உணர்ச்சி பாவங்களும், நமக்கு மிகவும் நெருங்கியவையாக — உறவுள்ளவையாக — இருந்தன. மேலை நாட்டுப் பாணி இல்லாத ஆசியப் பாணி நடனங்கள் அவை. நம்முடைய சாயலை அவர்களிடம் நாம் உணர் கிறோம்.

நாம் கண்ணன்—கோபியர் நடனம் நடத்துகிறோ மல்லவா? அங்கு ஆடு மேய்க்கும் ஒரு சிறுவனைச் சுற்றி இளம் பெண்கள் பலர் ஆடிக் களிக்கிறார்கள்! சிற்சில இசைகள்கூட, நம் தமிழ்நாட்டுத் தெம்மாங்கு இசைகளை ஒத்திருக்கின்றன. அங்க அசைவுகள்—முகபாவம் இவற் றின் ஒயிலும் நளினமும் கூட, நம்முடைய பெண்டிரின் மென்மையை நினைவூட்டத்தக்கனவாக இருக்கின்றன.

எல்லா வகையிலும் வசந்தம் என்ற பெயருக்கேற்ற நடனக்குழுதான் இது. பெண்களின் வயது கூட இரு பதுக்குச் சற்று முன்பின் இருக்கலாம். சிருங்காரச் சுவை நிறைந்த நடனங்களுக்கும் குறைவில்லை. என்றாலும், ஒரு காட்சியிலாவது சுவை கட்டுக்கு மீற வேண்டுமே! உடை யிலோ, நடையிலோ, நடன பாவத்திலோ அணு அளவா வது ரசபேதம் இருக்க வேண்டுமே! அவர்களுடைய பண்பின் அருமை போற்றத்தக்கதாக இருக்கிறது.

இப்படி ஒரு நடனக் குழுவை அனுப்பி வைத்ததற்காக ருஷ்ய அரசாங்கத்தின் கலைத்துறைப் பிரிவினர்க்கு நாம் நன்றி கூற வேண்டும். அதைச் சென்னையில் நடத்து வதற்கு ஏற்பாடு செய்த தமிழ்நாடு அரசாங்கமும் சங்கீத நாடக சங்கமும் பாராட்டுக்குரியன. நட்பின் உறவை வளர்ப்பதில் 'வசந்தம்' நல்ல வெற்றி பெற்றுவிட்டது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

* * *

**இந்தக் கலைக் காட்சியைக் கண்ட மற்றொரு அன்பரின் அனுபவ வெளியீட்டை இங்கே காணலாம்:**

## அரியதொரு கலை நிகழ்ச்சி

சென்னை பல்கலைக் கழக நூற்றாண்டு விழா கலையரங்கு 1967-ம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ம் தேதி மாலையில் மேலும் பொலிவுறத் துவங்கியது.

சோவியத் யூனியனைச் சேர்ந்த உஸ்பெக்ஸ்தானிலிருந்து, நம் நாட்டுக்கு வருகை தந்திருந்த கலைக் குழுவினர், 'உஸ்பெக் கிராமிய நடனங்கள்' என்ற பெயரால் கண் ணுக்கு இனிய கலை விருந்தவித்தனர்.

எழிலும், எளிமையும் பொருந்தியிருந்த நடன நிகழ்ச்சிகள், உள்ளங்களைத் தொடுவனவாக அமைந் திருந்தன. தெளிந்த நீர்த்தடாகத்தில் பற்பல வண்ணப் பறவைகள், வரிசை வரிசையாக, நீந்திச் செல்லுவது போன்ற—பிரமையே அந்த கோஷ்டி நடனங்களைக் காண் போருக்கெல்லாம் உண்டாகியது. உஸ்பெக் கிராமிய நடனங் கள் நமது கிராமங்களில் நடைபெறும்—'கும்மி'—'கோலாட் டம்' 'ஒயிலாட்டம்' முதலியவைகளை நினைவூட்டுவன வாகவே இருந்தன.

இசைக் கருவிகளில் 'கஞ்சரா'வே முக்கிய இடம் பெற்றி ருந்தது. அதை லாவகமாகக் கையாளும் விதம் அற்புத மானதே.

ஒரு பொம்மையை ஒருவர் தூக்கி வருகிறார்.

அது பொம்மையே தானா?

நாம் நிமிர்ந்து உட்காருகிறோம்.

[16-ம் பக்கம் பார்க்க]

கேரளாவிலுள்ள ஈ. பி. மாதவன் நாயர்—உணவு நெருக்கடியை சமாளிக்கும் வகையில் தம்மாலியன்ற அளவு புதிய முறையொன்றைக் கையாண்டு, அதில் வெற்றியையும் அடைந்திருக்கிறார்.

'தெய் நான் 3' என்னும் நெல் ரகம் மூன்று போகங்கள் விளையக் கூடியது. சாதாரணமாக ஏக்கருக்கு 3,290 கிலோ கிராம் கேரளாவில் அறுவடை செய்யப்படுகிறது.

இந்த 'தெய் நான் 3' நெல் ரகத்தை சாதாரணமாக வீடுகளில் பெரிய பூந்தொட்டிகளிலும், வீட்டின் மேல் தளங்களிலும், பொது ஸ்தாபன கட்டிடங்களின் காம்பவுண்டுக்குள்ளும் சிரமமின்றி பயிர் செய்து நல்ல மகசூலைப் பெறலாம். இந்த முறையில், விவசாயம் செய்ய மனித சக்தி, கலப்பை முதலியன தேவையில்லை. பயிரிடுவது மிகவும் சுலபம். இவ்விதம் பூந்தொட்டிகளில் விவசாயம் செய்வதில் விவசாயம் இன்பம் பயக்கும் பொழுது போக்காக அமைகிறது. தொட்டிகளை தகுந்த அளவு அமைத்துக் கொண்டால் தண்ணீர் பாசனம் சிக்கனமாவதோடு மண்ணை மாற்றுவதோ புரட்டி விடுவதோ, மிகவும் சுலபமாகவே அமைந்து விடுகிறது. பயிர் பாதுகாப்புச் செய்வதும் எளிதாகும். உரத்திற்கு வீட்டில் கிடைக்கும் குப்பையே தகுந்த உரமாகி விடுகிறது. தேவைக்கேற்ற, பயனளிக்கும் பொழுதுபோக்குக்கு, இதைவிட வேறென்ன இருக்கமுடியும் ?

*** நெருக்கடி நிலைமை உண்டாகும் போதுதான் புதிய திருப்பங்கள் ஏற்படுகின்றன.**

**** 'சிறு துளிப் பெரு வெள்ளம்' என்பதற்கிணங்க, முயற்சியே முன்னேற்றத்துக்கான வழி வகுக்கிறது.**

***** உணவுப் பொருளுக்காக, வெளி நாடுகளை எதிர்நோக்கும் நிலை நீங்க வேண்டும் என்பதில் எல்லோருக்கும் பங்கு உண்டு.**

****** அதற்கு இப்புதிய முறை நன்கு பயனளிக்கிறது.**

திரு நாயர் இந்த பூந்தொட்டி முறை நெல் சாகுபடியில் ஒவ்வொரு தொட்டியிலும் 640 முதல் 800 கிராம் அளவு நெல் அறுவடை செய்திருக்கிறார். முதலில் நாற்றுவிட்டு, நாற்றுக்களை $3\frac{1}{2}$ அங்குல இடைவெளியில் நடவு செய்தார். ஒவ்வொரு கதிரிலும் 80 முதல் 180 நெல் மணிகள் கிடைத்திருக்கின்றன.

இம்முறை எங்கும் பரவவேண்டிய, பயனுள்ள ஒரு செய்தியாகும். நமது உழைப்பிலேயே விளைவித்த உணவு நமக்கு இன்பம் பயக்கும். உணவு பற்றாக்குறையைத் தீர்க்க, நமது கடமையைச் செய்த பெருமிதமும் உண்டாகுமல்லவா ?

# பூந்தொட்டிகளில் நெற்பயிர்.

# ராங்கிபூர் இளைஞர் மன்றம்

**ஆவலாலும், உற்சாகத்தாலும், சேவைசெய்ய வேண்டும் என்ற உள்ளக் கிளர்ச்சியாலும் உந்தப்பட்டு, அவற்றை மக்கள் ஒருமுகப்படுத்தி, தங்கள் உழைப்பை அளிக்க முன்வரின், கிராமங்களின் சூழ்நிலையே, தோற்றமே அடியோடு மாறிவிடும் என்பதற்கு "ராங்கிபூர் இளைஞர் மன்ற"த்தின் சேவைகள் நல்ல சான்றாகும்.**

ஒரிஸ்ஸா மாநிலத்திலுள்ள நங்கைலுண்டா வட்டாரத்திலுள்ளது இந்த மன்றம். இது துவக்கப்பட்டு ஐந்தாண்டுகளே ஆயிற்று என்றாலும் அதனால் விளைந்துள்ள நன்மைகள் ஏராளம். 1964–65-ம் ஆண்டில், இம் மன்றம்தான் சிறந்த சேவை செய்துள்ளது என்று தெரிந்தெடுக்கப்பட்டு, ரூ. 8,000 ரொக்கப் பரிசு அளிக்கப்பட்டுள்ளது.

### அன்று......இன்று

1961-ம் ஆண்டு, இம்மன்றம் துவக்கப்பட்டபோது, அதில் 42 உறுப்பினர்கள் மட்டுமே இருந்தனர். ஆனால் இன்றோ அதில் 86 உறுப்பினர்களிருக்கின்றனர். திரு கோவிந்த சந்தரா மிஸ்ரா என்ற 33-வயது இளைஞரே இதன் தலைவராவர். இம்மன்றத்தின் வாயிலாக இவரது சேவையை கண்டுணர்ந்த கிராமவாசிகள்; இவரையே பஞ்சாயத்தின் தலைவராகவும் தேர்ந்தெடுத்துள்ளனர். மன்றத்தின் சாதனைகளையெல்லாம், பெருமையோடு எல்லோருக்கும் விளக்கிக் காட்டுகிறார், திரு மிஸ்ரா.

### மன்ற நடவடிக்கைகள்

ஒரு பாழடைந்த கட்டிடத்தில்தான் இங்குள்ள ஆரம்ப பள்ளிக்கூடம் நடந்து வந்தது. மன்ற உறுப்பினர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து, முதல் காரியமாக, இக்கட்டிடத்தைப் பழுது பார்த்து, சீராக்கி, அக்கட்டிடத்திற்கு ஒரு புதுப் பொலிவை ஏற்படுத்திவைத்தனர். பள்ளிக்கு மாணவர்களை சேர்ப்பதற்கு ஓர் இயக்கமே நடத்தினர். இது தவிர, மதிய உணவு திட்டம், பால் வழங்கும் திட்டம், தோட்டம் வளர்க்கும் திட்டம் போன்றவற்றையும் மேற்கொண்டு, திறமுடன் நிறைவேற்றி வருகின்றனர். கிராமத்திற்குச் சொந்தமான இரு குடி நீர் கிணறுகளையும் புதுப்பித்ததோடு மட்டுமின்றி, கிராமத்தை இணைக்கும் சாலையையும் பழுது பார்த்தனர். சாக்கடைத்திட்டமும் கூடவே நிறைவேற்றப்பட்டது.

மன்ற உறுப்பினர்களில் 17 பேர் மீனளத்தில் போதிய பயிற்சியைப் பெற்றுள்ளனர். மீன்குஞ்சுகள் வளர்பதையே இவர்கள் ஒரு தொழிலாக மேற்கொண்டு, அவற்றை வளர்த்து, மாதர் சங்கங்களுக்கு, சத்துணவு திட்டத்தின்கீழ் வழங்கி வருகின்றனர்.

### கிராம வானொலி மன்றம், கூட்டுறவு சங்கம்

23 உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து கிராம வானொலி மன்றத்தை நிறுவியுள்ளனர். மன்ற ஒலிபரப்பு நிகழ்ச்சிகளை தொடர்ந்து கேட்டுணர்ந்து, அவரவர்கள் நிலங்களில், புதிய முறையில் சாகுபடி செய்து வருகின்றனர். மன்ற உறுப்பினர்களில் 50 சதவீதத்தினர் ராங்கிபூர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாயிருக்கின்றனர். கிராம மக்களின் அன்றாடத்தேவையை பூர்த்தி செய்வதற்கென, ஒரு கூட்டுறவு சங்கத்தை நிறுவுவதற்கு இப்போது தீர்மானம் செய்யப்பட்டுள்ளது.

### மனமகிழ் மன்றம்

சமூக கல்வி திட்டத்தின்கீழ், மன்றம் பற்பல காரியங்களை செய்து வருகிறது. மன்றத்திற்கு கிடைத்த ரூ. 800 ரொக்க பரிசை, முழுவதுமாக பயன்படுத்திக் ஒரு மனமகிழ் மன்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மன்ற கட்டிடத்தில்தான் பஞ்சாயத்தும், கிராம வானொலி மன்றமும் செயல்

[52-ம் பக்கம் பார்க்க.]

# சீரிய நல் வாழ்வுக்கு

["சிறு துளி பெருவெள்ளம்." 'வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை, எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்' என்பது வள்ளுவர் வாக்கு. சிறு சேமிப்பின் அவசியம் பற்றி, நிதித் துறை துணைச் செயலாளர் அவர்கள் இங்கே கூறும் அனுபவ சாத்தியமான அறிவுரைகள், கிராம மக்களுக்குப் பெரிதும் பயன்படும். காலமெல்லாம் உழைத்த பின்னர் ஓய்வு பெற நினைப்பவர்களுக்கு, ஏற்ற சிறு சேமிப்புத் திட்டமான வளரும் சேமிப்பு தவணை நிதி (Cumulative Time Deposit) பற்றி அவர் கூறும் விளக்கங்கள், மிகவும் பயன்தரத் தக்கவை.

—ஆசிரியர்.]

# சிறு சேமிப்பு

[திரு. K. வெங்கடேசன், I.A.S., துணைச் செயலாளர், நிதித்துறை, தமிழ்நாடு அரசாங்கம்].

என்றைக்குமே எதிர்காலத்தைப் பற்றி, மனிதன் சிந்தித்து வந்திருக்கிறான். சமுதாயம் எதிர்காலத்தில் எப்படி சிறந்து அமைய வேண்டும் என்று எண்ணிய பெரியோர்கள் எத்தனையோ பேர். விடுதலை பெற்று நம் நாடு பெருமிதத்துடன் எவ்வண்ணம் எதிர்காலத்தில் சிறந்து விளங்க வேண்டுமென்று விடுதலை வீரரை அன்றே கனவு காண வைத்ததும், எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனையே. தன் குடும்பம் சிறந்து விளங்க வேண்டுமென்று எண்ணி ஒவ்வொருவரும் செய்யும் முயற்சிக்கும் எதிர்கால நல்வாழ்வினைப் பற்றிய சிந்தனையே அடிப்படையாகும். இவ்வாறு எதிர்காலத்தைப் பற்றிய அக்கறையும், நிகழ்காலத்தினை விட வளம் நிறைந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கென செயலாற்றுவதும், ஒவ்வொரு மனிதனிடத்திலும், அறிந்தோ, அறியாமலோ இயல்பிலேயே அமைந்துள்ள பண்பாகும். சிற்றுயிர்களிடையிலும் சிறந்த கட்டுக்கோப்பான வாழ்க்கை முறை நடத்துகின்ற தேனீக்களிடையிலும், எறும்புகளிடத்தும், வருங்காலத்துக்காக சேர்த்து வைக்கும் பழக்கம், இயல்பிலேயே காணப்படுகின்றது.

எதிர்கால வாழ்வினைப் பற்றிய இத்தகைய சிந்தனை எழும்போது, உலக வாழ்வின் அடிப்படையான பொருட் செல்வத்தைப் பற்றி எண்ணுமலிருக்க முடியுமா? வாழ்வின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் இவற்றுக்கெனவும், குடும்பத்தின் நல்வாழ்வுக்கான கல்வி, கலை பயிலல் இவற்றுக்காகவும், சமுதாய வாழ்வுடன் பிணைந்துள்ள திருமண நிகழ்ச்சி கொடை இவற்றிற்கு வேண்டிய பொருளையும் ஒதுக்கி வைப்பது அவசியமாகின்றது. இவற்றுள், ஒரு சில தேவைகட்கான பணம், குறிப்பிட்ட காலத்தில் மொத்தமாக தேவைப்படுவது இயற்கை. குடியிருக்கத்தக்க வீடு கட்டுதல், பெற்ற மக்களை மேற்படிப்புக்கென வெளியூர் அனுப்பி வைத்தல், திருமணம் செய்வித்தல் போன்றவற்றுக்காக தேவைப்படும் பணத்தை அவ்வப்போது ஈட்டும் பொருளிலிருந்து எடுத்து செலவு செய்ய முடியாது. ஒரே சமயத்தில் பெரும் அளவில் பணம்

தேவைப்படும் இந்த வேலைகளுக்கான பெருத்த அளவு பணத்தைப் பெற உள்ள வழிகள் என்ன என்று ஆராய்வோம். ஒரு வழி கடன் வாங்குவது; மற்றது முன்னோர் தேடி வைத்த செல்வத்தின் ஒரு பகுதியை விற்று செலவு செய்வது, இவை இரண்டும் குறை பாடுடைய வழிகள். தக்க நேரத்தில் நியாயமான வட்டிக்கு கடன் கிடைப்பது எவ்வளவு அரிது என்பதை கடன் வாங்க முயன்றுள்ள எல்லோரும் அறிவார்கள். மேலும் கடன் வாங்கிவிட்டால் அதனைத் தவணைகளில் வட்டியுடன் திருப்பித் தந்துதானே ஆகவேண்டும்? அதற்காக கடன் வாங்கிய பின்னரே தொடர்ந்து சேமித்தே ஆகவேண்டும். இரண்டாவது வழி, எல்லோருக்கும் கைவரக்கூடியதன்று. எல்லோருக்கும் முன்னோர் விட்டுச் சென்ற சொத்து இருக் கிறது என எண்ண முடியாது. எனவே இவை, இரண் டையும் விட சிறந்த வழி, முன்னதாகவே வருவதை எதிர் நோக்கி, திட்டமிட்டு சேமிப்பதே. இவ்வழி நம் வழியும் ஆகும்.

**சேமிப்பின் அடிப்படை :**

சேமிப்பது எப்படி என்ற கேள்வி உடனே எழுகின்றது. வரவு முழுவதற்கும் செலவு இருக்கக்கூடிய நிலையில் சேமிப்பது எப்படி? சேமிப்பது அவசியம் என்ற அறிவும், அந்த தெளிந்த அறிவின் அடிப்படையில் அதனைக் கைக் கொள்ள வேண்டும் என்ற உணர்வுமே சேமிப்பதற்கு அடிப்படைகள். அந்த உணர்வுக்குப் பிறகு, நாம் அவ் வாறு சேமிக்க முடியும் என்ற நம்பிக்கையும், அப்பழக் கத்தைக் கைக்கொள்வோம் என்ற ஊக்கமும் தேவை யாகும். இவை அமைந்தால், எத்தனையோ பழக்கங்களை கற்றுக்கொள்ளுவது போல, சேமிப்பது என்பதும் ஒரு பழக்கமாக அமைந்துவிடும். இவ்வாறு சேமிப்பதன் அவ சியத்தை உணர்ந்து, சேமிப்பது என முடிவு எடுத்து, ஓரிரு மாதங்கள் தவறாமல் சேமித்து வந்தால், தானாகவே அது நம் வாழ்க்கை முறையின் ஒரு பகுதியாகவே அமைந்து விடும். வீட்டுப் பெண்டிர் சிறுகச் சிறுக சேமித்து வருவதும், நாள்தோறும் உண்டியலில் சிறு தொகை போடுவதும், நெடு நாட்களாக நம் நாட்டில் இருந்துவரும் சேமிப்புப் பழக்கங்கள்தானே? பொருளாதார அமைப்பு விரிவடை யாத அன்றைய நாட்களில் பொன்னாகவும், மணியாகவும், அணிகலன்களாகவும் சேர்த்து வைப்பதே வழியாக இருந்தது.

**சேமிப்பு செய்ய பல வாய்ப்புகள்**

ஆனால், பொருளாதார அமைப்பு நன்குவளர்ந்துவிட்ட இன்றைய சூழலில், சேமிப்புப் பழக்கம் ஏற்படுத்திக் கொள்ள பல வாய்ப்புகள் உள்ளன. சீட்டுப் போடுதல், பாங்குகளில் தவணைகளில் பணம் போடுதல் அல்லது சேமிப்புக் கணக்கில் பணம் போடுதல் போன்ற பல்வேறு வழிகள் உள்ளன. இவற்றைவிட, பணத்துக்கு உறுதியான சேமிப்பு, சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தவும், சேமிப்புப் பழக்கமுள்ளோர்க்கு உதவிடவும் அரசாங்கமே அமைத் துள்ள பல்வேறு சேமிப்பு வழிகளாகும். சிறு சேமிப்பின் அவசியத்தையும், அதனால் ஏற்படும் பெரும் நன்மையை

[அடுத்த பக்கம் பார்க்க]

# நெறியான வாழ்வுக்குப் பாலமமைப்போம்!

**[என். கமலம், வேதியல் இறுதியாண்டு,**
**பி.எஸ்.ஜி.ஆர். கிருட்டிணம்மாள் மகளிர் கல்லூரி, பீளமேடு]**

அடிமை விலங்கை அறுத்து நாட்டில்
உரிமைக் கொடியை உயர்த்தி நின்று
கொடுமை வறுமைப் பிணியைப் போக்கும்
முறைமை யினால் திட்டம் கண்டோம்.
வாரத் திட்டம் மாதத் திட்டம்
வாழ வழி வகுக்கும் திட்டம்
ஐந்து ஆண்டுத் திட்ட மென்று
அருமை யாகப் பிரிவு செய்தோம்.
தொடர்நிலைத் திட்டத்திற்குப் பொருளீட்டக் கற்றோர்
தெரிந்தெடுத் தார்சிறு சேமிப்பு திட்டமதை
படரலை பெருகிவிடும்; சிறிதொரு கல்லாலும்
புகைச்சுழல் மறைந்துவிடும் பெருவழியை யெனவே
திரைகடல் ஊடுருவித் திரவியம் தேடிடினும்
தரமாகப் பணம்சேர்க்கச் சேமிப்பு துணையாகும்.
மறையொத்த மொழியிதனை மாந்தரினம் தேர்ந்திடினது
கரையேறத் தோணியொன்று கண்டதுபோல் நன்றாகும்,
ஏழைகள் இடைநிலையர் எங்கும் நிறைந்திருப்போர்
காலையும் மாலையும் வேலைக்குச் சென்றிடுவோர்
சாலையின் ஓரத்தின் சிறுகுடில் வாசியாம்
பாளையாம் நெல்லின் பதரென எண்ணாது
வேளைக்கு உணவை விரும்புதல் முறையானால்
நாளைக்கு ஒருகாசாய்ச் சேமித்தல் கடனாகும்.
சோலைக்குள் சுற்றும் சிற்றெறும்பைப் போல நம்மரசின்
தோளிற்குக் கைகொடுக்கத் தாமாகச் சேர்க்கவேண்டும்
சேர்த்து வைத்த பொருளிருந்தால் நம்மைத்
தாக்கவரும் வறுமையைப் போக்கிவிடும்.
காத்து நின்றால் சின்னாளில் வட்டியோடு
சேர்ந்து வந்து சிந்தைக்கு மகிழ்வூட்டும்.
இடைப்பட்ட காலத்தில் இத்தொகை நாட்டில்
வரையறுத்த திட்டங்களை விரைவாக்கி, முடிவு
குறிப்பிட்ட நேரத்தில் வெளியாகும்; நலம்கூடும்
சிறப்பூட்டும் வெற்றிகள் நாட்டின் பயனாகும்
ஆலம் விதை சிறிது அது தரும் மரநிலோ
அரசன்படை போற்றி அயர்வினைக் கண(ம்)போக்கும்
சாலமிகப் பொருளும் சேமிப்பால் நிறைந்துவிடும்
ஞாலத்தனைக் கண்டம் நமதருமைப் பாரதம்
கோலக்கனி கூட்டப் பாலைநிலம் சோலையாக
நேரேதலை நிமிர்ந்து நன்னடை பயிலவரும்
தன்கையே தனக்குதவி உண்மை யதனால்
திட்டத்தின் பாதை வெற்றிக்கு அடிகோலும்.
ஆகையினால் மாந்தர்காள்! இறுதியிது கேட்டிடுவீர்!!
'பலதுளி பெருவெள்ளம்' நாமறிவோம். அதில்
சிலதுளி நம்பங்கு பெருமை கொள்வோம்.
சிறுசேமிப்புத் திட்டமதை சிந்தையில் கொண்டு
குறைவின்றி நாட்டிற்கு ஆற்றிடுவோம் தொண்டு
குறைகின்ற செல்வத்தைச் சேமிப்பால் சரியாக்கி
முறையான திட்டத்திற்குக் கை கொடுப்போம்
நெறியான வாழ்விற்குப் பால மமைப்போம்

[ முன்பக்கத் தொடர்ச்சி ]

யும் நன்குணர்ந்ததனுல், பல்வேறு தரத்தாருக்கும் ஏற்ற வண்ணம் பல்வேறு சேமிப்பு முறைகளுக்கும் அரசாங்கம் வகை செய்துள்ளது. மேலும், பொருளாதார வளர்ச்சிக்கான பணிகளுக்காக நிதி திரட்டுவதில், சிறு சேமிப்புக்கு முன்னேக் காட்டிலும் சிறப்பிடமும் கொடுக்கப்பட்டுள்ளது.

விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அறுவடை முடிந்த பிறகே சேமிப்பதற்கேற்ற பணம் மிஞ்சும். வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் இவ்வாறே ஆண்டின் குறிப்பிட்ட சில பகுதிகளில் மட்டுமே மொத்தமாக பணம் கிடைப்பது வழக்கம். இதைப்போன்று ஆண்டின் குறிப்பிட்ட பகுதிகள் பணம் கிடைக்கக்கூடியவர்கள் சேமிப்பதற்கேற்றவை, சேமிப்புப் பத்திரங்களும், தேசியப் பாதுகாப்புப் பத்திரங்களும், பாதுகாப்பு டிபாசிட் பத்திரங்களும் ஆகும். 10 ரூபாய், 100 ரூபாய், 1000 ரூபாய் என்ற அளவுகளில் கிடைக்கும் தேசிய சேமிப்புப் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டு ஒவ்வொரு 100 ரூபாயும், 10 ஆண்டுகள் கழிந்து 180 ரூபாயாக திரும்பக் கிடைக்கின்றது. தேசியப் பாதுகாப்புப் பத்திரங்களில் முதலீடு செய்யும் ஒவ்வொரு 100 ரூபாயும், 12 ஆண்டுகட்குப் பின் ரூ. 175 ஆகத் திரும்பக் கிடைக்கின்றது. 5 ரூபாய், 10 ரூபாய், 50 ரூபாய், 100 ரூபாய், 500 ரூபாய், 1000 ரூபாய், 5000 ரூபாய் என்ற அளவுகளில் கிடைக்கும் இப்பத்திரங்களிலிருந்து கிடைக்கும் வட்டி வருமானத்திற்கு வருமான வரியிலிருந்து விலக்கும் இருக்கிறது. பத்தாண்டுக் கால பாதுகாப்பு டிபாசிட் பத்திரங்களில் 50 ரூபாயின் பெருக்குத் தொகைகளில் முதலீடு செய்யலாம். இதன் மூலம் கிடைக்கும் 4½ சதவீதம் வட்டி வருமானத்துக்கு வருமான வரி கிடையாது.

### உழைப்புக்குப் பின் ஓய்வு பெறுவோருக்கு :

காலமெல்லாம் உழைத்த பின்னர் ஓய்வு பெற நினைப்பவர்க்கு ஏற்ற திட்டமும் ஒன்று இருக்கிறது. மொத்தமாக தம் வசம் சேமித்து வைத்துள்ள பணத்தை கொடுத்து வைத்தல், தொடர்ந்து 15 ஆண்டுகட்கு, மாதந்தோறும் சீராக திரும்பத் தரும் இத்திட்டத்தின் கீழ் கிடைக்கும் வருமானத்துக்கும் வருமானவரி கிடையாது. 6650 ரூபாயை முதலில் கொடுத்து வைப்பதன் மூலம் 15 ஆண்டுகட்கு, மாதந்தோறும் முறையே 50 ரூபாயை பெற்று வரலாம். இவ்வாறே முதலில் 1330 ரூபாய், 3325 ரூபாய், 6650 ரூபாய், 13300 ரூபாய், 26,600 ரூபாய் கொடுத்து வைப்பவர்கள் மாதந்தோறும் முறையே 10 ரூபாய், 25 ரூபாய், 50 ரூபாய். 100 ரூபாய், 200 ரூபாய் பெற்று வரலாம்.

### வளரும் சேமிப்புத் தவணை நிதி

நாட்டில் பெரும்பான்மையாக உள்ள குறித்த வருமானக்காரர்களுக்கு ஏற்ற சிறந்த திட்டம் வளரும் சேமிப்புத் தவணை நிதி (Cumulative Time Deposit) சீட்டுப் போடுவதையொத்த இந்தத் திட்டத்தின்கீழ் ஒருவர் 5, 10 அல்லது 15 ஆண்டுகட்கு தொடர்ந்து மாதந்தோறும் தம்மால் இயன்ற அளவு சேமித்து வைக்கலாம். இதன் மூலம் கிடைக்கும் வட்டி வருமானத்திற்கு வருமான வரி கிடையாது. அதற்கும் மேலாக 10 ஆண்டு அல்லது 15 ஆண்டுக் கணக்கில் செலுத்தப்படும் பணத்திற்கு இன்ஷூரன்ஸ், பிராவிடண்ட் நிதி இவற்றைப் போல, வருமான வரிச் சலுகையும் அளிக்கப்படுகின்றது. மாதமொன்றுக்கு 5 ரூபாய், 10 ரூபாய், 20 ரூபாய், 50 ரூபாய், 100 ரூபாய் அல்லது 200 ரூபாயோ இத்திட்டத்தின் கீழ் கொடுத்து வரலாம். 15 ஆண்டுக்கணக்காக இருந்தால், மாதமொன்றுக்கு 300 ரூபாயும் தரலாம். பத்து ரூபாய்க் கணக்கிற்கு, 5 ஆண்டுக்குப் பின் 665 ரூபாயும், 10 ஆண்டுக்குப் பின் 1500 ரூபாயும், 15 ஆண்டுக்குப்பின் 2600 ரூபாயும் கிடைக்கும். மிகவும் பயனுள்ள இத் திட்டம் பெரிதும் விரும்பப்பட்டு வருகின்றது. இத் திட்டத்தின்கீழ் சம்பளத்திலிருந்து நேரடியாக சேமிப்பதற்கும் பல இடங்களில் வசதி செய்யப்பட்டுள்ளது.

இவற்றுக்கும் மேலாக சேமிக்க எண்ணுவோருக்கும், மேற்கூறிய முறைகளின்கீழ் சேமிக்க முடியாதவர்கட்கும், வீட்டுப் பெண்டிர் அவ்வப்போது சேமிக்கும் தொகைகளை சேமித்து வைத்துப் பெருக்குவதற்கும் அஞ்சல் அலுவலகங்களில் சேமிப்புக் கணக்கில் பணம் போட வசதியும் இருக்கிறது. இதில் கிடைக்கும் வட்டிக்கு வருமான வரி கிடையாது. மற்ற பாங்குகளில் உள்ள சேமிப்புக் கணக்குகளையொத்து 'செக்' மூலம் பணம் பெறுவதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

இத் திட்டங்களைப் பற்றிய மற்ற விவரங்களை அறிய விரும்புவோர், அஞ்சல் அலுவலகங்களிலும், சிறு சேமிப்பு இயக்க ஊழியர்களிடமிருந்தும் அவற்றை எளிதில் பெறலாம்.

பணத்துக்கு முற்றிலும் பாதுகாப்புடன் கூடிய இந்தச் சேமிப்பு முறைகளை கைக்கொள்வதால், நம் எதிர்காலத்துக்கு ஏற்ற வண்ணம் வகை செய்வதுடன், விலைவாசி உயர்வினைக் கட்டுப்படுத்தும் பணியில், நம் சிறு பங்கினைச் செய்தோம் என்ற மன நிறைவினையும் நாம் அடைகின்றோம்.

(வானொலிப் பேச்சு)

## வாசகர்களுக்கு

அரசாங்க அச்சகத்தில், பொதுத் தேர்தல் சம்பந்தமான அச்சு வேலைகள் காரணமாக, "கிராம நலம்" 1967 பிப்ரவரி இதழை குறிப்பிட்ட காலத்தில் கொண்டு வர இயலவில்லை. அதனுல், பிப்ரவரி-மார்ச் இரு இதழ்களையும் சேர்த்து, ஒரே இதழாக, இவ்விதழ் வெளியாகியுள்ளது.

வசந்தம் வந்தது மார்கழியில்....

[10-ம் பக்கத் தொடர்ச்சி]

பொம்மை ஆடாமல் அசையாமல் அப்படியே நிற்கிறது. மலர்க்கொடி போன்ற பெண்ணொருத்தி வருகிறாள். பொம்மையின் கழுத்துக்குப் பின்புறமாகச் சாவியால் திருகிவிடுகிறாள். துவளாத அங்க அசைவுகளோடு தாளத்திற்கேற்ப, பொம்மை ஆடுகிறது. "ஆடுவது பொம்மையல்ல" என்பதை உணர்ந்த போதிலும்—நம்மையே மறந்துவிடுகிறோம்.

ஆடு மேய்க்கும் சிறுவனொருவன் துள்ளிக் குதித்து ஓடி வந்து ஆடு மேய்க்கிறான். ஆடுகளை எண்ணிப் பார்க்கிறான். இரண்டு ஆடுகளைக் காணவில்லையாம். அங்குமிங்கும் வெற்றிடத்தில் தேடிப் பார்க்கிறான். அவனோடு சேர்ந்து நாமும் தேடுகிறோம்!

உஸ்பெக் கிராமிய நடனங்களில், நமது பரத நாட்டியத்தைப் போன்ற சிக்கலான அடவுகளோ, அபிநயங்களோ இல்லை என்பது உண்மைதான். ஆயினும், தரக் குறைவான, இனக் கவர்ச்சியைத் தூண்டும் அங்க அசைவுகள் எதுவுமே இல்லாது, காண்போர் உள்ளங்களை ஈர்க்கும், இனிமை நிறைந்ததாக இருந்தது. நடமாடிய ஆரணங்குகளின் அலங்காரத்திலும், அசைவுகளிலும், ஓர் அலாதியான அடக்கமே நிறைந்திருந்தது.

'வளர்ந்து வரும் நாகரீகத்தில்—உலகம் எத்தனையோ பிரிவுகளாக இருக்கலாம். ஆனால் கலையுலகம் ஒன்றுதான்' என்ற எண்ணமே உண்டாயிற்று.

—திரு சோம. மகாதேவன்.

[படங்கள் 17-ம் பக்கம் பார்க்க]

---

The following particulars regarding the ownership of "GRAMA NALAM", the monthly newspaper. are published, as called for, by rule 8 of the Registration of Newspapers (Cental) Rules, 1956:

## FORM IV

(*See* rule 8.)

| | | |
|---|---|---|
| 1 | Place of publication .. .. .. | N.C.C. Buildings, Fort St. George, Madras-9. |
| 2 | Periodicity of publication .. .. | Monthly. |
| 3 | Printer's name .. .. .. | Sri M. K. Gomethakavelu, B.A. (Hons.), Director of Stationery and Printing.) |
| | Nationality ... .. .. .. | Indian. |
| | Address .. .. .. ... | Government Press, Madras-1. |
| 4 | Publisher's name .. .. .. | Sri K. Diraviam, I. A. S., Director of Rural Development. |
| | Nationality .. .. .. .. | Indian. |
| | Address .. .. .. ... | N. C. C. Buildings, Fort St. George, Madras-9. |
| 5 | Editor's Name .. .. .. .. | Sri S. Venkataswamy, M.A., Public Relations Officer, Directorate of Rural Development. |
| | Nationality .. .. .. .. | Indian. |
| | Address .. .. .. .. | N.C.C. Buildings, Fort St. George, Madras-9. |
| 6 | Name and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital. | Government of Madras, Fort St. George, Madras-9. |

I, K. Diraviam, hereby declare that the particulars given above, are true to the best of my knowledge and belief.

(Signed) K. DIRAVIAM,
*Publisher*.

Dated 1st February, 1967.
















சோவியத் யூனியனைச் சேர்ந்த உஸ்பெக் (UZBEK) பிராந்தியத்தின் 'கிராம நடனக் குழு'வினர், ஜனவரி முதல் வாரத்தில் தமிழகத்திற்கு வருகை தந்து அரியதொரு கலை விருந்து அளித்தனர். சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்ற கலை விழாவுக்கு, தமிழகக் கவர்னர் திரு உஜ்ஜல் சிங் தலைமை வகித்தார்.


# மக்கள் உணர்வைப் பண்படுத்தி, பரவசப்படுத்தும் கிராமக் கலைகள்...































26-1-1967 அன்று, குடியரசு தின விழா, சென்னையில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. தமிழக கவர்னர் திரு உஜ்ஜல் சிங் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். அவ்வமயம் நடைபெற்ற அலங்கார வண்டிகளின் அணிவகுப்பு, அனைவருடைய கருத்தையும் கவர்ந்தது. அரசாங்கத்தின் பல்வேறு துறைகள் இந்த அலங்கார அணிவகுப்பில் பங்.கெடுத்துக் கொண்டன.






# மரங்களின் பராமரிப்பு—

## பஞ்சாயத்து நிறுவனங்களின் பொறுப்புகள்

[திரு எஸ். சுப்பையன், கிராம வளர்ச்சித் துணை நெறியாளர் (பணித்துறை).]

[கிராம வளர்ச்சித் துணை நெறியாளர் (பணித்துறை) திரு. எஸ். சுப்பையன் அவர்களின் ''மரங்களின் பாதுகாப்பு—பஞ்சாயத்து நிறுவனங்களின் பொறுப்புக்கள்'' என்ற தொடர் கட்டுரையின் முதல் பகுதி, சென்ற இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதில், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் வசம் ஒப்படைக்கப்பட்ட—தரப்பட்ட பலவேறு மரங்கள் பற்றியும், அவற்றின் பேரில் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்குள்ள உரிமைகள், கடமைகள் பற்றியும் கூறப்பட்டிருந்தது. கட்டுரையின் இந்த இரண்டாவது பகுதியில், பஞ்சாயத்து நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மரங்களின் பேரில், அரசாங்கத்திற்குள்ள அதிகாரங்கள், பாசன ஆதாரங்களில் பஞ்சாயத்துக்கள் மரங்களை நட்டு, மகசூலை அனுபவித்துக்கொள்ளுதல் போன்ற பல பிரச்னைகளை, கட்டுரை ஆசிரியர் தெளிவாக விளக்கியிருக்கிறார்.

—ஆசிரியர்.]

1927–ம் ஆண்டு ஜுலை மாதம் 1-ந் தேதிக்கு முன்பாக வாய்க்கால், ஆற்றின் கரைகளிலும் படுகை புறம்போக்குகளிலும், 1364-ம் பசலிக்கு முன்பாக ஆற்றின் ஆழமான பாகத்திலிருந்து (Bed of the river) 20 கெஜத்திற்குள்ளாக இருக்கும் இடங்களிலும் ரயத்துகளால் நடப்பட்ட மரங்கள்மீது பஞ்சாயத்துக்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. ஏனெனில் இவை அரசாங்கத்திற்குச் சொந்தமானது அல்ல.

வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, திருநெல்வேலி, சேலம் கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்களில் பொது நிலங்களில் இப்போதுள்ள அல்லது 1961–ம் ஆண்டு மே மாதம் 30-ந் தேதிக்குப் பிறகு வளர்ந்த சந்தன மரங்களின் மீது பஞ்சாயத்துக்களுக்கு உரிமை எதுமில்லை. இவற்றின் உரிமை முழுவதும் அரசாங்கத்திற்கே சேர்ந்தது.

பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்படாத பொது நிலங்களில் உள்ள மரங்களை பஞ்சாயத்துக்கள் சரிவர பாதுகாக்காமல், அல்லது பராமரிக்காமல் இருந்து வருகின்றன என்று வருவாய்க் கோட்ட அதிகாரி கருதினால், அம்மரங்களின் பேரில் பஞ்சாயத்துக்களுக்குள்ள உரிமைகளை வருவாய்க் கோட்ட அதிகாரிகள் எடுத்துக்கொண்டு விடலாம். இதில், பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்படாத எல்லாப் பொது நிலங்களிலும் உள்ள மரங்கள் தவிர, பஞ்சாயத்துக்களாலேயே நடப்பட்ட மரங்களும் அடங்கும். அவ்வாறு உரிமைகளை எடுத்துக் கொள்ள வருவாய்க்கோட்ட அதிகாரி விரும்புகையில், அவர் பஞ்சாயத்துக்களுக்குப் போதிய முன்னறிவிப்பு கொடுக்கவேண்டும். அவ்வாறு எடுக்கும்போது பஞ்சாயத்துக்கள் எவ்வித நஷ்ட ஈடும் கோரமுடியாது, பஞ்சாயத்துக்களாலேயே நடப்பட்ட மரங்களுக்குக்கூட நஷ்டாடு கிடையாது.

வருவாய்க் கோட்ட அதிகாரியுடன் கலந்தாலோசித்து கோட்டப்பொறியாளர் (Divisional Engineer) அல்லது நிர்வாகப் பொறியாளர் (Executive Engineer) கூட அவரின் துறையைச் சார்ந்த புறம்போக்குகளிலுள்ள மரங்கள் மீது, இதே மாதிரியான அதிகாரத்தைப் பயன்படுத்தலாம்.

பொதுமக்களின் வசதிக்காக மரங்களை வெட்டுதல்:

இதில் வருவாய்க்கோட்ட அதிகாரிக்கும் கோட்டப் பொறியாளர் அல்லது நிர்வாகப் பொறியாளருக்கும் கருத்து வேறுபாடு இருக்குமாயின், அவ்விஷயம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தெரிவிக்கப்படும். பின்னர், அது சம்பந்தமாக, மாவட்ட ஆட்சித் தலைவர் செய்யும் தீர்மானமே முடிவானது.

பொது மக்களின் பாதுகாப்பு, பொது மக்களின் வசதியை முன்னிட்டு, பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்

படாத பொது நிலங்களில் உள்ள மரங்களை வெட்டவோ அகற்றவோ வருவாய்க்கோட்ட அதிகாரி, கோட்டப் பொறியாளர், மற்றும் நிர்வாகப் பொறியாளர்க்கு அதிகாரம் உண்டு. அம்மாதிரி வெட்டப்பட்ட, அகற்றப் பட்ட மரங்களை ஏலம் விட்டு, அதில் கிடைத்த தொகையை பஞ்சாயத்தின் நிதியில் வரவு வைத்துக்கொள்ள ஒப்படைக்கப்படும். பொது மக்களின் பாதுகாப்பு, வசதியை முன்னிட்டு, மேற்கண்ட வகையில் வெட்டப்பட்ட மரங்கள் பஞ்சாயத்துக்களால் நட்டிருந்தாலும் கூட, அவற்றிற்கு எவ்வித நஷ்டஈட்டையும், பஞ்சாயத்துக்கள் பெறுவதற்கில்லை.

அரசாங்கத்தின் உபயோகத்திற்கென ஒரு பொது நிலம் எடுத்துக்கொள்ளப்பட்டாலும், பஞ்சாயத்தினிடம் ஒப்படைக்கப்படாத நிலம் ஒன்றை அரசாங்கம் தனியார்க்கு அடமானம் செய்தாலும் அந்த நிலங்களில் பஞ்சாயத்துக்கள் நட்டிருந்த மரங்களுக்கு, எவ்வித நஷ்டஈட்டையும் பெற முடியாது.

குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்த மரங்கள் (Species of trees) அரசாங்கத்தின் குறிப்பிட்ட துறையால் பயன் படுத்தப்படுவதற்கே ஒதுக்கப்பட்டுள்ளது என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கலாம்.

**பஞ்சாயத்தின் தீர்மானம் அவசியம்:**

பஞ்சாயத்துக்களுக்கு மாற்றப்பட்ட மரங்களின் குத்தகைகள், ஏலங்கள், விற்பனைகள், மற்றும் உயிரற்ற, வரண்டு போன அல்லது காற்றடித்து விழுந்த மரங்களை 'பைசல்' செய்த விதம் எல்லாம் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தின் சட்டபூர்வமான தீர்மானத்தின் மூலம் உறுதி செய்யப்படவேண்டுமேயன்றி, பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி என்ற முறையில், பஞ்சாயத்துத் தலைவரே, தனிப்பட்ட முறையில் எதையும் செய்யக்கூடாது.

பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்ட பொதச்சாலை அல்லது இதர சொத்துக்களில் அனுமதியின்றி எவரேனும் மரங்களை நட்டால், அவருக்கு ரூ. 200 அபராதம் விதிக்க ஏதுவாகும். அதே போன்று, இப் புறம்போக்கு நிலங்களிலுள்ள மரங்களையோ அல்லது 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்திலுள்ள பிரிவு 86 அல்லது பிரிவு 87-ல் முறைப்படுத்தப்பட்டுள்ள நிலங்களிலுள்ள மரங்களையோ எவரேனும் அனுமதியின்றி வெட்டினால், அவருக்கும் ரூ. 200 அபராதம் விதிக்க ஏதுவாகும்.

**உயிருள்ள மரங்களை வெட்டுதல் :**

உயிருள்ள மரங்களை வெட்டுவதற்கு பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரம் இல்லை. ஆனால், சாலையோரங்களிலுள்ள மரங்களினால் போக்குவரத்துக்கு அபாயம் நேரிடும் என்றோ, உயிருக்கு ஆபத்து விளையும் என்றோ, பொதுச் சுகாதாரத்திற்கு தீங்கு ஏற்படக் கூடும் என்றோ, அல்லது குடி நீர் ஆதாரமாயுள்ள சிறு குளங்களின் கரைகளிலுள்ள மரங்களின் இலைகள், குளத்திலுள்ள நீரிலே விழுவதால், குடிநீர் அசுத்தமாகிவிடும் என்றோ பஞ்சாயத்துக்கள் கருதினால், வருவாய்க் கோட்ட அதிகாரியின் முன் அனுமதி பெற்று முறைப்படி ஏலம் விட்டு வெட்டலாம்.

புயலினால் விழுந்த மரங்களை பைசல் செய்வதற்கு, பஞ்சாயத்துக்கள், வருவாய்க்கோட்ட அதிகாரியின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்; இம்மாதிரியான மரங்களை விற்றதனால் கிடைத்த வருமானம் எவ்வளவு என்பதை கோட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துவிட்டு, அதை பஞ்சாயத்துக்களின் நிதிகளில் வரவு வைத்துக்கொள்ள வேண்டும்.

**அதிகாரிகளே, மரத்தை வெட்ட நடவடிக்கை எடுத்தல்:**

பொதுச்சாலையைச் சார்ந்த நிலத்திலுள்ள மரம் அல்லது அதன் கிளையானது சாலையில் விழுந்து, அதனால் மக்களுக்கோ கட்டிடங்களுக்கோ ஆபத்து நேரிடலாம் என்றிருந்தால், பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் அல்லது பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி மரத்திற்கு பொறுப்பானவரைக் கொண்டு அகற்றலாம். உடனடியாக நடவடிக்கை தேவைப்பட்டால், அந்த அதிகாரியே, அம்மரத்தையோ, அந்தக் கிளையையோ, வெட்ட ஏற்பாடு செய்யலாம்; அல்லது வேறு தற்காலிக நடவடிக்கை மேற்கொள்ளலாம்; இதனால் ஏற்படும் செலவை, மரத்தின் சொந்தக்காரரிடமிருந்து வசூலித்துக் கொள்ளலாம்.

**பாசன ஆதாரங்களும், மரங்களும்.**

பஞ்சாயத்து யூனியன்களுக்கு மாற்றப்பட்ட சிறிய பாசன ஆதாரங்களின் படுகைகளிலும், கரைகளிலும் உள்ள தோட்டங்களை (Plantations) பாதுகாக்கும் பொறுப்பும், உரிமையும் யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன; இந்த மரங்களின் மூலமாகக் கிடைக்கும் மகசூலைப் பயன்படுத்திக்கொள்ளும் உரிமை யூனியன்களுக்கு தரப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன்கள் இத்தோட்டங்களை பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கலாம்; அவ்வாறு செய்தால், அம்மரங்களின் மகசூலை, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தே அனுபவித்துக்கொள்ளும்.

**வருவாயைப் பெருக்க வழி:**

சிறிய நீர்ப்பாசன குளங்களின் படுகைகளிலும், முன் கரைகளிலும், கருவேல மரங்களை வளர்ப்பதினால், பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்கள் தங்களது வருவாயை சுலபமாகவும், அதிகச் செலவில்லாமலும் விருத்தி செய்து கொள்ளலாம். இதனால் வருவாய் பெருகுவது ஒரு புறமிருக்க, இம்மரங்களினால் விறகு, கால்நடைத் தீவனம், கலப்பை விவசாயக் கருவிகள் தயாரிக்க தேவையான மரம் சுலபமாக உள்ளூரிலேயே கிடைக்க வழியேற்படுகிறது. கூடுதல் செலவு ஏதுமின்றி, உள்ளூரிலேயே கிடைக்கும் வசதிகளைப் பயன்படுத்தி விதைகளை மட்டுமே வாங்கி, செலவைக் குறைத்து வருவாயை அதிகரித்துக் கொள்ளலாம்.

## சுகாதாரத் துறையில்
## பாரதம் அடைந்துள்ள சாதனைகள்



# பிணி தீர்க்கும் அரும் பணி

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்". பண்புள்ள சமுதாய அமைய, உடல் வலிவும் உள்ள வலிவும் பெற்ற மக்கள் தேவை. மனிதனுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க வீடு எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் உடல் ஆரோக்கியமும். "உடலை வளர்த்தேனே—உயிர் வளர்த்தேனே" என்பது திருமூலர் வாக்கு, மக்களைப் பிணி தாக்காமல் காப்பாற்ற வேண்டியது, வளங்கொழு அரசின் அடிப்படை நோக்கமாக இருத்தல் வேண்டும். கடந்த 15 ஆண்டுகளில் பாரதம், மருத்துவத் துறையிலும் சுகாதாரத் துறையிலும் மகத்தான முன்னேற்றம் கண்டுள்ளது. புள்ளி விவரங்கள், இதை, சீரிய முறையில் விளக்குகின்றன.

* இந்தியாவின் ஆயுள் காலம் அதிகமாகியுள்ளது :

| | |
|---|---|
| 1947-ல் இந்தியனின் சராசரி ஆயுள் | 27 |
| 1966-ல் இந்தியனின் சராசரி ஆயுள் | 50 |

* மரண விகிதம் வெகுவாகக் குறைந்துவிட்டது :

1911–21-ல் மரண விகிதம் 48 ஆயிரத்துக்கு மேல்.
1954-ல் மரண விகிதம் ஆயிரத்துக்கு 27 தான்.
1966-ல் 16 பேர்.

இன்னும் 20 வருடங்களில் மரண விகிதம் 8 ஆகக் குறையலாம்.

* அதிகப்படியான டாக்டர்கள் :

அதிகப்படியான மருத்துவ மனைகள் :

சாதாரண மக்களும்கூட மருத்துவ வசதி பெறுகின்ற வகையில், நாட்டிலே டாக்டர்களும், மருத்துவ மனைகளும் மற்ற மருத்துவ வசதிகளும் கடந்த 15 ஆண்டுகளில் பிரம்மாண்டமான அளவில் பெருகியுள்ளன.

இதோ புள்ளி விவரங்கள் :—

| | 1951 | 1966 |
|---|---|---|
| தாய் சேய் நல நிலையங்கள் | 1.700 | 10,000 |
| ஆதார சுகாதார நிலையங்கள் (Primary Health Centres). | ஒன்றுமில்லை | 5,223 |
| மருத்துவச்சிகள் (தாய்கள்) | 8,000 | 48,000 |
| டாக்டர்கள் | 56,000 | 86,000 |
| நர்சுகள் | 15,000 | 42,000 |
| மருத்துவ மனைகளும் மருந்தகங்களும். | 8,600 | 14,600 |
| மருத்துவ மனைகளில் படுக்கைகள். | 1,13,000 | 2,40,000 |

வைத்தியக் கல்லூரிகள் அதிகமாகியுள்ளன :

* முதல் 5-வது ஆண்டுத் திட்டத் தொடக்கத்தில் (1951-ல்) 30 வைத்தியக் கல்லூரிகள் (Medical Colleges) தான் இருந்தன. ஆனால் இன்றோ, 88 மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. இந்த 88 மருத்துவக் கல்லூரிகளில் ஆண்டுதோறும் 11,500 டாக்டர்கள் பயிற்சி பெற்று வெளிவருகின்றனர்.

* நோய்கள் வராமல் தடுக்கும் முறைகளும் மிகத் தீவிரமாகவும் விஞ்ஞான ரீதியாகவும் கையாளப்படுகின்றன. இந்த நடவடிக்கைகளினால் மக்கள் பிணி தாக்காமல் பாதுகாக்கப்படுகின்றனர்.

** 1951-ல் 10 கோடி மக்கள் மலேரியாவினால் பீடிக்கப்பட்டிருந்தனர். ஆனால் 1965-லோ இப்படி மலேரியாவினால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 87 ஆயிரம் தான். மலேரியா தாக்குதல் 99·5 சத விகிதத்திற்குக் குறைந்துள்ளது.

** நாட்டின் மொத்த மக்கள் தொகையில், சுமார் 83 சத விகிதம் பேர் பெரியம்மை தாக்காமல் பாதுகாக்கப் பட்டுள்ளனர்.

| | |
|---|---|
| 1950-ல் பெரியம்மையால் இறந்து போனவர்கள். | 57,000 |

1963-லோ இப்படி இறந்து போனவர்கள் 7,000 தான

* எலும்புருக்கி நோய் வராமல் தடுக்க :

8 கோடி மக்களுக்குமேல் பி.ஸி.ஜி. ஊசி குத்தப் பட்டுள்ளது. தற்சமயம் 427 எலும்புருக்கி கிளினிக்குகளும் 34,500 படுக்கைகளும் உள்ளன.

நோய்கள் வராமல் தடுக்கவும்—நோய்கள் தாக்கினால் அவற்றிலிருந்து மக்களைக் காப்பாற்றவும் போதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன—அது மட்டுமல்ல; சுற்றுப் புறத் துப்புரவும் ஆரோக்கிய வாழ்வும் இன்றியமையாதல்லவா ? குடிநீர் வழங்கலும்—துப்புரவும் அரசினரின் திட்டத்தில் முதலிடம் பெறுவதில் வியப்பில்லை அல்லவா ?

* கடந்த மூன்று திட்டங்களில், குடிநீர் வழங்கல், துப்புரவுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 200 கோடி ரூபாய்க்கு மேல்.

17 ஆயிரம் கிராமங்களுக்கு முன்பே, குழாய் மூலம் குடி தண்ணீர் வழங்குகின்ற வசதி செய்து தரப்பட்டு விட்டது. ஆனால் எல்லா மக்களுக்கும் குடிநீர் வழங்கலும் துப்புரவும் பிரம்மாண்டமான பணிகளாகும். எல்லாக் கிராமங்களுக்கும் சுத்தமான குடிதண்ணீரும், போதிய சுகாதார வசதிகளும் செய்து தர வேண்டுமென்றால் அதற்கு சுமார் 2,500 கோடி ரூபாய் தேவைப்படும். இத்துறையில் அடுத்த 20 ஆண்டுகளில் செயல்படுத்தக் கூடிய திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது.

**குழந்தைகள் நலன் :**

யூனிசெஃப் உலக சுகாதார நிறுவனம், 'கேர்' நிறுவனம் போன்ற நிறுவனங்களின் உதவியுடன் குழந்தைகளுக்கும் மகப்பேறு நிலையில் உள்ள தாய்மார்களுக்கும் பால் வழங்க ஏற்பாடாகி உள்ளது. தாய் சேய் நல நிலையங்களின் மூலம், சுமார் 11 இலட்சம் தாய்மார்களும், குழந்தைகளும், பள்ளிகளின் மூலம் சுமார் 10 இலட்சம் குழந்தைகளுக்கும் பால் வழங்கப்பெறுகிறது.

**யூனிசெ.·.ப் திட்டத்தின்கீழ் :**

15 கோடி பவுண்டு ஆடை எடுக்கப்பட்ட பால் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. சுகாதாரம் மற்றும் குடும்பக்கட்டுப்பாடு திட்டங்களின்கீழ் செலவிடப்பட்டுள்ள தொகை :—

| | | |
|---|---|---|
| **முதல் 5 ஆண்டுத் திட்டத்தில்** | .. | **140 கோடி ரூபாய்** |
| **2-வது திட்டத்தில்** | .. | **225 கோடி ரூபாய்** |
| **3-வது திட்டத்தில்** | .. | **342 கோடி ரூபாய்** |

**நான்காவது திட்டத்தில் இதற்கான நிதி ஒதுக்கீடு, 1,000 கோடி ரூபாயாக் இருக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது.**

• பத்தாண்டுகளுக்கு முன் இருந்த குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் 150 தான். ஆனால் இப்பொழுதே 17,000 நிலையங்கள் உள்ளன. இந்த 17 ஆயிரத்தில், 15 ஆயிரம் நிலையங்கள் கிராமங்களில் உள்ளன.

**நான்காவது திட்டக் காலத்தில் குடும்பக் கட்டுப்பாடும் சுகாதாரமும்.**

குடும்பக்கட்டுப்பாடு திட்டத்திற்கு மட்டும் 95 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. குடும்பக் கட்டுப்பாடு ஊழியர்களுக்காக இப்பொழுதுள்ள 16 பயிற்சி நிலையங்கள் போக, மேலும் 28 புதிய பயிற்சி நிலையங்கள் திறக்கப்படும். நான்காவது திட்டக்காலத்தில் வைத்தியக் கல்லூரிகள் 87-லிருந்து 112 ஆக உயரும். மேலும் 45 ஆயிரம் டாக்டர்கள், 42-லிருந்து 45 ஆயிரம் மேலும் நர்சுகள், மருத்துவச்சிகள் மேலும் 60 ஆயிரமும் ஆக இந்த எண்ணிக்கை உயரும். மேலும் 400 ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்படும். 1960-61-ல் இந்த எண்ணிக்கை 2,800 தான். இதனால் நாட்டில் உள்ள சமுதாய வளர்ச்சி வட்டாரங்கள் ஒவ்வொன்றுக்கும் குறைந்த பட்சமாக, ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கும். பொதுவாக, நான்காவது திட்டக் காலத்தில் மருத்துவ வசதிகளும் சுகாதார வசதிகளும் மேன்மேலும் பெருவதற்கு மக்கள் அரசு வழிகோலியுள்ளது.

(ஆதாரம் : மத்திய அரசாங்க செய்தி ஒலிபரப்புத்துறை வெளியிட்டுள்ள 'செய்தி விளக்கக் குறிப்புகள் (Talking Points) )

**உங்களுக்குத் தெரியுமா ?**

• **அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் ஒப்பிட்டுப்பார்த்தால், நிலப்பரப்பில், இந்தியா, ஐந்தில் இரண்டு மடங்கு தான் உள்ளது. ஆனால், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனத்தொகையைவிட இந்தியாவின் ஜனத்தொகை இரண்டரை மடங்கு அதிகம்!**

• **1961-ம் ஆண்டு ஜனத்தொகைக் கணக்குப்படி, மொத்த ஜனத்தொகையில் 40·2 சத விகிதம் 0–14 வயதுக்குள் உள்ளவர்கள் : 47·9 சத விகிதத்தினர் 15லிருந்து 49 வயது வரையில் உள்ளவர்கள் : 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் 11·9 சதவிகிதத்தினர்!**

• **இந்திய ஜனத்தொகையில், பெண்களைவிட ஆண்களே அதிகம். கடந்த ஜனத்தொகைக் கணக்கு (Census) எடுத்த ஆறு சந்தர்ப்பங்களில், 1000 ஆண்களுக்கு முறையே 963, 953, 940, 934, 947, 941 பெண்கள் உள்ளனர் என்பது புலனாகியது!**

• **மக்கள் நெருக்கம் (density of population) 1951-ல் நம் நாட்டில் 312 பேர். இது 1961-ல் 370 ஆக உயர்ந்தது.**

• **நமது 16 மாநிலங்களில், (யூனியன் பிரதேசங்களையும் சேர்த்து) மக்கள் தொகைப் பெருக்கம் கேரள மாநிலத்தில்தான் அதிகம். கேரள மாநிலத்தில், ஒரு சதுர மைலுக்கு 1127 பேர் வசிக்கின்றனர். மேற்கு வங்காளம் இந்த விஷயத்தில் அடுத்த ஸ்தானத்தை வகிக்கிறது. மேற்கு வங்காளத்தில் ஒரு சதுர மைலுக்கு 1032 பேர் வசிக்கின்றனர்.**

• **இந்தியாவில் 1961-ம் ஆண்டு எடுக்கப்பட்ட ஜனத்தொகைக் கணக்குப்படி, 5-ம் அதற்கும் மேற்பட்ட வயதுள்ளவர்களில் 28·3 சத விகிதத்தினர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். எல்லா வயதினரையும் சேர்த்தால், 24 சத விகிதத்தினர் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள். 1951-ல், இந்த அளவு 19·2 சத விகிதம் தான்! எழுதப்படிககத் தெரிந்தவர்கள் அதிகமாகி உள்ளார்கள். ஆனால், கடந்த 10 ஆண்டுகளில் ஜனத்தொகை மிகவும் வேகமாக பெருகியுள்ளதால், எழுதப்படிக்கத் தெரியாதவர்களின் தொகையும் மிக அதிகமாகிவிட்டது!**

• **எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் கிராமப் பகுதிகளில் தான் அதிகம். 1961-ல், கிராமப் பகுதிகளில், ஆண்களில் 23·5 சத விகிதத்தினரும், பெண்களில் 7.5 சத விகிதத்தினரும் தான் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள். நாட்டின் ஜனத்தொகையில் கிராம மக்களின் எண்ணிக்கை 82 சத விகிதமாகும்!**

**கல்வி வசதி அதிகமாகப் பெற்றுள்ள நகர மக்களில் ஆண்களில் 31·2 சதவிகிதத்தினரும், பெண்களில் 22·5 சத விகிதத்தினரும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள்.**

**மாநிலங்களிடையே, கேரள மாநிலத்தில் தான் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் சத விகிதம் அதிகம். கேரள மாநிலத்தில் 46·8 சத விகிதமும், தமிழ்நாட்டில் 31·4 சத விகிதம் பேரும், குஜராத் மாநிலத்தில் 30·5 சத விகிதம் பேரும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள்.**

# புதிய பஞ்சாயத்தும்—விவசாய வளர்ச்சியும்

[புதிய பஞ்சாயத்து ஆட்சியின் பொறுப்புகள் பற்றி, விளக்கமாக பலமுறை "கிராம நலத்"தில் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது. இவ்வாட்சியின் வெற்றி, தற்போதைய உணவு நெருக்கடியைத் தீர்க்க, பஞ்சாயத்து அமைப்பு முறை எவ்வாறு உதவுகின்றது என்பதைப் பொறுத்துள்ளது என்பதில் ஐயமில்லை. இக் கருத்தினை அடித்தளமாகக் கொண்டுள்ள இக்கட்டுரை, "பஞ்சாயத்து ஆட்சியும் உணவு உற்பத்தியும்" என்ற பிரச்னையை, பயனுள்ள கோணத்திலிருந்து ஆராய்கிறது.]

[திரு க. வெங்கடேசன், முதல்வர், ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயா கலைக்கல்லூரி, கோவை மாவட்டம்.]

ஆழ்ந்த தீர்க்கதரிசனத்தோடும், நடைமுறை அரசியல் அறிவோடு இந்திய உள்துறை ஆட்சி அமைப்பிலே ஏற்படுத்தப்பட்ட நிறுவனப் புரட்சியே, புதிய பஞ்சாயத்து ஆட்சியாகும். அரசாங்கத்தின் ஆதரவோடு, மக்களின் ஒத்துழைப்பைக் கொண்டு, சமுதாய வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றி, இந்திய கிராமங்களைச் சிறு சிறு குடியரசுகளாக மாற்ற வேண்டிய பெரும் பொறுப்பை, மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைத்துள்ளது, புதிய பஞ்சாயத்து ஆட்சி நம் கிராமங்களின் சமூக, பொருளாதார. கலாச்சார வளர்ச்சிகளை ஏற்படுத்தி, ஒவ்வொரு கிராமத்தையும் தன்னிறைவு பெற்ற, தன்னம்பிக்கை மிக்க சுபீட்சப் பகுதிகளாக்குவதன் மூலம் தான், பஞ்சாயத்து நிறுவனங்கள் தங்களது பொறுப்பை செவ்வனே நிறைவேற்ற முடியும்.

### பொருளாதாரச் சவால்

கிராமங்கள் பரவலாக முன்னேற வேண்டுமாயின், கிராம மக்களிடையே கருத்துப் புரட்சியும் விழிப்புணர்வும் ஏற்படவேண்டும். அதேபோன்று, பொருளாதார முன்னேற்றம் உண்டாக வேண்டுமாயின், மக்களின் 'பொருள் உற்பத்தித்திறனும்' (Productivity) 'தொழில் நுணுக்க அறிவும்' (Technical know—how) பெருக வேண்டும். நமது கிராமங்களைப் பொருத்தவரை, பொருளாதார முன்னேற்றமும் சமூக வளர்ச்சியும் அடிப்படையிலேயே விவசாய வளர்ச்சியைப் பொறுத்துள்ளது. பருவ காலத்தை நம்பியிருக்கும் இந்திய விவசாயம் பழங்காலந் தொட்டே பொருளாதாரச் சவாலாக (Economic challenge) இருந்து வருகிறது. ஆணிவேர்களை ஆழமாகப் பதித்து ஆலவிருட்சம் போன்றுள்ள இச் சவாலைக்கருத்துப் புரட்சி செய்வதன் மூலமாகவும், உற்பத்தித்திறனை வளர்ப்பதன் மூலமாகவும் வெற்றிகரமாகச் சமாளிப்பதில்தான், புதிய பஞ்சாயத்தின் வெற்றியோ தோல்வியோ அடங்கியுள்ளது எனில் மிகையாகாது.

விவசாய உற்பத்திப் பெருக்கத்தின் இன்றியமையாமையை நன்குணர்ந்தே முதல் திட்டக்காலத்தில் விவசாய, விவசாய சம்பந்தப்பட்ட துறைகளில் ரூ. 2,90 கோடியும், இரண்டாம் திட்ட காலத்தில் ரூ. 549 கோடியும், மூன்றும் திட்டக் காலத்தில் ரூ. 1,092 கோடியும் செலவிடப்பட்டது. அதாவது, திட்டத்தின் மொத்தத் தொகையில் மூன்றில் ஒரு பங்கு விவசாயப் பெருக்கத்துக்கென செலவிடப்பட்டது. அதன் விளைவாக விவசாய உற்பத்தியும் வெகுவாகப் பெருகியது. 1949–50-இல் 55 மில்லியன் டன்னாக இருந்த விளைச்சல் 1964–65-இல் 88 மில்லியன் டன்னாக உயர்ந்தது. அதாவது உணவு உற்பத்தி 60 சதவிகிதமாக உயர்ந்தது. இதே காலத்தில் மக்கட் பெருக்கம் 30 சதவிகிதம்தான் பெருகியது !! வேறுவிதமாகக் கூறுவதாயின், மக்கட் தொகையைவிட உணவு உற்பத்தி இருமடங்கு உயர்ந்தது அதோடு, உணவுதானிய இறக்குமதியை ஆண்டுக்காண்டு உயர்த்திக்கொண்டே வந்திருக்கிறோம். 1951-இல் 4·80

மில்லியன் டன் தானியத்தைத் தருவித்த நாம் 1965ல் 7·45 மில்லியன் டன் தருவித்தோம். வெகுமதியாகப் பெற்றவை வேறு. இருப்பினும் உணவுப் பிரச்னை உக்கிரமாக இருந்து வருவதற்கான காரணம், வளர்ந்து வரும் நம் தேவையைச் சரிக்கட்டக்கூடிய அளவுக்கு நமது விவசாய உற்பத்தி பெருகவில்லை என்பதுதான். உழைப்புக்கும் விளைவுக்குமிடையே உள்ள ஏற்றத்தாழ்வால் தோன்றும் நெருக்கடியே, இப்பொருளாதாரச் சவாலாகும்.

### சவாலுக்குப் பதில்

இச்சவாலை எப்படிச் சமாளிப்பது ? விவசாயப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு யார் பொறுப்பேற்க வேண்டும்? இப்பொறுப்பில் புதிய பஞ்சாயத்து ஆட்சியின் பங்கு என்ன ? விவசாய உற்பத்திப் பெருக்கத்துக்கான பொறுப்பைப் புதிய பஞ்சாயத்து நிறுவனங்களே ஏற்க வேண்டுமென அடிக்கடி வலியுறுத்தப்படுகின்றது. அதற்கான ஷரத்துக்களும் பல்வேறு பஞ்சாயத்துச் சட்டங்களிலும் சேர்க்கப்பட்டுள்ளன. எனவே, இப்பொருளாதாரச் சவாலைத் தீர்ப்பதில், புதிய பஞ்சாயத்து அமைப்புக்கள் எந்த அளவுக்குப் பணியாற்ற முடியும் என்பதை ஆராய்தல் அவசியமாகும்.

மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம், பஞ்சாயத்து ஆட்சி ஆகிய மூன்று அரசுகளும் விவசாய வளர்ச்சிக்கான கூட்டு பொறுப்பேற்க வேண்டும். மத்திய மாநில அரசாங்கங்கள் செய்ய வேண்டியதென்ன ? திட்டக் கமிஷனின் ' மதிப்பீட்டு நிறுவனம் ' மேற்கொண்ட விவசாயத் திட்டங்களைப் பற்றிய ஆராய்ச்சி (1) காலதாமதம் ; (2) தவறான செயல் திட்டம் ; (3) பல்வேறு நிலைகளிலுள்ள அதிகாரிகளின் சிரத்தைக் குறைவு ஆகியவை விவசாய வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருப்பதாகவும், இக்குறைபாடுகளால் வினியோகம் ; விதைப் பெருக்கம், வினியோகம் ; நில அபிவிருத்தி வேலைகள் ; கடன் வசதிகள் அளித்தல் ; விஸ்தரிப்புப் பணி ஆகியவை எதிர்பார்க்கும் பயனைக் கொடுக்கமுடியாதபடிச் செய்து விடுகின்றன என்பதையும் தெளிவாகக் காட்டுகின்றது. மேலும், குறைந்தபட்ச ஆண்டு விவசாய உற்பத்திக் குறியளவான 5 சதவிகிதத்தைக்கூட எட்ட முடியாமல், 3·6 சதவிகிதத்திலேயே இருப்பதற்குப் பின்வரும் காரணங்களைக் காட்டுகின்றது, நான்காவது திட்ட நகல். 1. விவசாயத்துக்கு வேண்டிய பொருள்களை சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் குறியளவுப்படி உற்பத்தி செய்ய தவறிவிட்டன ; 2. மின்சார வினியோகம் விவசாயத் தேவையைக் கணக்கிட்டுச் செய்யப்படவில்லை ; 3. விவசாயத்துக்கான பாசன நீரைப் பயன்படுத்துவதில் காலதாமதம் ; 4. தேவையான கடன் வசதியின்மை. இதுபோன்ற மூலதனத்தை முடக்கக்கூடிய திட்டங்களைத் திறமையுடன் நிறைவேற்றி, நேர்மையான திறமையான விரைவாகச் செயல்படக் கூடிய நிர்வாகத்துக்கே உத்திரவாதமளித்து, விவசாய ஆராய்ச்சி, விவசாயக் கல்விப் பெருக்கம், போக்குவரத்து வசதி அதிகரிப்பு போன்ற பணிகளை மேற்கொள்ளவேண்டிய பொறுப்பு, மத்திய, மாநில அரசாங்கங்களையே சாரும். புதிய பஞ்சாயத்து ஆட்சியின் செயல் திறன், பெரிதும் இத்துறைகளின் சாதனைகளைப் பொருத்தேயுள்ளது.

சிறந்த பரிசு பெற்ற

## கிராம ரேடியோ மன்றம்

வட ஆர்க்காடு மாவட்டம், வந்தவாசி பஞ்சாயத்து யூனியனிலுள்ள ' கீழ்க்கோவளவேடு ' என்னும் கிராம ரேடியோ மன்றத்துக்கு, வேலூர் ஜவான் மைதானத்தில் நடைபெற்ற 'ஏர்முனை விழா'வின்போது, மாவட்ட ரெவின்யூ அதிகாரி திரு கே. முத்து வீரப்பன், M.A. அவர்களால், டிரான்ஸிஸ்டர் ரேடியோ ஒன்று, தமிழ் நாடு அரசாங்கத்தின் சார்பாக வழங்கப்பட்டது.

இது கானடா நாட்டின் அல்லர்ட்டா மிஷனைச் சேர்ந்த பேலி பண்ணை மன்றத்தினால் வெகுமதியாக அளிக்கப்பட்டவைகளில் ஒன்றாகும். இவ்வாறு தமிழ்நாட்டில் சிறப்புற இயங்கும் 7 கிராம வானொலி மன்றங்கள் ஒவ்வொரு டிரான்ஸிஸ்டர் பரிசைப் பெற்றுள்ளன.

---


### உழைக்கும் கரங்கள் ஆற்ற வேண்டிய பணி

குதிரையை நீரோடைவரை அழைத்துச் செல்லலாம் : ஆனால் நீரைக் குடிக்கவேண்டியது குதிரைதானே ? மத்திய, மாநில அரசாங்கங்கள் திட்டங்கள் போடலாம் ; திட்டத்துக்கான தொகையை ஒதுக்கலாம் ; பிற வசதிகளையும் உதவிகளையும் கொடுக்கலாம். ஆனால் இத்திட்டங்களை நிறைவேற்றி, அத்திட்டங்களின் விளைவை களத்தில் காட்டவேண்டியவர்கள் கிராமத்தவரல்லவா ? கிராமங்களில் வாழும் ' கைசெய்துண்மாலையவரான 'க் கைமடங்கா உழவரன்றோ இவ்வதிசயத்தைச் செய்யவேண்டும் ? பேப்பர் திட்டமும் மேடைப்பேச்சும், புள்ளிவிவரக் குவிப்பும் அச்சாதனையைச் செய்யமுடியாதே ! எனவே கிராம மறுமலர்ச்சியை மனத்தில் கொண்டு கிராமத்தாரிடையே உழவரிடையே, நிலச் சொந்தக்காரர்களிடையே நெருங்கிச் செயல்படும் கிராமப் பஞ்சாயத்துக்களால் மட்டுமே, கிடைக்கும் வாய்ப்புக்களையும் வசதிகளையும் முழுதும் பயன்படுத்தி விவசாய வளர்ச்சியைக் காட்டமுடியும் ; காட்டவேண்டும். பஞ்சாயத்து அமைப்பின் மூலமாகத்தான், இதைச் செய்யமுடியும். பஞ்சாயத்து திறன்பட, பலரும் எதிர்பார்க்கும் அளவுக்குச் செயல்பட முடியாமைக்கு, நிதிவசதிக்குறைவு, அதிகாரம் தேவையான அளவுக்குக் கொடுக்கபடாமை போன்ற காரணங்கள் காட்டப்படலாம். இருப்பினும், உள்ள வசதியைக்கொண்டு, இருக்கும் அமைப்புமுறையை வைத்தே பஞ்சாயத்து அதன் குறுகிய வட்டத்துக்குள் செய்யக்கூடியவை, செய்ய வேண்டியவை எவ்வளவோ உள்ளன. அவற்றுள் முக்கியமான காரியங்கள் வருமாறு :

(1) விவசாய வளர்ச்சிக்கு இன்றியமையாத வேண்டிய விதைகள் உரங்கள், பூச்சிக்கொல்லிகள் விஞ்ஞான விவசாயக் கருவிகள், பிற வசதிகள் ஆகியவற்றை உரிய காலத்தில் பெற்று, பாரபட்சமின்றித் திறமையுடன் காலதாமதமின்றி விநியோகிக்கவேண்டும். ஒழுங்கான உர உபயோகத்தால் மட்டும் 40 சதவிகித அதிக விளைச்சலைக்காட்டலாம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது ; (2) இவற்றை விநியோகித்தால் மட்டும் போதாது. விநியோகமாகும் இவ்வசதிகளும், இவற்றோடு நீர்ப்பாசன வசதி, மின்சார வசதி ஆகியவையும் திறமையுடன் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதையும் உறுதி செய்ய வேண்டும் ; (3) இரண்டரை ஏக்கராவிக்குக் குறைவாக நிலத்தை வைத்துக்கொண்டிருக்கும் விவசாயக் குடும்பங்கள் மட்டும் நமது நாட்டில் இருநூறு இலட்சம் உள்ளன. இவர்களை நிலமற்றோர் என்றே கருதி விவசாய வேலைபோக மீதமுள்ள நேரத்தில் குடிசைத் தொழில்களிலும், பொதுக்காரியங்களிலும் ஈடுபடுத்த வேண்டும் ; (4) விவசாய உற்பத்தித் திட்டங்களை விவசாயிகளைக் கலந்தே போட்டு அவர்களைக் கொண்டே நிறைவேற்ற வேண்டும். ஆர்வமுள்ள சிறு விவசாயிகளை (Small Farmers) ஒன்றிணைத்து, அவர்களின் ஆர்வத்தைப் பயன்படுத்தி வேண்டிய வசதிகளைத் தேடித் தந்து, ஊக்குவித்து, விவசாய வளர்ச்சித் திட்டத்தில் ஈடுபடுத்த வேண்டும் ; (5) பஞ்சாயத்தும், பஞ்சாயத்து விவசாயக் குழுவும் சமுதாய விவசாய விரிவுப்பணிகள் மூலம் சமுதாய ஆதரவைத் திரட்ட வேண்டும். விரிவுப் பணியாளர்களோடு, பஞ்சாயத்துக் கருகாமையில் விவசாயப் பள்ளியிருப்பின் அதையும் இப்பணிக்கும் பயன்படுத்திக்கொள்ள ஏற்பாடு செய்யலாம். உணவு பழக்கத்தை மாற்றிக்கொள்ளல், சீரான சத்துணவின் அவசியம், பயிர் மாற்ற முறை (Crop rotation) யின் நன்மை ஆகிய பிரச்சாரப் பணியிலும் ஈடுபடவேண்டும் ; (6) வசதிகளையும் வாய்ப்புக்களையும் படிப்பு பணவசதி காரணமாகப் பயன்படுத்திக்கொள்ளும் கிராம முற்போக்கு விவசாயிகளை ஏழை குடியானவர்களோடு இணைத்து ஏழை விவசாயிகளுக்கும் பயன்படுவதற்கான பிணைப்புப் பாலமாகப் பஞ்சாயத்து விளங்க வேண்டும் ; இருப்பின் அவர்கள் பயிற்சி பெற்ற அதிகாரிகளைவிடப் பன்மடங்கு அதிகப் பயனைக் கொடுக்க முடியும் ; (7) அண்டைக் கிராமங்களிலுள்ள வெற்றிகரமான முற்போக்கு விவசாயிகளின் அறிவையும், அனுபவத்தையும், ஒத்துழைப்பையும் பெற்று பரஸ்பரத் தொடர்பை ஏற்படுத்திப் பயனடையவேண்டியதும் பஞ்சாயத்தின் பொறுப்பேயாகும். (8) அந்தந்த கிராம நிலை அமைப்புக்கு ஏற்ப ஒரு குறிப்பிட்ட அளவு உணவு தானியங்களை உற்பத்தி செய்து விடுவதென முடிவு செய்து கொண்டு, அக்குறியளவை எட்டாவிடில், பஞ்சாயத்து உறுப்பினர்கள் அல்லது பஞ்சாயத்து விவசாயக் குழுவினர் தன்னிச்சையாகப் பதவியைத் துறந்துவிடுவதென்ற வழக்காற்றை ஏற்படுத்தல் நலம் ; அதேபோன்று விவசாய சாதனையை வைத்தே மானியத்தொகை பெறுவது என்ற கருத்தைப் பஞ்சாயத்து யூனியன்களே பிரஸ்தாபித்து வலிந்து ஏற்கவேண்டும் ; பஞ்சாயத்து உறுப்பினர்கள் பொதுத் தேர்தல்களில் பங்கெடுத்துக்கொள்வதில்லை என்ற கட்டுப்பாட்டைச் செய்துகொண்டு அவர்கள் அரசியல் கட்சிகளின் பிரசார சாதனங்களாக மாறாது விவசாய வளர்ச்சியிலேயே கவனத்தைச் செலுத்த வேண்டியதும் அவசியமே ; (9) மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள், பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்துப் பிரதிநிதிகளடங்கிய மதிப்பீட்டுக் குழு ஒன்று, அவ்வப்போது மாவட்ட விவசாய வளர்ச்சியைப் பற்றியும், அதில் பஞ்சாயத்துக்களின் ஈடுபாடு பற்றியும் மதிப்பீடு செய்ய வேண்டும் ; (10) பஞ்சாயத்து நிறுவனங்கள் வளர்ச்சிப் பணிகளை விட்டு விலகிப் பொதுநிர்வாகப்பணியில் அமிழ்ந்துவிடாது, விவசாய உற்பத்திப் பெருக்கத்துக்கே முதலிடம் கொடுத்து, விவசாயத் திட்டங்களை அமுல்படுத்துவதில் அக்கறை கொள்ள வேண்டும்.

**தன் கையே தனக்குதவி !**

எதற்கும் அரசாங்கத்தையே சார்ந்திராமல், முனைப்பு புணர்வுடன், பல புதுப்புது யுக்திகளையும் மேற்கொண்டு விவசாயத்தில் புதுத்திருப்பத்தை ஏற்படுத்துவதில்தான் இந்திய உள்துறை ஆட்சியின் வெற்றியே அடங்கியுள்ளது. இன்றேல், பஞ்சாயத்து நிறுவனங்கள் அரசாங்க ஆணைகளை நிறைவேற்றும் கருவிகளாக நின்றுவிடும் புதிய பஞ்சாயத்து உண்மையான கிராம நலத்தைப் பெருக்கும் சுதந்திர சுயேச்சை ஜனநாயக அமைப்பாகத் திகழ்வது அது விவசாயத்தில் தன்னிறைவு காண்பதைப் பொருத்தே உள்ளது என்பதில் ஐயமில்லை.



தமிழ் நாட்டு விவசாயிக்கு :

# சிறிதும் வருத்தமே இல்லை!

### எட்டு ஆண்டுகளுக்கு முன்பு

திரு கே. கோவிந்த ரெட்டியாருக்கு இருந்ததெல்லாம் ஒரே ஒரு பிரச்னை தான். செங்கற்பட்டுமாவட்டத்திலுள்ள ஆலத்தூர் கிராமத்தில், தனக்கு சொந்தமான 3½ ஹெக்டேர் நிலத்தில் கத்திரி மட்டுமே பல ஆண்டுகளாக பயிர் செய்துவந்தார் அவர். ஆனல் ஓர் ஆண்டில் கத்தரி செடிகள் எல்லாம் நோய்களால் தாக்குண்டு பயிர் முழுவதும் அப்படியே நாச மடைந்துவிட்டதால் அவருக்கு ஒரு கத்தரிக்காய் கூட மிஞ்சவில்லை. அவர் என்னதான் செய்வார் ?

அவருடைய பண்ணை நிலம் மரவள்ளிக் கிழங்கு பயிரிடுவதற்கு ஏற்றதாக இருப்பதைக் கண்ணுற்ற திரு ரெட்டியாரின் உறவினர் ஒருவர், அவரை அணுகி, நிலத்தில் மரவள்ளிக் கிழங்கை பயிரிட்டால் நல்ல லாபம் கிடைக்கும் என்று யோசனை கூறினர். மேலும் மரவள்ளிக் கிழங்கை பூச்சிகளோ, நோய்களோ பொதுவாக தாக்குவதில்லை.

### முதலில் திகைப்பு

" இது ஒரு அருமையான யோசனை தான் " என்று எண்ணிய திரு ரெட்டியாருக்கு கூடவே ஓர் ஐயமும் எழுந்தது. செங்கற்பட்டு மாவட்டத்தில் எவரும் இதுவரை மரவள்ளிக்கிழங்கு பயிர் செய்து பரீட்சித்துப் பார்த்த தில்லை.

" முயற்சி செய்து பார்ப்பதில் லாபமும் ஏற்படலாம், நஷ்டமும் ஏற்படலாம் ; நஷ்டமானல் பண மெல்லாம் விரயமாகிவிடும்; இருந் தாலும் இதை முயற்சித்துப் பார்க்க கலாம் என்று முடிவு செய்து காரியத்தில் ஈடுபட்டுவிட்டேன் " என்று கூறினர் திரு ரெட்டியார்.

### ஆரம்ப வெற்றி

முடிவையொட்டி செயலில் இறங்கிய திரு ரெட்டியாருக்கு வெற்றியே காத்திருந்தது. அவருடைய மரவள்ளிக்கிழங்கு பயிர் அமோக விளைச்சலைத் தந்தது. இதனல் உற்சாக மடைந்த திரு ரெட்டியார் அப்போது

---

## முன்னேற்றப் பாதையில் சுபத்ரம் பேட்டா

சுபத்ரம் பேட்டா என்ற கிராமப் பஞ்சாயத்து, ஆந்திரப் பிர தேசத்திலுள்ள, கிழக்கு கோதாவரி மாவட்டத்தில், ரங்கம் பேட்டா பஞ்சாயத்து யூனியனில் இருக்கிறது. ஆயிரம பேர் கூட வசிக்காத இந்த கிராமம், சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் எல்லாவற்றையும் திறம்பட செயல் படுத்தி, வெற்றிகண்டுள்ளது. நாட்டிலுள்ள பின்தங்கிய கிராமங்களுக்கெல்லாம், சுபதரம் பேட்டா கிராமம் ஒரு முன்னேடியாக இருந்து வழி காட்டுகிறது.

### விவசாயம்

விவசாயத்திற்கு சுபத்ரம்பேட்டா முதலிடம் தந்துள்ளது. ஒரு விவசாய துணைக் குழுவை நிறுவி, அதன் மூலம் ரயததுக்களின் தேவைகளெல்லாம் பூர்த்தி செய்யப்படுகின்றன. 227 ஏகர் நிலங்களைக் கொண்ட விவசாயிகளுக்கு, 32 மூட்டை முதல் தரமான வித்துக்கள் இக் குழுவின் உதவியினல் வழங்கப்பட்டுள்ளன. 1964–65-ம் ஆண்டில், 2,300 மணங்கு அம்மோனியம் சல்பேட், 600 மணங்கு அம்மோனியம் நைட்ரேட், 1,600 மணங்கு யூரியா, 500 மணங்கு கால்சியம் அம்மோனியம் நைட்ரேட், 2 தெளிப்பான்கள் முதலியனவற்றை பஞ்சாயத்து மூலம் விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது.

பசுந்தாள் உரத்தின் சிறிய நன்மைகளை ரயத்துக்கள் அறிவதற்காக, இத்துணைக் குழு, பிரச்சாரமும், விளம்பரமும் செய்து வருகிறது. 208 விவசாயக் குடும்பங்களை அணுகி, 'கம்போஸ்ட்' குழிகள் வெட்ட ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக, 1,510 டன் கம்போஸ்ட் உரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. பசுந்தாள் உரம் உற்பத்தி செய்வதற்காக, 2,248 கிலோகிராம் பசுந்தாள் உர விதைகள் பஞ்சாயத்தால் விநியோகிக்கப்பட்டுள்ளது. ஜப்பானிய முறையில் சாகுபடி செய்யும் முயற்சி 82 ஏக்கர்களில், 1964–65-ம் ஆண்டு புகுத்தப்பட்டது. இவற்றின் பயனக ஏக்கர் ஒன்றுக்கு 6 மூட்டைகள் அதிக உற்பத்தி ஏற்பட்டுள்ளது.

### சுற்றுப்புர துப்புரவு

சுபத்ரம் பேட்டா கிராமம் முழுவதும் சுத்தமாக, அழகாக காட்சியளிக்கிறது. சாலைகளெல்லாம் பெருக்கப்பட்டு, தூய்மையாக இருக்கிறது. இதில் கிராமவாசிகள் பெரிதும் ஒத்துழைக்கின்றனர். கிராமத்தில் மூன்று பொது கக்கூஸ்கள் இருக்கின்றன.

### கல்வி

பஞ்சாயத்து கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. ஆரம்பப் பள்ளிக்குரிய கட்டிடம் பஞ்சாயத்து யூனியனின் உதவியினல் கட்டப்பட்டு வருகிறது. இதற்கென எல்லாவித உதவிகளையும் கிராமவாசிகள் அளித்து வருகின்றனர். ஏழை மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்கப்படுகிறது. பள்ளி செல்லும் வயதடைந்த சிறுவர், சிறுமியர் எல்லோரும் ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டுவிட்டனர்.

முதல் மரவள்ளிக் கிழங்கையே பயிரிடத் தொடங்கிவிட்டார். அவருக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ. 2,500 நிகர லாபம் கிடைக்கிறது.

ஒரு ஹெக்டேருக்கு 30 வண்டிச் சுமை பண்ணை எருவையும், 1,200 கிலோ மரத்தூள் சாம்பலையும் கலந்து நிலத்தை ஜூன் மாதத்தில் பண்படுத்துகிறார். முந்தைய பயிரிலிருந்து கிடைத்த முதிர்ந்த 37,500 துண்டுகளை ஒரு ஹெக்டேர் நிலத்தில், ஜூலையில் நடுகிறார்.

### பயிர் செய்யும் முறை

நட்டு முடிந்தவுடனேயே நீர்ப்பாசனம் செய்யத் துவங்கிவிடுகிறார். ஒவ்வொரு பதினைந்து நாட்கள் இடைவெளியில் 15 முதல் 20 தடவைகள் வரை நீர்ப்பாசனம் செய்கிறார்.

முதல் நான்கு மாதங்களில் ஒவ்வொரு மாதமும் தவறாமல் களையெடுக்கிறார்.

### பயிர் பாதுகாப்பு

சமீப காலங்களில் இலைகளைத் தின்னும் கம்பளிப் பூச்சிகள் செடிகளைத் தாக்குகின்றன. அவற்றை ஒழித்துக்கட்ட திரு. ரெட்டியார் எப்போதுமே தயாராக இருக்கிறார். “நட்டு முடிந்த, இரண்டாவது மாதத்தில் 10 சத வீத பி. எச். சி. பூச்சி மருந்தைக் கொண்டு கம்பளிப் பூச்சிகளை ஒழிக்கிறேன்; அதன் பிறகு அவை மீண்டும் தலைகாட்டுவதேயில்லை” என்று தன்னுடைய பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கையைக் கூறுகிறார்.

அறுவடைக்கு முன்னர் நீர்ப்பாசனம் செய்கிறார், திரு. ரெட்டியார். இதனால் நிலம் ஈரமடைந்துவிடுவதால், அறுவடை செய்வது எளிதாகிவிடுகிறது.

### எளிய, சத்துள்ள உணவு

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு மரவள்ளிக் கிழங்கு நல்ல லாபத்தைத் தருவது மட்டுமின்றி, ஏழை மக்களுக்கு குறைந்த செலவில் நல்ல சத்துணவாகவும் இது அமைந்துவிடுகிறது. அரிசியைவிட, மரவள்ளிக்கிழங்கு குறைந்த விலைக்கு கிடைப்பதால் ஏழை மக்கள் இதை விரும்பி வாங்குகின்றனர்.

### இளநீரிலிருந்து மின்சக்தி

கலி·.போனியாவில், தயாரிக்கப்பட்ட ஒரு டிரான்ஸிஸ்டர் ரேடியோ’ இளநீரிலிருந்து உண்டாக்கப்பட்ட மின்சக்தியைக் கொண்டு 45 நாட்கள் இயங்கியது. நுண்கிருமிகளை (Bacteria) இளநீரில் விட்டு, இளநீரை ரசாயன அமிலமாக (formic acid) முதலில் மாற்றம் செய்தனர். பிறகு அந்த ரசாயன அமிலத்துடன் பிராண வாயுவை சேர்த்ததனால் உண்டான மின்சக்தியால் ‘டிரான்ஸிஸ்டர் ரேடியோ’ பாடியது.

திரு. ரெட்டியாரின் அனுபவம் மற்ற விவசாயிகளுக்கும் ஒரு தூண்டுதலாக அமைந்தது. பண்ணை சம்பந்தமாக சக விவசாயிகளுக்கு ஏற்படும் எல்லா சந்தேகங்களையும் இவரே தெளிவாக்குகிறார். முன்னேற்ற பாதையில் விவசாயிகள் ஏறு நடை போடுவதற்கு திரு. ரெட்டியார் ஒரு சிறந்த முன்மாதிரியாக விளங்கி வருகிறார்.

---

ஒரு இளைஞர் மன்றமும், ஒரு மாதர் சங்கமும் திறம்பட செயலாற்றி வருகின்றன. தையல் பணியில் பெண்களுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. பெண்களுக்கும், குழந்தைகளுக்குமென ஒரு நூல்நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

### ஹரிஜன நலம்

தீண்டாமை ஒரு பெரிய பிரச்னையாக ஒரு காலத்தில் அங்கு நிலவியிருந்தது. ரங்கம்பேட்டா பஞ்சாயத்து யூனியனின் முயற்சியாலும், சுபத்ரம் பேட்டா பஞ்சாயத்தின் ஊக்கத்தினாலும், ஹரிஜனங்களின் நலம் முக்கியமாக கவனிக்கப்பட்டு, அவர்கள் வாழ்வு சீராக்கப்பட்ட பலவித முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஹரிஜன சேரி முழுவதும் தூய்மையாக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் நீண்ட, அழகிய, துப்புரவான சாலைகள் போடப்பட்டுள்ளன. சாலைகள் அமைக்கப்பட வேண்டிய வழிகளில் இருந்த குடிசைகள் எல்லாம் ஒழிக்கப்பட்டன. அந்த குடிசைகளில் இருந்த ஹரிஜனங்களுக்கெல்லாம், வேறு ஒரு இடத்தில் நிலங்கள் வழங்கப்பட்டு, வீடுகள் கட்டிக்கொள்ள தேவையான பொருளகளும் அளிக்கப்பட்டது. ஹரிஜனங்கள் வசிக்கும் பகுதியிலுள்ள சாலைகளெல்லாம் கப்பி போடப்பட்டவையே. அவர்களின் குடிநீர் வசதிக்கென ஒரு கிணறு அங்கே ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவர்களுக்கென தனியே ஒரு வானொலிப் பெட்டியும் தரப்பட்டுள்ளது.

### பஞ்சாயத்தின் வருவாய்

பஞ்சாயத்தின் வருவாயைப் பெருக்க அது மேற்கொண்டுள்ள முயற்சிகளெல்லாம் போற்றுதற்குரியனவாகும். 1961-ம் ஆண்டு முதல், இங்கு வரிப்பாக்கியே இல்லை. மீனளம் தரிசு நிலங்களில் புல் வளர்த்தல் போன்றவை மூலம் பஞ்சாயத்தின் வருவாய் அதிகரித்து வருகிறது. கிணறுகள், குளங்களில் மீன் குஞ்சுகளை வளர்க்கும் திட்டம் இப்போது புகுத்தப்பட்டுள்ளது. மீன்களை விற்பதனால், ஆண்டொன்றிற்கு ரூ. 500-ம் புற்களை விற்பதனால் ரூ. 60-ம் பஞ்சாயத்திற்கு கிடைக்கிறது. பஞ்சாயத்தின் வருவாய் 36 சதவீதம் உயர்ந்துள்ளது. சாலையோரங்களில் 200 மரங்கன்றுகளும், ஏரிக்கரைகளில் 150 தென்னங்கன்றுகளும் நடப்பட்டுள்ளன. இவை மூலம் கிடைக்கும் மகசூலால், ஆண்டொன்றிற்கு ரூ. 4,000 வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### சிறந்த பஞ்சாயத்து

ரங்கம்பேட்டா பஞ்சாயத்து யூனியனிலேயே இந்தப் பஞ்சாயத்து ஒரு முக்கியம் வாய்ந்த இடமாக மாறி வருகிறது. மக்கள் ஒத்துழைப்பின் மூலம், கிராமச் சூழ்நிலையே அடியோடு மாறிவிடக்கூடும் என்பதற்கு இக்கிராமம் ஓர் அழகிய சான்றாக விளங்கி வருகிறது.

இந்த யூனியனிலேயே இதுதான் சிறந்த பஞ்சாயத்து என்று தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்குரிய மாநிலப் பரிசாக ரூ. 1,000 வழங்கப்பட்டுள்ளது.

# கிராம மனித சக்தி திட்டம்

[ திரு. ஆர். கோவிந்தசாமி, கிராம வளர்ச்சித் துணை நெறியாளர் (கிராம மனித சக்தி திட்டம்) ]

நமது நாட்டில் பெரும்பகுதியினர் கிராமங்களில் வாழ்கின்றனர். அவர்களுடைய வாழ்க்கையில் ஒவ்வொரு பிரிவிலும் முன்னேற்றம் காண்பதுதான், பதினைந்து ஆண்டுகளாக செயல்படும் சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கம். ஆகையினால், பல சிறப்பு அம்சங்கள் சமுதாய நலத்திட்டத்தின் அங்கங்களாக செயல்படுத்தப் படுகின்றன. இவற்றில், கிராம மனித சக்தித் திட்டம் முக்கிய இடம் பெறுகிறது.

### திட்டத்தின் முக்கிய நோக்கம்

நாடு முன்னேற வேண்டுமானால், வாழும் மக்களுக்கு வேலை வாய்ப்புகள் தொடர்ந்து இருக்கவேண்டும்; அப்பொழுதுதான், அவர்களுடைய வருவாய் உயரமுடியும். வருவாய் உயர்ந்தால்தான் அவர்கள் பலதுறைகளில் முன்னேற்றம் காணமுடியும். கிராமங்களில் வேளாண்மை செய்யாத காலங்களில் வேலை வாய்ப்புகள் மிகக்குறைவு. இந்தக் காலங்களிலும் மற்ற வேலையில்லாக் காலங்களிலும் கிராம மக்களுக்கு வேலைவாய்ப்புகள் கொடுப்பதுதான், இந்தத் திட்டத்தின் ஒரு முக்கியமான நோக்கம். அப்படி வேலைவாய்ப்புகள் கொடுத்து, அவர்களின் ஒன்று திரண்ட உழைப்பை பயன்படுத்தி, நிலையான பயனளிக்கும் சமுதாய சொத்துக்களை உருவாக்குவது மற்றொரு நோக்கம். அப்படி உருவாக்கிய சொத்துக்கள் தொடர்ந்து மக்களுக்கு வேலை வாய்ப்புகளை பிற்காலத்தில் கொடுக்கவேண்டும்.

இந்திய அரசாங்கத்தின் சமுதாய அபிவிருத்தி அமைச்சகமும், திட்ட கமிஷனும் இத்திட்டத்தை உருவாக்கி, மாநில அரசுகள் மூலம் செயல்படுத்துகின்றன. இதற்காக பாதி மான்யமாகவும் பாதி கடனாகவும் உதவி தரப்படுகிறது.

தமிழ்நாட்டில் 72 வட்டாரங்களில் தற்போது இத்திட்டம் செயல்படுகிறது. இந்த 72 வட்டாரங்கள் மாநிலத்தில் எல்லா மாவட்டங்களிலும் (சென்னை மாவட்டம் தவிர) பரவியுள்ளது.

ஒரு வட்டாரத்தின் தேவைகள், வேலைகளை எடுத்து முடிக்கும் ஆர்வம், திறன், ஊக்குவிக்கும் கிராமத் தலைவர்கள் ஆகியவைகளைப் பொறுத்து, இத்திட்டத்தில் செலவு செய்ய வழியிருக்கிறது. சாதாரணமாக, ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்ச ரூபாய் செலவு செய்யவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. சில வட்டாரங்களில் இன்னும் அதிகமாக செலவு செய்ய வாய்ப்பிருந்தால் அதிகமான ஒதுக்கீடு தரப்படுகிறது. நிதி வசதிக் குறைவினால் திட்டம் பாதிக்கப்படாமலிருப்பதற்காக, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும், தேவையானபடி முன்பணம் அளிக்கப் படுகிறது. சாதாரணமாக ரூ. 50,000 அளவில் முன்பணம் வழங்கப்படுகிறது.

### அடிப்படைக் கொள்கைகள்

ஒரு வட்டாரத்தில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு முன் கருத்தில் கொள்ளவேண்டிய அடிப்படைகள் பல உண்டு. அவை யாவன:—

விவசாய வேலைகள் ஓய்ந்த நாட்களில் உள்ளூரிலுள்ள உழைப்

[தமிழ் நாட்டில் பஞ்சாயத்து ஆட்சி பொலிவுடனும் வலிவுடனும் செயல் புரிந்து வருவதை அனைவரும் அறிவர். பல சிறப்புத் திட்டங்கள், புதிய பஞ்சாயத்து ஆட்சியினால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றுள் ஒன்று, கிராம மனித சக்தி திட்டம் (RURAL MANPOWER PROGRAMME). கிராமச் சமுதாயத்திற்கு, தொடர்ந்து பயன் அளிக்கக் கூடியதும், வேலைவாய்ப்புகளைத் தோற்றுவிக்கக்கூடியதுமான, உருவான, நிலையான வசதிகளை உண்டாக்கித் தருதல்; விவசாய வேலைகள் இல்லாத பருவங்களில், கிராம ஜனங்களுக்கு வேலைவாய்ப்புகள் அளித்தல் ஆகியவை, இந்தத் திட்டத்தின் நோக்கங்களாகும். இத்திட்டம் பற்றிய பயனுள்ள விளக்கங்களை கிராம வளர்ச்சித் துணை நெறியாளர் (கிராம மனித சக்தி திட்டம்) இங்கே தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். —ஆசிரியர்].

பாளிகளைக்கொண்டே வேலைத் திட்டங்கள் முடிப்பவனவாக அமையவேண்டும்.

தேர்ந்தெடுக்கும் வேலைத் திட்டங்கள் பொது மக்களின் உற்சாகத்தை தூண்டுவதாக இருத்தல் அவசியம். பெருமளவில் தொழில் நுட்பத் திறனை பயன்படுத்துவதாக அமையக் கூடாது.

உபகரணங்களை பயன்படுத்தும் வேலைகளை மேற்கொள்ளலாம். ஆனால், மனித உழைப்பின் ஊதியம் மொத்தச் செலவில் குறைந்தது பாதி யாவது இருக்கவேண்டும்.

தேர்ந்தெடுக்கும் வேலைகள், குறைந்தகால அளவில் செய்து முடிக்கக் கூடியவையாய் இருத்தல் அவசியம்.

வேலையில்லாத் திண்டாட்டம் கடுமையாகவுள்ள இடங்கள், பொதுமக்கள் ஆர்வத்துடன் மன முவந்து வேலைகளை ஏற்று விரைவில் முடித்து வைக்க உதவும் இடங்கள், மக்களை நல்ல முறையில் நடத்திச் சென்று பணியாற்றும் கிராமத் தலைவர்கள் விளங்கும் இடங்கள், மக்களின் அவசியத் தேவைகளை அடைய வகை செய்யும் வேலைகள் அமையும் இடங்கள், ஆகிய பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும்.

இந்தத் திட்டத்தில் சிறுபாசன வசதிகளை பெருக்கலாம். சமுதாய பாசனக் கிணறுகள் தோண்டலாம், ஆழப் படுத்தலாம். வாய்க்கால்கள், ஏரிகளில் தூர் எடுக்கலாம். ஏரிக்கரைகளை உயர்த்தலாம். பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக் கப்பட்ட நிலங்களைச் சீர்திருத்தலாம். நன்கொடையாகக் கிடைக்கும் பஞ்சாயத்து உபகரணங்களைக் கொண்டு பஞ்சா யத்து தோட்டங்களுக்கு வேலி அமைக்கலாம். கிராமங் களுக்கான சாலைகள் அமைக்கலாம். ஏற்கனவே அமைந்த சாலைகளுக்கு சரளைபோடுதல் போன்ற மேம்பாட்டு வேலைகள் செய்யலாம். மண் பாதுகாப்பு வேலைகளைச் செய்யலாம். இதற்கெல்லாம் மனித உழைப்பைப் பெரிதும் பயன்படுத்த வேண்டும். இக்குறிக்கோளை முதன்மையாகக் கொண்டே இந்த வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

மக்களது ஆர்வத்தை திரட்டவேண்டும். ஆக்கவேலை களில் ஈடுபடுத்தவேண்டும். சமுதாயத்தை வளமாக்க வேண்டும். இக்கருத்துக்களை இத்திட்டம் மையமாகக் கொண்டுள்ளது. எனவே, இந்த வேலைகளை எடுத்துச் செய்பவர்கள் இலாப நோக்கம் இல்லாதவர்களாக இருப்பது அவசியம். மனித சக்தி பயன்படுத்தப்பட்டது பற்றி புள்ளி விவரங்கள் எழுதிவைத்துகொள்ள வசதி யுடையவர்களாக இருக்கவேண்டும். மேலும் இந்த வேலை களின் மதிப்பில் 10 சதவிகிதம் மக்கள் பங்குத்தொகை யாக அளிக்க வேண்டியிருக்கிறது. மக்கள் சக்தியில் உருவான ஸ்தாபனங்கள் இவ்வேலைகளை எடுத்து நடத்தத் தகுதியுள்ளவை. ஆகவே, தல கிராம கூட்டுறவு வேலை ஒப்பந்த சங்கம், (லேபர் காண்ட்ராக்ட் கோ-ஆப்ரேடிவ் சொசைடி) அல்லது பஞ்சாயத்துக்களிடம் இந்த வேலைகள் ஒப்படைக்கப்படுகின்றன. எக்காரணத்தைக் கொண்டும் காண்ட்ராக்டு எடுப்பவர்களுக்கு இந்த வேலைகளை ஒப் படைக்கக்கூடாது.

## செயல்படுத்தும் பொறுப்பு யாருடையது?

இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு பஞ்சாயத்து நிறுவனங்களை சார்ந்தது. பஞ்சாயத்து யூனியன் மன்றத் தில் பஞ்சாயத்துக்களின் பிரதிநிதிகள் கூடி கலந்து பேச

# தமிழ்நாட்டில் பஞ்சாயத்து ஆட்சி

## அடிப்படைத் தகவல்கள்

| | |
|---|---|
| மாவட்டங்கள் (சென்னை ரெவின்யூ மாவட்டம் உள்பட) .. .. .. .. | 14 |
| அபிவிருத்தி மாவட்டங்கள் .. .. | 23 |
| பஞ்சாயத்து யூனியன்கள் .. .. | 374 |
| பஞ்சாயத்துக்கள் .. .. .. | 12,884 |
| கிராமங்கள் .. .. .. | 17,300 |
| பரப்பளவு .. .. .. .. | 276 (லட்சம் ஏக்கர்) |
| கிராமப் பகுதிகளில் உள்ள ஜனத் தொகை | 274 (லட்சம்) |

❋

## சிறப்புத் திட்டங்களின் விவரம்

| | திட்டங்கள் செயல்படும் வட்டாரங்கள். |
|---|---|
| 1. சத்துணவு விஸ்தரிப்புத் திட்டம் .. (Applied Nutrition programme) | 9 |
| 2. கிராமத் தொழில் வளர்ச்சித் திட்டம் .. (ஸ்ரீபெரும்புதூர், நாங்குநேரி, ஓமலூர்) | 3 |
| 3. குழந்தைகளின் நலனுக்கான ஒருங் கிணைந்த திட்டம் (பூவிருந்தவல்லி) .. | 1 |
| 4. மலைச் சாதியினர் வளர்ச்சி வட்டாரங்கள் (கொல்லிமலை, ஏர்க்காடு) | 2 |
| 5. முன்னிலைப் பள்ளிகள் – பாலர் பள்ளிகள் (Pre-schools and Balwadies) | 21 |
| 6. கிராம மனித சக்தி திட்டம் .. (Rural Man-power programme) | 72 |

### கிராம மனித சக்தித் திட்டத்தின் நோக்கம்

* கிராமச் சமுதாயத்திற்கு, தொடர்ந்து பயன் அளிக்கக் கூடியதும், வேலை வாய்ப்புகளைத் தோற்றுவிக்கக்கூடியது மான உருவான, நிலையான வசதிகளை உண்டாக்கித் தருதல்.

** விவசாய வேலைகள் இல்லாத பருவங்களில், கிராம ஜனங்களுக்கு வேலை வாய்ப்புகள் அளித்தல்.

வேண்டும். திட்டத்தின் அடிப்படை நோக்கங்களுக்கு ஏற்ப வேலைகளையும் அதற்குரிய கிராமங்களையும் தேர்ந்தெடுத்து அங்கீகரிக்க வேண்டும். வேலைகளை எடுத்து நடத்தும் பொறுப்பு, அந்தக் கிராமத்திலுள்ள கூட்டுறவு வேலை ஒப்பந்த சங்கம், அல்லது அப்படி ஒரு சங்கம் இல்லாவிடில், அந்தப் பஞ்சாயத்துக்கிடம் ஒப்படைக்கப்படும். மதிப்பீடு தயாரித்தல் (Estimate preparation) அளவு எடுத்தல் (Measurement) அளவு சரிபார்த்தல் (Check measurement) ஆகிய பொறியியல் நுட்பப் பணிகளை (Engineering aspects) நெடுஞ்சாலை இலாக்காவினரின் (Highways Department) மேற்பார்வைக்குட்பட்டு, பஞ்சாயத்து யூனியன் பொறியாளரும் (Union Engineer) அவர் உதவியாளர்களும் ஏற்றுக்கொள்வர். மக்கள் பங்குத் தொகையாக செலுத்தவேண்டிய 10 சதவிகித மதிப்புத் தொகையை பஞ்சாயத்துகள் அல்லது பஞ்சாயத்து யூனியன்கள் தங்களது நிதியில் இருந்தே வழங்கலாம்.

இந்தத்திட்டத்தில் தமிழ்நாட்டில் 1963-64, 64-65, 65-66 வருடங்களில் முறையே ரூ. 40 லட்சம், ரூ. 38 லட்சம், ரூ. 59 லட்சம் செலவு செய்யப்பட்டது. இந்த வருடங்களில் முறையே 16 லட்சம், 13 லட்சம், 20 லட்சம் மனித (Man days) நாட்களுக்கான வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு ஒரு நபர் செய்யும் வேலை ஒரு மனித நாள் (Man day) என்று பொருள்கொள்ளவேண்டும்.

### நான்காவது திட்டத்தில் நிலை என்ன?

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைவிட நான்காவது திட்டத்தில் மனிதசக்தித் திட்ட உத்தேச செலவு அதிகரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிற்கு நான்காவது திட்டத்தில் இதற்காக உத்தேச ஒதுக்கீடு ஐந்து கோடியே பதினாறு லட்சரூபாய். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்செலவை விட, இது சுமார் ஐந்து பங்கு அதிகம். தற்போது இத்திட்டம் செயல்படும் வட்டாரங்கள் 72. இவற்றை 152 ஆக அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக ஆட்சிக்கு அடிப்படையான பண்புகளையும், பக்குவத்தையும், கடமைகளையும், கட்டுப்பாடுகளையும், பஞ்சாயத்துகளும் யூனியன்களும் இன்று பயின்று, பாதுகாத்துப் பலப்படுத்தி வருகின்றன. இதன் பயனாக மக்களுக்குச் சேவை செய்வதில் தலைமைப் பொறுப்பு ஏற்க, புதிய என்பது மட்டுமலாமல் ஆட்சிப் பொறுப்பிலே நேரடியாகப் பங்கு கொள்கின்றோம் என்ற பெருமிதம் கிராம மக்களுக்குக் கிடைக்கச் செய்வதின் மூலமாக, தேசிய ஐக்கிய உணர்வையும் பலப்படுத்தி வருகின்றோம்.

சமுதாய அபிவிருத்தித் திட்டத்தில் கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் பல்வேறு திட்டங்கள் உள்ளன. இவற்றுடன் மனித சக்தித் திட்டத்தையும் ஒருங்கிணைத்து சீரிய முறையில், பயன்படத்தக்க வகையில் ஒரே சீராக வேலைவாய்ப்புகள் அளிக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. தற்போது கிணறுகள் தோண்டுதல், கல் உடைத்தல், சூளைகள் போடுதல் முதலிய நுட்பத்திறன் தேவைப்படும் வேலைகளுக்கு வெளியூர் உழைப்பாளிகளை நம்பியிருக்க வேண்டியுள்ளது. இதனால், துரிதமாக வேலைகளை முடிக்க முடியவில்லை. உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்புமில்லாதிருக்கிறது. அந்தந்த கிராம மக்களே இவைகளை எடுத்து முடிக்கும் ஆற்றலைப் பெறுவதற்காக மக்களுக்கு ஈடு, அத்தகைய வேலைகளின் தேவையான பயிற்சி அளிப்பதும், நான்காம் திட்டத்தில் இடம் பெறுகிறது.

### கிராம வளர்ச்சித் துறையின் சாதனைகள்

| | | |
|---|---|---|
| 1. | கோழிப் பண்ணைகள் .. .. | 1,200 |
| 2. | மீன் தேக்கங்கள் .. | 9,900 |
| 3. | சிறிய நீர்ப்பாசன ஆதாரங்கள் .. | 21,700 |
| 4. | (அ) வானொலிப் பெட்டிகள் கொண்ட பஞ்சாயத்துக்கள் .. .. | 12,527 |
| | (ஆ) விநியோகிக்கப்பட்ட வானொலிப் பெட்டிகள் .. .. | 14,568 |
| 5. | மகப்பேறு நிலையங்கள் .. | 2,450 |
| 6. | ஆரம்ப சுகாதார நிலையங்கள் .. | 216 |
| 7. | கிராம மருந்தகங்கள் .. .. | 502 |
| 8. | கிராமக் கலை, கைத்தொழிற் கூடங்கள் | 1,800 |
| 9. | மாதர் சங்கங்கள் .. | 4,000 |
| 10, | கிராம வானொலி மன்றங்கள் .. | 680 |
| 11. | ஆசிரியைகள் குடியிருப்புகள் .. | 1,000 |
| 12. | மேல்நிலை நீர்த் தொட்டிகள் .. | 1,850 |
| 13, | "டிராக்டர்கள்" வாங்கியுள்ள பஞ்சாயத்து யூனியன்கள் .. .. | 25 |
| 14. | பஞ்சாயத்து நிர்வாகப் பள்ளிகள் .. | 26,400 |
| 15. | சொந்தக் கட்டிடம் உள்ள பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள் .. .. | 11,500 |
| 16. | பஞ்சாயத்துத் தோட்டங்கள் | 36,000 (ஏக்கர்) |
| 17. | இணைப்புச் சாலைகள் .. .. | 10,600 (மைல்) |
| 18. | பஞ்சாயத்துச் சாலைகள் .. .. | 14,300 (மைல்) |
| 19. | கால்நடை மருந்தகங்கள் .. | 280 |
| 20. | தகவல் நிலையங்கள் | 375 |
| 21. | சமூகக் கல்வி நிலையங்கள் (வட்டாரத்திற்குச் சுமார்) .. .. | 10 |

நான்காவது திட்டத்தில் மனித சக்தித் திட்டத்தைச் செயல்படுத்தப்போகும் வட்டாரங்கள், வேலைத் திட்டங்கள், அதற்கான நிதி வசதிகள், தேவையான நுட்ப திறன் பெற்ற அலுவலர்கள், இவைகளை எல்லாம், முன்கூட்டியே திட்டமிட்டுத் தயார் செய்துகொண்டு, நான்காவது திட்டத்தில், மனித சக்தித் திட்டத்தின் மூலம், பெரும் அளவு வேலைவாய்ப்புகளை கிராம மக்களுக்கு அளிக்க, ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

சுருங்கச்சொன்னால், பின்தங்கிய கிராமப்புறங்களை வளம் கொழிக்கச் செய்வது, கிராமமனித சக்தித் திட்டம். உழைக்க துடிக்கும் பல்லாயிரக்கணக்கான உரமேறிய கரங்களுக்கு நியாயமான ஊதியத்துடன் வேலைவாய்ப்புக் கொடுப்பது இத்திட்டம். வேலையில்லாத் திண்டாட்டக் கொடுமையை வேரறுக்க முனைந்துள்ள திட்டம் இது. சமுதாய அமைப்பிலே பொதுச் சொத்துக்களை உண்டாக்கி, அதன் மூலம் மேலும் மேலும் வேலை வாய்ப்புகளை அதிகரித்து, மக்களுக்குச் செயலாற்றும் திட்டம் இது. ஆகவே, பொது மக்கள், பஞ்சாயத்து நிறுவனங்கள், உழைப்பாளிகள், மக்கள் நலம் பேணுவோர் அனைவரும் பேராதரவு தந்து, இத்திட்டத்தை வெற்றிபெறச் செய்ய வேண்டும்.

[வானொலிப் பேச்சு—8-1-67].

# உணவு உற்பத்தியில்

[கிராம வானொலி மன்றத்திட்டம் (Radio Rural Forum Programme) ஆரம்பித்து, 7 வருடங்கள் ஆகின்றன. அகில இந்திய வானொலியில், குறிப்பிட்ட நிலையங்களிலிருந்து, கிராம வானொலி மன்ற ஒலிபரப்புத்திட்டம், 7 வருடங்களுக்கு முன்பு உருவாகியது. ஒவ்வொரு வருடமும், நவம்பர் மாதம் 17-ம் தேதி முதல் 23-ம் தேதி வரை, கிராம வானொலி மன்ற வார விழா கொண்டாடப்பட்டு வருகிறது. நல்ல முறையில் செயல்பட்டு வரும் ஒரு கிராம வானொலி மன்றத்தின் சார்பில், 1966-ம் ஆண்டு விழாவை கொண்டாட திட்டமிட்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மருதூர் கிராமத்தில் கிராம வானொலி வார விழா கொண்டாடப்பட்டது. அவ்வமயம், திருச்சிராப்பள்ளி வானொலி நிலைய நெறியாளர் திரு எம். எஸ். கோபால் அவர்கள் ஆற்றிய உரையின் சாரத்தை, இங்கே தருகிறோம்.]

# கிராம வானொலி மன்றங்களின் பங்கு

[திரு எம். எஸ். கோபால், நெறியாளர், திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம்.]

இந்திய நாடு கிராமங்கள் நிறைந்த நாடு. சுமார் 5 லட்சத்து 66 ஆயிரம் கிராமங்களுக்கு மேலுள்ள நாடு. எனவே தான், 'இந்தியா ஒரு கிராமம்' என்று காந்தியடிகள் கூறினார்கள். இன்றைய உணவுப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு, அரசும், மக்களும் கிராமங்களையே எதிர் பார்த்திருக்கிறார்கள். எனவேதான், கிராமங்கள் வளர்வதற்கு விருத்தியடைவதற்கு பலவித அபிவிருத்தி திட்டங்களை, அரசினர் உருவாக்கி, செயல்படுத்தி வருகின்றனர். மக்களாட்சியில் அபிவிருத்தி வேலைகள் யாவும் மக்களுடைய ஒன்றுபட்ட ஒத்துழைப்பால் மட்டுமே வெற்றிகரமாக நடைபெற முடியும். அரசாங்கத்தின் திட்டங்களையும் அவற்றின் இலட்சியங்களையும், நோக்கங்களையும் மக்களுக்கு எடுத்துரைக்கும் பணியில், வானொலி சிறந்த பொறுப்பேற்றுள்ளது. உணவு உற்பத்தித் திட்டத்தில், வானொலி, விவசாய மக்களோடு தொடர்பு கொண்டு, அவர்களுக்குத் தேவையான விஞ்ஞான ரீதியில் அமைந்த விவசாய அறிவு வழங்கப்படவேண்டும் என்ற நோக்கத்தோடு, கிராம வானொலி மன்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. குறிப்பிட்ட சில கிராமங்களைத் தேர்ந்தெடுத்து, ஊக்கமும், உற்சாகமும் உள்ள விவரமறிந்த 15 அல்லது 20 பேர்களைக்கொண்டு, ஒரு வானொலி மன்றம் அமைத்து, விவசாய மக்களுக்காக ஒவ்வொரு நாளும் மாலை 7-30 முதல் 8-00 மணிவரை ஒலிப்பரப்பாகும் நிகழ்ச்சிகளை, முக்கியமாக செவ்வாய், வெள்ளி இரு நாட்களிலும் விசேஷமாக ஏற்பாடு செயயப்பட்டு ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளைக்கேட்டு, தங்களுக்குள்ளே நிகழ்ச்சியில் கேட்ட விஷயங்களை விவாதித்து, பின்னர் நிகழ்ச்சி எவ்வளவுதூரம் எவ்வகையில் தங்களுக்குப் பயன்பட்டது, எந்த விஷயங்கள் தங்களுக்ப் புரியவில்லை; அவற்றிற்கு எவ்வித விளக்கம் தேவை என்று விவாதித்து முடிவு செய்து நிலையத்திற்கு எழுதி அனுப்பினால், அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு அடுத்த வாரம் பதில் கிடைக்கும். கிடைத்த பதில்களைக்கொண்டு தங்கள் தொழிலையும் விவசாயத்தையும் அதன் மூலம் கிராம சமுதாயத்தையும் அபிவிருத்தி செய்துகொள்ளலாம்.

### "ரேடியோ நெல்"

தீவிர உற்பத்திக்காக, தீவிர விவசாய ஒலி பரப்புத் திட்டம் (Farm and Home Unit) ஒன்று, சென்ற ஜூன் 7-ந் தேதியிலிருந்து, திருச்சி வானொலி நிலையத்தில் இயங்கி வருகிறது. இத்திட்டத்தின் மூலம், விவசாயப் பெருமக்களுக்குத் தேவையான விஞ்ஞான விவசாய முறைகளையும் அவர்களுக்கு அன்றாடம் விவசாயத்திற்கு வேண்டிய தகவல்களையும், ஆலோசனையும் குறிப்பாக காலநிலை, ரசாயன உரமிடுதல், உயர்ந்த ரக விதைகள், பூச்சி மருந்துகள், மற்றும் அவர்கள் சாகுபடியில் எந்த எந்த சமயங்களில் என்னென்ன முறைகளை எப்படி எப்படிக் கையாள வேண்டும் என்றெல்லாம் விவரமாக ஒலிபரப்பி வருகிறோம். இப்பொழுதெல்லாம் ஆடுதுறை 27 என்ற நெல்லைப்பற்றி அதிகம் கேட்கிறார்கள். ஒவ்வொரு நாளும் வானொலியில் அது சம்பந்தப்பட்ட

செய்திகளை அநேகமாகக் கேட்கலாம். இந்த நெல்லுக்கு இப்பொழுது 'ரேடியோ நெல்' என்று கூட பெயர் வந்து விட்டது. வானொலியில் அதைப்பற்றித் தரும் பிரச்சாரம், விவசாயிகளின் கவனத்தை அவ்வளவு தூரம் கவர்ந்து விட்டது.

### கிராம வானொலி மன்ற உறுப்பினர்களின் முக்கியமான பொறுப்பு

கிராம வானொலி மன்றங்களைப் பொறுத்த உரையில், இன்று தமிழ்நாட்டில் சுமார் 1,000 மன்றங்கள் கணக்கில் உள்ளன. ஆனால், 1,000 மன்றங்களும் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றனவா என்று கூற இயலாது. மன்றங்கள் சரிவர இயங்குவதில்லை என்று சொல்ல வரவில்லை. நடைபெற்றுக்கொண்டிருக்கலாம். ஆனால் கேள்விகள் கேட்காதிருக்கலாம். மன்றங்கள் நல்ல முறையில் இயங்க வேண்டும். ஒழுங்காக இயங்கினால் தான், வானொலியில் கூறப்படும் நல்ல கருத்துக்களைக் கேட்டு, அவற்றை, தங்களுடைய விவசாயத்திற்குப் பயன்படுத்தி, கிராம மக்கள், தங்கள் தொழிலில் முன்னேற்றம் அடைய முடியும். மன்றங்கள் நல்ல முறையில் இயங்குவது, கிராம ரேடியோ மன்ற அங்கத்தினர்களைப் பொறுத்துள்ளது. ஒவ்வொரு செவ்வாயன்றும், வெள்ளியன்றும் மாலை 7–30 முதல் 8–00 மணி வரை கிராம ரேடியோ மன்றங்களுக்காகவே நிகழ்ச்சிகள் விசேஷமாக தயாரிக்கப்பட்டு, ஒலிபரப்பப்பட்டுவருகின்றன. ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள நிபுணர்களைக்கொண்டு மாநில சர்க்காரின் பல துறைகளில் விவசாயம், கால்நடை, கூட்டுறவு போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளைக் கொண்டு, விவசாய மக்களுக்குத் தேவையான பொருட்கள் பற்றி பேச்சுக்கள், உரையாடல்கள், போட்டிகள், விவாதங்கள், சித்திரங்கள் முதலிய நிகழ்ச்சிகள் விசேஷமாகத் தயாரிக்கப்பட்டு ஒலிபரப்பப்பட்டுவருகின்றன.

மன்றங்கள் நல்ல முறையில் செயல்படுவதற்கு; மன்ற அங்கத்தினர்களின் ஊக்கமும், உற்சாகமும் முக்கியம். அவர்களுக்குத் தூண்டுகோலாக கிராமங்களிலுள்ள அதிகாரிகள் ஒத்துழைக்க வேண்டும். கிராம மன்றத்தார் சிறிது கவனமின்றி இருப்பின், அவர்களுக்கு ஊக்கமளித்து, மன்றங்கள் நல்ல முறையில் ஒழுங்காகச் செயல்பட, அதிகாரிகள் உதவி புரிய வேண்டும். கிராம வானொலி மன்றங்களில் இருந்து வானொலி நிலையத்திற்கு மாதம சராசரி 400 கேள்விகள் வருகின்றன. வாரம் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு, அடுத்த வார நிகழ்ச்சியில் பதில் தரப்படுகின்றன. இந்த விடைகளைத் தெரிந்துகொண்டு, அவற்றின் உதவியால், தாங்கள் ஈடுபட்டிருக்கும் தொழில் உயர்வுக்குத் திட்டங்கள் உருவாக்கி, பல கிராமங்கள் முன்னேற்றம் அடைந்துள்ளன.

### சாகுபடி நடவடிக்கைகளுக்கு உதவியாக திருச்சி ரேடியோ நிலையத்தில் நிகழ்ச்சிகள்

சாகுபடி நடவடிக்கைகளுக்கான மாத அட்டவணைப்படி, குடியானவர்கள் அவ்வப்போது தங்கள் பண்ணைகளில் மேற்கொள்ளவிருக்கும் பணிகளுக்கு ஆலோசனை கூறுவது, ஆகாசவாணியின் திருச்சி நிலையத்திலிருந்து ஒலிபரப்பப்படும் கிராம நிகழ்ச்சிகளின் மற்றொரு அம்சமாக இருக்கும். தமிழ் மாதங்களின் கிரமப்படி, சாதாரணமாகச் சாகுபடி வேலைகள் ஆரம்பமாவதற்கு 15 நாட்கள் முன்னதாகவே இந்நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படும்.

---

முன்பே கூறியபடி, நமது நாட்டின் முன்னேற்றம் கிராம முன்னேற்றத்தைப் பொருத்திருக்கிறது. இன்றைய உணவுப் பிரச்னையைத் தீர்க்க நமது கிராமங்களையே நாம் நம்பி இருக்கிறோம். உற்பத்தியைப் பெருக்க, விவசாயத்தில் விஞ்ஞான அடிப்படையில் அபிவிருத்தித் திட்டங்கள் பல ஆக்கம் பெற்று வருகின்றன. அமோக விளைச்சல் திட்டத்தின் கீழ், நெல் உற்பத்தியைப் பெருக்க கையாளப்படும் வழி வகையில் தீவிர விவசாய ஒலிபரப்புத் திட்டம் ஒன்று. விவசாயிகளின் பிரச்னைகளை அறிந்து, அவர்களிடம் நேரில் தொடர்பு கொண்டும் அவர்களுக்குத் தேவையான தகவல்களையும் ஆலோசனைகளையும் கூறி, அவர்கள் அனுபவத்தையும் கேட்டு, கேட்டறிந்தவற்றையும் தொகுத்து, வானொலியில் ஒலிபரப்பப்படுகிறது. வானொலியில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளில் விவசாயப் பெருமக்களும் பங்கு கொள்கிறார்கள். விவசாயத்தில் வெற்றி கண்டவர்கள் எவ்வாறு தாங்கள் வெற்றியடைய முடிந்தது; என்ன என்ன முறைகளைக் கையாண்டதால் உற்பத்தி பெருகியது; அதே முறைகளை மற்ற விவசாயிகளும் கையாண்டால் அவர்களும் வெற்றியை அடைய முடியும் என்பது பற்றிய தகவல்கள் ஒலி பரப்பப்படுகின்றன. ஒருவரைப் பார்த்து மற்றவரும் அதே முறைகளைக் கையாண்டு அதிக உற்பத்தியை விவசாயத்தில் பெற முடியும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது.

### முக்கிய கடமை

கிராம வானொலி மன்றத் திட்டம் சிறப்புறச் செயல்படுவதும் விவசாய ஒலிபரப்புகள் பயன் அளிப்பதும், கிராம ரேடியோ மன்றத்தார் தரும் ஒத்துழைப்பைப் பொறுத்திருக்கிறது. கிராம வானொலி மன்றங்கள் நல்ல முறையில் இயங்க, கிராம வானொலி மன்றங்கள், ரேடியோ நிலையத்தோடு தொடர்பு கொண்டு, ஒத்துழைக்கவேண்டும்.

(18–11–1966–ல் திருச்சிராப்பள்ளி மாவட்டம், குளித்தலை வட்டாரம் மருதூர் கிராம வானொலி மன்ற விழாவில், ஆற்றிய உரையின் சாரம்.)

பதிமூன்று ஆண்டுகளுக்கு முன்பு பஞ்சாபிலுள்ள ''ஜாகத்ரி திட்டப்'' பகுதியில், பஞ்சாயத்து வளர்ச்சி துணை அதிகாரியாயிருந்த திரு மொஹிந்தர் சிங், ஒரு சாலையின் சரித்திரத்தை நயம்பட இங்கே விவரிக்கிறார்......




என்னுடைய சக ஊழியர்களில் எவரேனும் ஒருவர் என்னிடம் வந்து ''நம்முடைய மக்களெல்லாம் இவ்வளவு உணர்ச்சியற்றவர்களாக இருக்கக்கூடாது'' என்று கூறினால், நான் அவருக்குத் தரும் பதில் இது ஒன்றுதான். ''நீங்கள் அவர்களை சரியான முறையில் அணுகி, உங்கள் எண்ணங்களை பக்குவமான முறையில் எடுத்துக்கூறவில்லை ; தவறு உங்களிடம் தான் இருக்கிறது'' என்று ஆணித்தரமாக கூறுவேன். ''நம்முடைய மக்களை நாம் வெகு எளிதாக கவர முடியும் ; ஆனால் அதற்கு அடிப்படையானது, அவர்களை எப்படி தயார் செய்வது என்பதுதான்.''

என்னால் ஒரு நிகழ்ச்சியை மறக்கவே முடியாது. அது நடந்து பதிமூன்று ஆண்டுகளாகிவிட்டன. அப்போதுதான் சமுதாய வளர்ச்சித் திட்டம், தெரிந்தெடுக்கப்பட்ட 55 வட்டாரங்களில் செயல்படத் துவங்கியது. இவ்வட்டாரங்களில் ஒன்று ஜாகத்ரி வட்டாரம் என்பதாகும். இது பஞ்சாபிலுள்ள அம்பாலா மாவட்டத்தில் இருக்கிறது.

### ஜாகத்ரி திட்டம்

இவ்வட்டாரத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டத்திற்கு 'ஜாகத்ரி திட்டம்' என்று பெயரிடப்பட்டது. இது 65 லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஒரு திட்டமாகும். இத்திட்டத்தில் 'கதார்' பகுதியில் ஒரு கப்பிச்சாலையும், 'பஞ்சார்' பகுதியில் கிணறுகள், குழாய்க் கிணறுகள் அமைப்பதும் அடங்கும்.

இத்திட்டத்திற்கு இப் பகுதிகளில் நல்ல வரவேற்பு இருந்தது. பாசன வசதிகளைப் பெருக்கி, போக்குவரத்து வசதிகளும் ஏற்பட்டால், பொருளாதார நிலை நிச்சயம் மேம்படும் என்பதில், இப்பகுதிவாழ் மக்களுக்கு திடமான நம்பிக்கை எழுந்தது.

### அன்னியரையும் கவர்ந்த காட்சி

பனிரெண்டு மைல் நீளச் சாலையை அமைப்பதற்கான வேலை, மஹ்லன்வாலி என்ற மையமான கிராமத்திலிருந்து 1963-ம் ஆண்டு மே மாதம் 10-ம் தேதி துவங்கியது. இச்சாலை, தொழில் நகரான ஜாகத்ரியையும், இம்மாநிலத் தலைநகரான சண்டிகாரையும் இணைக்கக்கூடியது. இச்சாலையை அமைப்பதினால் 50 மைல் தூரம் குறைக்கப்படுகிறது. எனவே, கிராமவாசிகள் எல்லோரும் உற்சாகமாக தேசியக் கொடியைப் பிடித்துக் கொண்டு, ஆயிரக் கணக்கில் கூடினர். இந்நிகழ்ச்சியைக் காண்பதற்காக வந்திருந்த அன்னிய நாட்டினர்கூட மக்களின் ஆர்வத்தைக்கண்டு திகைத்துப் போயினர்.

### வெற்றி முழக்கம்

ஒவ்வொரு மைல் நீளத்திற்கும், 8 எக்கர் நிலம் நன்கொடையாக அளிக்கப்படவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. நன்கொடையாக நிலமளிக்கவேண்டுமென்பதே இத்திட்டத்தின் அடிப்படை குறிக்கோளாகும். அடுத்து சிரம தானத்தின் மூலம் இச்சாலையை அமைப்பது என்ற கொள்கையை எல்லோரும் ஏற்றுக்கொண்டனர். ஆனால் சிலர் நடுவில் தோன்றி மக்களின் உற்சாகத்தைக் கெடுக்கப் பார்த்தனர் ; இருப்பினும், அவர்களால் தோல்வியையே அடைய முடிந்தது. குறிப்பிட்ட காலத்திற்குள்ளேயே முதல் சாலை போடப்பட்டு, சரளைக் கற்களால் அவை செம்மைப் படுத்தப்பட்டன. இச்சாதனையின் காரணமாக, மக்களின் உற்சாகம் மேலும் அதிகமாயிற்று.

[37-ம் பக்கம் பார்க்க]



இரு இலைகளும், ஒரு மொட்டும் அங்கு ஏராளமாக இருக்கின்றன. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை இதே காட்சிதான்.

"அதோ அங்கு ஒரு கட்டிடம் தெரிகிறதே அதைப்பற்றி உங்களுக்கு ஏதேனும் தெரியுமா?"—என்று வட்டார அபிவிருத்தி அதிகாரி என்னைக் கேட்டார்.

"தெரியுமே. . அதுதான் பீர்தேயிலை தொழிற்சாலை" என்றேன் நான்.

"உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"இத் தொழிற்சாலையைப் பற்றி நான் முன்பே கேள்விப்பட்டிருக்கின்றேன். பத்திரிகையில் படித்தும் இருக்கின்றேன்"—என்றேன் நான்.

"அப்படியென்றால் உங்களுக்கு இது பற்றி எல்லாம் தெரியும் போலிருக்கிறது" என்றார் உற்சாக மிழந்த வட்டார அபிவிருத்தி அதிகாரி.

தொழிற்சாலை சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருக்கிறது. பசும் இலைகள் பற்பல இயந்திரங்களின் வழியாக சென்று பக்குவப்படுத்தப்பட்டு, "மார்க்கெட்"டுக்கு செல்ல தயாராகிறது.

**கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை**

"தொழிற்சாலை இலாபகரமாக இயங்கத் துவங்கிவிட்டது" என்றார் திரு பால். தொழிற்சாலை ஆரம்பித்து மூன்றாண்டுகளாகிவிட்டன. உற்பத்தி

பங்குதாரர்களுக்கு இலாபத்தை பிரித்துக் கொடுக்கக்கூடிய நிலையில் தொழிற்சாலையின் பொருள் வளம் இல்லை; இருந்தாலும் இன்னும் ஓர் ஆண்டு,இருஆண்டுகளில் அந்நிலைமை ஏற்படும் என்று நிச்சயமாக நம்புகிறோம்" என்றார் திரு பால்.

தொழிற்சாலையிலிருந்து வெளி வந்து ஆரம்பப் பள்ளிக் கட்டிடத்திற்குச் சென்றோம்.

# இரு இலைகள், ஒரு மொட்டு

"எனக்கு எல்லாம் தெரியாது. 1964-ம் ஆண்டு இத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டதுதான் தெரியும்; ஆனால் அது எவ்வாறு இயங்குகிறது என்பதை நேரில் கண்டறியவே இன்று உங்களுடன் வந்திருக்கிறேன்"

இதற்கிடையில் "ஜீப்" தொழிற்சாலையின் வாசலை அடைந்துவிட்டது.

அங்கே பீர் பஞ்சாயத்து தலைவர் திரு ரவீந்தர்பால் அவர்களை சந்தித்தேன். திரு பால் அவர்களின் தந்தைதான் இப் பஞ்சாயத்திற்கு ஏற்கனவே தலைவராக இருந்தவர். அவருக்குப்பிறகு இவருக்கே அப்பதவி கிடைத்தது. அந்தப் பகுதியிலேயே இவருக்கு தான் மிகப்பெரிய தேயிலைத் தோட்டம் இருக்கிறது; கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைக்கும் இவரே நிர்வாகியாக இருந்து பணியாற்றி வருகிறார்.

படிப்படியாக உயர்ந்து கொண்டே வருகிறது. 1964—65-ம் ஆண்டில் தேயிலை உற்பத்தி 13,200 பவுண்டுகளாக இருந்தது, 1965—66-ல் 18,859 பவுண்டுகளாக அதிகரித்துள்ளது; 1966—67-ம் ஆண்டில் உற்பத்தி 26,461 ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம். சென்ற ஆண்டு, அதாவது 1-6-1965 முதல் 31-5-1966 வரையிலுள்ள காலத்தில், எங்களுக்கு கிடைத்த நிகர லாபம் ரூ. 6,400; மொத்த லாபம் ரூ 35,000.

துவக்கத்தில் இத் தொழிற்சாலை அதிகாரிகளின் பொறுப்பிலேயே இருந்தது. ஆனால் அவர்களிடமிருந்து அதிகாரிகளல்லாதவர்களின் நிர்வாகத்திற்கு இது மாற்றப்பட்டவுடன் தொழிற்சாலை படிப்படியாக முன்னேறியது 234 தேயிலைத் தோட்டக்காரர்கள் இதன் உறுப்பினர்களாவர். இது கூட்டுறவு அடிப்படையில் செயலாற்றி வருகிறது.

**செழிப்பு, மகிழ்ச்சி**

"உங்கள் பஞ்சாயத்தைப் பற்றிய தகவல்களை தயவு செய்து கூறுங்கள்" என்றேன், திரு பால் அவர்களை நோக்கி.

"அதைப்பற்றி சொல்வதற்கு என்ன இருக்கிறது? எங்களுடைய குழந்தைகளுக்கு நல் வாழ்க்கையை அமைத்துத் தர முயன்று வருகிறோம்- இருந்தாலும் இன்னும் எவ்வளவோ காரியங்கள் செய்யவேண்டி இருக்கின்றன."

ஆனால் பஞ்சாயத்து ஆற்றியுள்ள பணிகள் பற்பல. 3,200 பேர்களை கொண்ட இக் கிராமம் செழிப்பாக, வளமாக, மகிழ்ச்சியாக தோன்றுகிறது. ஒழுங்காக ஆடையணியாத ஒரு குழந்தையைக் கூட நான் அங்கு பார்க்கவில்லை.

**ரூ. 13,000 செலவில் பழத்தோட்டம்**

ஒரு பெண் உறுப்பினரையும் சேர்த்து ஏழு உறுப்பினர்களைக் கொண்டது, பீர் பஞ்சாயத்து. பஞ்சாயத்துத் தலைவர், ஒரு ராஜ பரம்பரையைச் சேர்ந்தவர்.

[அடுத்த பக்கம் பார்க்க.]

## தியாக வேள்வி : [35-ம் பக்கம் தொடர்ச்சி]

திட்ட ஆலோசனைக் குழுவானது உடனே கூடி, மேற்கொண்டு செய்ய வேண்டிய காரியங்கள் பற்றி திட்டம் வகுத்தது. இச்சமயத்தில் ஒரு சிறிய தகராறு வந்துவிட்டது. 'சாச்சா ரௌலி' கிராம மக்கள் தங்களின் ஊர் வழியேதான் சாலை அமைக்கப் பட்டு அதைச் சுற்றியுள்ள கிராமங்கள் இணைக்கப்பட வேண்டுமென்று கூறினர்; ஆனால் ஜமுனா நதிக்கும் மேற்கு ஜமுனா கால்வாய்க்கும் இடையில் வசிக்கும் கிராம வாசிகளோ, தங்கள் பகுதியிலே சாலை அமைப்பதற்கு முதலிடம் அளிக்கவேண்டுமென்று வற்புறுத்தினர். இவ் விரு கிராமவாசிகளும், திட்ட ஆலோசனைக் குழுவை அணுகி, தாங்களே அந்த 12 மைல் நீளச் சாலையை, குறிப்பிட்ட காலத்திற்குள் அமைத்துத் தருவதாக வாக்களித்தனர். திட்ட ஆலோசனைக் குழுவிற்கு இது ஒரு பெரும் பிரச்னையாக மாறிவிட்டது.

திட்ட ஆலோசனைக் குழு, இறுதியில் ஒரு முடிவிற்கு வந்து, இச் சாலையானது ஜமுனா, மேற்கு ஜமுனா கால்வாய் பகுதிகளில்தான் அமைக்கப்படவேண்டும் என்று கூறிவிட்டது. ஏனெனில், இங்கு எப்போதும் வெள்ள அபாயம் இருந்து வந்தது.

### இடையில் மந்தநிலை

கதார் பகுதியில் வேலை ஆரம்பமாயிற்று. கிராமவாசிகள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து ஆலோசனை செய்து, திட்டம் தீட்டி, வீடுவாரியாக மக்களை திரட்டி, இப்பணியில் இறங்கினர். குறிப்பிட்ட காலத்திலேயே வேலையை முடித்துக்கொடுக்க, கிராம தலைவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டனர். ஆனால் ஆரம்பத்திலிருந்த உற்சாகம், உழைப்பு எல்லாம் படிப்படியாக குறைந்து, இறுதியில் வேலை நடைபெறாது போயிற்று. இதனால் சாலையின்மீது சரளைகள் பாவ வேண்டிய வேலையும் தள்ளிப் போட வேண்டியதாயிற்று. திட்ட ஆலோசனைக் குழு கூடி, இது பற்றி பரிசீலனை செய்து, அதன் ஆழ்ந்த வருத்தத்தையும், ஏமாற்றத்தையும் தெரிவித்துக் கொண்டது. தலைவர்களும் கிராமப் பெரிய மனிதர்களும் கூறிய சமாதானங்களை யெல்லாம் குழு ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இருப்பினும், திட்ட காலத்தை சிறிதளவு நீடிக்க திட்ட ஆலோசனைக் குழு ஒப்புக்கொண்டது.

### மீண்டும் உற்சாகம்

எஞ்சிய இருபது சதவீத வேலையை முடிக்க கிராமவாசிகள் கூடி பேச்சு வார்த்தை நடத்தினர். வேலை ஆரம்பமாயிற்று. கிராமத் தலைவர்கள் எல்லோரும் வேலையில் பங்கெடுத்து சிரமதானம் செய்யாமல், அங்கும் இங்கும் நின்றுகொண்டு அதிகாரம் செலுத்தி வந்தனர். இதனால் சரிவர வேலை நடைபெறவில்லை. தலைவர்களுக்கு எவ்வளவோ எடுத்துக் கூறியும், அவர்கள் செவி சாய்க்கவில்லை.

நான் அங்கு பஞ்சாயத்து வளர்ச்சி துணை அதிகாரியாகப் பணியாற்றி வந்ததனால், மக்கள் எல்லோரும் என்னிடம் வந்து முறையிட்டனர். மேலும் காலத்தை நீடிக்கவேண்டுமென்று, நான்தான் ஆலோசனைக் குழுவைக் கேட்டுக்கொள்ளவேண்டுமென்று அவர்கள் கூறினர்.

### இறக்கவும் தயார்

“அதை மட்டும் என்னால் செய்ய முடியாது; ஏற்கெனவேயே ஒரு முறை காலம் நீடிக்கப்பட்டுள்ளது; மீண்டும் அதே கோரிக்கையுடன் நான் குழு உறுப்பினர்களை சந்திப்பதற்கில்லை. செத்தாலும் சரி, இதை நான் செய்யவே மாட்டேன்” என்று கண்டிப்பாக கூறிவிட்டேன்.

சொன்னபடியே, விறகுகளைக் கொண்டு வந்துபோட்டு, அதன்மேல் ஏறி உட்கார்ந்துக்கொண்டேன்.

“உங்களால் இத் திட்டத்தை குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்ற முடியவில்லை; அதுதான் செய்ய முடியவில்லை. எனக்கு வேறொரு உதவியாவது செய்யுங்கள்; தயவுசெய்து சிதைக்கு தீ மூட்டுங்கள்” என்று அங்கு கூடியிருந்தோரை கேட்டுக்கொண்டேன்.

### படிப்பினை

இதனால் மக்கள் தங்கள் செயலற்ற நிலையை உணர்ந்து, அதற்காக வருத்தம் தெரிவித்துக்கொண்டனர். எல்லோருக்கும் உற்சாகம் பிறந்தது; சக்தி பிறந்தது. திட்டமும் உடனே நிறைவேற்றப்பட்டது.

“நம்மிடையே ஒற்றுமை, செயலாற்றும் திறன் இவையிருந்தால், ஏனைய எல்லாத் திட்டங்களும் எளிதில் நிறைவேறும்” என்பதை, அவர்கள் நன்கு உணர்ந்துகொண்டனர்.

---

## இரு இலைகள், ஒருமொட்டு

[முன் பக்கத் தொடர்ச்சி]

தேயிலையைத் தவிர, நெல், சோளம், கோதுமை, உருளைக்கிழங்கு, காய்கறிகளும் இங்கு பயிரிடப்படுகின்றன. பஞ்சாயத்து ரூ. 13,000 செலவழித்து, 10 ஏக்கர் நிலத்தில் ஒரு பழத் தோட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

விவசாயிகள் விஞ்ஞான ரீதியில் பயிர் செய்கின்றனர். ரசாயன உரங்கள் தாராளமாக பயன்படுத்தப்படுகின்றன. சென்ற ஆண்டு 75 டன் ரசாயன உரம் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

கிராமத்தில் மூன்று கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. கம்பளி ஆடைகள் தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கமும், விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கமும், இராணுவத்தினர் கூட்டுறவுச் சங்கமும் உள்ளன.

### எங்களை ஏமாற்றலாம்! எங்கள் குழந்தைகளை ஏமாற்ற முடியாது.

அறியாமையை அறவே ஒழித்துவிட வேண்டும் என்று பீர் பஞ்சாயத்து கங்கணம் கட்டிவிட்டது. “எங்களுடைய அறியாமையை பிறர் சாதகமாக பயன்படுத்தி ஏமாற்றிக்கொண்டிருந்தார்கள். ஆனால் எங்கள் குழந்தைகளை அவ்வாறு ஏமாற்ற முடியாது” என்று பஞ்சாயத்துத் தலைவர் கூறினார்.

பீர் கிராமத்தில் ஒரு துவக்கப்பள்ளி, ஒரு நடுத்தரப் பள்ளி இருக்கிறது. நடுத்தரப்பள்ளி சீக்கிரமாக உயர்நிலைப் பள்ளியாக ஆக்கப்படவிருக்கிறது. கிராமத்தில் ஒரு பால்வாடியும் இருக்கிறது.

“இன்னொரு முறை அவசியம் வாருங்கள்” என்று இரு கை கூப்பிக் கூறினார், திரு பால்.

“இம்மாதிரியான கிராமங்கள், இம்மாதிரியான மக்களைக் காண நான் அடிக்கடி வருவேன்; அது எனக்கு ஒரு விருப்பமான செயல்” என்று கூறி விடை பெற்றுக்கொண்டேன்.

—திரு அருண்சோம்.

# விஞ்ஞான மன்றங்களின் பணி

[திரு ரா. குமாரசுவாமி, விஞ்ஞான மன்ற அதிகாரி,
ஆரியக்கவுண்டன்பட்டி, சேலம் மாவட்டம்.]

[விஞ்ஞான அறிவை கிராமப் பகுதிகளிலே பரப்பும் நோக்கத்தோடு, விஞ்ஞான வளர்ச்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்விஞ்ஞான மன்றங்கள் (Vijnan Mandirs) தமிழகத்தில், ஆரியக்கவுண்டன்பட்டி, பெரியநாயக்கன்பாளையம், சத்திய விஜயநகரம், கல்லுப்பட்டி, குருக்கத்தி, வளவனூர் ஆகிய ஆறு இடங்களில் இயங்கிவருகின்றன. கல்வித் துறையின் நிர்வாக ஆதிக்கத்தின்கீழ் இருந்து வந்த இந்த விஞ்ஞான வளர்ச்சி நிலையங்கள், இப்பொழுது கிராம வளர்ச்சித் துறைக்கு மாற்றப்பட்டுள்ளன—ஆசிரியர்]

விஞ்ஞான, தொழில் நுட்பத் துறைகளில் நவபாரதம் மேம்பாடு அடைந்து வளம்பெற வேண்டுமானல், அதன் முதுகெலும்பாக அமைந்துள்ள கிராமங்கள்தோறும் விஞ்ஞான விழிப்பு உணர்ச்சி ஏற்படவேண்டும். "தேசீய ஆராய்ச்சிக் கூடங்களில் நடந்துவரும் ஆராய்ச்சியின் சாதனைகள், கிராம மக்களுக்கு எட்டினாலன்றி நாட்டிற்கு சுபீட்சமில்லை" என்ற நேருஜியின் அறிவுரையை எதிரொலிக்கும் வகையில், விஞ்ஞான தொழிலியல் ஆராய்ச்சி மன்றத்தின் அன்றைய டைரக்டரும் சிறந்த விஞ்ஞானியுமான டாக்டர் எஸ். எஸ். பட்நகர் அவர்களின் முயற்சியால் 1953-ஆம் ஆண்டு விஞ்ஞான மன்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. முதலாவது விஞ்ஞான மன்றம் (Vignan Mandir) டெல்லியின் அருகாமையிலுள்ள கபேஷரா என்ற இடத்தில் நேருஜி அவர்களால் 1953-ஆம் ஆண்டு திறந்துவைக்கப்பட்டது. இதனை படுத்து, தமிழ்நாட்டிலும் மற்றொரு மன்றம் மதுரை மாவட்டத்தில் தே. கல்லுப்பட்டியில் 1955-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. கடந்த 13 ஆண்டுகளில் இவற்றின் தொகை படிப்படியாக பெருகி, இன்று 50 விஞ்ஞான் மன்றங்கள் பாரதத்தில் செயல்படுகின்றன. தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்திலுள்ள ஆரியக்கவுண்டன்பட்டி, கோவையில் பெரியநாயக்கன்பாளையம், மதுரையில் தே. கல்லுப்பட்டி. வட ஆர்க்காட்டில் சத்தியவிஜயநகரம், தென்ஆர்க்காட்டில் வளவனூர், தஞ்சையில் குருக்கத்தி போன்ற இடங்களில் 6 விஞ்ஞான மன்றங்கள் செயல்படுகின்றன. ஆரம்பத்தில் இவற்றின் நிர்வாகம் மத்திய அரசின்கீழ் இருந்தபோதிலும், 1963-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இவையாவும் மாநில அரசுகளின் நிர்வாகத்தின்கீழ் வந்தன. தமிழ்நாட்டில் முதலில் கல்வி இலாகாவின் பொறுப்பிலும் பின்னர் கிராம வளர்ச்சி நெறியாளர் நிர்வாகத்தின்கீழும் செயல்பட்டு வருகின்றன.

### திட்டத்தின் குறிக்கோள்:

கிராம மக்களிடையே விஞ்ஞான அறிவைப் பரப்புதல், அவர்தம் சிந்தனையிலும் செயலிலும் விஞ்ஞான விழிப்பு உணர்வை ஏற்படுத்தல், மக்களின் அன்றாடப் பிரச்னைகளாகிய விவசாயம், பயிர்ப் பாதுகாப்பு உடல்நலம், கிராமத் துப்புரவு, விஞ்ஞானக் கல்வி, மூடநம்பிக்கை போன்றவற்றை விஞ்ஞான கண்ணேட்டத்துடன் அணுகி, அறிவியல் அடிப்படையில் தீர்வுகாண துணை செய்தல் போன்றவை, இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இக்குறிக்கோளைச் செயல் படுத்தும் வகையில், ஒவ்வொரு விஞ்ஞான மன்றத்திலும் ஒரு சோதனைச்சாலை, கண்காட்சிக்கூடம் நூலகம், பேசும் படக்காட்சி உபகரணங்கள் முதலியன உண்டு. இவற்றின் உதவியுடன், விஞ்ஞான மன்றங்களின் விஸ்தரிப்புப்பணி, அந்தந்த மாவட்ட மக்களுக்கு பயன்படும் வகையில் கீழ்க்கண்ட மூன்று முறைகளில் அமுலாக்கப்படுகிறது.

### I. இலவச சேவைகள் மூலம் விஞ்ஞான விஸ்தரிப்பு.

விவசாயிகள், பொதுமக்கள் இவர்களின் மனத்தை விஞ்ஞானத்தில் ஈடுபடுத்தும் வகையில், மண் பரிசோதனை இரத்த சோதனை முதலியவை இலவசமாக விஞ்ஞான மன்றங்களில் நடத்தப்படுகின்றன.

(1) மண்வளப் பரிசோதனை.—விவசாயிகள் கொண்டு வரும் மண் நீர் இவற்றின் மாதிரிகள் விவசாய காரியங்களுக்காக இலவசமாக சோதனைச் செய்யப்படுவதுடன் மண்ணின் குறைபாடுகளை நீக்க அவசியமான உர சிபாரிசுகளும் மற்ற மண்வள ஆலோசனைகளும் வழங்கப் படுகின்றன.

(2) இரத்த சோதனைகள்.—விஞ்ஞான மன்றத்தின் சில சோதனைச் சாலைகளில் இரத்தம், சிறுநீர், எச்சில், மலம் முதலியவற்றின் கோளாறுகளை சோதனை செய்யும் வாய்ப்பு இருப்பதால், பொதுமக்கள் மேற்படி பரிசோதனைகளை இலவசமாக செய்துகொள்ளலாம்.

(3) சுற்றுப்புற விஞ்ஞான பிரச்னைகளின் சர்வே.—சுற்று வட்டாரத்திலுள்ள பிரச்னைகள் விசேடமாகத் தோன்றினால், அவைகளைத் தீர்வுகாணும் வழிவகைகள் கையாளப் படுகின்றன. சேலம் மாவட்டத்தைப் பொறுத்த அளவில் சில அணுசக்தி கனிவள பொருட்கள் இருப்பதாகத் தெரியவந்தால், அதனை சமாளிக்க அணுசக்தி இலாகா கதிர் இயக்கத்தைக் கண்டறியும் கீஜர் முல்லர் கவுண்டர் என்ற ஒரு கருவியை கடனாகத் தந்து உதவியுள்ளது. பல இடங்களில் மண்ணும் பாறைகளும் இதனால் பரிசோதிக்கப்படுகின்றன.

II. கல்விப்பணி மூலம் விஞ்ஞான விஸ்தரிப்பு :—

இப் பணியில் விஞ்ஞான மன்றங்களின் உறுப்புகளான பொருட்காட்சிக்கூடம், நூலகம், பேசும் படக்காட்சி அமைப்பு விஞ்ஞான கருவிகள் போன்றவை பெரிதும் துணைபுரிகின்றன.

(1) விஞ்ஞானக் கழகங்கள் அமைத்தல்.—கிராமப் பள்ளி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தனித்தனியே விஞ்ஞான கழகங்களை விஞ்ஞான மன்றங்கள் அமைத்து வருகின்றன. மாணவர்களின் மதிநுட்பத்தை ஊக்குவித்து, அவர்களுக்கு கருவிகளையும், சோதனைகளையும் கையாளும் வாய்ப்பு அளித்தலின் மூலம், அவர்தம் விஞ்ஞான ஆவலைத் தூண்டுதலே விஞ்ஞான கழகங்களின் நோக்கம். அமெரிக்க நாட்டில் பல்லாயிரக் கணக்கான மாணவர்களுக்கு பயன் அளிக்கும் முறையில் இதுபோன்ற 19,500 விஞ்ஞானக் கழகங்கள் செயலாற்றி வருகின்றன. விஞ்ஞான மன்றங்கள் கிராமப்புற பள்ளிகளில் விஞ்ஞானக் கழகங்களை அமைத்து வருதலைப் போன்று, நகரப்புற பெரிய பள்ளிகளில் மத்திய கல்வி இலாகாவின் விஸ்தரிப்பு பிரிவும் பல விஞ்ஞானக் கழகங்களை அமைத்து வருகிறது. எனவே, இப் பணியில் இவ்விரு நிறுவனங்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று அரசாங்கம் ஆலோசனை கூறியுள்ளது. விஞ்ஞானக் கழகங்களை அமைத்தபின், அவற்றை நிர்வகிக்கும் பொறுப்பு, அதன் உறுப்பினர்களைச் சேரும். ஆயினும் அடிக்கடி விஞ்ஞான மன்ற அதிகாரி இக் கழகங்களின் கூட்டங்களில் பங்குகொண்டு செயல்முறை விளக்கங்கள், சோதனைகள், பேசும்படக் காட்சி உபகரணங்கள் இவற்றின் உதவியுடன் சொற்பொழிவுகளும் மாதிரிப் பாடங்களும் நடத்துகின்றனர். கழக உறுப்பினர்களான மாணவர்களும் ஆசிரியர்களும் விஞ்ஞான மன்றத்தின் நூலகத்திலிருந்து இலவசமாக புத்தகங்களையும் சஞ்சிகைகளையும் படிக்க அனுமதிக்கப்படுகின்றனர்.

(2) கிராமப் பள்ளிகளில் பொருட்காட்சிக் கூடம் அமைத்தல்.—பொருட்காட்சிக் கூடங்களும் அவற்றின் விந்தையான பொருட்களும் மக்களிடம் குறிப்பாக மாணவர்களிடம் விஞ்ஞான மனப்போக்கை ஏற்படுத்தி இயற்கை நிகழ்ச்சிகள்பால் அவர்தம் எண்ணங்களைக் கவர்ந்து விஞ்ஞான ஆவலைத் தூண்டவல்ல கருவிகளாகும். சுருங்கக்கூறின், பொருட்காட்சி] கூடத்தைப் பேசாத பேராசிரியன் எனலாம். விஞ்ஞான மன்றத்தின் முக்கிய உறுப்பான பொருட்காட்சி கூடத்தில் அம்மாவட்டத்திலுள்ள தாவரங்கள், விலங்கினங்கள், கனிவளங்கள் முதலியவற்றின் விந்தையான மாதிரிகள் இடம் பெறுவதால், கிராமத்தாரும் மாணவர்களும் அவற்றைக்கண்டு பயன் அடைகின்றனர். கிராமப்புற பள்ளிகளில் சிறிய அளவில் இதுபோன்ற பொருட்காட்சி கூடங்கள் அமைப்பதில் தக்க உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. சேகரிக்கப்பட்டு பதப்படுத்தபட்ட காட்சிப் பொருட்களும் முடிந்த அளவு கொடுத்து உதவப்படுகிறது. ஆசிரியர்களுக்கு காட்சிப் பொருட்களைச் சேகரித்தல் இரசாயன முறையில் பதப்படுத்தல், அழகிய காட்சியாக்குதல், காட்சிக்கூடத்திற்கு கவர்ச்சியூட்டுதல் போன்றவற்றில் பயிற்சி அளிக்கும் செயல் அரங்குகள் அடிக்கடி நடத்தப்படுகின்றன. இட நெருக்கடியால் இடர்படும் தொடக்கப்பள்ளிகளில் இதை சமாளித்து, பொருட்காட்சி கூடத்திற்கு பதிலாக வகுப்பறை மூலைகளில் விஞ்ஞான பொருட்களைச் சேகரித்து அவற்றை விஞ்ஞான மூலைகளாக மாற்றுவதிலும் சுவர் கண்காட்சிகள் அமைப்பதிலும் இடைநிலை ஆசிரியர்களுக்கும் செயல் அரங்குகள் நடத்தப்படுகின்றன.

### ரசாயன உரம்

| | |
|---|---|
| தமிழகத்தில் 1956-ல் இருந்த தொழிற்சாலைகள் | 2 |
| தற்போதுள்ள தொழிற்சாலைகள் | 8 |
| உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவை | 7 |

இடங்கள் :

| | |
|---|---|
| ராணிப்பேட்டை | 1 |
| ஆவடி | 1 |
| கடலூர் | 2 |
| எண்ணூர் | 2 |
| கோயம்புத்தூர் | 1 |

(இன்னும் உற்பத்தியில் ஈடுபடவில்லை.)

1965-ல் 4 தொழிற்சாலைகளில் உற்பத்தி : 1·36 லட்சம் டன்கள்

அகில இந்திய உற்பத்தி : 12 லட்சம் டன்கள்.

(3) **படக்காட்சி நிகழ்ச்சிகள்.**—விஞ்ஞான மன்றங்களிலும் இதர நிகழ்ச்சிகளிலும் படக்காட்சி உபகரணங்களின் துணைகொண்டு பொதுமக்களுக்கும் மாணவர்க்கும் பயனுள்ள முறையில் விஞ்ஞான திரைப்படங்கள் காட்டப்படுகின்றன. சொற்பொழிவுகளுக்கு சம்பந்தப்பட்ட திரைப் படங்கள், ஸ்லேடுகள் முதலியவற்றை பற்பல நிறுவனங்கள் தந்து உதவுகின்றன.

(4) **ஆசிரியர்களுக்கான விஞ்ஞான செயல் அரங்குகள்.**—பள்ளிகளில் ஏற்படும் கருவி பற்றுக்குறையைச் சமாளிக்கவும் மாணவரின் புலன்களுக்குப் பயிற்சி அளித்து அவர் தம் விஞ்ஞான உணர்வைத் தூண்டவும் எளிதாகக் கிடைக்கும் பொருட்களிலிருந்து விஞ்ஞானக் கருவிகளைத் தயாரிக்கும் பயிற்சி ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுகிறது. வகுப்புகளில் காட்ட முடியாத சிக்கலான செலவுமிக்க சோதனைகளுக்குப் பதிலாக எளிய சோதனைகளைச் சோடித்துக் காட்டும் முறைகளிலும் செயல்முறை வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இச்செயல் அரங்கு பயிற்சிகளின் காரணமாக, ஆசிரியர்கள் பலவிதமான போதனை உபகரணங்களைத் தாமே தயாரித்துக்கொள்வதுடன் தாம் பெறும் அனுபவத்தை வகுப்பறைகளிலும் விஞ்ஞான கழகக் கூட்டங்களிலும் தம்மாணவர்களுடன் பகிர்ந்துகொள்கின்றனர்.

(5) **விஞ்ஞான அறிவுத்திறன் போட்டிகள்.**—மாணவர் உள்ளங்களில் உறங்கிக் கிடக்கும் மதிநுட்பத்தைக் கண்டறியவும், விஞ்ஞான ஆவலைத் தூண்டவும், வருடம் தோறும் மாவட்டத்திலுள்ள பள்ளி மாணவர்களுக்காகவும் இளைஞர்களுக்காகவும் அறிவுத்திறன் போட்டி ஒன்று நடத்தப்படுகிறது. இதில் சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரைகள் கருவிகள் விந்தைப் பொருட்கள் முதலியவற்றிற்கு பரிசுகளும் நற்சான்றிதழ்களும் வழங்கப் படுகின்றன.

(6) **விஞ்ஞானக் கண்காட்சிகள்.**—பள்ளிகளின் விஞ்ஞானக் கழகங்களில் தயாரான கருவிகள், சோதனைகள், சேகரிக்கப்பட்ட விந்தை பொருட்கள் முதலியவற்றின் துணையோடு வருடமொரு முறை ஆங்காங்கே விஞ்ஞானக் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. இதில் பல பள்ளிகள் பங்கெடுக்கின்றன.

### III. இணைப்பு பணி மூலம் விஞ்ஞான விஸ்தரிப்பு :

கிராமங்களின் மக்கள் தம் அன்றாட வாழ்வில் ஏற்படும் தீர்க்க முடியாத பிரச்சனைகளைத் தேசிய ஆராய்ச்சிக் கூடங்கள் பிராந்திய நிலையங்கள் மருத்துவக் கல்லூரிகள் முதலியவற்றுடன் தொடர்புகொண்டு அவற்றைச் சமாளிக்கும் வழிவகைகளைப் பொதுமக்களுக்கு விஞ்ஞான மன்றங்கள் தெரிவிக்கின்றன. ஆராய்ச்சி நிலையங்களின் முடிவுகளை அவ்வப்போது மக்களுக்கு அறிவித்தும் வருகின்றன. விஞ்ஞான மந்திர்களில் இருந்து பிராந்திய மொழிகளில் வெளியாகும் கட்டுரைகள் இதற்கு பெரிதும் துணை புரிகின்றன.

---

## துவக்கப் பள்ளிகள், உயர் துவக்கப் பள்ளிகள் கருவிகள் வாங்கிக் கொள்ள அரசாங்க மானியம்.

துவக்கப் பள்ளிகள் (Primary Schools) உயர் துவக்கப் பள்ளிகள் (Upper Primary Schools) கருவிகளை (Equipments) வாங்கிக் கொள்வதற்காக வேண்டி, மானியம் வழங்க, தமிழ்நாடு அரசாங்கம் முடிவு செய்துள்ளது, இதனால், இந்த மாநிலத்தில், 1,600 துவக்கப் பள்ளிகளும், 500 உயர் துவக்கப் பள்ளிகளும், பயன்பெறும். ஒரு துவக்கப்பள்ளிக்கு ரூ. 500, ஓர் உயர் துவக்கப் பள்ளிக்கு ரூ. 1,000 என்ற விகிதத்தில், 1966-67-ம் நிதி ஆண்டுக்கு ரூ. 13 லட்சம் மானியம் (Grants in-aid) வழங்குவதென, தமிழ்நாடு அரசாங்கம் முடிவு செய்து, ஆணை பிறப்பித்துள்ளது.

இதனால் பயன்பெறும் பள்ளிகளின் விவரங்களும் அதற்குரிய செலவினம் பற்றிய விபரங்களும் பின் வருமாறு:—

| பள்ளிகள். | எண்ணிக்கை. | செலவுத் தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. மாற்றப்பட்ட பகுதிகளிலுள்ள (Transferred areas) அரசாங்கப் பள்ளிகள். | 100 துவக்கப் பள்ளிகள். | 60,000 |
| | 10 உயர் துவக்கப் பள்ளிகள். | |
| 2. அரசாங்க நிர்வாகத்தில் இல்லாத பள்ளிகள். | 300 துவக்கப் பள்ளிகள். | 2,40,000 |
| | 90 உயர் துவக்கப் பள்ளிகள். | |
| 3. தல ஆட்சி நிர்வாகத்தில் உள்ள பள்ளிகள். | 1,200 துவக்கப் பள்ளிகள். | 10,00,000 |
| | 400 உயர் துவக்கப் பள்ளிகள். | |
| | மொத்தம் .. | 13,00,000 |

ஒவ்வொரு பள்ளிக்கும் நிர்ணயிக்கப்பட்ட உச்சவரம்பை கருத்தில் கொண்டே, செலவு செய்யப்பட வேண்டும்.

எந்தெந்த பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளுக்கு இம் மானியம் அளிக்கலாம் என்று தேர்ந்தெடுக்கும் விஷயத்தை, செகண்டரி கல்வித்துறை நெறியாளர், கிராம வளர்ச்சித்துறை நெறியாளருடன் கலந்தாலோசித்து, முடிவு செய்வார்.


கருவிகளுக்காக மானியத்தைப் பெறும் பள்ளிகள், இக்கருவிகளை அரசாங்கத் தொழில் துறையின் விஞ்ஞானக் கண்ணாடிக் கருவிகள் தயாரிக்கும் பிரிவிலிருந்து தான் (Scentific Glassware Unit of the Industries Department) எந்த விலையானாலும், வாங்கிக்கொள்ள வேண்டும்.

இதன் விவரங்களை, கல்வி-பொது சுகாதாரத்துறையின் 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1985-ல் காணலாம்.


ஜனவரி மாதத்தில் நடைபெற்ற சென்னை தேனம்பேட்டை பொருட்காட்சியில் 'கிராம வளர்ச்சி அரங்கம்' காண்போரின் சிந்தனைக்கு விருந்தாக அமைந்திருந்தது கிராம வளர்ச்சித் துறையின் சாதனைகள் பற்றிய புள்ளி விவரங்கள், உணவு உற்பத்தித் திட்டம், சத்துணவு திட்டம், கிராம மனித சக்தி திட்டம் பற்றிய தெளிவான விளக்கங்கள், படிப்படியாக பல்வேறு ஆக்க வேலைகளின் பயனை அடைந்து முன்னேறியுள்ள 'களியாம்பூண்டி' என்ற கிராமத்தின் மாதிரி அமைப்பு, காந்தியடிகள் நூற்றுண்டு விழா பற்றி பஞ்சாயத்து யூனியன் மேற்கொள்ளவேண்டிய கடமைகள் கொண்ட கருத்துரைகள், மற்றும் பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள கிராமக் கைத்தொழில நிலையங்கள் தயாரித்த கைவண்ணப் பொருள்கள் முதலியன 'கிராம வளர்ச்சி அரங்கில்' இடம் பெற்றிருந்தன.




















படம் 1 : 1967-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ம் தேதி சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில், 'தியாகிகள் இனம்' தமிழ் நாடு அரசாங்க தலைமைச் செயலாளர் உளபட, அரசாங்க ஊழியர்கள் அனைவரின் மவுன அஞ்சலி.


படம் 2 சென்னையில நடைபெற்ற புத்தகக் கண்காட்சியை (Book Fair) தமிழ்நாடு கவர்னர் சர்தார் உஜ்ஜல் சிங், 1967-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் தேதி பார்வையிட்டார்.

படம் 3 : நேபாள அரசாங்கத்தின் உளதுறைப் பஞ்சாயத்து, இலாக்காவைச் சேர்ந்த 10 உயர்தர அதிகாரிகள் கொண்ட குழுவினர் 1967-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ம் தேதி தமிழகத்திற்கு வருகை தந்து, தமிழநாட்டில் நான்கு நாட்கள் தங்கி, கிராம வளர்ச்சி பணிகளை நேரில கண்டறிநதனர். 1967-ம் ஆண்டு ஜனவரி மாதம 23-ம தேதி கோட்டையில் கிராம நல தல நிர்வாகத்துறையின கூட்டுச செயலாளரும் கிராம வளர்ச்சி நெறியாளருமான திரு கா. திரவியம் அவர்களைச் சந்தித்து, நிர்வாகப் பிரச்னைகளைக் கலந்து பேசினர்.


படம் 4 குழந்தைகள் நலன் பற்றிய இந்திய மன்றம் 1967-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம தேதி சென்னையில் பாலர் அரங்கில் 'குழந்தைகள் தேர்வுப் போட்டி' (Baby show) ஒன்றை நடத்தியது கவர்னரின் மனைவியார் சர்தாரிணி உஜ்ஜல் சிங், பரிசுகள் வழங்கினர்.







**படங்கள் 1, 2 :** தஞ்சாவூர் மாவட்டம் நீடாமங்கலம் பஞ்சாயத்து யூனியனின் அலுவலகக் கட்டிடத்தை, முதலமைச்சர் 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 25-ம் தேதியில் திறந்து வைத்தார். அப்பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த பஞ்சாயத்துத் தலைவர்களுடன் முதலமைச்சர் — அலுவலகக் கட்டிடம் சிறப்பான விளக்கொளியுடன் காட்சியளித்தது.





**படம் 3 :** கும்மிடிப்பூண்டி பஞ்சாயத்து யூனியனில் (செங்கற்பட்டு மாவட்டம்) அண்மையில் விளையாட்டு விழா நடைபெற்றது. அவ்வமயம், மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டன






**படங்கள் 4, 5** கிராம வானொலி மன்ற வார விழா 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 18-ம் தேதியில் குளித்தலை வட்டாரம், மருதூர் கிராமத்தில் கொண்டாடப்பட்டது. திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்தின் நெறியாளர் திரு எம். எஸ். கோபால் விழாவில் பங்கு கொண்டு, சிறப்புரை ஆற்றினர்









படங்கள் 1—3. சென்னை 'பாலர் அரங்கில்', தமிழகக் கல்லூரிகளின் திட்ட மன்றங்களின் மாநில மகாநாடு, 1967 ஜனவரி 5, 6, 7 தேதிகளில் நடைபெற்றது. தமிழக முதலமைச்சர் மகாநாட்டைத் துவக்கிவைத்தார். பேராசிரியர்கள் பலரும், கிராம வளர்ச்சி நெறியாளர் உள்பட அரசாங்கத் துறைத் தலைவர்களும், மூதறிஞர்களும், மகாநாட்டு நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக்கொண்டனர். மகாநாட்டை ஒட்டி, கலைநிகழ்ச்சியும், குழு விவாதங்களும் (Group Discussions) நடைபெற்றன.

படங்கள் 4—6. இராமநாதபுர மாவட்டக் கல்லூரி மாணவர்களின் பயிற்சி முகாம், 27-12-66 முதல் 2-1-67 வரை, வைகை அணை அருகே நடைபெற்றது. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 6 கல்லூரிகளிலிருந்து, 40 மாணவர்கள், முகாமில் கலந்துகொண்டனர் மதுரைப் பல்கலைக்கழக துணைவேந்தர் திரு T. P. மீநாட்சிசுந்தரம் அவர்கள், மாணவர்களிடையே சொற்பொழிவாற்றினர் குமாரி 'கிளனிஸ் ரக்லாண்டு' என்னும் அமெரிக்க மங்கை முகாமைத் துவக்கிவைத்தார். தினமும், கொடிவணக்கமும் பிரார்த்தனையும் நடைபெற்றன.







முன்னேறும் தமிழகத்தின்..

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

**விலைக் கொள்கை**

விவசாயப் பொருள்கள் கொள்முதல், சீரான வினியோகம் ஆகியவைகளுக்கு ஏற்பாடுகள் செய்வதின் மூலம் உபயோகிப்பவர்களுக்கு நியாயமான, கூடுமானவரை ஸ்திரமான விலையில், பொருள் கிடைக்கவும் அரசாங்கம் வகை செய்யும்.

நிலவரியை ரத்து செய்ய அரசாங்கம் செய்திருக்கும் முடிவு, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. நான்காம் திட்டக் காலத்தில் விவசாய உற்பத்திப் பெருக்கத்துக்கு இதன் மூலம் புதிய உத்வேகம் ஏற்படும்.

**தடை நீங்கியது**

வாழ்க்கையை மேம்படுத்தும் கல்வியைப் பரப்புவதிலும் மருத்துவ உதவி, குடிநீர், வீட்டு வசதி, பின்னடைந்த வகுப்பினர் நலம் முதலிய சமூகநலப் பணிகளிலும் நான்காம் திட்டம் பெரும் சாதனைகளுக்கு வழி வகுக்கிறது.

தமிழ்நாட்டில் சென்ற 15 ஆண்டுகளில் கல்வியைப் பரப்புவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மகத்தானது. முதல் திட்ட ஆரம்பத்தில் ஆரம்பப் பள்ளிகளில் படித்து வந்த குழந்தைகள் எண்ணிக்கை சுமார் 18 லட்சம் தான். ஊர் தவறாமலும், வேண்டுமான ஒவ்வொரு பகுதியிலும் புதுப்புதுப் பள்ளிகளை ஏற்படுத்தியதின் விளைவாக, மூன்றாம் திட்ட இறுதியில் கல்வி கற்கும் குழந்தைகள் எண்ணிக்கை சுமார் 50 லட்சமாக உயர்ந்தது. அதாவது 6 வயதுக்குமேல் 11 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 92 சத விகிதம் பேர் கல்வி கற்று வருகிறார்கள். தேசம் முழுவதற்குமான சராசரியைவிட, இது குறிப்பிடத்தக்க அளவு அதிகமாகும்.

அதிகமான அளவில் குழந்தைகள் படிக்கிறார்கள் என்பது மட்டுமல்ல. சமூகத்தில் தணிந்த நிலையில் உள்ள குழந்தைகளின் நலனில் தனிக் கவனமும் செலுத்தப்படுகிறது. படிக்கும் நேரத்தில் குழந்தைகள் பசியால் வாடாமல் இருக்க மதிய உணவு வழங்கப்படுகிறது, இத்திட்டத்துக்குத் தற்சமயம் ஆண்டுக்கு சுமார் 2 கோடி ரூபாய் செலவாகிறது. தலைமுறை தலை முறையாக கல்வி வசதி மறுக்கப்பட்டு வந்த ஏழைப் பெற்றோர்களின் குழந்தைகளுக்கு இத்தகைய வசதிகள் மூலம், தமிழகம், இந்தியாவுக்கே வழி காட்டி விட்டது. நான்காம் திட்டத்தில் இந்த மதிய உணவுத் திட்டம் மேலும் விரிவாக்கப்படும். அதன் ஓர் அம்சமாக நான்காம் திட்ட முதல் ஆண்டிலேயே ஆரம்ப வகுப்புகளில் படிக்கும் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாகப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. பொது மக்களின் ஒத்துழைப்போடு சீருடைகள் வழங்கப்படுகின்றன. பள்ளி செல்லும் ஒவ்வொரு குழந்தைக்கும் இரண்டு செட் சீருடையும் ஒரு ஜோடி செருப்பும் அளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## தரமும் உயரும்

நான்காம் திட்டத்தில் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை, மூன்றாம் திட்டக்கால கல்விச்செலவைப் போல இரண்டு மடங்கும் இரண்டாம் திட்டகாலக் கல்விச் செலவைப்போல 5 மடங்கும் ஆகும். ஏற்கனவே கல்வி வளர்ச்சியின் பலவேறு அம்சங்களிலும் தேசீய சராசரியைக் காட்டிலும் முன்னணியில் நிற்கும் தமிழகம், இதன் மூலம், தனது வளர்ச்சி வேகத்தை தொடர்ந்து நிலைநிறுத்திக்கொள்ளும். 6-11 வயதுக் குழந்தைகள் நூற்றுக்கு நூறு பேரும் 11-14 பிராயமுள்ள சிறுவர் சிறுமியர் 80 சதவிகிதம் பேரும் படிக்கும்படிச் செய்யவேண்டும் என்பது நான்காம் திட்டத்தின் முக்கிய நோக்கம். 14-17 பிராயமுள்ள சிறுவர் சிறுமியரில் 60 சதவிகிதம் பேர் பள்ளிக்குச் செல்லும் நிலை இருக்கும்படியாக உயர் நிலைப் பள்ளிக் கல்வியை விஸ்தரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. பள்ளிக் கட்டடங்கள். ஆய்வுக் கூடங்கள், சாதனங்கள், போதனைக் கருவிகள், ஆசிரியர்கள் உயர்தரமான பயிற்சிகள் பெறுவதற்கு வசதிகள் முதலியவைகளுக்கு வேண்டுமான நிதி ஒதுக்குவது மூலம், கல்வித் தரத்தை உயர்த்தவும் வழி செய்யப்படுகிறது.

## பொன்னான வாய்ப்புகள்

கல்வி நிறுவனங்களிலும் தொழிற் கல்வி நிறுவனங்களிலும் படிப்பை முடித்துவிட்டு வரும் இளைஞர்கள், யுவதிகள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இவர்களுக்கு வேண்டுமான வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதற்காக அரசாங்கம், தனது அபிவிருத்திப் பணிகள் அனைத்தையும் புதுப்பித்துக்கொண்டு, புது வாய்ப்புகளை உண்டாக்கித் தரும். விவசாயத்துறையில் உத்தேசிக்கப்பட்டுள்ள அபிவிருத்திகளைச் செயல்படுத்த மின்சார மோட்டார்கள், பம்பு செட்டுகள், மருந்து தூவும் கருவிகள் முதலியன பெருமளவில் தேவைப்படும். கிராமப் பகுதிகளில் உள்ள படித்த இளைஞர்களும், தொழில் நுட்ப நபர்களும் கிராமத் தொழில் கூடங்களில் நவீன விவசாயக் கருவிகளைத் தயாரிக்கக் கூடிய வகையில், மாநில தொழில் வளர்ச்சிக் கொள்கை அமைக்கப்படும்.

## தமிழகத்தில் கூட்டுறவு

| | 1956 | 1961 | 1966 |
|---|---|---|---|
| கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் | 7,741 | 9,513 | 11,127 |
| உறுப்பினர்கள் | 11 இலட்சம் | 28 இலட்சம் | 44 இலட்சம் |
| விவசாயப் பாங்குகள் | .. | 332 | 332 |
| கூட்டுறவு பரவிய கிராமங்கள் சதவீதம் | 49 | 100 | 100 |
| ஆரம் பநில அடமான பேங்குகள் | 66 | 92 | 105 |
| கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | 101 | 126 | 130 |
| கூட்டுறவு முறையில் அமைக்கப் பட்ட சர்க்கரை ஆலைகள் | .. | 4 | 6 |
| கூட்டுறவு முறையில் அமைக்கப் பட்ட நூற்பாலைகள் | .. | 3 | 13 |

கல்வி, மருத்துவ உதவி, பொதுச்சுகாதாரம் முதலிய வசதிகளைப் பெருக்குவதனாலும் வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும். ஆசிரியர்கள், நர்சுகள், மருத்துவச்சிகள் போன்றோர் அதிக அளவில் தேவைப்படுவார்கள். பெருந் தொழில்களும் சிறுதொழில்களும் வளர்வதால், தொழில் நுட்ப நபர்கள், இஞ்சினீயர்கள் போன்றோருக்கும் வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும். அதற்கேற்ப படித்து தேறிய வர்களை அரசாங்கம், அந்த வாய்ப்பான பாதையில் திருப்பி விடும். தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்கள் போதிய அளவு இல்லாததால், தடைபட்டுக்கிடந்த சமூக நலப் பணிகளைத் தொடரவும் அரசாங்கம் ஆவன செய்யும். நர்சிங் போன்ற பயிற்சிகளைப் பொறுத்தவரை, தற்போதுள்ள பயிற்சி முறையைத் திருத்தியமைப்பது நல்லது. பொதுக் கல்வியோடு, இந்தத் தொழில் நுட்பங்களையும் இணைப்பான முறையில் கற்றுக்கொள்ள வகை காணலாம். இதன் மூலம் ஏராளமான அளவில் பெண்கள், குறிப்பாக, பின்னடைந்த சமூகங்களைச் சேர்ந்த பெண்கள் நர்சிங், மருத்துவச்சி போனறவைகளில் பயிற்சி பெறுவது சாத்திய மாகும். இதன் மூலம் ஆங்காங்கே மருத்துவப் பணிகளிலும் தேசப் பாதுகாப்பு படையிலும் நர்சுகள், மருத்துவச்சிகள் பற்றாக்குறையைத் தீர்க்கலாம்.

பெருமளவில் சாலை அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளவும் நான்காம் திட்டத்தில் வகை செய்யப் பட்டுள்ளது. தற்போதுள்ள பெரிய பாசனத் திட்டங்களைச் சீரமைக்கும் வேலைத் திட்டத்தின் ஒரு பகுதியான கால்வாய்களுக்கு காரைபோடுவதோடு, இதர அபிவிருத்தி வேலைகளும் மேற்கொள்ளப்படும். இந்தப் பணிகள், கிராமப்பகுதிகளில் அநேகருக்கு வேலை வசதி தரும். நான்காம் திட்டத்தில் மாநில அரசாங்கத் தொழில் திட்டங்கள் அனைத்திலும் வேலை வசதி அம்சமே தனி முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்.

## தொழில் பேட்டைகள்

பரவலான முறையில் தொழில்களை ஏற்படுத்துவதே சென்ற 15 ஆண்டுகளாக மாநில அரசாங்கத்தின் கொள்கையாக இருந்து வந்திருக்கிறது. வேலை வசதி ஏற்படுத்துவதும் மாநிலம் முழுவதிலும் சம சீரானவளர்ச்சிக்கு வகை செய்வதும்தான், இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள். தொழில் வளர்ச்சிக்கு உரிய சூழ்நிலைகளை உருவாக்கி, உதவிகளையும் அளிக்க தொழில் பேட்டைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு ரெவின்யூ டிவிஷனுக்கும் ஒரு தொழில்பேட்டை இருக்கும் வண்ணம், நான்காம் திட்டத்தில்தொழில்பேட்டை நிறுவும் வேலைகள்தொடர்ந்து மேற்கொள்ளப்படும் தொழிற்சாலைகள் மனைநில வசதி வழங்கும் திட்டம், திருவள்ளூர், கடலூர், ராணிப்பேட்டை, மதுரை, திருச்சிராப்பள்ளி, அரக்கோணம் ஆகிய இடங்களுக்கு விஸ்தரிக்கப்படும். இந்தப் பிரதேசங்களில் ஏற்படும் தொழில் நிறுவனங்களில் அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு வேலைவாய்ப்புத் தர அரசாங்கம் முயலும். ஸ்தல மக்களுக்கு வேலை வசதி பெற்றுக்கொடுக்க, வேலை வசதிப் பயிற்சித் துறை முக்கிய கவனம் செலுத்தும்.

மருத்துவ உதவி, பொதுச்சுகாதாரம், குடிநீர், வீட்டு வசதி முதலிய வேலைத்திட்டங்கள்தான், சாமானிய மக்களுக்கு அன்றாட வாழ்வில் நேர்பட உதவும் திட்டங்கள். இதைக் கருத்தில் கொண்டுதான், மாவட்டத்தலைமை ஆஸ்பத்திரி, வட்டத் தலைமை ஆஸ்பத்திரி, ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றின் அபிவிருத்தி வேலைகளுக்கு நான்காம் திட்டத்தில் முக்கிய இடமளிக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம் பரவலாக மக்களுக்கு மருத்துவ வசதி கிடைக்கும். கண், காது நோய்களுக்கு இலவச சிகிச்சை அளிக்கவும், காது மந்தமானவர்களுக்கு காது கேட்கும் கருவி, பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கு மூக்குக் கண்ணாடி ஆகியவைகளைச் சலுகை விலையில் அளிக்கவும், அங்கஹீனமடைந்தவர்களுக்குச் செயற்கை உறுப்புகள் வழங்கவும் அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

## ஆயுள் வளர்ச்சி

சக்தி வாய்ந்த புது மருந்துகளின் விளைவாகவும் மலேரியா போன்ற நோய்களை ஒழிப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் காரணமாகவும் மக்களின் ஆயுட்காலம் கணிசமான அளவு அதிகரித்திருக்கிறது.இதன் காரணமாக, பராமரிக்கப்பட வேண்டிய முதியோர்கள் தொகையும் அதிகரித்துள்ளது. ஆதரவற்ற முதியவர்களுக்கு பென்ஷன் வழங்கும் திட்டத்தை அரசாங்கம் ஏற்கெனவே ஏற்று அமுல் நடத்தி வருகிறது. இத்திட்டத்துக்கு உதவியாக, முதியோர் பராமரிப்புக்கான தனி இல்லங்கள் அமைக்கவும் அங்கே அவர்கள் லகுவான தொழில்கள் செய்து, பொழுதைப் பயனுள்ள வழியில் கழிக்கவும் வகை செய்யப் படும்.

பெண்கள் முன்னேற்றத்துக்காகவும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அலுவலகங்களிலும் தொழில் நிறுவனங்களிலும் படித்த பெண்கள் பெருமளவில் வேலை

### பதினைந்தாண்டுகளில் தமிழகத்தில்

## கால்நடை வளர்ச்சி

| | 1951 | 1961 | 1966 |
|---|---|---|---|
| தீவிரக் கால்நடை அபிவிருத்தித் திட்டம் | .. | .. | 3 |
| கேந்திரக் கிராம நிலையங்கள் .. | .. | 39 | 78 |
| செயற்கைமுறை கருத்தரிப்பு நிலையங்கள். | 2 | 44 | 29 (11 நிலையங்கள் கேந்திரக் கிராம நிலையங்களாக மாற்றப்பட்டன) |
| கோழி வளர்ப்பு விஸ்தரிப்பு நிலையங்கள் | 28 | 67 | |

க்கு வருவதின் காரணமாக, தாய்மார்கள் பணியில் ஈடுபட்டிருக்கும் நேரத்தில், குழந்தைகளைக் கவனித்துக் கொள்வதற்கான குழந்தை விளையாட்டு நிலையங்களை ஏற்படுத்த வேண்டியுள்ளது. நான்காம் திட்டத்தில் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதற்கென தனிப் பயிற்சி பெற்ற பெண்களின் பொறுப்பில் இந்தக் குழந்தை நிலையங்கள் இருக்கும்.

## வீட்டு வசதி

ஆலைத் தொழிலாளர்கள், கைத்தறி நெசவாளர்கள், குறைந்த வருமானக்காரர்கள், போலீசார் ஆகியோருக்கு வீட்டு வசதி அளிப்பதற்கான திட்டங்கள் சென்ற பத்து ஆண்டுகளில் தீவிரமான முறையில் செயலாக்கப்பட்டன. அடுத்த ஐந்தாண்டுகளில் இத் திட்ட வேலைகள் தொடர்ந்து தீவிரமாக அமுலாக்கப்படும். வீட்டு வசதித் திட்டங்கள், மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றைப் பூர்த்தி செய்கின்றன என்பதோடு, கொத்தர்கள், பிட்டர்கள், தச்சர்கள் முதலிய தொழில் வினைஞர்களுக்கும் தொழில் நுட்பப் பயிற்சி இல்லாத பலருக்கும் வேலை வசதி அளிக்கின்றன. வீடு கட்டுவதில் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக, நான்காம் திட்டத்தில் தனி பயிற்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

நாடு சுதந்திரம் பெற்ற நாளிலிருந்தே கிராமப்புறங்களில் ஹரிஜனங்களுக்காக மனை நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு ஒதுக்கப்பட்டு வருகின்றன. இதுவரை ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மனைக் கட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. சொந்த மனைநில வசதி இல்லாத ஏழை மக்கள் எல்லோருக்கும் பஞ்சாயத்துப் பிரதேசங்களில் மனை நில வசதி ஏற்படுத்த நான்காம் திட்டத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதே ரீதியில் நகரப் புறங்களிலும், எல்லா வசதிகளுடனும் கூடிய மனைக் கட்டுகளை அபிவிருத்தி செய்ய, மாநில வீட்டு வசதி போர்டு நடவடிக்கை எடுக்கும்.

## சமூக நீதி

குறைந்த வருமானப் பிரிவினருக்கும், குறைந்த மாதச் சம்பளக்காரர்களுக்கும் சமூகப் பாதுகாப்பு அளிக்கும் நடவடிக்கைகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மாநில அரசாங்கம் தனது அலுவலர்களுக்காக தாராள பென்ஷன் திட்டத்தையும், குடும்ப பென்ஷன் திட்டத்தையும் அமுலாக்கி வருகின்றது. உதவி பெறும் பள்ளி ஆசிரியர்கள் உள்பட, ஓய்வுபெறும் எல்லா அலுவலர்களுக்கும் குறைந்த பட்ச பென்ஷன் உத்தரவாதமாகியிருக்கிறது. அகால மரணமடைந்துவிடும் அரசாங்க ஊழியர்கள் விஷயத்தில், சாதாரண குடும்ப பென்ஷன் திட்டத்தில் கிடைப்பதுபோல் இரண்டு மடங்கு தொகை கிடைக்கும். அதாவது, அந்த விதவைகள் ,முதல் 7 ஆண்டுகளில், கடைசியாகப் பெற்ற மாதச் சம்பளத்தில் சரிபாதி தொகை பென்ஷனாகப் பெறுவார்கள். தனியார் தொழில் நிறுவனங்கள், தங்கள் பணியாளர்களுக்காக இதே வசதிகளைத் தர அரசாங்கம் தூண்டும்.

இவ்வாறு பொருளாதார முன்னேற்றம், சமூக நீதி இரண்டுக்கும் உத்தரவாதம் செய்வதுதான், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் சாரம்.

## தமிழகத்தில் 99 சதவிகித கிராமங்களுக்கு அன்றாட தபால் வசதி

தமிழ் நாட்டிலும் புதுச்சேரியிலும் உள்ள கிராமங்களில், 98 சத விகிதம் கிராமங்களில் இப்போது தினமும் தபால் பட்டுவாடா செய்யப்படுகிறது. சென்னை தபால்-தந்தி வட்டத்தில் புதிதாக கிளைத் தபால் நிலையங்களும் துணைத்தபால் நிலையங்களும் திறக்கப்பட்டிருப்பதால், இது சாத்தியமாகியிருக்கிறது.

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 1802 கிளைத்தபால் அலுவலகங்களும், 170 துணைத் தபால் அலுவலகங்களும் திறக்கப்பட்டன. இன்று சென்னை மாவட்டத்தில் (Madras circle) மொத்தம் 7,101 தபால் அலுவலகங்கள் இருக்கின்றன. அதாவது, 4,792 பேருக்கு ஒன்று அல்லது 18½ சதுர கிலோமீட்டருக்கு ஒன்று என்ற கணக்கில், தபால் நிலையங்கள் இயங்குகின்றன,

மூன்றுவது திட்ட காலத்தில் கிராமப்பகுதிகளில் 3,937 தபால் பெட்டிகள் பொருத்தப்பட்டன. இவற்றையும் சேர்த்து, இந்த வட்டத்தில், தபால் பெட்டிகளின் எண்ணிக்கை 26,578 ஆக உயர்ந்தது. இதன்படி, சராசரியாக 5 சதுர கிலோமீட்டருக்கு ஒரு தபால் பெட்டி இருக்கிறது.

கிராமங்களில் 1,782 கிளைத் தபால் அலுவலகங்களில் பட்டுவாடா சிப்பந்திகள் நியமிக்கப்பட்டார்கள். அதற்கு முன்பு அப்பகுதிகளில் போஸ்ட் மாஸ்டர்களே தபால் பட்டுவாடா செய்து வந்தார்கள்.

சிறுகதை

# அடித்தளம்

(திரு சோம. மகாதேவன்)

இடுப்பிலே இரண்டு வயது குழந்தையை வைத்துக் கொண்டு வாசலுக்கும் உள்ளுக்குமாகத் திரும்பிக் கொண்டிருந்தாள் பார்வதி.

விடிந்ததும் விடியாததுமாக தோட்டத்திற்கு சென்றிருந்த மகனைக் காணவில்லை. பாட்டி ஊர் சுற்றித் திரும்புவதற்குள் அவன் வந்துவிடமாட்டானா என்ற துடிப்பு அவளுக்கு. மகனையும் அழைத்துக் கொண்டு சுப்பையா தோட்டத்திற்குப் போகும் போதே அவள் தடுக்கத்தான் செய்தாள்.

அவருக்குத் தோட்டத்து வேலைதான் பெரிது. இங்கே பாட்டியிடம் சிக்கித் தவிப்பது அவருக்கு என்ன தெரியும் ?

பார்வதி குழந்தையோடு திண்ணையிலேயே உட்கார்ந்து விட்டாள். அடிக்கடி தெருவையும் திரும்பிப் பார்த்துக் கொண்டாள்.

பாட்டி வந்ததும் முதல் கேள்வி அதுவாகத்தான் இருக்கும். எதிரே நின்று வாய் திறக்க முடியுமா? இன்னும் எவ்வளவு காலம் தான் பேசித் தீர்க்கப் போகுதோ.

பாட்டி என்பது பார்வதிக்கு அத்தையை ஆனால் பாட்டியிடம் அவளுக்கு அத்தனை பயபக்தி.

வந்து நிற்கும்போது என்ன பதிலைச் சொல்லுவது. பயலை இன்னும் காணலையே.... என்பதை எண்ணி அவளது நெஞ்சு பதைத்தது. திரும்பியபோது தெரு முனையில் பாட்டிதான் வந்து கொண்டிருந்தாள்.

பார்வதி 'பொசுக்' கென்று எழுந்து வீட்டிற்குள் நுழைந்து விட்டாள்.

* * *

நாச்சியா பாட்டியைப் பற்றி அந்த வட்டாரத்திற்கே தெரிந்திருக்கும் போது, அந்தக் கிராமத்தில் தெரியாதவர்கள் இருக்க முடியுமா ? குறிப்பாக பள்ளி வயது குழந்தைகளுக்குப் பாட்டியை நன்றாகத் தெரியும். "பள்ளிக்கூட நேரங்களில் பாட்டியின் கண்களில் பட்டு விட்டால், அப்புறம் பள்ளிக்கு போகாமல் தப்பவே முடியாது" என்பது அவர்களுக்குத் தலைகீழ் பாடம்.

காலையில் ஒரு நடை அந்தக் கிராமத்திலுள்ள தெருக்கள் அத்தனையுமா சுற்றி வந்து விடுவது பாட்டியின் நித்தியக் கடமைகளில் முக்கியமானதாகும். நேரத்தில், பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பி வைக்காவிட்டால், பெற்றோர்களும் பாட்டியின் கோபத்திலிருந்து தப்பிவிட முடியாது.

"குழந்தைகளைப் படிக்க வைக்கிறதிலே பெத்தவங்களுக்குத்தான் அக்கறை இருக்கணும். இன்னிக்கி வளையாமத் திரியிற பிள்ளைக—நாளைக்கி படியாத முட்டாளா நிக்கிற பாவத்தையும் நீங்கதான் சுமக்கணும்" என்று பாட்டி ஆரம்பித்துவிட்டால் அது சுலபத்தில் ஓயாது.

பாட்டியின் சலியாத முயற்சிதான், திண்ணைப் பள்ளியாக இருந்தது, ஆரம்பப்பள்ளியாகி, இன்று நடுத்தர பள்ளியாக உயர்ந்து நிற்கிறது.

பள்ளிக்கூடத்திலே பாட்டியின் தலை அடிக்கடி தெரியும். அந்த நேரத்திலே ஆசிரியர்கள் கூட்டமாகக் நின்று பேசிக்கொண்டிருந்தாலும், பாட்டியைக் கண்டதும், அவரவர்கள் ஆசனங்களுக்குப் போய் விடுவார்கள்.

'பிள்ளைகள் நாலு எழுத்துப் படிச்சுக்கணும்ன்னு தான் உங்களை நம்பி இங்கே அனுப்பி வைக்கிறாங்க' என்று பாட்டி ஆரம்பிக்கும்போது எதிரே நின்று பேசிவிட முடியுமா ?

* * *

பாட்டிக்கு இன்று அலுப்பு அதிகம். முழங்கால்களில் கையை ஊன்றிப் படியேறி திண்ணையில் உட்கார்ந்து வீட்டின் உள்பக்கமாகத் திரும்பி 'பார்வதி' என்று குரல் கொடுத்தாள்.

"என்ன பாட்டி" என்று கேட்டுக்கொண்டே மெதுவாகத் தலைவாசலுக்கு வந்தாள் பார்வதி.

"சின்னபய பள்ளிக்கூடத்துக்குப் போயிட்டானா"

பார்வதிக்குத் தொண்டை அடைத்துக் கொண்டது. எச்சிலை விழுங்கிக் கொண்டாள்.

"பள்ளிக்கூடம் போகலே—அவருகூடத் தோட்டத்துக்குப் போயிருக்கான்" என்றாள்.

பாட்டிக்கு கோபம் வரத்தானே செய்யும்.

"இதை நான் எங்கே போய் சொல்றது. நான் தெருவெல்லாம் சுத்தி பிள்ளைகளை பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி வச்சிட்டு வாரேன். நம்ம வீட்டுலே படிக்கிற பையனைத் தோட்டத்துக்கு அனுப்பிப் போட்டு நிக்கிறே"

"நான் என்ன செய்யட்டும். அவருதான் அவனையும் இழுத்துக்கிட்டுப் போறாரு" என்று சொல்லிவிட்டு தலையை உள்ளுக்குள் இழுத்துக்கொண்டாள் பார்வதி.

"ஊருக்கு உபதேசம் செய்துகிட்டிருக்கேன். இது தான் போய்ச் சேர்ற இடத்துக்குப் புண்ணியமா படுது. என் பேரனே பள்ளிக்கூடம் போகலேன்னா—நாளைக்கி யாராவது என் சொல்லைக் கேட்பாங்களா?"

இடுப்பிலிருந்த குழந்தை சிணுங்கவே அந்த மட்டுக்கும் வீட்டிற்குள்ளே திரும்பினாள் பார்வதி.

திண்ணையிலிருந்து பாட்டியின் குரல் கேட்டுக் கொண்டிருந்தது.

"விவசாயத்தை எப்பவும் பாத்துக்கலாம். படிக்க வேண்டிய வயசிலேதான் அதிலேயும் நுழையணுமா? நாலு எழுத்து எழுதப் படிக்கத் தெரிஞ்சாத்தான் நல்லது கெட்டதைப் புரிஞ்சுக்க முடியும்."

பாட்டி பேசிக்கொண்டே இருந்தாள். சற்று பொறுத்து பார்வதி மீண்டும் தலைவாசலுக்கு வந்தாள்.

"பழையது எடுத்து வைக்கட்டுமா" என்று பயந்து கொண்டே கேட்டாள்.

"எனக்கு பசியடங்கிப் போச்சம்மா. இப்படியும் படிக்கப்போற பிள்ளை கையிலே மண்வெட்டியைக் கொடுத்து அனுப்புவியா?" என்று பாட்டி மறுபடியும் ஆரம்பித்தாள்.

பாதையை ஏறிட்டுப் பார்த்த பார்வதி, "அதோ சுந்தரம் வந்திட்டான்" என்றாள் விடுதலை கிடைத்த உணர்ச்சியுடன்.

பாட்டி திண்ணையிலே உட்கார்ந்திருப்பதைக் கண்டு தயங்கித் தயங்கிப் பக்கத்தில் வந்தான் சுந்தரம்.

"பள்ளிக்கூடத்தை மறந்திட்டு தோட்டத்துக்குப் போயிட்டியா? படிச்சுக்கிறதிலே அக்கறை இருக்கணும். இது இல்லையின்னா அங்கே போனாலும் ஒன்னும் புத்திக்கி எட்டாது."

"நானாடா உன்னைப் போகச் சொன்னேன்" என்று சொல்லிக்கொண்டே முன்னுக்கு வந்தாள் பார்வதி.

"அப்பாதான் கூட்டிகிட்டுப் போனாரு . . . இன்னைக்கி பள்ளிக்கூடத்துக்குப் போகவேணாம். மிளகா நாத்துக்கு தண்ணி விலகணும்னு சொன்னாரு. சின்ன மண்வெட்டியை எடுத்துகிட்டு சோறு வாங்கியாறத்தான் என்னை அனுப்பி வச்சாரு பாட்டி" என்று மென்று விழுங்கிக்கொண்டே சொல்லி முடித்தான் பையன்.

> 'பயிற்றிப் பலகல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திடவேணும்'. இது பாரதியார் வாக்கு. பாரை உயர்த்துகின்ற திருப்பணியிலே, நம் ஒவ்வொருவருக்குமே பங்கு உண்டு. 'எல்லாம் தானாகவே நடக்கும்' என்று இருந்து விட்டால் போதாது. அறிவை வளர்க்கும் பணி, ஆண்டவனுக்குச் செய்யும் பணிக்கு ஒப்பானது. அந்த உணர்வு மலர்ந்துவிட்டால், இக்கதையில் வரும் பாட்டி போல், கிராமத்திற்கு ஒருவர் என்ற நிலை தோன்றி விட்டால், பின்பு சமுதாயத்தின் அடித்தளமான கல்வி ஓங்கிப் பரவுவதற்கு கேட்கவா வேண்டும்?

"உங்கப்பனுக்குப் புத்தி கெட்டுப் போச்சு. தண்ணி விலக நீதான் போகணுமா? வேறே ஆளு கிடைக்கலையா?" என்று எரிச்சலோடு கேட்டாள் பாட்டி.

"கிடைக்கலையாம்."

பாட்டி சீறி விழுந்தாள்.

"போடா . . . . சீக்கிரமா பள்ளிக்கூடத்துக்குப் போ."

பேரன் இரண்டே எட்டில் வீட்டிற்குள் நுழைந்தான். அவனோடு திரும்பிய பார்வதி, பரபரப்போடு மகனுக்குத் தட்டில் பழையதைப் போட்டு வைத்துவிட்டு, மீண்டும் தலைவாசலுக்கு வந்தாள்.

"அந்த நாளையிலே . . . . சுப்பையா கட்டுச்சோறு கட்டிக்கிட்டு . . . . தினமும் எட்டு மைலுக்கு மேலே நடந்துதான் . . . . இந்த அளவுக்காவது படிச்சான். இப்பத்தான், பள்ளிக்கூடம் இல்லாத ஊரே இல்லையின்னு இருக்கிறப்போ நாம்தான் கவனத்தோட படிச்சுக்கணும்" என்று பார்வதியின் தலையைக் கண்டதும் மீண்டும் ஆரம்பித்தாள் பாட்டி.

"நான் தோட்டத்துக்குப் போயிட்டு வரட்டுமா?" என்று கேட்டாள் பார்வதி.

பாட்டி தலை நிமிர்ந்து பார்த்தாள்.

"தூக்குப் போணியிலே அவனுக்கு சோறு போட்டுக் கொண்டா. தோட்டத்திலே வேலையும் இருக்காமில்ல. குழந்தையை வச்சுக்கிட்டு நீ போய் என்ன செய்யப்போறே? நானே போறேன்" என்றாள் பாட்டி.

பார்வதி ஒன்றும் பேசாமல் வீட்டிற்குள் திரும்பினாள்.

பையன் அவசர அவசரமாகப் பையைத் தோளிலே மாட்டிக்கொண்டு பள்ளிக்கூடத்துக்கு ஓடினான்.

மருமகள் திண்ணையில் கொண்டுவந்து வைத்த தூக்குப் போணியை எடுத்துக்கொண்டு மண்வெட்டியை தோளிலே சாய்த்தவாறு, மெதுவாகப் படியிறங்கி தோட்டத்தை நோக்கி நடந்தாள் பாட்டி.

திண்ணையிலேயே நின்று பாட்டி நடந்து செல்வதையே பார்த்துக்கொண்டிருந்த பார்வதியின் கண்கள் கலங்கின.

பாட்டி புண்ணியம் தேடுது...

# குர்சேங்காவின் வளர்ச்சி

மத்தியப் பிரதேச ராய்ப்பூர் மாவட்டத்திலுள்ள ' குர்சேங்கா ' என்ற சிறிய கிராமத்தில், தீவிர சாகுபடித் திட்டம் செயல் படுத்தப்படுகிறது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இத்திட்டம் நிறை வேற்றப்பட்டு வருவது போலவே, இங்கும் அது செயல்பட்டு வந்தாலும், மற்ற பிரதேசங்களுக்கும் குர்சேங்கா விற்கும் சில வேறுபாடுகள் இருக் கின்றன. குர்சேங்கா கிராமம் குருத் வட்டாரத்திலிருக்கிறது. ராய்ப்பூரி லிருந்து மூன்று கிலோ மீட்டர் தூரத்திலிருக்கிறது.

இக் கிராமத்தில் 86 குடும்பங்களே இருக்கின்றன. அதில் 84 குடும்பங்கள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவை ; எஞ்சிய இரு குடும்பம் மட்டுமே விவசாயக் கூலி வேலை செய்து வருகிறது. 500 பேர்களே வசிக்கும் குர்சேங்காவில் 730 ஏக்கர் நிலமிருக் கிறது. இந்தியாவின் ஏனைய பகுதிகளைப் போலவே, இங்கும் விவசாயம் பிற்போக்கான நிலையிலேயே இருக் கிறது ; அதன் காரணமாக கிராம வாசிகளின் வாழ்க்கைத் தரமும் உயர்ந்தபாடில்லை. ஒரு சில புஞ்செய் தானியங்களைத்தான் அவர்கள் பயிர் செய்து வந்தார்கள். ஒரு சிறு பகுதியில் மட்டுமே நெல் சாகுபடி செய்யப்பட்டது. இது மட்டுமல்ல

### வட்டியைக்கூட செலுத்த முடியவில்லை

கிராமவாசிகள் அனைவருமே கடன் தொல்லையால் அவதிக்காளாகி மீளாத் துயரத்தில் ஆழ்ந்திருந்தனர். அரை வயிறு சோற்றுக்கும், உடைக்கும்கூட அவர்களால் பொருளீட்ட முடிய வில்லை. அவர்கள் வாங்கிய கடனுக்கு 48 சதவீதம் வரை வட்டி செலுத் தினர். பெரும்பாலான சந்தர்ப்பங் களில் வட்டியைக்கூட அவர்களால் கொடுக்கமுடியவில்லை. கடன் கொடுத் தவர்களுக்காகவே அவர்கள் உயிர் வாழ்ந்தார்கள் என்றால் அதுதான் நன்கு பொருந்தும்.

அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட தீவிர விவசாயத் திட்டமும், பிற நிவாரண நடவடிக்கைகளும் ஒன்று சேர்ந்து, அவர்களின் வாழ்க்கையை படிப்படியாக உயர்த்தியது.

### செயலில் ஆர்வம்

தீவிர விவசாயத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட மொத்த நிலப் பரப்பு 530 ஏக்கர்களாகும். இதில் 417 ஏக்கர்களில் நெல் சாகுபடி செய்யப்பட்டது ; இந்த 417 ஏக்கர் நிலத்திற்கும் போதிய நீர்ப்பாசன வசதி செய்து தரப்பட்டது. 356 ஏக்கர் நிலப்பரப்பில் திருந்திய தீவிர விவசாய முறை கையாளப்பட்டது.

" தைன்ச்சா " பசுந்தாள் உரமாக பயன்படுத்தப்பட்டது. 90 சத வீத விவசாயிகள், விதையில் ' அக்ரசான் ' கலந்தனர். பயிர்ப் பாது காப்பு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்பட்டது. சிபாரிசு செய்யப்பட்ட முறைப்படி வயல்களுக்கு உரமிடப் பட்டது.

திட்ட காலத்திற்கு முன்பெல்லாம், நெற்பயிர் அறுவடைக்குப் பின் கோதுமை விளைப்பதில்லை. ஆனால் 1964-65-ம் ஆண்டில் 25 ஏக்கர் நிலத்தில் கோதுமையையும் விதைக்கப்பட்டது. பழங்கள், காய் கறிகள் கூட 20 ஏக்கர்களில் பயிரிடப் பட்டன.

### உயரும் வருவாய்

தீவிர விவசாயத் திட்டத்தின் காரணமாக 65 சதவீதம் கூடுதல் விளைச்சல் கிடைத்தது. ஒரு விவசாயக் குடும்பத்திற்கு ஆண்டு வருவாய் ரூ. 1,825-க்கு உயர்ந்தது. மேலும் வருமானத்தை அதிகரித்துக் கொள்ள தோட்டக் கலை, பால், தயிர், வெண்ணெய் உற்பத்தி ஆகிய வற்றிலும் விவசாயிகள் ஈடுபட்டனர். பால், நெய், கால்நடைகள் தீவனம் ஆகியவற்றை விற்பதால், ஒரு குடும்பத் திற்கு ஆண்டொன்றிற்கு ரூ. 1,850 கிடைத்தது.

விவசாயக் கூலிவேலை செய்து வந்த இரு குடும்பங்களின் செல்வ நிலையும் படிப்படியாக உயர்ந் துள்ளது. நிலையான வருவாயை அடைவதற்காக, அவ்விரு குடும்பங் களும் விவசாய வேலைகளைத் தவிர, வேறு அலுவல்களும் செய்கின்றன.

ஒருவர் கிராமத்தின் ஆடு மாடுகளை மேய்க்கிறார். இன்னொருவர் கிராமத்தின் நீர்நிலைகளை கண்காணித்து வருகிறார். இந்நீர் நிலைகளில்தான், மீன்குஞ்சுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இவ்விரு குடும்பத்தை சார்ந்தவர்களும் விவசாய வேலைகளில் ஈடுபடுகின்றனர். இவற்றால் இக் குடும்பங்களின் சராசரி வருமானம் ரூ. 2,180 ஆகும்.

### எங்கும் மகிழ்ச்சி

தீவிர விவசாயத் திட்டம் அமுல் செய்யப்படுவதன் காரணமாக, கிராமத்தின் பொருளாதார நிலை சீர் பெற்று வருகிறது. இப்போதெல்லாம் கிராமவாசிகள், வட்டிக் கடைக்காரர்களிடம் சென்று கடன் வாங்குவதில்லை. ஒரு சேவைக் கூட்டுறவுச் சங்கமும் துவக்கப்பட்டுள்ளது. இக்கூட்டுறவுச் சங்கத்தின் வாயிலாக ரசாயன உரம், கிருமி நாசினிகள், விதைகள் முதலானவை வினியோகிக்கப் படுகின்றன.

குர்சேங்காவில் பஞ்சாயத்துக் கட்டிடம் இருக்கிறது. இக் கட்டிடத்திலேயே மனமகிழ் மன்றமும் செயல்பட்டு வருகிறது. பஞ்சாயத்தில் முக்கியமான மருந்துகள் எல்லாம் வாங்கி வைக்கப்பட்டு தேவையானவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. கிராமத்தையும், நெடுஞ்சாலையையும் இணைத்து, ஒரு இணைப்புச் சாலையை கிராமவாசிகளே அமைத்துள்ளனர்.

மீனளத்தின் மூலம் பஞ்சாயத்திற்கு சுமார் ரூபாய் 2,000 ஆண்டு வருவாயாக கிடைக்கிறது.

பிற்போக்கான பழக்க வழக்கங்களைக் கொண்ட மக்களை எப்படியும் மாற்றி விடலாம் என்பதற்கு குர்சேங்கா கிராமம் ஒரு உதாரணமாகும்.

## எஞ்சியதில் மிதமிஞ்சிய லாபம்

டில்லியிலிருந்து பரீதாபாத் செல்லும் 'கிரேண்ட் டிரங்க்' சாலையில் 12-வது மைலிலிருந்து பிரியும் ஒரு கிளைச்சாலை வழியாக 2 மைல் தூரம் சென்றால் அங்கே 'தில்பாட்' என்ற ஒரு சிறிய கிராமத்தைக் காணலாம். தில்பாட்டிலிருந்து சுமார் 2 பர்லாங் தூரத்தில் பனை மரங்கள் அடர்ந்த தோப்பு ஒன்றிருக்கிறது.

சிறிது காலத்திற்கு முன்பு இப் பகுதியில் சுமார் 20,000 பனை மரங்கள் இருந்தன. சுதந்திரம் அடைந்த பிறகு, பஞ்சாப் அரசாங்கம், இப்பகுதியையெல்லாம் சீராக்கி, விவசாயத்திற்குத் தகுதியுடைய நிலமாக்க முனைந்தது. அதற்காக இம்மரங்களையெல்லாம் அழிக்க முற்பட்டது. ஆனால் இந்திய அரசாங்க விவசாய அமைச்சகம் இதில் தலையிட்டு சுமார் 5,00C பனை மரங்களடங்கிய இந்த பனை தோப்பை அழிவினின்றும் காப்பாற்றியது.

பழமையான, புகழ் வாய்ந்த ஒரு கோயிலுக்குச் சொந்தமானவை இந்த பனை மரங்களெல்லாம். இப் பனை மரங்களையெல்லாம் பராமரித்து போற்றினால் அவற்றால் வருவாய் பெருகும் என்பதை எவருமே யோசியாது, அம்மரங்களையும், தோப்பையும் பல ஆண்டுகளாக அப்படியே விட்டு விட்டனர்.

### வேலை ஆரம்பம்

இந்திய அரசாங்கம் 1948–49-ம் ஆண்டில் இப் பனை மரங்களைப் பயன்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டது. ஆனால் அவை வெற்றி பெறவில்லை. பஞ்சாப் மாநில கதர், கிராமத் தொழில் போர்டு, ஒரு பதனீர், பனை வெல்ல தயாரிப்பு நிலையத்தை 1963-ம் ஆண்டு இங்கு ஆரம்பித்தது. கோயில் அர்ச்சகரை அணுகி, ஆண்டு குத்தகையாக, மரம் ஒன்றுக்கு 75 பைசா தருவதாக போர்டு அதிகாரிகள் கூறிய போது, அர்ச்சகர் வியப்பால் ஆச்சரியப்பட்டுப்போனார். குத்தகைத்தொகையைக்கொண்டு அருகிலுள்ள பாழ

டைந்த குளத்தை புதுப்பித்துத் தர வேண்டும் என்றும், அத்தோப்பைச் சார்ந்துள்ள 35 ஏக்கர்களிலும் பனை மரம் பயிரிட வேண்டும் என்றும் அர்ச்சகர் கேட்டுக்கொண்டு தன்னுடைய ஆசீர்வாதத்தையும் வழங்கினர்.

பதனீர் இறக்கும் வேலை, நான்கு பேர்களுடன் ஆரம்பமாயிற்று. தில்பாட் கிராமத்தைச் சுற்றியுள்ள மக்களுக்கு பதநீர் என்றாலே என்னவென்று தெரியாது. எனவே இறக்கப்பட்ட பதநீரெல்லாம் பரிதாபாத்துக்கும், டெல்லிக்கும் கொண்டு செல்லப்பட்டு, அங்கே குளிர்பானமாக விற்கப்பட்டது. சீக்கிரமே பதநீருக்கு கிராக்கியேற்பட்டு விட்டது. அதனால் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய அவசியமேற்பட்டு விட்டது. எனவே அடுத்த ஆண்டு 20 பேர்களுடன் பதநீர் இறக்கும் வேலை துவங்கிற்று. பஞ்சாபில் பதநீர் இறக்கும் தொழில் பிரபலமாக இல்லாததனால், வெளிமாநிலங்களிலிருந்து தொழிலாளர்களைக் கொண்டு வர வேண்டியதாயிற்று. இம்முறையில் 6-7 தொழிலாளர்கள் இங்கு கொண்டு வரப்பட்டனர். இந்த 20 தொழிலாளர்களும் நாளொன்றுக்கு 1,000 லிட்டர் பதநீர் இறக்கினர். மழை காலத்தில் 1,000 லிட்டர் பதநீரை குளிர்பானமாக விற்கமுடியவில்லை. பதநீரை 6 மணி நேரங்களுக்கு மேல் வைத்திருக்கவும் முடியாது. எனவே பனைவெல்ல தயாரிப்பு பிரிவு ஒன்றுஅங்கே துவக்கப்பட்டது. 1963–64ல் உடன் முடிந்தநிதியாண்டில் ரூ. 24,000 மதிப்புள்ள பதநீர்,பனைவெல்லம் தயார் செய்யப்பட்டு, விற்பனை செய்யப்பட்டன.

## ஆர்வம் பிறந்தது

தோப்பின் நடுவில் பனை வெல்ல உற்பத்திப் பிரிவு ஏற்படுத்தப்பட்டபோது, கிராமவாசிகள் அதில் எவ்வித உற்சாகமும் காட்டவில்லை. ஏனெனில் இதற்கு முன் அவ்வாறு துவக்கப்பட்ட பனை வெல்லப் பிரிவுகளெல்லாம் தோல்வியையே தழுவின.

ஆனால் ஒரு பதநீர் இறக்குபவர் மாதம் ஒன்றுக்கு ரூ. 100 முதல் ரூ. 125 வரை சம்பாதிக்கலாம் என்பதை நேரில் கண்டறிந்த கிராமவாசிகளில் பெரும்பாலானோர் பதநீர் இறக்கும் தொழிலில் பயிற்சிபெற ஆர்வம்காட்டினர். அதற்கேற்ப மாநில கதர், கிராமத்தொழில்கள் போர்டும், பயிற்சிக்கு ஏற்பாடு செய்து, தேவையான பயிற்சியளித்தது. பயிற்சி பெற்றவர்களில் சிலர் தில்பாட் பனை வெல்லப் பிரிவில் வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மற்ற சிலர் 'சம்கார் சாப்ஹிப்' பனை வெல்ல நிலையத்தில் வேலை செய்கின்றனர். இந்நிலையம் தில்பாட்டிலிருந்து 200 மைல் தூரத்தில் இருக்கிறது.

## நிலையத்தின் வளர்ச்சி

இப்போது தில்பாட் நிலையம் கிராமத்தின் ஒரு பகுதியாகவே மாறி விட்டது. கிராம வாசிகள், தாங்களாகவே முன் வந்து, நிலங்கள் அளித்து தற்காலிக வசதிகள் ஏற்படுத்தித் தந்துள்ளனர். பனை வெல்ல தயாரிப்பு, தோப்பின் நடுவிலேயே நடைபெற்று வந்தாலும், அதனுடைய அலுவலகம், கிடங்கு ஆகியவை ஒரு புதிய இடத்தில் அமைக்கப்பட்டுள்ளன. கோடைக் காலத்தில பதநீருக்கு ஏற்படவிருக்கும் மகத்தான கிராக்கியை சமாளிப்பதற்காக, பாட்டில்களில் பதநீரை நிரப்பும் இயந்திரம் ஒன்று இப்போது நிறுவப்பட்டுள்ளது.

## பனைவெல்ல உற்பத்தி

இவ்வித முயற்சிகளின் காரணமாக பதநீர், பனை வெல்ல உற்பத்தியும் பன்மடங்காக பெருகியுள்ளது. 1963–64-ல் இறக்கப்பட்ட பதநீர் 51,066 லிட்டர்களே. ஆனால் 1964–65-ம் ஆண்டில் இது 80,230 லிட்டர்களுக்கு உயர்ந்து விட்டது.

பனை ஓலைகளிலிருந்து பற்பல பொருட்கள் செய்ய பெண்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி முற்றிலும் இலவசமே. இதுவரை 68 பெண்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

## சிறந்ததொரு முயற்சி

மாநில போர்டிடம் குத்தகைக்கு தரப்பட்டுள்ள 35 ஏக்கர் நிலத்தில் பனை மரங்களை நடுவதற்கு ஏற்பாடாகி வருகிறது. விருத்தி செய்யப்பட்ட விதைகளைக் கொண்டு, சமமான இடைவெளிகளில், நேராகப் பயிர் செய்வதற்கு ஏற்பாடாகி வருகிறது. இதனால் சுலபமாக பதனீர் இறக்க முடியும். மேலும் இடைவெளிகளில் காய்கறிகளைப் பயிரிடுவதால், வருமானமும் அதிகரிக்கும். இது பஞ்சாபிற்கு மட்டுமல்ல, நாடு முழுவதற்குமே பயனைத்தரக்கூடிய நல்லதொரு முயற்சியாகும்.

---

## ராங்கிபூர் இளைஞர் மன்றம்

[12-ம் பக்கத் தொடர்ச்சி.]

பட்டு வருகின்றன. மன்ற உறுப்பினர்கள் நாடகங்கள், பல்வகை நிகழ்ச்சிகளையும் இங்கேயே நடத்தி, கேளிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இவ்வித நிகழ்ச்சி மாதம் இருமுறை நடக்கிறது.

மனமகிழ் மன்ற கட்டிடத்திலேயே, ஒரு நூலகமும் இருக்கிறது. 500 புத்தகங்கள் கொண்ட இந்நூலகத்திற்கு, ஒரியா மொழியில் முக்கியமான நான்கு மாதப் பத்திரிகைகள் தருவிக்கப்படுகின்றன. உறுப்பினர்களில் 67 பேர்கள் கற்றுணர்ந்தவர்களாதலால், நூலகம் நன்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## கிராமத் தொண்டர் படை

அனேகமாக எல்லா உறுப்பினர்களுமே சிறு சேமிப்பு முறைவாயிலாக சிறுக, சிறுக சேமித்து வருகின்றனர். 53 உறுப்பினர்கள் கிராமத் தொண்டர் படையிலும் 20 உறுப்பினர்கள் ஊர்க்காவல் படையிலும் சேர்ந்துள்ளனர்.

இவ்வகையான சேவைகளையெல்லாம் காணும்போது, இக்குறுகிய காலத்திலேயே ராங்கிபூர் இளைஞர் மன்றம், சிறந்த பணிகளை செய்துள்ளது என்று திண்ணமாகக் கூறலாம்.

இன்றைய குழந்தைகள், நாளைய குடிமக்கள். அவர்களுடைய வளமான வாழ்வைப் பொறுத்தே, நாட்டின் வருங்காலம் அமைந்திருக்கிறது. அவர்கள் வாழ்வின் நலத்துக்குப் பெரியவர்களாகிய நாம் செய்யவேண்டிய கடமைகள் சில உள்ளன. அவற்றில் முக்கியமானது, குழந்தைகளைப் பாதிக்கும் சில தொத்து நோய்களில் இருந்து, அவர்களுக்குத் தடுப்பு சக்தியை அளிப்பதாகும்.

(1) கக்குவான் இருமல், (2) தொண்டை அடைப்பு நோய், (3) டெட்டனல் எனப்படும் இழுப்பு வாதம் ஆகிய மூன்று நோய்களும் இளம் குழந்தைகளைப் பெரிதும் பாதிக்கிறது. இவைகளைத் தடுக்க, தடுப்பு ஊசி இப்பொழுது எளிதில் கிடைக்கிறது.

# மூன்று நோய்த் தடுப்பு

## 1. கக்குவான் இருமல்

கக்குவான் இருமல் வேகமாகப் பரவுகின்ற தொத்து நோய் என்பது அனைவரும் அறிந்ததே. இந்த நோய்க்கு ஆண்டு தோறும், ஆயிரக்கணக்கான குழந்தைகள் பலியாகின்றனர்.

முதலில் சாதாரண சளி பிடிப்பதைப் போல் தொடங்கும். அடுத்து வரட்சியான இருமல் வரும். இந்த இருமல் தொடர்ந்து இழுப்பு இருமலாக உருவாகிக் குழந்தையைத் திணற வைக்கும். அப்போது முகமும் கண்களும் சிவந்துவிடும். கண்களில் நீர் ததும்பும். மூக்கில் ரத்தம் வரலாம். சில சமயம் கண்களிலும் ரத்தம் வரலாம். உண்ட உணவை ஜீரணித்துக்கொள்ள முடியாமல் கக்கிவிடும். இந்த இருமல் குழந்தையை மிகவும் பலவீனமாக்கிவிடும். குழந்தை 2–3 மாதம் இருமலால் கஷ்டப்பட வேண்டி வரும். பிறகு சுவாசக் குழாய்கள் பெரியதாவதாலும். இதர கிருமிகள் நுழைவதால் நிமோனியா போன்ற மற்ற சுவாச சம்பந்தப் பட்ட நோய்களும் வரலாம்.

## 2. தொண்டை அடைப்பு நோய்

தொண்டை அடைப்பு நோய் ஓர் அபாயகரமான நோய். இந்த வியாதி கண்ட குழந்தைகள் பிழைப்பது அரிது. காற்றின் மூலம் பரவும் இந்த நோய்க் கிருமிகள் தொண்டையில் சென்று வேகமாகப் பெருகுகின்றன. இதனால், சில சமயம், சதை வீங்கி மூச்சுக்குழல் அடைபட்டு விடுகிறது.

குழந்தைக்குக் கடுமையான காய்ச்சல் வரும். ஜுரத்தின் கடுமையால் சில குழந்தைகள் இறந்துவிடும். பின்னர் மூச்சுவிட முடியாமல் குழந்தை திணறும். குழந்தையின் மூச்சுக்குழலில் இந்த நோயால் ஏற்படும் தடை நீக்கப்படும்வரை, மூச்சுக்குழல் வழியில் மூச்சுவிட முடியாது. இதற்காக அவசர ஆப்பரேஷன் செய்தால் தான், குழந்தை பிழைக்க முடியும்.

## 3. இழுப்பு வாதம்

தொண்டை அடைப்பு நோய், கக்குவான் இருமல் ஆகிய நோய்களைப்போல் இழுப்பு வாதம் என்பதும் அபாயகரமான நோய். இந்த நோயினால் பாதிக்கப் பட்ட குழந்தைகள் பெரும்பாலும் பிழைப்பதில்லை.

இந்த நோய்க்கிருமிகள், முக்கியமாக, மண், சாணம், முக்கியமாக குதிரை சாணம் முதலியவற்றில் இருக்கின்றன. புண்கள், காயங்கள் முதலியவற்றின் வழியாக உடலில் செல்லும் இக்கிருமிகள் நமது இரத்தத்தில் விஷத்தை உருவாக்கி, இரத்த ஓட்டத்தில் கலந்துவிடுகின்றன. இந்த விஷம் இழுப்பு வாதத்தை ஏற்படுத்திவிடுகிறது. விபத்துக்களில் காயமடைந்தவருக்கு உடனடியாக இழுப்பு வாத எதிர்ப்பு ஊசி போடுவார்கள்.

காயமோ, புண்ணோ உள்ள குழந்தைகள் மண்ணில் விளையாடும் போதும், காயத்தில் சாணம் முதலிய வற்றைப் பூசிக்கொண்டாலோ, இக்கிருமி உடலில் செல்ல வழி ஏற்படுகிறது. இக்கிருமி உடலில் சென்று சில நாட்களில் இந்த இழுப்பு வாதம் தோன்றலாம்.

குழந்தைகளை, இந்த முப்பெரும் ஆபத்துக்களிலிருந்து பாதுகாக்க வேண்டாமா? அதற்கு ஒரு நல்ல வழி—எளிய வழி—மூன்று நோய்த் தடுப்பு ஊசி போட்டுக் கொள்வதுதான்.

மூன்று நோய்த் தடுப்பு ஊசி

(1) கக்குவான் இருமல், (2) தொண்டை அடைப்பு நோய், (3) இழுப்பு வாதம் ஆகிய மூன்று நோய்களும் குழந்தைகளுக்கு வராமல் தடுக்க, அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் மூன்று நோய்த் தடுப்பு ஊசி (Triple Antigen) போடப்படும். அரசாங்கத்தினால் இவை இலவசமாக கிராமங்களிலேயே போடப்படுகிறது.

இந்த நோய்த் தடுப்பு ஊசி, மாதம் ஒன்று வீதம் தொடர்ந்து போட வேண்டும். ஒரு ஊசிக்கும் மறு ஊசிக்கும் இடையில், ஒரு மாத இடைவெளி இருக்க வேண்டும். இவ்வாறு மூன்று ஊசி போட்டுக்கொண்டால்தான், தடுப்பு ஊசியால் பலன் கிடைக்கும்.

ஓர் ஊசி போட்டுக்கொண்ட பின், ஆரம்ப சுகாதார நிலைய டாக்டர் குறிப்பிடும் தேதியில் அதாவது ஒரு மாதம் கழித்து தவறாமல் வந்து மறு ஊசி போட்டுக் கொள்ள வேண்டும். இதே மாதிரி இன்னொரு மாதம் கழித்து மூன்றாவது ஊசி போட்டுக்கொள்ள வேண்டும். இது மிகவும் முக்கியம். பலர் அவ்வாறு தொடர்ந்து போட்டுக்கொள்ளாததால் மூன்று நோய்த் தடுப்பு மருந்தால் பயனடையாமல் நோய்க்குத் தங்கள் குழந் தையைப் பலியாக்குகின்றனர்.

ஆகவே, இந்த மூன்று நோய்த் தடுப்பு ஊசியை, தொடர்ந்து ஓர் மாத இடைவெளியில் ஒரு ஊசி வீதம் மூன்று ஊசிகளைப் போட்டுக்கொள்வது முக்கியம். ஓர் ஊசி மட்டும் போட்டுக்கொள்வதாலோ, காலம் நீடித்து இரண்டாவது மூன்றாவது முறை ஊசி போட்டுகொள்வ தாலோ பலனில்லை.

ஆரம்ப சுகாதார நிலைய டாக்டரும், அந்தப் பகுதி சுகாதார மேற்பார்வையாளரும், சுகாதாரப் பார்வை யாளரும் இந்த வகையில் கிராம மக்களுக்கு யோசனை கூறவும், உதவி புரியவும் தயாராக உள்ளனர்.

இம்மூன்று நோய்த் தடுப்பு ஊசி போடும் வேலை, தமிழ் நாட்டில் உள்ள எல்லா ஆரம்ப சுகாதார நிலை யங்கள் மூலமாகவும் தொடர்ந்து நிறைவேற்றப்படு கிறது.

நம் குழந்தையின் நல்வாழ்வும், நல்வாழ்வே இந்தத் திட்டத்தின் லட்சியம். அந்த இலட்சியத்தை எய்துவதில், சுகாதாரப் பணியாளர்களுக்கு கிராம மக்கள் ஒத்துழைப்பு அளிப்பது மிகவும் அவசியம்.

# உங்களுக்குத் தெரியுமா

* மக்கள் தொகை அளவில், இன்றைய உலகில், இந்தியா இரண்டாவதாக உள்ளது சீனாதான் உலகி லேயே அதிகமான ஜனப்பெருக்கம் உள்ள நாடு. அந்த நாட்டின் ஜனத்தொகை 70 கோடி. இன்றைய இந்தியாவின் ஜனத்தொகை சுமார் 50 கோடியாகும்.

** 1961-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி, இந்தியாவில் 14 வயது வரை உள்ளவர்கள், மொத்த ஜனத்தொகையில், 40 2 சத விகிதம். 15-லிருந்து 49 வயது வரையில் உள்ளவர்கள் 47·9 சத விகிதம். 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் 11·9 சத விகிதம்.

*** நம் நாட்டின் ஜனத்தொகை ஒவ்வொரு ஆண்டும் சுமார் ஒரு கோடியே 20 இலட்சம் என்ற அளவுக்கு உயர்ந்துகொண்டே வந்துள்ளது!

**** 1891-ல் இந்தியாவின் ஜனத்தொகை 23 கோடியே 36 இலட்சம். 1921-ல் 25 கோடியே 1 இலட்சம். 1951-ல் 36 கோடியே 1 இலட்சமாக இது உயர்ந்தது. அதாவது 30 ஆண்டுகளில் 11 கோடி அதிகமாகியது. 1961-ல் 43 கோடியே 91 இலட்சம். இன்றோ, இது சுமார் 50 கோடிக்கு உயர்ந்துவிட்டது !

***** உலகத்தின் மொத்த நிலப் பரப்பளவில், இந்தியாவின் நிலப் பரப்பளவு 2·4 சத விகிதமாகும். ஆனால் உலக ஜனத்தொகையில், இந்தியாவின் ஜனத் தொகையோ 15 சத விகிதம் !

[சென்னையில் 1967-ம் ஆண்டு ஜனவரி மாதம் 5, 6, 7 தேதிகளில் நடைபெற்ற தமிழகக் கல்லூரி திட்ட மன்றங் களின் மாநில மாநாட்டில், ஜனத்தொகை ஆய்வு பற்றிய நிறுவனத்தின் நெறியாளர் (Director, Indian Institute of Population Studies) Dr. S. சந்திரசேகர் M.P. அவர்கள் சமர்ப்பித்த ஆராய்ச்சிக் கட்டுரையிலிருந்து.]

## கிராம நலம்

சந்தா விவரம்:

ஆண்டு சந்தா 2 ரூபாய்.

ஒரு வருடத்திற்கு குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

**சந்தா அனுப்ப வேண்டிய முகவரி:**

கிராம வளர்ச்சி நெறியாளர்,
செயிண்ட் ஜார்ஜ் கோட்டை,
சென்னை-9.



# பிற மாநிலங்களில்..

ஆந்திரப்பிரதேசத்தின் **கிருஷ்ணா** மாவட்டத்திலுள்ள விவசாயி ஒருவரை அப்பகுதி வாழ் மக்களெல்லோரும் ‘பிரட்டி பீமா’ என்று அழைக்கின்றனர், ‘பிரட்டி பீமா’ என்றால் ‘பருத்தி ராட்க்ஷசர்’ என்று பொருள். ஒரு ஹெக்டேர் நிலத்தில் 4,775 கிலோ பருத்தியை அமோகமாக விளைவித்து புதிய திருப்பத்தை ஏற்படுத்தியவர், இந்த ‘பருத்தி ராட்க்ஷசர்’.

திரு கந்தா சுப்பையா என்று பெயர் கொண்ட இவர், காலுவா பயிரிட்டார். இதனால் அவருக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 1,875 கிலோ பருத்தி கிடைத்தது. அடுத்த ஆண்டு அவர் பருத்தியை தனியாகவே பயிரிட்டார். அதனால் அவருக்கு 2,818 கிலோ கிடைத்தது. அதற்கடுத்த ஆண்டு அவருக்கு 3,278 கிலோ பருத்தி கிடைத்தபோதிலும், 1965-ம் ஆண்டில் தான் அவர் விளைச்சல் உச்ச நிலையை அடைந்து, ஹெக்டேர் ஒன்று 4,775 கிலோ பருத்தியை தந்தது. இத்தனை ஆண்டுகளிலும், அந்த மாவட்டத்தில் நடந்த, பருத்தி

## பருத்தி விளைச்சலில் புதிய திருப்பம்

பமுலா என்ற கிராமத்தைச் சார்ந்தவர். 1962-ம் ஆண்டில் தான் இவர் ‘பி 216 எ.·.ப்’ என்ற விருத்தி செய்யப்பட்ட பருத்தியை விவசாயம் செய்ய துவங்கினார். அடுத்த மூன்றாண்டுகளில் அவரது மகசூல் ஒவ்வொரு ஆண்டும் சென்ற ஆண்டைவிட அதிகமாக இருந்தது.

### வளரும் விளைச்சல்

முதல் ஆண்டு, அவர் வயல் தரிசிலேயே பருத்தியை பச்சைபயறுடன் விளைச்சல் போட்டியில் இவரே பரிசுகள் பெற்றிருக்கிறார்.

செடிகளை நன்றாக கவனித்து, அதிகமாக உரமிட்டதே தன்னுடைய வெற்றியின் அவசியம் என்று கூறுகிறார் திரு சுப்பையா.

### உரம்

‘‘பருத்திப்பயிர் செழிப்பாக வளருவதற்கு ஒரு ஹெக்டேருக்கு 182 கிலோ கடலை புண்ணாக்கு போட வேண்டும். அப்படிச் செய்வதால்

பயிர் செழித்து வளர ஒரு நல்ல ஆரம்பம் ஏற்படுகிறது'' என்று தன்னுடைய விவசாய முறையை விளக்குகிறார்.

நெல் அருவடை முடிந்தவுடன், 5 செண்டி மீட்டர் ஆழத்தில், 75 செண்டி மீட்டர் இடைவெளியில் விதைகளை நடவேண்டும். இவ்வேலை களை டிசம்பர் மாத முதல் வாரத்தில் துவங்கவேண்டும்.

ஒரு மாதத்திற்கு பிறகு திரு சுப்பையா ஒரு ஹெக்டேருக்கு 182 கிலோ வீதம் சூப்பர் பாஸ்பேட், 125 கிலோ வீதம் கால்சியம் அம் மோனியம் நைட்ரேட் மேலும் இடுகிறார்; பிறகு களையெடுக்கிறார். பயிருக்கு முதல் பாசனமும் இத் தருணத்தில் தான் நடக்கிறது. ஒரு ஹெக்டேருக்கு 125 கிலோ என்ற கணக்கில் யூரியா உரம் இட்டு, முதல் பாசனம் முடிந்த 25 நாட்கள் கழித்து, இரண்டாவது முறையாக நீர்ப்பாசனம் செய்கிறார் திரு. சுப்பையா.

**மருந்து தெளித்தல்**

பருத்தி பயிரிடுவதில் பயிர்ப்பாது காப்பு செய்வது முக்கியம் அல்லவா? எனவே ஹெக்டேருக்கு 25 கிலோ 10 சதவீத 'பி.எச்.சி.' மருந்து தூவி, பயிர்களை நோய்கள் தாக்காத வாறு கவனித்துக் கொண்டார்.

இது தவிர எண்ட்ரின், பாரத்தி யான் கொண்டு, 10 நாட்கள் இடை வெளியில் மருந்து தெளித்தார். இத்தருணத்தில் பயிர் 60 செண்டி மீட்டர் உயர்ந்து, பூக்கத் துவங்கி விட்டன.

பிப்ரவரி மாத இறுதி வாரத்தில் கடைசியாக உரமிட்டார். ஹெக்டேருக்கு 125 கிலோ 'என். பி. கே.' (12 : 6 : 6) கலவை உரமும், 250 கிலோ அம் மோனியம் சல்பேட்டும், 125 கிலோ அம்மோனியம் பாஸ்பேட்டும் போடப் பட்டது. மீண்டும் ஒருமுறை எண்ட்ரின், பாரத்தியான் மருந்து தெளிக்கப் பட்டது. ஒவ்வொரு செடியினும் முழுவதுமாக மருந்து தெளிக்கப் பட்டிருக்கிறதா என்பதை உன்னிப் பாக கவனித்து தன்னை திருப்தி செய்துக்கொள்வார், திரு. சுப்பையா.

**கடைசி நீர்ப்பாசனம்**

மூன்றுவது பாசனம் முடிந்து சரியாக ஒரு மாதம் ஆனபிறகு, மீண்டும் தண்ணீர் விடப்பட்டு எண்ட ரினும், பாரத்தியான் அடிக்கப் பட்டது. இவை நடந்த 20 நாட்களுக்கு பிறகு கடைசி முறையாக மீண்டும் பாசனம் செய்யப்பட்டது. ஏப்ரல் மாதத்தில் சுப்பையா நீரே பாய்ச்ச வில்லை; ஆனால் வாரம் ஒருமுறை 'செவின்' (Sevin) தெளித்தார்.

ஒரு ஹெக்டேருக்கு திரு சுப்பையா செலவழித்த மொத்த தொகை ரூ. 1,900 ஆகும். அவருக்கு கிடைத்த மொத்த வருமானம் ரூ. 5,900. எனவே, ஒரு ஹெக்டேருக்கு கிடைத்த நிகர வருமானம் ரூ. 4,000 ஆகிறது.

**பருத்தி விளைச்சல் போட்டி**

சென்ற ஆண்டு திரு சுப்பையா பருத்தி விளைச்சல் போட்டி ஒன்றை ஏற்படுத்தினர். எந்த விவசாயி யேனும் ஹெக்டேருக்கு 3,636 கிலோ விற்கு மேல் பருத்தி விளைவித்தால், அவருக்கு ரூ. 116 பரிசளிப்பதாக அவர் அறிவித்தார். ஆனால் அவரை தவிர வேறுயாராலும் 3,636 கிலோ விற்கு பருத்தி பயிர் செய்து காட்ட முடியவில்லை. ''இருப்பினும் எந்த விவசாயி, எப்போது விரும்பினும், 3,636 கிலோவிற்கு மேல் பருத்தி பயிர் செய்து, அந்த பரிசுத் தொகையை என்னிடமிருந்து எக் காலத்திலும் பெற்றுக்கொள்ளலாம்'' என கூறுகிறார் திரு சுப்பையா.

---

Articles reproduced from 'Panchayati Raj' on pages 12, 28, 29, 35, 36, 37, 50, 51 & 52 from Yojana on page 11 from 'Intensive Agriculture' on pages 28, 29 55, & 56 and from 'Indian Farming' on page 29.

''பஞ்சாயத்து ராஜ்'' இதழிலிருந்து பக்கங்கள் 12, 28, 29, 35, 36, 37, 50, 51 & 52 ''யோஜனு''விலிருந்து பக்கம் 11 ''இன்டென்சிவ் அக்ரிகல்ச''ரிலிருந்து பக்கங்கள் 28, 29, 55, & 56 மற்றும் ''இந்தியன் ஃபார்மிங்''கிலிருந்து பக்கம் 29-ல் கட்டுரைகள் இடம் பெறுகின்றன.

# பஞ்சாயத்து அரசிதழ்
# PANCHAYAT GAZETTE

(பஞ்சாயத்து, பஞ்சாயத்து வளர்ச்சி, திட்டங்கள் பற்றிய அரசாங்க ஆணைகள், குறிப்பாணைகள், விதிகள் முதலியவற்றின் தமிழாக்கம் இந்தப் பகுதியில் சுருக்கமாக இடம் பெறுகிறது.)


o

## தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் யூனியனுக்கு, பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் சந்தா செலுத்துதல்.

## Madras State Union of Panchayats—Payment of subscription by Panchayat Union Councils—Reduction—Orders—Passed.

தாலூகா பஞ்சாயத்துக்கள் கழகங்கள் (Taluk Panchayat Associations) மற்றும் பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் யூனியனில் (Madras State Union of Panchayats) உறுப்பினர்களாக சேர்ந்து கொள்வதற்கும், தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் யூனியனின் துணை விதிகளில், திருத்தப்பட்ட துணை விதி எண் 20-ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள விகிதத்தில் சந்தா செலுத்துவதற்கும், கிராம நல தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 813-ல் உள்ள பத்தி 2-ல் அரசாங்கம் அனுமதியளித்துள்ளது. மேற் கூறப்பட்டுள்ள துணை விதியின்படி, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மன்றமும், மாநில பஞ்சாயத்துக்கள் யூனியனுக்கு ஆண்டுச் சந்தாவாக ரூ. 100 செலுத்தவேண்டும். பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் செலுத்தும் இந்த சந்தா தொகையை குறைத்து விடலாம் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக் கருத்தை அரசாங்கம் கவனமாக பரிசீலனை செய்து, அதன் பேரில், சிக்கனத்தின் அவசியத்தை முன்னிட்டு, தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் யூனியனுக்கு, பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் செலுத்தும் ஆண்டுச் சந்தாவான ரூ. 100 ஆனது ரூ. 30-க்கு உடனடியாக குறைக்கப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கிறது.

மேற்கண்ட பத்தி 1-ல் உள்ள உத்தரவுகளை செயல் படுத்தும் வகையில், தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் யூனியனின் துணை விதிகள் திருத்தப்பட வேண்டும்.

(கிராம நல தல நிர்வாகத்துறையின் 1966 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 6 ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2340)

---

## பஞ்சாயத்துக்கள்—தாலூகா பஞ்சாயத்து கழகங்கள்—உறுப்பினர்களுக்கு பயணப்படி அளித்தல்—உத்தரவுகள்—மாற்றப்படுகின்றன

## Panchayats—Taluk Panchayat Associations—Payment of Travelling Allowance to members—Orders—Modified.

தாலூகா பஞ்சாயத்து கழகங்களெல்லாம், மாநில பஞ்சாயத்துக்கள் யூனியனில் உறுப்பினர்களாகவும், தாலூகாவிலுள்ள எல்லா பஞ்சாயத்துக்களும் சம்பந்தப் பட்ட தாலூகா பஞ்சாயத்து கழகங்களில்—தேவையான ஆண்டுச் சந்தாவை செலுத்தி—உறுப்பினர்களாகவும் ஆவதற்கு, கிராம நல தல நிர்வாகத்துறையின் 1960-ம் ஆண்டு ஜூன் மாதம் 27-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1089-ல் அரசாங்கம் அனுமதியளித்துள்ளது. பஞ்சாயத்துத் தலைவர்கள் மற்றும் தாலூகா பஞ்சாயத்து கழகங்களின் இதர உறுப்பினர்கள் ஆகியோர், தாலூகா பஞ்சாயத்து கழக கூட்டங்களில் கலந்துகொள்ள, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தின் நிதியிலிருந்து பயணப்படியை பெற்றுக் கொள்ளவும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது,

மாநிலம் முழுவதிலும் பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் அமைக்கப்பட்டிருப்பதையொட்டி, இந்நிலையை அரசாங்கம் பரிசீலனை செய்தது; சிக்கனத்தை அனுசரித்ததும், பஞ்சாயத்துக்களின் குறைந்த நிதி ஆதாரங்கள் வளர்ச்சி வேலைகளில் பயன்படுத்தப்படுவதற்கு ஒருமுகப்படுத்தப்படவேண்டியதன் அவசியம் கருதியும், பஞ்சாயத்துத் தலைவர்கள் மற்றும் தாலூகா பஞ்சாயத்து கழகங்களின் உறுப்பினர்கள் ஆகியோர், பஞ்சாயத்துக்களின் நிதிகளிலிருந்து பயணப்படி, தினப்படியை பெற்றுக்கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ள உத்தரவுகள் ரத்து செய்யப்பட வேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது. எனவே தல நிர்வாகத்தின் 1960-ம் ஆண்டு ஜூன் மாதம் 27-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1089-ல், பத்தி 4-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகள் இதன் மூலம் ரத்து செய்யப்படுகின்றன.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 1966ம் ஆண்டு அக்டோபர் மாதம் 6ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2341.)

---

## தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் யூனியன்—பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் சந்தா செலுத்துதல்—சந்தாத் தொகையைக் குறைத்தல்—விளக்க உத்தரவுகள்—பிறப்பிக்கப்படுகின்றன.

## Madras State Union of Panchayat—Payments of subscription by Panchayat Union Councils—Reduction—further instructions—Issued.

பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் யூனியனுக்குச் செலுத்தக் கூடிய ஆண்டுச் சந்தாத் தொகையை ரூ. 100-லிருந்து ரூ. 30-க்குக் குறைத்து, அக்குறைப்பிற்கு உடனடியான விளைவு கொடுத்து, கிராம நல தல நிர்வாகத்துறையின் 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 6-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2340-ல் அரசாங்கம் உத்தரவுகள் பிறப்பித்தது. தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் யூனியன்கள் தலைவர்—

(அ) கிராம நல தல நிர்வாகத்துறையின் 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 6-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2340-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகளுக்கு, 1967–68-ம் ஆண்டு முதல் விளைவு கொடுக்க வேண்டும் என்றும், இதுவரை ரூ. 100/- என்ற விகிதத்தில் பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் செலுத்திய சந்தாத் தொகைக்கு ஒப்புதல் அளிக்கப்படவேண்டும் என்றும்,

(ஆ) கிராம நல தல நிர்வாகத்துறையின் 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 6-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2340-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள், 1966-67-ம் ஆண்டு மற்றும் அந்த ஆண்டிற்குப் பிறகுள்ள சந்தாவிற்கே பொருந்தும், அதற்கு முந்திய ஆண்டிற்குரிய பாக்கிகளுக்கு பொருந்தாது என்று ஒரு விளக்க உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும்,

(இ) 1967–68-ம் ஆண்டு முதல், ஆண்டுச் சந்தா ரூ. 30, ஆனது ரூ. 50 என்று நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. இக்கோரிக்கைகளை, அரசாங்கம் கவனமாக பரிசீலனை செய்து, கீழ்க்கண்டவாறு உத்தரவுகள் பிறப்பிக்கிறது:—

மேற்கண்ட கோரிக்கை (அ):—இக்குறிப்பாணை பிறப்பிக்கப்பட்ட தேதி வரை ரூ. 100 என்ற பழைய சந்தா விகிதத்தில் ஏற்கனவே செலுத்தப்பட்ட சந்தாத்தொகை திருப்பியளிக்கப்பட வேண்டியதில்லை.

மேற்கண்ட கோரிக்கை (ஆ):—இக்குறிப்பாணை பிறப்பிக்கப்பட்ட தேதிக்குப் பிறகு, நடப்பாண்டிற்காவது, அல்லது பாக்கிக்காவது ரூ. 30-க்கு மேல் செலுத்தப்படும் எந்தத் தொகையும் செல்லாது.

மேற்கண்ட கோரிக்கை (இ):—பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் யூனியனுக்கு செலுத்தக்கூடிய ஆண்டுச் சந்தாத் தொகையை ரூ. 30 லிருந்து ரூ. 50-க்கு உயர்த்த முடியாது.

* * *

(கிராம நல தல நிர்வாகத்துறையின் 1966 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24 ந் தேதியிட்ட அரசாங்க குறிப்பாணை எண் 144171 ன் சுருக்கம்.)

## பஞ்சாயத்து யூனியன் மன்ற கூட்டங்களுக்கு தலைமை வகித்தல்.

## Panchayat Union Councils—Presidency of meeting—Scope of Section 47 (2) of the Madras Panchayats Act, 1958—Explained.

பஞ்சாயத்து யூனியன் மன்ற கூட்டத்திற்கு தலைவரும், துணைத் தலைவரும் வராமல் இருந்தால், வந்துள்ள உறுப்பினர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒருவர், அக்கூட்டத்திற்கு தலைமை வகிக்க வேண்டும் என்று 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்திலுள்ள பிரிவு 47 (2) வகை செய்கிறது. அப்படி அந்த 'நேரத்தில்' தலைமை வகிப்பவருக்கு, அந்தக் கூட்டத்தில் அவர் தலைமை வகிக்கின்ற 'நேரத்தில்' தலைவருக்குள்ள எல்லா அதிகாரங்களும் உண்டு என்று மேற்கூறிய சட்டத்தில் பிரிவு 47 (4) கூறுகிறது. அவ்வாறு கூட்டம் ஆரம்பமாகி நடந்து கொண்டிருக்கும் போது, தலைவரோ, துணைத் தலைவரோ அக்கூட்டத்திற்கு வந்து விட்டால், கூட்ட ஆரம்பத்தில் தலைமை வகிக்கத் தெரிந்தெடுக்கப்பட்ட உறுப்பினர், தாமே தொடர்ந்து தலைமை வகிக்க பாத்தியதை கொண்டாட முடியுமா என்று ஒரு சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது. பிரிவு 47 (2)-ல் உள்ள "அந்த சமயத்திற்கு" (Occasion) என்ற பதங்களும், 47 (4) பிரிவில் உள்ள "தலைமை வகிக்கின்ற நேரத்தில்" (during the period that he presides over it) என்ற பதப்பிரயோகங்களும் கவனிக்கப்பட வேண்டியவை. பிரிவு 47 (4)-ல் உள்ள "தலைமை வகிக்கின்ற நேரத்தில்" என்ற பதப் பிரயோகங்களிலிருந்து, "தலைமை வகிக்கத் தெரிந்தெடுக்கப்பட்ட உறுப்பினர், தலைவரோ, துணைத் தலைவரோ, வராத வரையில்தான் கூட்டத்திற்கு தலைமை வகிக்கலாம்" என்பது தெளிவாகிறது. எனவே தலைவரோ, துணைத் தலைவரோ கூட்டத்திற்கு வந்ததும், தலைமை வகிக்கும் உறுப்பினர் தலைமைப் பீடத்திலிருந்து விலகிக் கொள்ள வேண்டும்.

(கிராம நல தல நிர்வாகத்துறையின் 31-10-1966 தேதியிட்ட அரசாங்க குறிப்பாணை எண் 73586)

---

## தமிழ்நாடு நகர அமைப்புச் சட்டத்தின் விதித் துறைகளை, சில நகரப் பஞ்சாயத்துக்களுக்கு விஸ்தரித்தல் - சேலம் மாவட்டத்திலுள்ள கொளத்தூர் நகரப்பஞ்சாயத்து.

## Extension of provisions of Madras Town Planning Act to certain Town Panchayats—Kolathur Town Panchayat in Salem District.

**1920**-ம் ஆண்டு தமிழ்நாடு நகர அமைப்புச் சட்டத்தின் (Madras Town Planning Act, 1920) (தமிழ்நாடு சட்டம் 7/1920), 39-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி, தமிழ்நாடு கவர்னர் அவர்கள், மேற்படி சட்டத்தின் விதித்துறை (Provisions) களை சேலம் மாவட்டத்தில், கொளத்தூர் நகரப் பஞ்சாயத்தில் தற்போதுள்ள பகுதிக்கு இதனால் விஸ்தரிக்கிறார்; மேலும் அவர், மேற்படி சட்டத்தின் விதித்துறைகளின் கீழ், நகராட்சி மன்றத்தினாலும், தலைவராலும் செலுத்தப்படுகிற அதிகாரம், முறையே அப் பஞ்சாயத்தினாலும், அதன் ஆட்சி சபை (Executive Authority) யினாலும் செலுத்தப்படத்தக்கதாகும் என்றும் கட்டளை யிடுகிறார்.

(கிராம நல தல நிர்வாகத்துறையின 24-10-1966 தேதியிட்ட, அரசாங்க ஆணை எண் 2476-ன சுருக்கம்.)

---

## தமிழ்நாடு நகர அமைப்புச் சட்டத்தின் விதித்துறைகளை, சில நகரப் பஞ்சாயத்துக்களுக்கு விஸ்தரித்தல் - செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள மாதவரம் நகரப்பஞ்சாயத்து.

## Extension of provisions of Madras Town Planning Act to Certain Town Panchayats-Madhavaram Town Panchayat in Chingleput District.

**1920**-ம் ஆண்டு தமிழ்நாடு நகர அமைப்புச் சட்டத்தின் (Madras Town Planning Act, 1920) (தமிழ்நாடு சட்டம் 7/1920), 39-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, தமிழ்நாடு கவர்னர் அவர்கள் மேற்படி சட்டத்தின் விதித்துறை (Provisions) களை செங்கற்பட்டு மாவட்டத்தில் மாதவரம் நகரப்பஞ்சாயத்தில் தற்போதுள்ள பகுதிக்கு இதனால் விஸ்தரிக்கிறார்; மேலும் அவர், மேற்படி சட்டத்தின் விதித்துறைகளின் கீழ், நகராட்சி மன்றத்தினாலும், தலைவராலும் செலுத்தப்படுகிற அதிகாரம், முறையே மாதவரம் பஞ்சாயத்தினாலும், அதன் ஆட்சி சபை (Executive Authority) யினாலும் செலுத்தப்படத்தக்கதாகும் என்றும் கட்டளையிடுகிறார்.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 24-10-1966 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2480-ன் சுருக்கம்.)

## பஞ்சாயத்து யூனியன் மன்ற தலைவரை பதவியிலிருந்து நீக்குதல்—மல்லசமுத்திரம் பஞ்சாயத்து யூனியன் மன்றம்—சேலம் மாவட்டம்.

## Removal of person from office of Chairman of Panchayat Union Council—Malla samudram Panchayat Union Council in Salem District.

மல்லசமுத்திரம் பஞ்சாயத்து யூனியன் மன்றத்தலைவர் திரு எம். சுப்பராயக் கவுண்டர் அவர்களின் குற்றங்களும், குறைபாடுகளும் கொண்ட செயல்களுக்காக, அவரை பதவியிலிருந்து நீக்கவேண்டும் என்ற சென்னை—9, தமிழ்நாடு கிராம வளர்ச்சி நெறியாளரின் கோரிக்கையை, அந்த யூனியன் மன்றம், அதன் 16-8-1966 அன்று நடந்த அதன் கூட்டத்தில் ஏற்றுக்கொண்டுள்ளது என்று, சங்கரி, வருவாய் கோட்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

எனவே, 1958-ம் ஆண்டு தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் (தமிழ்நாடுச் சட்டம் 35/1958), 151 (12)-வது பிரிவில் கண்டுள்ள அதிகாரங்கள், கிராம நல தல நிர் வாகத் துறையின் 29–9–1965 தேதி யிட்ட அரசாங்க ஆணை எண் 2191-ல் எனக்குக் கொடுக்கப்பட்டுள்ளதை பயன்படுத்தி, தமிழ்நாடு கிராம வளர்ச்சி நெறியாளராகிய திரு கா. திரவியம், ஐ.ஏ.எஸ். ஆகிய நான், சேலம் மாவட்டம், மல்ல சமுத்திரம் பஞ்சாயத்து யூனியன் மன்ற தலைவராகிய திரு எம். சுப்பராயக் கவுண்டர் அவர்கள், மல்ல சமுத்திரம் பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர் பதவியினின்றும் நீக்கப்படவேண்டும் என்று ஆணை பிறப்பிக்கிறேன்.

**கா. திரவியம்,**
கிராம வளர்ச்சி நெறியாளர்.

சென்னை—9,
21–8–1966.

(7–12–1966 தேதியிட்ட செயின்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழிலிருந்து தமிழாக்கம்)

—(o)— –

## பஞ்சாயத்து யூனியன் மன்ற தலைவரை பதவியிலிருந்து நீக்குதல்—வெம்பக்கோட்டை பஞ்சாயத்து யூனியன் மன்றம்—இராமநாதபுரம் மாவட்டம்.

## Removal of person from office of Chairman of Panchayat Union Council—Vembak-kottai Panchayat Union Council in Ramanathapuram District.

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் (தமிழ் நாடுச் சட்டம் 35/1958), 153-வது பிரிவில் குறிப்பிட்டுள்ள நடைமுறைகள் அனைத்தையும், சிவகாசி, மாவட்ட உதவி ஆட்சித் தலைவர், கடைப்பிடித்தபிறகு, கீழ்க்கண்டவாறு அறிவித்துள்ளார். இராமநாதபுரம் மாவட்டம், வெம்பக்கோட்டை பஞ்சாயத்து யூனியன் மன்றம், 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம், 5-ம் தேதியன்று நடந்த அதன் கூட்டத்தில், பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் அனுமதிக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத உறுப்பினர்களின் ஆதரவுடன், மேற்படி பஞ்சாயத்து யூனியன் மன்றத்தலைவரான திரு ஏ. ராமசாமி நாயக்கர் அவர்கள் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

எனவே, 1958-ம் ஆண்டு தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் (தமிழ்நாடுச் சட்டம் 35/1958) 15(13)-வது பிரிவில் கண்டுள்ள அதிகாரங்கள், கிராம நல தல நிர்வாகத் துறையின் 29–9–1965 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2191-ல் எனக்கு கொடுக்கப்பட்டுள்ளதை பயன் படுத்தி, தமிழ்நாடு கிராம வளர்ச்சி நெறியாளராகிய குமாரி எஸ். சத்திய பாமா, ஐ.ஏ.எஸ். ஆகிய நான், இராமநாதபுரம் மாவட்டம், வெம்பக்கோட்டை பஞ்சாயத்து யூனியன் தலைவராகிய திரு ஏ. இராமசாமி நாயக்கர் அவர்கள், வெம்பக்கோட்டை பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர் பதவியினின்றும் நீக்கப்படவேண்டுமென்று இதனால் ஆணை பிறப்பிக்கிறேன்.

**எஸ். சத்தியபாமா,**
இராம வளர்ச்சி நெறியாளர் (பொறுப்பு.

சென்னை—9
15–10–1966.

(7–12–1966 தேதியிட்ட செயின்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழிலிருந்து தமிழாக்கம்.)

# சமூகக் கல்வி திட்ட வேலைகளை பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைத்தல்—1966—67-க்கு திருத்தப்பட்ட மாதிரித் திட்டம்—உத்தரவுகள்—வெளியிடப்படுகின்றன

# Panchayat Unions—Social Education Programme—Entrustment to Panchayat Union Councils—Revised Model Programme for Social Education for 1966—67—Instructions —Issued.

கிராம நல தல நிர்வாகத்துறையின் 1962-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 300-ல் ''சமூகக் கல்வி''க் கென திருத்தப்பட்ட மாதிரி வேலைத் திட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரித்து, அவ்வாணையின் இணைப்பிலேயே அவ் வேலைத் திட்டத்தை நிறைவேற்று வதற்கு பஞ்சாயத்து யூனியன்களுக்கு உதவியாக அமைவதற்கென தேவை யான விளக்கங்களையும் அரசாங்கம் பிறப்பித்தது. மூன்றாவது ஐந்தாண் டுத் திட்டத்தில் இவ்வேலைத் திட்டங் களை நிறைவேற்றுவதற்காக, ஆண் டொன்றிற்கு நபருக்கு, 10 பைசா வீதம் ஈடு மானியமல்லாத, ஒரு மானியம் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் தரப்பட்டது. இதனால் ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு, ஆண்டொன்றிற்கு சுமார் ரூ. 7,000 முதல் ரூ. 8,000 வரை கிடைத்தது. தேசிய நெருக்கடி நிலை காரணமாக, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி கட்டத்தில், ''சமூகக் கல்வி'' யிலுள்ள சில வேலைத் திட்டங்கள் தள்ளிவைக்கப்பட்டு, அவை சம்பந்தப் பட்ட உத்தரவுகள், கிராம நல தல நிர்வாகத்துறையின் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 20-ம் தேதியிட்ட அரசாங்க குறிப்பாணை எண் 232655-ல் பிறப்பிக்கப்பட்டன.

(2) 1966-67-ம் ஆண்டில் செல வினங்களை முறைப்படுத்துவதற்கு, கிராம நல தல நிர்வாகத் துறையின் 1960-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 664 மற்றும் 1961-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 211 ஆகிய வற்றில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவு களை பின்பற்ற வேண்டுமென்றும், 1966-ம் ஆண்டு மே மாதம் 7-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1180-ல் உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டன. அவ்வாறு உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகையில், அந்த ஆணை யில் (அதாவது, கிராம நல தல நிர் வாகத் துறையின் 1966-ம் ஆண்டு மே மாதம் 7-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1180) அடங்கிய விளக் கக் குறிப்புக்களையும் சேர்த்து பின் பற்றவேண்டுமென்றும் ஆணை பிறப் பிக்கப்பட்டது. அதன்படி, 1966-67-ம் ஆண்டில் ஒவ்வொரு யூனியனும் சமூகக் கல்வி மானியத்தின் கீழ் ஏற் படும் செலவை ரூ. 2,000-க்குள் முடித் துக் கொள்ளவேண்டும்.

(3) பஞ்சாயத்து யூனியன் மன்றங் கள் சமூகக்கல்வி வேலைத் திட்டங்களை, 1966–67-ம் ஆண்டில் நிறைவேற்று வதற்கு, கிராம வளர்ச்சி நெறியாளர் கோரிக்கைகள் அனுப்பியுள்ளார். அவருடைய கருத்தின்படி, இவ் வேலைத் திட்டத்தை நிறைவேற்ற ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மன்றத்திற்கும் தேவைப்படும் மானி யத் தொகை ரூ. 2,500 ஆகும். சமூகக் கல்வி மானியத்தில், திருத்தப்பட்ட மதிப்பீட்டில், மறு நிதி ஒதுக்கீடு செய்து, தேவையான நிதி கிடைக்க வகை செய்யப்படும் என்று கிராம வளர்ச்சி நெறியாளர் கூறியுள்ளார்.

(4) கிராம வளர்ச்சி நெறியாளரின் சிபாரிசுகளை அரசாங்கம் பொதுவாக ஏற்றுக்கொள்கிறது. அதற்கேற்றபடி, 1966-67-ம் ஆண்டிற்கு, சமூகக் கல்விக்கென திருத்தப்பட்ட மாதிரித் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, அவை நிறைவேற்றப்படுவதில், பஞ் சாயத்து யூனியன்களுக்கு உதவியாக அமைவதற்கென தேவையான விளக்கங்களும் இவ்வாணையுடன் சேர்க்கப்பட்டுள்ளன. சமூகக்கல்வி மானியத்தில், ஒவ்வொரு பஞ்சா யத்து யூனியனும் நடப்பு ஆண்டில் செலவழிக்க வேண்டிய மொத்த தொகை ரூ. 2,000-க்கு மேற்பட்டு விடக்கூடாது என்ற வரம்பிற்கு உட் பட்டு, அந்தந்த பிரதேசங்களின் சூழ் நிலைகளை கருத்தில் கொண்டு, செல வினங்களுக்கு பஞ்சாயத்து யூனியன் கள் நிர்வாக முறையிலே அனுமதி வழங்கி, அச்செலவினங்களுக்குரிய திட்ட இலக்குகளையும் நிர்ணயிக்க லாம். இவ்வாணையின் இணைப்பி லுள்ள ஒவ்வொரு இனத்தின் பேரி லும், அதற்கென நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு உட்பட்டு, செலவு செய்வதற்கு, மாவட்ட ஆட்சித் தலை வரின் அனுமதியோ அல்லது அர சாங்கத்தின் அனுமதியோ தேவை யில்லை. சமூகக் கல்வி வேலைத்திட்டம் சம்பந்தப்பட்டவரையில், இவ்வாணையி லுள்ள உத்தரவுகள், இதற்கென ஏற்கனவே, பிறப்பிக்கப்பட்டுள்ள எல்லா உத்தரவுகளையும் ரத்து செய்து விடும்.

(5) இணைப்பிலுள்ள பல்வேறு இனங்களுக்கு கணக்குகள் வைத்துக் கொள்வதில் பின்பற்றப்படவேண்டிய நடைமுறை விதிகள் பின் வருமாறு:

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத் தில் செய்தது போல், பஞ்சாயத்து யூனியன் நிதிகளிலிருந்து முதலில் செலவுகளை செய்துவிட்டு, வருவாய்க் கோட்ட அதிகாரிகளால் பிறகு அத் தொகை திருப்பித் தரப்பட வேண் டும்.

தொகையைத் திருப்பியளிக்கையில் ஏற்படும் செலவினங்களெல்லாம், கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புக்களில் பற்று வைக்கப்பட வேண்டும்.

முதல் நிலை, இரண்டாம் நிலை வட்டாரங்களுக்குரிய கணக்குத் தலைப்பு

37. சமுதாய வளர்ச்சி வேலைத் திட்டம்—தேசிய வளர்ச்சிப் பணி மற்றும் தல வளர்ச்சி வேலைகள்—II. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், வளர்ச்சித் திட்டங் கள்—A. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள்—B. சமூகக் கல்வி. 2. பஞ்சாயத்து யூனியன்களுக்கு உதவி மானியம்—சமூகக் கல்வி மானியம்.

**இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்களுக்குரிய கணக்குத் தலைப்பு.**

37. சமுதாய வளர்ச்சி வேலைத் திட்டம், தேசிய வளர்ச்சிப் பணி மற்றும் தல வளர்ச்சி வேலைகள் I—சாதாரணம்—A. சமுதாய வளர்ச்சித் திட்டம் (b) இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்களுக்குரிய உதவி மானியம்—3. சமூகக் கல்வி.

1966-67-ம் ஆண்டில், இரண்டாவது நிலையைக் கடந்து செயல்படும் வட்டாரங்களின் பட்டியல், 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ந்தேதியிட்ட டி.ஆர். டி. கணக்குகள்—I-66-3 குறிப்பாணை எண் 38770—பிற்சேர்க்கை II-ல் தரப்பட்டுள்ளது. அப் பிற்சேர்க்கைக்கு வருவாய்க் கோட்ட அதிகாரியின் கவனம் கொண்டு வரப்படுகிறது.......

## இணைப்பு

**சமூகக் கல்விக்கென திருத்தப்பட்ட மாதிரித் திட்டம்.**

1. **சமூகக் கல்வி நிலையங்கள் முதலியன:**—சமூகக் கல்வி நிலையங்கள், வட்டார தகவல் நிலையங்களுக்காக ஆண்டொன்றுக்கு, ஒரு பஞ்சாயத்து யூனியன், அதிக அளவாக ரூ. 1,000 செலவழித்து, செய்தித்தாள்கள் பத்திரிகைகள் போன்றவற்றை வாங்கிக்கொள்ளலாம். இச்செலவினம் நிர்ணயிக்கப்பட்டுள்ள வரம்பிற்குள் இருக்க வேண்டும். இந்த உச்சவரம்புத் தொகையில், இக்காரியங்களுக்காக மகளிர் நலத்துறை நெறியாளரால் அளிக்கப்படும் அரசாங்க மானியம் சேராது. செய்தித்தாள்கள், பத்திரிகைகள் வாங்குவது சம்பந்தமாக கிராம வளர்ச்சி நெறியாளரின், 1966-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதியிட்ட சுற்றறிக்கை குறிப்பாணை எண் 93316-ல் அடங்கியுள்ள உத்தரவுகள் பின்பற்றப்பட வேண்டும். (இச்சுற்றறிக்கை குறிப்பாணையின் தமிழாக்கத்தை 1966-ம் ஆண்டு மே மாத "கிராம நலம்" இதழ், பகுதி II-ல் காணலாம்.)

2. **பஞ்சாயத்துக்களுக்கு வானொலிப் பெட்டிகள்:**—வானொலி பெட்டியே இல்லாத பஞ்சாயத்துக்களுக்கு முதலிலும், பிறகு குக்கிராமங்களுக்கும் முதன்மையளித்து, அவை வானொலிப் பெட்டிகள் வாங்கிக்கொள்வதற்கு உதவித் தொகை அளிப்பதற்காக, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள வேலைத்திட்டங்களின் முறைப்படி, ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு, ஓர் ஆண்டுக்கு மொத்தமாக ரூ. 500 மானியம் வழங்கலாம்.

3. **தகவல் நிலையங்கள்:**—வட்டாரத்திலுள்ள தகவல் நிலையத்திற்காக, பயனுள்ள புத்தகங்களை வாங்குவதற்கென "சமூகக் கல்வி" என்ற தலைப்பின் கீழ், ஒரு வட்டாரம், ஓர் ஆண்டுக்கு ரூ. 100 செலவிடலாம். புத்தகங்கள் வாங்குவதற்கென கிராம நல தல நிர்வாகத்துறையின் 1964-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27-ம் தேதியிட்ட அரசாங்க குறிப்பாணை எண் 212030-ல் வகுக்கப்பட்டுள்ள வறைமுறைகள் தொடர்ந்து செயலில் இருந்து வரும். பயனுள்ள பிரசுரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை கிராம வளர்ச்சி நெறியாளர் அவ்வப்போது தயாரித்து, அவற்றை பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு அனுப்பிவைப்பார். அந்தப் பட்டியலிலிருந்தே தகவல் நிலையங்களுக்கான புத்தகங்களை பஞ்சாயத்து யூனியன்கள் வாங்கிக் கொள்ள வேண்டும்.

4. **பள்ளிக்கூட நடவடிக்கைகள்:**—பள்ளிகளில் போட்டிகள், விளையாட்டுகளுக்கு ஏற்பாடு செய்ய ஒரு யூனியன், ஓர் ஆண்டில், அதிக அளவாக ரூ. 100 செலவிடலாம்.

5. **பயிர் விளைச்சல் போட்டி, கண்காட்சிகள், கால்நடைக் கண்காட்சி விழாக்கள் போன்றவை:**—இவற்றிற்காக ஒரு யூனியன், ஓர் ஆண்டில் அதிக அளவாக ரூ. 500 செலவிடலாம். பல்வேறு நடவடிக்கைகளுக்கென, இத்தொகையை ஒதுக்குவது பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் விருப்பத்தைச் சார்ந்தது.

6. **தேசிய நாட்கள், கேளிக்கைகள் முதலியன:**—சர்வோதய இலக்கிய வாரம், கூட்டுறவுச் சங்கங்களுக்கு உறுப்பினர்களை சேர்க்கும் வாரம் போன்ற விழாக்களை கொண்டாடுவதற்கும், இதர கணக்குத் தலைப்புக்களில் நிதி ஒதுக்கப்படாத இம்மாதிரியான விழாக்களின் பேரில் ஆகும் செலவை "சமூகக் கல்வி" தலைப்பில் செய்துக் கொள்ளுமாறு, அரசாங்கம் அவ்வப்போது உத்தரவுகள் பிறப்பித்து வருகிறது. இதற்கென அதிக அளவாக ஆண்டொன்றிற்கு ரூ. 150 செலவிடலாம். இவ்வினங்களின் பேரில் ஏற்படும் செலவினங்களை, அவ்வப்போது அரசாங்கம் வெளியிடும் உத்தரவுகளுக்கு ஏற்ப செய்ய வேண்டும். இதற்கென ஒதுக்கப்பட்டுள்ள வரம்பிற்குள் இச்செலவுகள் அடங்கிவிடுமாறு யூனியன்கள் கவனித்துக் கொள்ள வேண்டும்.

7. **பல்வகை:**—போட்டிகளுக்கு பரிசுகள் வழங்குதல், வானொலி மேற்பார்வையாளரிடம் உள்ள புகைப்படகருவிக்கு (Camera), 'பிலிம்' சுருள்கள் (Film rolls) வாங்குதல், புகைப்படங்களை அச்சடித்தல் (Development and Printing) ஆகிய காரியங்களுக்கென, ஒரு யூனியன், ஓர் ஆண்டிற்கு ரூ. 50 செலவிடலாம். கோட்டத்திலுள்ள வானொலி மேற்பார்வையாளர், இப் புகைப்படக் கருவிகளை இயக்குவார்; தேவையான சந்தர்ப்பங்களில் அவருடைய சேவையை பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

(கிராம நல தல நிர்வாகத்துறையின் 1966–ம் ஆண்டு நவம்பர் மாதம் 10–ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2604–ன் சுருக்கம்.)

## கிராம மனித சக்தித் திட்டம்—திட்டத்தை நிறைவேற்ற வழிவகுக்கும் குறிப்புகள்—பெயர் குறிக்கும் வருகைப் பட்டியல்—நிர்வகித்தல், அளவு, அளவைச் சரிபார்த்தல் மதிப்பிடுதல்—உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Rural Manpower Programme—Implementation of—Details of works to be executed—Guide-lines to be followed for execution—Nominal Muster Rolls—Maintenance of—Measurement and check-measurement of works—Valuation of—Instructions—Issued.

கிராம மனித சக்தித் திட்டத்தில் அடங்கியுள்ள வேலைகளை தகுந்த முறையில் நிறைவேற்றுவதற்கும், கடமைகளை சரிவர ஆற்றுவதற்கும் பின்பற்றப்படவேண்டிய வழிமுறைகள் அடங்கிய விளக்கமான உத்தரவுகள், கிராம நலதல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2223-ல் வெளியிடப்பட்டன. இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் இடையூறாக இருந்த சில இன்னல்களை தவிர்ப்பதற்காக, மேற்கண்ட ஆணையில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகளைத் திருத்தி, கிராம நல தல நிர்வாகத் துறையின் 1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 18-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 60-ல், உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. எனினும் அவ் வுத்தரவுகளுக்கிணங்க, பெயர் குறிக்கும் வருகைப் பட்டியலை (Nominal Muster Roll) நிர்வகிக்கையில், இன்னும் சில இன்னல்கள் வட்டாரத்தில் இருந்து வருவதாக கிராம வளர்ச்சி நெறியாளர் கூறியுள்ளார். எனவே சென்னை, தலைமைப் பொறியாளருடன் (நெடுஞ்சாலை, கிராம வேலைகள்), கிராம வளர்ச்சி நெறியாளர் கலந்தாலோசித்து, வருகைப் பட்டியல், வேலைகளின் அளவு (Measurement), வேலைகளின் அளவைச் சரிபார்த்தல் (Check-measurement) ஆகியவற்றை திருத்தியமைப்பது சம்பந்தமாக, சில கருத்துக்கள் தெரிவித்துள்ளார்.

2. கிராம வளர்ச்சி நெறியாளரின் கருத்துக்களை பரிசீலனை செய்த பின், அவற்றை ஏற்றுக்கொண்டு, கிராம நல தல நிர்வாகத்துறையின் 1965-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2223—ன் பத்தி 4-ல் துணைப் பத்தி 7-ல் அடங்கியுள்ள உத்தரவுகள், பிறகு கிராம நல தல நிர்வாகத் துறையின் 1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 18-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 60-ன் மூலம் திருத்தப்பட்டுள்ளவற்றிற்கு, ஒரு பகுதி திருத்தமாக, கீழ்க்கண்ட உத்தரவுகளை, அரசாங்கம் பிறப்பிக்கிறது.

(அ) பெயர் குறிக்கும் வருகைப் பட்டியலானது 'எல். எஃப். படிவ' த்தில் (L.F. Form) நிர்வகிக்கப்பட வேண்டும்; சம்பளம் பெற்றுக் கொண்டதற்கு அத்தாட்சியாக, கட்டை விரல் ரேகையை அந்தப் படிவத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும். பஞ்சாயத்துக்கள் சம்பளம் பட்டுவாடா செய்ததற்கும், ரொக்கப் பதிவேடு (Cash Book), போன்றவற்றில் கணக்கு வைத்துக் கொள்வதற்கும், அவையே தஸ்தாவேஜாக இருக்க வேண்டும்.

(ஆ) பஞ்சாயத்துக்கள் நிர்வகித்து வரும் அளவை புத்தகங்களிலுள்ள வேலைகளின் பேரில், அளவை, அளவைச் சரிபார்த்தல் ஆகியவற்றில் ஈடுபட்டு, அவற்றின் பேரில் பணம் அளிப்பதை மட்டுமே, பஞ்சாயத்து யூனியன்கள் வகைப் படுத்தும்.

(இ) பஞ்சாயத்து நிதிகளிலிருந்து, கூடுதலாக பணம் அளிக்கப்படாதிருப்பதை தவிர்ப்பதற்காக, பஞ்சாயத்து யூனியன் பொறியியல் அலுவலர்கள், பூர்த்தி செய்யப்பட்ட பெயர் குறிக்கும் வருகைப் பட்டியலை சரிபார்த்து, வேலைகளின் மதிப்பை விட கூடுதலாக பணம் அளிக்கப்படாதிருக்குமாறு கவனித்துக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு முறையும், பகுதித்—தொகை (Part-Payment) முடிவுத்தொகை,(Final Payment)யை அளிக்கும்போது, இக்காரியத்தை செய்யவேண்டும். இவற்றில் குறைபாடுகள் ஏதேனும் இருப்பின் அவற்றை வளர்ச்சி அதிகாரி (பஞ்சாயத்துக்கள்) யின் கவனத்திற்கு கொண்டுவரவேண்டும்; அவற்றை யெல்லாம் அவர் கிராமப் பஞ்சாயத்துக்களின் சோதனை, அல்லது தணிக்கை குறிப்புகளில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

* * *

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ம் தேதியிட்ட அரசாங்க குறிப்பாணை எண் 118799—ன் சுருக்கம்.)

——(o)——



G.N.—10A

## கிராமப் பஞ்சாயத்துக்கள் ரேடியோ லைசென்ஸ் கட்டணங்களைச் செலுத்துதல்.

## Panchayats—Village Panchayats—Payment of radio licence fees—Procedure—Orders—Issued.

'ரேடியோ லைசென்ஸ்'களை புதுப்பித்துக் கொள்வதற்காக, கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களால் அளிக்கப்படும் 'கொடுப்பு ஆணை' (Pay Order) களை தபால், தந்தித் துறை ஏற்றுக் கொள்வதில்லை என்ற விஷயம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. கிராம வளர்ச்சி நெறியாளர், சென்னை, போஸ்ட் மாஸ்டர் ஜெனரலுடன் கலந்தாலோசித்து, கிராமப் பஞ்சாயத்துக்கள், தபால், தந்தி துறைக்கு ரேடியோ லைசென்ஸ் கட்டணத்தைச் செலுத்த ஒரு சீரான நடைமுறையைப் பின்பற்ற வேண்டுமென்று சிபார்சு செய்துள்ளார். கிராம வளர்ச்சி நெறியாளரின் சிபாரிசை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, அதற்கேற்ப கீழ்க்கண்ட நடைமுறை பின்பற்றப்பட வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கிறது.

(2) ஒவ்வொரு பஞ்சாயத்திலும் உள்ள ரேடியோ பெட்டிகளின் எண்ணிக்கையை கணக்கில் கொண்டு, அவற்றிற்குரிய ரேடியோ லைசென்ஸ் கட்டணங்களை அப் பஞ்சாயத்தின் கணக்கில் ஒவ்வொரு ஆண்டும் பற்று வைக்க, அதற்கு தகுந்தவாறு ஒரு நிலையான அதிகாரத்தை ஆண்டுத் துவக்கத்தில் அல்லது அதற்கு முன்பாகவே, பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர், அவற்றின் ஆட்சி வரம்பிலுள்ள ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்திடமிருந்தும் பெற்றுக்கொள்ள வேண்டும். இதை கொடுப்பு ஆணையாகக் கொள்ளலாம். அந்த அதிகாரத்தின் பேரில், அவருடைய ஆட்சி வரம்பிலுள்ள எல்லாக் கிராமப் பஞ்சாயத்திற்கும் உரிய ரேடியோ லைசென்ஸ் கட்டணத்திற்காக, கருவூலத்தின் தல நிதி வைப்புக் கணக்கு I-ல், தபால், தந்தி துறையின் பெயருக்கு, 'செக்' (Cheque) எழுதி, அதையும் லைசென்ஸ் புத்தகங்களையும், சம்பந்தப்பட்ட தலைமை அஞ்சல் அலுவலகத்திற்கு, பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் அனுப்பி வைக்க வேண்டும். தலைமை அஞ்சல் அலுவலகம், அந்த 'செக்'கை பணமாக மாற்றிக்கொண்டு, அதன் பின்னர் லைசென்ஸ் புத்தகங்களை வழங்கும்.

அவ்வாறு செலுத்தப்பட்ட தொகையை, பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர், கிராமப் பஞ்சாயத்துக்களிடமிருந்து வசூலிக்க வேண்டும்; அதற்காக அந்தத் தொகையை சம்பந்தப்பட்ட கிராமப் பஞ்சாயத்தின் கணக்குகளில் பற்று வைத்து, அதை தல நிதி வைப்புக்கணக்கு II-லிருந்து, தல நிதி வைப்புக்கணக்கு I-க்கு சரி செய்ய வேண்டும். லைசென்ஸ் கட்டணங்களை செலுத்துவதற்காக, பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் 'செக்' எழுதும் காலத்தில், போதிய நிதி வசதி இல்லாத பஞ்சாயத்துக்கள் இருந்தால் அவற்றின் கணக்கில் சரி செய்யாது வைத்திருந்த தொகையை, அப்பஞ்சாயத்திற்குரிய வருவாய்களை அப்பஞ்சாயத்தின் கணக்கில் வரவு வைக்கும் சமயத்தில், இக்கட்டணத் தொகையைச் சரி செய்து கொள்ள வேண்டும்.

(3) இந்த உத்தரவுகளையெல்லாம் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள், மற்றும் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, இவ்வுத்தரவுகளெல்லாம் தவறாது பின்பற்றப்பட்டு, ரேடியோ லைசென்ஸ் கட்டணங்கள் காலம் தவறாது செலுத்தப்படுவதைக் கவனித்துக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் நீங்கலாக) கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(கிராம நல தல நிர்வாகத்துறையின் 1966-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2965-ன் சுருக்கம்.)

---

## மேய்ச்சல் நிலங்களை பஞ்சாயத்துக்கள் பாதுகாத்தல்.

## Panchayat Development Committee on Production Programme—Recommendation No. 61 at the Meetting held at Rajaji Hall in September 1964 regarding the preservation of grazing grounds by Panchayats—Instructions issued.

ஒவ்வொரு கிராமத்திலும் போதுமான மேய்ச்சல் வசதி ஏற்படுத்தப்பட வேண்டும் என்று 1964-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ம் தேதி அன்று நடந்த உற்பத்தி திட்ட வேலைகளுக்கான, பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழுவின் மூன்றாவது கூட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

(2) பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள புறம்போக்கு மேய்ச்சல் நிலங்களை தகுந்த முறையில் பயன்படுத்திக் கொள்வதற்கு, கீழ்க்கண்ட உத்தரவுகள் வெளியிடப்படுகின்றன :

(அ) புறம்போக்கு மேய்ச்சல் நிலங்கள் என்று பாகுபாடு செய்யப்பட்டு பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மேய்ச்சல் நிலங்களை மற்ற காரியங்களுக்கு தவறாக பயன்படுத்தக் கூடாது.

(ஆ) கழகத்தின் நிலையான உத்தரவிலுள்ள (Board Standing Order) ஆணைகளெல்லாம் பஞ்சாயத்து யூனியன்களால் தவறாது, பின்பற்

றப்படவேண்டும்; புறம்போக்கு மேய்ச்சல் நிலங்களை ஜாரி செய்யக்கூடாது.

(இ) பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியனின் வருவாயை அதிகரித்துக் கொள்வதற்குக் கூட, மேய்ச்சல் நிலங்களில் எதுவும் நடவு செய்யக்கூடாது. மேய்ச்சலுக்காக மட்டுமே அதை பயன்படுத்தவேண்டும். இது சம்பந்தமாக, கிராம நல தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 9-ம் தேதியிட்ட அரசாங்க குறிப்பாணை எண் 17524-ல் உள்ள பத்தி 4-க்கு, பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களின் கவனம் கொண்டுவரப்படுகிறது. நிலம் எதற்காக ஆரம்பக்காலத்தில் பயன்படுத்தப் பட்டு வந்ததோ, அது தவிர்த்து, வேறு எந்த காரியத்திற்கு அதை பயன்படுத்திக் கொள்ளவும், உள்ளூர் உர ஆதாரங்களை பெருக்குவதற்கு புதிய மரங்கள் அல்லது பயிர்களை நடுவதற்கும் கூட, மாவட்ட ஆட்சித் தலைவரின் முன் அனுமதியைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று அக் குறிப்பாணையின் பத்தி 4-ல் கூறப்பட்டுள்ளது. இவ்வுத்தரவுகள் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும். அம்மாதிரி சந்தர்ப்பங்களில் கூட, மேய்ச்சல் பகுதியின் ஓரத்தில் 3 அல்லது 4 வரிசைகளாக மரங்கள் நடப்படலாம்; அதனால் அப்பகுதி ஒதுக்கமாக அமைவதோடு, எவ்வித ஆக்கிரமிப்புகளையும் அது தடுக்கும்; அவை பிறகு தருவது, பழங்கள் மூலமாக சிறிது வருவாயும் கொடுக்கும்.

(ஈ) பஞ்சாயத்துத் தலைவர்கள், நகரப் பஞ்சாயத்துக்களின் நிர்வாக அதிகாரிகள், பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் ஆகியோர், இந்த உத்தரவுகளை யெல்லாம் கருத்தில் கொண்டு தங்களின் கவனத்தை இவற்றில் செலுத்தி, மேய்ச்சல் நிலங்களில் புற்களை உண்டாக்கி, கிராமக் கால் நடைகள் அவற்றை புசிக்க வகை செய்யவேண்டும்.

(3) இவ்வுத்தரவுகளையெல்லாம், தங்கள் யூனியனிலுள்ள எல்லா பஞ்சாயத்துத் தலைவர்களின் கவனத்திற்கும் கொண்டுவருமாறு பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(4) இவ்வுத்தரவுகளையெல்லாம் நகரப் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வருமாறு வருவாய்க் கோட்ட அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(கிராம வளர்ச்சி நெறியாளர் அலுவலகத்தின் 1966 ம் ஆண்டு ஜூன் மாதம் 13 ம் தேதியிட்ட குறிப்பாணை எண் 39250/66 ன் சுருக்கம்.)

——:0:——

## உதவி பெறும் பள்ளிகள், தல நிர்வாகங்களின் பொறுப்பிலுள்ள பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள், ஆசிரியர்களல்லாத அலுவலர்களுக்கு அதிக அகவிலைப்படி.

## Education—Educational Institutions—Aided and Local Body—Teaching and non—teaching staff—Increase of Dearness Allowance—Orders—Passed.

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் பிரிவு 67-ல் உள்ள, உட்பிரிவு (3)-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும், 1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சி மன்றங்கள் சட்டத்தின பிரிவு 70-ல் உள்ள, உட்பிரிவு (3)-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் பயன்படுத்தி, பஞ்சாயத்து யூனியன்கள், மற்றும், நகராட்சி மன்றங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள், ஆசிரியர்களல்லாத அலுவலர்கள், அகவிலைப்படியைப் பெறுவதற்காக, அவர்களின் சம்பள விகிதம், மற்றும் அதன் வரம்புகள் கீழ்க்கண்டவாறு மாற்றப் படுகின்றன என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

| சம்பள வரம்பு | அகவிலைப்படி விகிதம் |
|---|---|
| ரூ. 90-க்கு கீழ் | ரூ. 47 |
| ரூ. 90-முதல் ரூ. 150-க்கு கீழ் | ரூ. 70 |
| ரூ. 150-முதல் ரூ. 210-க்கு கீழ் | ரூ. 90 |
| ரூ. 210-முதல் ரூ. 400-க்கு கீழ் | ரூ. 110 |
| ரூ. 400-முதல் ரூ. 1,000-க்கு கீழ் | ரூ. 120 |

2. இந்த உத்தரவு 1966-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் தேதி முதல் அமுலுக்கு வரும்—அதாவது, 1966-ம் ஆண்டு டிசம்பர் மாதச் சம்பளம் 1967-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதியன்று கொடுக்கப்படுவதிலிருந்து அமுலுக்கு வரும்......

* * *

(3) தனியார் மேற்பார்வையிலுள்ள பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள், மற்றும் ஆசிரியர்களல்லாத அலுவலர்களுடன், ஆதார, ஆதார பயிற்சி பள்ளிகள், நடுத்தரப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், ஆங்கிலோ—இந்திய பள்ளிகள், கல்லூரிகளிலுள்ள மேற்கண்ட வகையினருக்கும், பத்தி 1-ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அகவிலைப்படி உயர்த்தப்படவேண்டுமென்று, அரசாங்கம் மேலும் ஆணை பிறப்பிக்கிறது.

(4) அகவிலைப்படியைக் கணக்கிடும்போது, விசேஷ சம்பளத்தையும் கணக்கில் சேர்த்து கொள்ளுமாறு அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

* * *

(கல்வி, பொதுச் சுகாதாரத் துறையின் 1966 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2149 ன் சுருக்கம்.)

## விதிகள்—1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம்—பஞ்சாயத்து யூனியன் மன்றங்களைப் பற்றிய விதிகள்—பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் கணக்குகளின் பேரில் தணிக்கை அறிக்கைகள் வழங்குவதற்கு கால வரம்பு—திருத்தங்கள்—வெளியிடப்படுகின்றன.

## Rules—Madras Panchayats Act, 1958—Rules relating to Panchayat Union Councils—Time—limit for issue of audit reports on accounts of the Panchayat Union Councils—Amendment issued.

பஞ்சாயத்து யூனியன் மன்றங்களிடமிருந்து ஆண்டுக் கணக்குகளை, தணிக்கை அலுவலகம் பெற்ற தேதியிலிருந்து, 12 மாத கால வரம்பிற்குள். அக்கணக்குகளின் பேரில் தணிக்கை அறிக்கைகள் வழங்கிவிடவேண்டுமென்று, கால வரம்பை நிர்ணயித்து, கிராம நலதல நிர்வாகத்துறையின் 30-6-1966 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1619-ல் அரசாங்கம் உத்தரவுகள் பிறப்பித்துள்ளது. மேற்கண்ட உத்தரவானது, அந்த ஆணை வெளியான தேதியிலிருந்து அமுல் செய்யப்பட்டால், அந்த தேதிக்குப் பிறகு வெளியிடப்பட்ட அல்லது வெளியிடப்படவேண்டிய எல்லா தணிக்கை அறிக்கைகளும், அந்த காலவரம்பை தாண்டிவிட்டதா என்பதை பரிசீலனை செய்து, அம்மாதிரியான விஷயங்களின் பேரில், தனித் தனியாக அறிவிப்புகள் பிரசுரிக்கப்படவேண்டியிருக்கும் என்றும், அதனால் இன்னல்கள் விளையும் என்றும் ஆய்வாளர் கூறியுள்ளார் எனவே மேற்கண்ட ஆணையில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகளை 1965-66-ம் ஆண்டு, மற்றும் அதற்கு மேற்பட்ட ஆண்டுகளுக்குரிய கணக்குகள் சம்பந்தப்பட்ட தணிக்கை அறிக்கைகளுக்கே செயல்படுத்தலாம் என்று அவர் கருத்துத் தெரிவித்துள்ளார். தல நிதி கணக்குகள் ஆய்வாளரின் மேற்கண்ட கருத்தின் பேரில், கிராம வளர்ச்சி நெறியாளரும் சிபாரிசு செய்துள்ளார்.

(2) மேற்கண்ட கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, அதற்கேற்ப, பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் கணக்குகள் பேரிலான தணிக்கை அறிக்கைகளை வெளியிடுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட காலவரம்பானது, 1965-66-ம் ஆண்டு, மற்றும் அதற்கு மேற்பட்ட ஆண்டுகளுக்குரிய கணக்குகள் சம்பந்தப்பட்ட தணிக்கை அறிக்கைகளுக்கே செயல்படுத்தப்பட வேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

* * *

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 20.10.1966 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2453-ன் சுருக்கம்.)

---

## ஓய்வூதியம்—ஆசிரியர்கள் ஓய்வூதிய விதிகள்—ஓய்வூதிய விஷயங்களைப் முடிவு செய்தல்—தாமதத்தை தவிர்த்தல்—உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Pension—Teachers Pension Rules—Disposal of cases—Avoidance of delay—Orders—Passed.

ஆசிரியர்கள் ஓய்வூதிய (Pension) விதிகளின்கீழ், ஓய்வூதிய விஷயங்களெல்லாம் முடிவு செய்யப்படுவதில், தாமதங்களை எவ்வாறு பெருமளவில் தவிர்க்கலாம் என்பதை உயர்நிலைக் கல்வி நெறியாளர், இடைநிலைக் கல்வி நெறியாளர் ஆகியோருடன் அரசாங்கம் பரிசீலனை செய்து, அதன் பேரில் அரசாங்கம் கீழ்க்கண்ட உத்தரவுகளைப் பிறப்பிக்கிறது.

(அ) இப்போதுள்ள முறைப்படி, ஆசிரியர்கள் ஓய்வூதிய விதிகளின்கீழ், ஓய்வூதியம் அல்லது பணிக்கொடை (Gratuity)யைப் பெறத் தகுதியுள்ள ஒவ்வொரு ஆசிரியரும், அவர் ஓய்வு பெறுவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னரே ஓய்வூதியம் பற்றி முறையான விண்ணப்பம் செய்யவேண்டும்.

(ஆ) ஓய்வூதியத்திற்கான முறையான விண்ணப்பங்களைப் பெற்றவுடன், நகராட்சி மன்றம், பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள், மாவட்ட கல்வி அதிகாரிகள் அல்லது பெண்கள் பள்ளிக்கூட ஆய்வாளர்கள் போன்றோர், அவ்விண்ணப்பங்களின் பேரில் மேற்கொள்ள வேண்டிய சடங்குகள் எல்லாவற்றையும் முடித்து, அந்த ஓய்வூதிய தஸ்தாவேஜுகளையெல்லாம்—அவற்றை ஆசிரியர்களிடமிருந்து பெற்ற ஒரு மாதத்திற்குள்—சென்னை, கணக்காய்வுத் தலைவரை (Accountant-General) அடைந்து விடுமாறு பார்த்துக்கொள்ளவேண்டும்.

(இ) ஓய்வூதியத்திற்கு அனுமதி வழங்கி முடிவான உத்தரவுகளை பிறப்பிக்க தாமதம் ஏற்படக்கூடும் என்று எதிர்ப்பார்க்கப்படும் விஷயங்களிலெல்லாம், கணக்காய்வுத் தலைவர், ஆசிரியரின் சேவையை ஆரம்பமாக பரிசீலித்து, ஆசிரியருக்குக் கிடைக்கக்கூடும் ஓய்வூதியத் தொகையில், 75 சதவீதத்திற்கு சமமான ஒரு தொகையை

'எதிர்பார்க்கப்படும் ஓய்வூதியமாக (Anticipatory Pension), கருதி அதற்கு மாவட்டக் கல்வி அதிகாரி அல்லது பெண்கள் பள்ளிக்கூட ஆய்வாளர்கள் அல்லது ஆங்கிலோ இந்திய பள்ளிக்கூடங்கள் ஆய்வாளர் அல்லது உயர்நிலைக் கல்வி கூட்டு நெறியாளர் அனுமதி வழங்கலாம்.

(2) ஓய்வூதியத்திற்குரிய விண்ணப்பங்களின் அமைப்பு ஒரு சீராக நிர்ணயிக்கப்பட்டுள்ளன ; அவ்விண்ணப்பங்களை அச்சிட்டு, அவற்றை ஆய்வு அதிகாரிகளுக்கு வழங்குமாறு எழுது பொருள் அச்சக நெறியாளர் கோரப்பட்டுள்ளார். எனவே, ஓய்வூதிய தஸ்தாவேஜுகளை சீக்கிரமாகவும், சுலபமாகவும் தயாரிக்க வசதியாக இருப்பதற்கு, அவரவர்களுக்கு தேவையான இப்படிவங்களையெல்லாம் தங்கள் கீழுள்ள அதிகாரிகள் பெற்றுக்கொள்வதை, இடைநிலைக் கல்வி நெறியாளர், உயர்நிலைக் கல்வி நெறியாளர் கவனித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(3) ஆசிரியர்களின் ஓய்வூதிய தஸ்தாவேஜுகளின் பேரில் எல்லா நிலைகளிலும் வெகு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, எவ்வகையிலும் ஓய்வூதியத்திற்கோ அல்லது பணிக்கொடைக்கோ அனுமதி வழங்குவதில் தாமதம் ஏற்படாதவாறு நகராட்சிகள், பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள், நகரமைப்புக்களின் நிர்வாக அதிகாரிகள், உதவிபெறும் பள்ளிகள், கல்லூரிகளின் நிர்வாகிகள் மற்றும் ஆய்வு அதிகாரிகள் ஆகியோர் பார்த்துக்கொள்ளவேண்டும். சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் தேவையான உத்தரவுகள் பிறப்பிக்கும்படி இடைநிலைக் கல்வி நெறியாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

* * * * *

(கல்வி, பொதுச் சுகாதாரத் துறையின் 1966 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1485-ன் சுருக்கம்.)

—o—

## கட்டிடங்கள்—வட ஆர்க்காடு மாவட்டம்—பொதுப்பணித்துறை—சோளிங்கபுரம் நகரப் பஞ்சாயத்து இயங்கிவரும் கட்டிடம்—நிலம், கட்டிடத்தை சோளிங்கபுரம் நகரப் பஞ்சாயத்திற்கு மாற்றுதல்—உத்தரவிடப்படுகிறது.

## Buildings—North Arcot District—Public Works Department—Buildings occupied by Sholinghur Town Panchayat—Alienation of land and building to the Sholinghur Town Panchayat—Ordered.

பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான கட்டிடம் ஒன்றில், சோளிங்கபுரம் நகரப் பஞ்சாயத்து (வட ஆர்க்காடு மாவட்டம்) இயங்கி வருகிறது. கடந்த அறுபது ஆண்டுகளாக அக் கட்டிடத்திலேயே அப் பஞ்சாயத்து இயங்கி வருவதாலும், அக் கட்டிடத்தை பழுது பார்த்து, விருத்தி செய்ததில், பஞ்சாயத்து பெருமளவில் செலவு செய்திருப்பதாலும், அக் கட்டிடத்தின் உரிமையை பஞ்சாயத்திற்கு மாற்றித் தந்துவிட வேண்டுமென்று, சோளிங்கபுரம் நகரப் பஞ்சாயத்து தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்கண்ட பத்தி 1-ல் கண்டுள்ள சோளிங்கபுரம் பஞ்சாயத்து தலைவரின் வேண்டுதலின் பேரில், வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் சிபாரிசு செய்துள்ளார். அக் கட்டிடம் அமைந்துள்ள நிலத்தின் மதிப்பு, மற்றும் அக் கட்டிடத்தின் தேய்மான மதிப்பு ஆகியவை பஞ்சாயத்தினிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும் என்ற நியதிக்கு உட்பட்டு, வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவரின் சிபாரிசுக்கு, தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்) சம்மதம் தெரிவித்துள்ளார். இந்த குறிப்பிட்ட கட்டிடமானது, பொதுப்பணித் துறையின் சோளிங்கபுரத்திலுள்ள பிரிவு அலுவலகம் இயங்குவதற்காக ஒதுக்கப்பட்ட ஒரு கட்டிடம் என்றும், அவ்வலுவலகம் தற்போது ஒரு தனியார் வாடகைக் கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது என்றும், எனவே, பொதுப்பணித் துறையின் பிரிவு அலுவலகம் இயங்குவதற்கு புதிய கட்டிடம் ஒன்று கட்ட அரசாங்கம் அனுமதி வழங்கலாம் என்றும், தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்) மேலும் கூறியுள்ளார்.

வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர், மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்) ஆகியோரின் சிபாரிசுகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு, தற்போது சோளிங்கபுரம் நகரப் பஞ்சாயத்து (வட ஆர்க்காடு மாவட்டம்) இயங்கிவரும், பொதுப் பணித்துறைக்குச் சொந்தமான நிலம், கட்டிடம் ஆகியவற்றின் உரிமை கீழ்க் கண்ட வரம்புகளுக்குட்பட்டு, சோளிங்கபுரம் நகரப் பஞ்சாயத்திற்கு மாற்றப்பட வேண்டுமென்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

(அ) நிலத்தின் மதிப்பு, வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவரால் நிர்ணயிக்கப்பட்டு, கட்டிடத்தின் தேய்மான மதிப்பு, பொதுப்பணித் துறையால் கணக்கிடப்பட்டு தெரிவிக்கப்பட்டதன் பேரில், அவை வசூலிக்கப்பட வேண்டும்.

(ஆ) வருங்காலத்தில், எக்காரியத்திற்கேனும் அந்நிலம் அரசாங்கத்திற்கு தேவைப்பட்டால், அதை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும்.

(4) மேற்கண்ட பத்தி 3-ல் உத்திரவிடப்பட்டுள்ளபடி, நிலம் மற்றும் கட்டிடத்தின் உரிமைகளை, சோளிங்கபுரம் நகரப் பஞ்சாயத்திற்கு மாற்றிக் கொடுக்க, தேவையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளும்படி வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(5) சோளிங்கபுரத்திலுள்ள பொதுப் பணித் துறையின் பிரிவு அலுவலகம், தற்போதுள்ளவாறே, வாடகைக் கட்டிடத்தில் தொடர்ந்து செயல்பட வேண்டும்.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 12-10-1966 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2443ன் சுருக்கம்.)

——(o)——

## தமிழ்நாடு அரசினர் கிராமசேவக்குகள் பணியாளர் துறை—விசேஷ விதிகளுக்குத் திருத்தம்—வெளியிடப்படுகிறது.

## Public Services—Subordinate Services—Madras Gramasevaks Service—Amendment to Special Rules—Issued.

கிராம நல தல நிர்வாகத்துறையின் 1964-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2155-ல் வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு அரசினர் கிராம சேவக்குகள் பணியாளர் துறை விதிகள்படி, கிராம சேவக்குகள் பதவிக்கு எடுத்துக்கொள்ளப்படும் ஒவ்வொருவரும், தமிழில் 40 சதவிகிதம் குறைவில்லாதவாறு மதிப் பெண்கள் (Marks) பெற்று, எஸ். எஸ். எல். சி., தேர்வை முடித்தவராக அல்லது பொதுக் கல்வித்துறை நெறியாளரால் (Director of Public Instruction) வழங்கப்பட்ட 'ஆதார (கீழ்நிலை) நிலையைக் கடந்த சான்றிதழை [Post Basic (Lower) Certificate) பெற்றவராக அல்லது அரசியல் தியாகிகள் சம்பந்தப்பட்டவரை அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் எட்டாவது வகுப்பு அல்லது மூன்றுவது படிவத்தில் தேர்ச்சி அடைந்தவராக அல்லது முன்னாள் ராணுவத்தினர் சம்பந்தப்பட்டவரை அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் எட்டாவது வகுப்பு அல்லது மூன்றுவது படிவம் அல்லது இந்திய ராணுவ வகுப்பு II-ல் (Indian Army Class II Standard) தேர்ச்சியடைந்தவராக இருக்க வேண்டும். கிராமசேவக்குகள் பதவி மற்றும் இதர பணித் துறைகளில் மலை வாழ் மக்கள் போதிய பிரதிநிதித்துவம் பெறுவதற்கு, அவர்களுக்கு சாதகமாக கல்வி பற்றிய தகுதிகளில் சலுகை அளிக்கப்பட வேண்டுமென்று, 1965-ம் ஆண்டு ஜூலை மாதம், ஸ்ரீநகரில் நடைபெற்ற சமுதாய வளர்ச்சி, பஞ்சாயத்து ராஜ் கூட்டத்தில் சிபாரிசு செய்யப்பட்டது. மேலும் மலைப் பகுதி வட்டாரங்களில் பணிபுரியும் கிராமசேவக்குகளில், குறைந்தது 75 சதவீதம் மலைவாழ் மக்களாக இருக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது. இந்திய அரசாங்கத்தின் சிபாரிசை, கிராம வளர்ச்சி நெறியாளருடன் அரசாங்கம் பரிசீலனை செய்து, அதற்கேற்ப, மலைவாழ் சமூகத்தினர், மூன்றுவது படிவம் அல்லது எட்டாவது வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுமென்பது, அவர்களின் கல்வி பற்றிய தகுதியாக இருக்க வேண்டுமென்றும், அதற்கேற்ற முறையில் தமிழ்நாடு அரசினர் கிராம சேவக்குகள் பணியாளர் துறையின் விசேஷ விதிகளுக்குத் திருத்தங்கள் வெளியிடப்பட வேண்டுமென்றும் உத்தரவு பிறப்பிக்கிறது.

(கிராம நல தல நிர்வாகத்துறையின் 1964-ம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2638-ன் சுருக்கம்.)

---

## ஒதுக்கப்பட்ட நிதிகளை தற்காலிகமாக மாற்றிக் கொள்ளுதல்—ஒப்புதல் அளிக்கும் அதிகாரத்தை கிராம வளர்ச்சி நெறியாளருக்கு அளித்தல்—உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Delegation—Panchayat Union Councils—Temporary diversion of earmarked funds by the Panchayat Union Councils—Power of ratification—Delegation to the Director of Rural Development, Madras—Orders—Issued.

ஒதுக்கப்பட்ட நிதிகளை (Earmarked Funds) சில வரம்புகளுக்குட்பட்டு தற்காலிகமாக மாற்றிக்கொள்ள, பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு அனுமதி வழங்கி, கிராம நல தல நிர்வாகத்துறையின் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 990-ல் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

2. மேற் கூறப்பட்ட ஆணையிலுள்ள உத்தரவுகளுக்கு எதிராக பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் நிதி மாற்றங்கள் செய்து விடுவதால், அவ்வித மாற்றங்களுக்கு ஒப்புதல் அளிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து தமக்கு வரும் கோரிக்கைகளின் பேரில், ஒப்புதல் உத்தரவு

(Ratification Orders) பிறப்பிக்க, அவை திரும்ப அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன என்று கிராம வளர்ச்சி நெறியாளர் கூறியுள்ளார். எனவே, நிர்வாகத்தின் சௌகரியத்தை முன்னிட்டு, ஒதுக்கப்பட்ட நிதிகளை, தற்காலிகமாக மாற்றிக் கொள்ளுதலின் பேரில், ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் தமக்கு அளிக்கப்பட வேண்டுமென்று, கிராம வளர்ச்சி நெறியாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற் கூறப்பட்ட நிலையில் இச் சிபாரிசை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, ஒதுக்கப்பட்ட நிதிகளை பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், தற்காலிகமாக மாற்றங்கள் செய்து விடும் விஷயங்களில் பேரில், மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகளின் மீது, ஒப்புதல் உத்தரவுகள் பிறப்பிக்கும் அதிகாரத்தை கிராம வளர்ச்சி நெறியாளருக்கு அரசாங்கம் அளிக்கிறது.

(கிராம நல தல நிர்வாகத்துறையின் 1966-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2951.)

—(o)—

## நகரமைப்பு—மதுக்கரை நகரமைப்புக் குழு (கோயம்புத்தூர் மாவட்டம்)—உறுப்பினர்கள்—நியமனம்—உத்தரவிடப்படுகிறது.

## Township—Madukkarai Township Committee (Coimbatore District)—Members—Appointment—Ordered.

**1963**-ம் ஆண்டு எப்ரல் மாதம் 6-ம் தேதியிட்ட செயின்ட் ஜார்ஜ் கோட்டை விசேஷ அரசிதழின், பக்கம் 4-ல் வெளியிடப்பட்டுள்ள, கிராம நல தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு எப்ரல் மாதம் 4-ம் தேதியிட்ட, 1963-ம் ஆண்டு, 174-ம் எண்ணுள்ள, அறிவிப்பு II–2-ல் வெளியிடப்பட்டுள்ள நெறிமுறைகளில் (Directions) நெறிமுறை 2 (iii)-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தியும், கிராம நல தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு எப்ரல் மாதம் 6-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 801-ல் உள்ள உத்தரவுகளுக்கு பகுதி மாற்றங்களாகவும், தமிழ்நாடு கவர்னர் அவர்கள், மேற்கண்ட அரசாங்க ஆணையில் இனம் (3), மற்றும் (9)-ல் குறிப்பிடப்பட்டுள்ள மதுக்கரை, ஏ.சி.சி. லிமிடெட், நிர்வாக அதிகாரி மற்றும் மதுக்கரை, ஐ.என்.டி.யு.சி. தொழிலாளர் யூனியன் தலைவர், காலஞ்சென்ற திரு சி. என். ராமசாமி ஆகியோரின் இடங்களில், முறையே, மதுக்கரை, அசோசியேடட் சிமெண்ட் கம்பெனி லிமிடெட், துணை நிர்வாகி, (விசேஷ அலுவல்) மற்றும் மதுக்கரை, நேஷனல் சிமெண்ட் தொழிலாளர் யூனியன், துணைத் தலைவர் திரு ஏ. அம்மாசை ஆகியோரை மதுக்கரை, நகரமைப்புக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறார்கள்.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 8—12—1966 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2824-ன் சுருக்கம்).

---

## தமிழ் வளர்ச்சி—தமிழில் பயனுள்ள நூல்கள், மொழிபெயர்ப்புகள் போன்றவற்றை வெளியிடுவதற்கு நிதியுதவி அளித்தல்—வல்லுநர்கள் அடங்கிய நிலைக்குழு—திருத்தியமைக்கப்படுகிறது.

## Tamil Development—Financial assistance for publication of valuable books, translations, etc., in Tamil—Standing Committee of experts—Reconstituted.

பொதுத் (தமிழ் வளர்ச்சி-1) துறையின் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2460-ல் அமைக்கப்பட்ட வல்லுநர்கள் அடங்கிய நிலைக்குழுவானது, 1966-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27-ம் தேதி முதல், மேலும் ஓர் ஆண்டிற்கு, கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு, திருத்தியமைக்கப்படுகிறது :—

1. தமிழ் வளர்ச்சி நெறியாளர் (திரு வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்)., தலைவர், (பதவியின் காரணமாக).
2. டாக்டர் எம். இராஜமாணிக்கம்.
3. மஹாவித்துவான் எம். வி. வேணுகோபால பிள்ளை.
4. திரு எஸ். சச்சிதானந்தம் பிள்ளை.
5. திரு கே. வி. ஜகன்னாதன்.
6. திரு எம்.பி. பெரியசாமி தூரன்.
7. தமிழ் வளர்ச்சி விசேஷ அதிகாரி (திரு ஏ.எஸ். ஞானசம்பந்தம்)

• • • •

[பொதுத் (தமிழ் வளர்ச்சி I) துறையின் 1966-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2630-ன் சுருக்கம்.]

குறிப்பு:— [தமிழில் பயனுள்ள நூல்களை வெளியிடுவதற்கு நிதி உதவி அளிக்கவேண்டுமென்று அரசாங்கம் முடிவுசெய்து, அதற்காக வல்லுநர்கள் அடங்கிய நிலைக்குழு ஒன்றை அரசாங்கம் ஏற்படுத்தியது. அக்குழு பயனுள்ள நூல்களை வெளியிடுவதற்கு நிதியுதவி அளிப்பதற்காக விதிகளை இயற்றியது. அவ்விதிகள் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவ்விதிகளின் தமிழாக்கம், சுருக்கமாக, "கிராம நலம்" 1966-ம் ஆண்டு நவம்பர் மாத இதழ், பாகம் 2, பக்கம் (vii)-ல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் விவரங்களை காண்க].

## விதிகள் – 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் – 'டெண்டர்'களைக்கோரி, பைசல் செய்தல் - திருத்தங்கள் – வெளியிடப்படுகின்றன.

## Rules - Madras Panchayats Act, 1958 - Invitation and disposal of tenders - Amendments - Issued.

பிற்சேர்க்கையிலுள்ள அறிவிப்பு செயின்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழில் பிரசுரமாகும்.

### பிற்சேர்க்கை

### அறிவிப்பு

1961-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன்கள் மன்ற 'காண்டிராக்டு'கள் (முறை, மற்றும் நிபந்தனைகள்) விதிகளுக்கு, [Madras Panchayat Union Councils Contracts (Mode and Conditions) Rules] 1961 கீழ்க்கண்ட திருத்தங்கள் செய்யப்படுகின்றன.

### திருத்தங்கள்

குறிப்பிட்ட விதிகளில், விதி 2-க்கு பதிலாக, கீழ்க்கண்ட விதி இட்டு நிரப்பப்படும்.

"2(1) பஞ்சாயத்து யூனியன்களால் அல்லது அவற்றின் சார்பில் செய்யப்பட வேண்டியதும், ரூ. 1,500-ம் அதற்கு அதிகமாகவும் பண மதிப்புள்ளதுமான வேலைகளுக்கு 'டெண்டர்கள்' (tenders) கோரப்படும். ரூ. 1,500-க்கு மேற்படாத வேலைகளுக்கு டெண்டர்கள் கோராமல், யூனியனுக்கு உட்பட்ட ஒரு பஞ்சாயத்திடம் மதிப்பீடு அளவுக்கு (Estimated rates) மேற்படாத விகிதத்தில் செய்ய, ஒப்படைக்கலாம்.

ரூ. 1,500-ம், அதற்கு அதிகமாகவும் மதிப்புள்ள வேலைகளையும் கூட, கீழ்க்கண்ட சந்தர்ப்பங்களில், 'டெண்டர்'கள் கோரும் முறையை ஒதுக்கி வைத்து, மதிப்பீடு அளவுக்கு மேற்படாத விகிதத்தில் செய்ய, ஒப்படைக்கலாம்.

(அ) தல ஆட்சி நிறுவனங்கள் பற்றிய தொகுப்பு விதிகளில் (Local Boards Manual) விளக்க உத்தரவு 402-ல் குறிப்பிட்டுள்ள 'A' முறை காண்டிராக்'டின் படி ஒப்படைக்கப்படும் பராமரிப்பு வேலைகள். ['A' முறை என்பது, ரோடு பராமரிப்பு வேலைகளுக்கு மட்டுமே உரியது. இதன்படி ஒரு மைலுக்கு இவ்வளவென ஒரு குறிப்பிட்ட தொகை, 'காண்டிராக்'டருக்கு, வருட முழுவதும் ரோடு பராமரிப்பை ஒழுங்காகக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் தரப்படும். இம்முறையில், வேலை அளவு கணக்கெடுப்பு (Measurement) கிடையாது.]

(ஆ) வருடாந்திர ரோடு பராமரிப்பு வேலைக்கான 'காண்டிராக்டு' முடிவான பிறகு, ரோடு சம்பந்தப்பட்ட, துணை பராமரிப்பு வேலை (Supplemental maintenance work) ஏதாகிலும் அவசியம் எனத் தோன்றினால், அத்தகைய வேலைக்கான 'காண்டிராக்டு' தொகை, முக்கிய முதல் பராமரிப்பு வேலைக்கான தொகையில் (Original maintenance amount) 50 சதவிகிதத்திற்கு மேற்படாமலோ, அல்லது ரூ 2,500. இதில் எது குறைவோ அந்த அளவுக்கு இருந்தால், அத்தகைய துணை பராமரிப்பு வேலையை மேற்கொள்ளலாம்.

(இ) ஒரு பஞ்சாயத்து தன் சொந்த நிதி ஆதாரங்களிலிருந்தோ பொது ஜனங்களிடமிருந்து ரொக்கமாக நன்கொடை வசூலித்தோ, ஒரு வேலையின் மதிப்பீட்டுச் செலவில் 25 சதவிகிதத்திற்குக் குறையாத பங்கைச் செலுத்தினால், அந்த வேலை எந்தப் பஞ்சாயத்தில் அமைந்திருக்கிறதோ அந்தப் பஞ்சாயத்திடம் ஒப்படைக்கலாம். அதற்கான தீர்மானம் ஒன்றை, அந்தப் பஞ்சாயத்து நிறைவேற்ற வேண்டும்.

25 சதவிகித நன்கொடையை முன் கூட்டி வசூலிக்க இயலாவிட்டால், அந்த நன்கொடை தொகைக்காக ஒவ்வொரு பட்டியலிலும் (bills) 25 சதவிகிதத்திற்கு மேற்படாமல், பிடித்துக்கொள்ளலாம்.

(ஈ) தனி நபர் ஒருவர் முன் வந்து, ஒரு வேலையின் மதிப்பீட்டுச் செலவில் 25 சதவிகிதத்துக்குக் குறையாத பங்கைச் செலுத்தினால், அத்தகைய வேலையை அவரே செய்ய விரும்பினால், அதற்கு, பஞ்சாயத்து, தீர்மானம் மூலம், முன் அனுமதி வழங்கினால், அந்த நபரிடம் அந்த வேலையை ஒப்படைக்கலாம்.

ஆனால் அந்த தனி நபர் செலுத்தும் பங்கு, 25 சதவிகிதத்திற்குக் குறைவாக இருந்தால், அதைச் சரிக்கட்டுவதற்காக பஞ்சாயத்தோ, பஞ்சாயத்து யூனியனோ, தரும் நன்கொடைப் பங்கை சேர்த்துக் கணக்கிடக்கூடாது. மேலும், அந்த நபர், அந்த வேலையை வேறு ஒரு 'காண்டிராக்டரிடம் ஒப்படைக்கவும் கூடாது.

(உ) இந்த வகைகளைச் சாராத வேறு எந்த வேலையையும், வட்டாரத்தில் இயங்கக்கூடிய தொழிலாளர் வேலை ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கத்திடம் (Labour Contract Co-operative Society) மதிப்பீடு அளவுக்கு மேற்படாத விகிதத்தில் செய்ய, ஒப்படைக்கலாம்.

இந்த விதிகளில் காணப்படும் எதுவும் கிராம திட்டப் பணிகள் (Rural Works Programme) [கிராம மனித சக்தி திட்டம் (Rural Man-power Programme)] சம்பந்தமான வேலைகளை ஒப்படைப்பது, நிறைவேற்றுவது பற்றிய முறையை, பாதிக்காது.

(கிராம நல தல நிர்வாகத்துறையின் 2–1–1967 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 8–ன் சுருக்கம்.)

—0—

# பஞ்சாயத்து யூனியன்கள்—ஆணையாளர்கள், தலைவர்கள்—அலுவலக நடைமுறை, காரியங்களை யொட்டிய விதிகள்—மேலும் விளக்க உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

# Panchayat Unions—Commissioners and Chairmen—Office procedure and rules of business—Further instructions—Issued.

பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், ஆணையாளர்களுக்கிடையே நல்லுறவை நிலைபெறச் செய்ய விரிவான விளக்க உத்தரவுகள், கிராம நல தல நிர்வாகத்துறையின் 1962-ம் ஆண்டு நவம்பர் மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2496-ல் பிறப்பிக்கப்பட்டன. அவ்விளக்க உத்தரவுகள் சில விஷயங்களில் பின்பற்றப்படுவதில்லை யென்றும், அவற்றை வலியுறுத்துதல் பயன விக்கும் என்றும் முறையிடப்பட்டுள்ளது. எனவே, கிராம வளர்ச்சி நெறியாளருடன், அவை பற்றி அரசாங்கம் ஆய்வு நோக்குடன் பரிசீலனை செய்து, மேற்கண்ட விளக்க உத்தரவுகளை வலியுறுத்த விரும்புகிறது.

2. **வருவாய்க்கோட்ட அதிகாரிகள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களின் மாதம் இருமுறை கூட்டம்.**

வருவாய்க்கோட்ட அதிகாரிகள், மாதம் இருமுறை பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்றும், அந்தக் கூட்டங்களில் அடுத்து நடைபெறவிருக்கும் மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில் கொண்டுவரப் படவிருக்கும் விஷயங்கள் பற்றி பூர்வாங்க ஆலோசனை நடத்த வேண்டும் என்றும், அதோடு பஞ்சாயத்து யூனியன்களின் அன்றாட அலுவல்கள் சம்பந்தமாக வருவாய்க் கோட்ட அதிகாரியோ, யாரேனும் ஒரு பஞ்சாயத்து யூனியன் தலைவரோ கொண்டு வரும் விஷயம் பற்றியும் விவாதிக்க வேண்டும் என்று விளக்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. எனவே அவ்விளக்க உத்தரவுகள் எல்லாம் தவறாது பின்பற்றப்பட்டு, அத்தகைய கூட்டம் மாதம் இருமுறை தவறாமல் நடக்கும்படி வருவாய்க் கோட்ட அதிகாரிகள் பார்த்துக்கொள்ள வேண்டும்.

3. **பஞ்சாயத்து யூனியன்களின் கடிதப் போக்குவரத்து.**

ஏற்கனவே உள்ள உத்தரவுகளின் படி, பஞ்சாயத்து யூனியன்களுக்கு வரும் தபால்களும், அங்கிருந்து வெளியே செல்லும் தபால்களும் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மூலமாக நடைபெற வேண்டும். ஆனால் இந்த உத்தரவுகள் நடைமுறையில் பின்பற்றப்படுவதில்லை யென்று முறையீடுகள் வந்துள்ளன. எனவே மேற்கண்ட உத்தரவுகளை வலியுறுத்த அரசாங்கம் விரும்புகிறது. இந்த ஏற்பாடு தவறாமல் கடைப்பிடிக்கப்படுவதை கவனித்துக் கொள்ளுமாறு பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

4. **முடிவு செய்யப்பட்ட விஷயங்களை காட்டும் வாராந்திர அட்டவணை.**

முடிவு செய்யப்பட்ட விஷயங்களைக் காட்டும் வாராந்திர அட்டவணை (Weekly index of disposals) யைத் தயாரித்து, அதை தலைவரின் பார்வைக்கு அனுப்ப வேண்டும் என பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் இப்போது பணிக்கப்படுகிறார்கள். வாராந்திர அட்டவணை மட்டுமின்றி, முந்திய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை பற்றிய ஒரு குறிப்பையும் ஆணையாளர்கள் தயாரித்து ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மன்றக் கூட்டத்திலும் வைக்கவேண்டும்.

5. **வட்டார 'ஜீப்'கள்**

இது சம்பந்தமாக தனியே விளக்க உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்.

6. **காலாண்டு முன்னேற்ற அறிக்கை (Quarterly Progress Report)**

வேலைத்திட்டம், உற்பத்தித்திட்டம் போன்றவை சம்பந்தமாக, வேலைகள் முன்னேற்றத்தைக் காட்டும் அறிக்கைகளைத் தயாரித்து, அவற்றை மன்றத்தின் கூட்டத்தில் வைக்கும்படி பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களுக்கு ஏற்கனவேயே பணிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கைகள் மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டங்களில் பரிசீலனை செய்யப்படுகின்றன. மன்றக் கூட்டங்களில் இந்தக்காலாண்டு அறிக்கைகள் வைக்கப்படுவதை வலியுறுத்தியும், அதற்காக, ஒரு பருவ அறிக்கையை (Periodical) துவங்கி, அது சம்பந்தமாக எடுக்கப்படும் நடவடிக்கைகளை கவனித்து வரும்படியும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

7. **மன்றத்தின் பூர்வாங்க அலுவலர்கள் கூட்டம்.**

பஞ்சாயத்து யூனியன் மன்றக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்பு பஞ்சாயத்து யூனியன் தலைவர்—

(அ) வளர்ச்சி அதிகாரிகளின் வேலைகளைப் பற்றி தெரிந்துகொள்ளவும்,

(ஆ) பஞ்சாயத்து யூனியனில் நடைபெறும் வேலைகள், வேலைத் திட்டங்களின் விவரங்களை அறிந்து கொள்ளவும்,

(இ) ஆணையாளர், மற்றும் இதர வளர்ச்சி அதிகாரிகளுக்குத் தகுந்த

ஆலோசனை, வழிமுறைகள் கூறவும்—

அவர் தலைமையில் ஒரு பூர்வாங்க அலுவலர் கூட்டம் (Pre-Council Staff Meeting) கூட்டப்பட வேண்டுமென்று, அரசாங்கம் ஏற்கனவேயே சிபாரிசு செய்துள்ளது, அதற்கேற்ப மன்றத்தின் பூர்வாங்க அலுவலர்கள் கூட்டம் பஞ்சாயத்து யூனியன்களில் தவறாது நடக்கும்படி கவனித்துக்

கொள்ளுமாறு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படு கிறார்கள்.

8. கிராம நல தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு நவம்பர் மாதம் 16-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2496-ல் பிறப்பிக்கப் பட்டுள்ள விளக்க உத்தரவுகளெல் லாம், அப்படியே முழுவதுமாக தவறாது, பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களால் பின்பற்றப்படு கிறதா என்பதை பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களை சோதனையிடும் சமயங்களில், ஆய்வு அதிகாரிகள் கவனிக்க, அவ்வாய்வு அதிகாரி களுக்கு துணையாக இருக்கும் வகை யில், தகுந்த வினக்களை, வினாப் பட்டியலில் (Questionnaire) சேர்க்க வேண்டுமென்றும், கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இக்கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. எனவே, வினாப்பட்டியலுக்குரிய தகுந்த திருத்தங்களை அரசாங்கத்தின் ஒப்புதலுக்காக, கூறும்படி, கிராம வளர்ச்சி நெறியாளர் கேட்டுக்கொள் ளப்படுகிறார்.

•• •• •

(கிராம நல தல நிர்வாகத்துறையின் 1967ம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ம் தேதி யிட்ட அரசாங்க குறிப்பாணை எண். 65874 ன் சுருக்கம்)

---

## துவக்கப் பள்ளிகள் கருவிகளை வாங்கிக்கொள்ள அரசாங்க மானியம்.

## Elementary Education Provision of equipment for Primary Schools in the State Grants in aid—Sanctioned.

நாலாயிரத்து நானூறு துவக்கப்பள்ளிகள் (Primary Schools) 800 உயர் துவக்கப் பள்ளிகள் (Upper Primary schools)களுக்கு முறையே ரூ. 500, ரூ. 1,000 என்ற விகிதத்தில் அப்பள்ளிகள் ஒவ்வொன்றும் கருவிகளை (equipments) வாங்கிக்கொள்ள உதவி மானியம் அளிக்க வேண்டுமென்று, செகண்டரி கல்வித்துறை நெறியாளர் கோரிக்கை செய்துள்ளார். அரசாங்கம் இக்கோரிக்கையை பரிசீலனை செய்து, மேற்கண்ட விகிதங்களில், 1,600 துவக்கப்பள்ளி களுக்கும், 500 உயர்துவக்கப்பள்ளிகளுக்கும், கருவிகள் வாங்க உதவி மானியம் அளிக்கலாம் என்று முடிவு செய்துள்ளது.

(2) எனவே கீழ்க்கண்டவாறு இம்மாநிலத்தில் 1,600 துவக்கப் பள்ளிகளுக்கும், 500 உயர்துவக்கப்பள்ளி களுக்கும், ஒரு துவக்கப்பள்ளிக்கு ரூ. 500, ஓர் உயர் துவக்கப் பள்ளிக்கு ரூ. 1,000 என்ற விகிதத்தில், கருவிகள் வாங்க, 1966–67-ம் நிதி ஆண்டில், ரூ. 13 லட்சம் செலவு செய்வதற்கு அரசாங்கம் அனுமதியளிக்கிறது.

| பள்ளிகள். | பள்ளிகளின் எண்ணிக்கை. | செலவுத் தொகை. |
|---|---|---|
| | | ரூ. |
| (1) மாற்றப்பட்ட பகுதிகளிலுள்ள (Transferred areas) அரசாங்கப் பள்ளிகள். | 100 துவக்கப் பள்ளிகள், 10 உயர் துவக்கப் பள்ளிகள். | 60,000 |
| (2) அரசாங்க நிர்வாகத்தில் இல்லாத பள்ளிகள். | 300 துவக்கப் பள்ளிகள், 90 உயர் துவக்கப் பள்ளிகள். | 2,40,000 |
| (3) தல ஆட்சி நிர்வாகத்தில் உள்ள பள்ளிகள். | 1,200 துவக்கப் பள்ளிகள், 400 உயர் துவக்கப் பள்ளிகள். | 10,00,000 |
| | | 13,00,000 |

(3) அனுமதியளிக்கப்பட்ட தொகை, ஒவ்வொரு பள்ளிக்கும் நிர்ணயிக்கப்பட்ட உச்சவரம்பு ஆகியவற்றை கருத்தில்கொண்டே செலவு செய்யப்படவேண்டும். எந்தெந்த பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளுக்கு இம்மானியம் அளிக்கலாம் என்று தீர்மானிக்கும் விஷயத்தை, செகண்டரி கல்வித்துறை நெறியாளர், கிராம வளர்ச்சித் துறை நெறியாளருடன் கலந்தாலோசித்து, முடிவு செய்வார்.

(4) கருவிகளுக்காக மானியத்தை பெறும்பள்ளிகள், அக்கருவிகளை அரசாங்கத் தொழில் துறையின் விஞ்ஞானக் கண்ணாடி கருவிகள் தயாரிக்கும் பிரிவிலிருந்துதான். (Scientific Glass Ware Unit of the Industries Department) எந்த விலையானாலும், வாங்கிக் கொள்ளவேண்டும்.

(கல்வி, பொதுச் சுகாதாரத் துறையின் 1966ம் ஆண்டு நவம்பர் மாதம் 8ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1985ன் சுருக்கம்.)

**பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழுக்கள்—மத்திய பூர்வாங்க ஆலோசனைக் குழுவின் சில உறுப்பினர்கள்—உறுப்பினர்களாக நியமிக்கப்படுதல்—உத்தரவுகள்—பிறப்பிக்கப்படுகின்றன.**

**Panchayat Development Consultative Committees—Certain members of the Central Informal Consultative Committee—Appointment as members—Ordered.**

சமுதாய வளர்ச்சி, கூட்டுறவு அமைச்சகத்தின் மத்திய பூர்வாங்க ஆலோசனைக்குழு (Central Informal consultative Committee)வில் அங்கம் வகிக்கும் தமிழ்நாடு பாராளுமன்ற உறுப்பினர்களை, பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழுக்களிலும் உறுப்பினர்களாக நியமிக்க வேண்டும் என்று, இந்திய அரசாங்கத்தின் உணவு, விவசாய, சமுதாய வளர்ச்சி கூட்டுறவு (சமுதாய வளர்ச்சித்துறை) அமைச்சகம், இந்த அரசாங்கத்தை அவ்வப்போது கேட்டுக்கொள்கிறது. அதற்கேற்ப, கீழ்க் கண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழுக்களில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டார்கள்.

நிர்வாகம், வேலைத் திட்டங்கள் பற்றிய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழு :

1. திரு எஸ். கே. பரமசிவம்
2. திரு எம். ரத்தினசாமி
3. திரு டி. டி. ராமபத்ரன்

சமூக நலப் பணிகள் பற்றிய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழு :

4. திருமதி அக்கம்மா தேவி
5. திரு எம். மலைச்சாமி
6. திரு எஸ். சி. பாலகிருஷ்ணன்

உற்பத்தித் திட்டம் பற்றிய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழு :

7. திரு வி. கே. ராமஸ்வாமி
8. திரு ஜி. ராமச்சந்திரன்
9. திரு ஆர். வி. ரெட்டியார்
10. திரு வி. வைரத்தேவர்

2. முந்தைய சமுதாய வளர்ச்சி கூட்டுறவு அமைச்சகமானது, உணவு, விவசாய அமைச்சகத்துடன் சேர்க்கப்பட்டு விட்டதினால், கூட்டுறவுத் துறைக்கென ஒன்றும், சமுதாய வளர்ச்சி துறைக்கென ஒன்றுமாக, பாராளுமன்ற உறுப்பினர்களடங்கிய, இரண்டு மத்திய பூர்வாங்க ஆலோசனைக் குழுக்கள், திருத்தியமைக்கப்பட்டுள்ளன என்று இந்திய அரசாங்கம் இப்போது தெரிவித்துள்ளது.

கீழ்க்கண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், மேற்கண்ட குழுக்களின் உறுப்பினர்களாவர் :

சமுதாய வளர்ச்சித் துறை குழுவின் உறுப்பினர்கள்—

1. திரு ஆர். வி. ரெட்டியார்
2. திரு ஆர். முத்து கௌண்டர்
3. திரு பி. ஜி. கருத்திருமன்
4. திரு எம். மலைச்சாமி
5. திரு டி. வி. ஆனந்தன்

கூட்டுறவுத் துறை குழுவின் உறுப்பினர்கள்—

6. திரு ஆர். தர்மலிங்கம்
7. திரு. கே. பரமசிவம்
8. திரு எஸ். சி. பாலகிருஷ்ணன்
9. திரு ஜி. பி. சோமசுந்தரம்

3. மத்திய குழுக்களில் இப்போது புதிதாக சம்மந்தப் படுத்தப்பட்டுள்ள கீழ்க்கண்ட ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள், ஏற்கனவே பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழுக்களில் சம்மந்தப்பட்டுள்ள உறுப்பினர்களுடன், பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனை குழுக்களின் ஐந்தாவது கூட்டத்திற்கு அழைக்கப்பட வேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அவரவர்களின் பெயர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள குழுவின் கூட்டத்திற்கு அவர்கள் அழைக்கப்படுவார்கள்.

உற்பத்தித் திட்டம் பற்றிய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழு.

1. திரு. பி. ஜி. கருத்திருமன், எம். பி.
2. திரு ஜி. பி. சோமசுந்தரம், எம். பி.

நிர்வாகம், வேலைத் திட்டங்கள் பற்றிய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழு.

3. திரு ஆர். முத்து கௌண்டர், எம். பி.
4. திரு ஆர். தர்மலிங்கம், எம்.பி.
5. திரு டி. வி. ஆனந்தன், எம். பி.

சமூக நலப்பணிகள் பற்றிய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழு.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 1966ம் ஆண்டு அக்டோபர் 17ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2411ன் சுருக்கம்.)

## தமிழ்நாடு அரசினர் விடுப்பு விதிகள்—க்ஷயரோகம் அல்லது குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்ட அரசாங்க அலுவலர்கள்—அனுமதிக்கப்பட்டுள்ள விடுப்புகளை தளர்த்துதல் மற்றும் அவர்களுக்கு நிதியுதவி அளித்தல்—உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன

## Madras Leave Rules Leave admissible to Government Servants Suffering from Pulmonary Tuberculosis or Leprosy—Liberalisation and Financial assistance Orders issued.

மாதம் ரூபாய் 150-க்கு மேற்படாத ஊதியம் பெறும் அரசாங்க அலுவலர்கள் க்ஷயரோகம் (Pulmonary Tuberculosis) அல்லது குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்டு, அதற்காக வைத்தியம் செய்துகொள்ள, அவர்கள் சம்பளமில்லாத விடுப்பில் (extraordinary leave) இருக்கும் போது, அவர்களுக்கு உதவிப்படியாக, (ex-gratia allowance) அவர்களின் சம்பளத்தில் பாதித் தொகை—அதாவது மாதத்திற்கு அதிக அளவாக ரூபாய் 75, குறைந்த அளவாக ரூ. 40—இப்போது அவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. ரசாயன மருத்துவம் (Chemotherapy) கண்டுள்ள சமீப கால வளர்ச்சியின் காரணமாக, க்ஷயரோகத்திற்கு வைத்தியம் செய்வது அதிக நாட்களுக்கு நீடிக்காமலிருந்தாலும், அதற்கு அதிகமாகவே செலவாகி வருகிறதென்பதும், மருத்துவமனை அல்லது க்ஷயரோகமருத்துவமனை(Sanatorium) யில் சிகிச்சை பெற்றுவருபவர் மட்டுமே, அவரது குடும்பத்தில் பொருள் ஈட்டுபவராயிருந்துவிட்டால், சிகிச்சை காரணமாக அவரது குடும்பத்தில் பண நெருக்கடி ஏற்படுகிற தென்பதும், அதை உத்தேசித்தே, அந்த நோயாளி, சிகிச்சை முடிவுறும் முன்னரே மருத்துவமனை அல்லது க்ஷயரோக மருத்துவமனையை விட்டு சென்றுவிட வேண்டுமென்று தூண்டப்படுகிறார் என்பதும் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மருத்துவமனையைவிட்டு அவர் அனுப்பப்பட்டு விட்ட பிறகும் கூட, மேலும் ஓராண்டு கால அளவிற்கு அவர் சிகிச்சையை தொடரவேண்டியிருக்கிறதென்பதும், அக்காலங்களில் இப்போதுள்ள விதிகளின்படி, அவர் மருந்துகளை மட்டுமே இலவசமாக பெறமுடியும் என்பதும் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. க்ஷயரோக மருத்துவ மனையில் அவர் சிகிச்சை பெற்று வருகையில், அவர் சாப்பிட்டு பழக்கமான விசேஷ விலையுயர்ந்த உணவுகளையே அவர் மேலும் தொடர்ந்து சாப்பிடவேண்டியிருப்பதால், அவற்றின் பேரில் அவர் கூடுதலாக பணம் செலவழிக்க வேண்டியிருக்கிறது ; அதனால் அவருக்கு தாராளமாக பண உதவி அளிக்கவேண்டும்.

2. இப் பிரச்னையின் எல்லா அம்சங்களையும் அரசாங்கம் கவனமாக பரிசிலனை செய்து, க்ஷயரோகம் அல்லது குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்ட அரசாங்க அலுவலர்களில் ரூ. 150க்கு (மாதம் ஒன்றுக்கு) மேற்படாத சம்பளம் பெறும் அரசிதழ் பதிவுபெறாத எல்லா அரசாங்க அலுவலர்கள் விஷயத்திலும் இப்போதுள்ள உத்தரவுகளை கீழ்க்கண்டவாறு தளர்த்துவது என்று முடிவு செய்துள்ளது.

(அ) இரண்டு மாத அடிப்படை சம்பளத்திற்கு சமமான ஒரு தொகை, வட்டியின்றி முன் பணமாக அளிக்கப்படும் ; இத்தொகையை அந்த அரசாங்க அலுவலர் முழு விடுப்பு சம்பளம் (Full leave salary) பெறுகையில் 18 மாத தவணைகளில் வசூலிக்கப்படும்.

(ஆ) க்ஷயரோகம் அல்லது குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்ட அரசாங்க அலுவலர்களுக்கு இப்போது வைத்திய சான்றிதழின் பேரில் 18 மாதங்களுக்கு அரை சம்பளத்தில் அளிக்கப்படும் ஈட்டிய விடுப்பல்லாத விடுப்பானது (Unearned leave) இனி முழு சம்பளத்துடன் கூடிய விடுப்பாக அளிக்கப்படும். ஒரு சமயத்தில் அதிக அளவாக 120 நாட்களை விடுப்பு எடுத்துக்கொள்ளமுடியும் என்ற வரம்பிற்குட்பட்டு, அவருடைய கணக்கிலுள்ள எல்லா ஈட்டியவிடுப்பு (Earned leave)களையும் அவர் எடுத்துக்கொண்ட பிறகே, மேற்கண்ட சலுகையை அவர் அனுபவித்துக்கொள்ள முடியும்.

அந்த அரசாங்க அலுவலர் வேலையில் சேர்ந்த பிறகு, அவருக்கு மீண்டும் நோய் வந்துவிட்டால், மேற்கண்ட சலுகைகளை அவர் பெற முடியாது

3. மேற்கண்ட உத்தரவுகளெல்லாம் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து—அதாவது 1966ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் தேதி முதல்—அமுலுக்கு வரும்.

4. தமிழ்நாடு அரசினர் விடுப்பு விதி (Madras Leave Rules)களுக்கு வேண்டிய திருத்தங்கள் தனியே வெளியிடப்படும்.

(நிதித்துறையின் 1-12-1966ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1345 )

**மின்சாரம்—1958-ம் ஆண்டு மின்சார (வினியோக) சட்டம்—தமிழ்நாடு மின்சார வசதி ஆலோசனை மன்றம்—உறுப்பினர்கள்—மீண்டும் நியமிக்கப்பட்டு உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.**

**Electricity—Electricity (Supply) Act, 1958–Madras State Electricity Consultative Council Members—Reappointment—Ordered.**

**கீழ்க்கண்ட அறிவிப்பு செயின்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழில் பிரசுரமாகும் அறிவிப்பு**

1958-ம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வசதி ஆலோசனை மன்ற விதிகளிலுள்ள (Maras State Electricity Consultative Council Rules, 1958) விதி 1—ஏ—ன் கீழ், தமிழ்நாடு கவர்னர் அவர்கள், கீழ்க்கண்டவர்களை, அவரவர்களின் பெயர்களுக்கு எதிரே விவரிக்கப்பட்டுள்ள துறைகளின் பிரதிநிதிகளாக, 1967-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1-ம் தேதி முதல் 1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30-ம் தேதி வரையிலான காலத்திற்கு தமிழ்நாடு மின்சார வசதி ஆலோசனை மன்றத்தில் உறுப்பினர்களாக, மீண்டும் நியமிக்கிறார்கள்.

| வரிசை எண். | உறுப்பினர்கள் பெயர். | எத்துறையின் பிரதிநிதி. |
|---|---|---|
| 1. | திரு. சொக்கலிங்கம், எம். ஏ., பி. எல்., தலைவர், பஞ்சாயத்து யூனியன் மன்றம், நீடாமங்கலம், தஞ்சாவூர் மாவட்டம். | தல நிர்வாகம். |
| 2. | திரு. எச். கே. ராமசாமி, பி. ஏ., எம். ஐ. இ., மே/பா. தென் சென்னை மின்சார விநியோக கார்ப்பொரேஷன் லிமிடெட், திருச்சிராப்பள்ளி. | மின்சார விநியோக தொழில். |
| 3. | திரு. மு. சித. முத்தையா, "பெட்ஃபோர்ட் ஹவுஸ்" வேப்பேரி, சென்னை—7. | வணிகம். |
| 4. | திரு. ஜி. ஆர். கோவிந்தராஜுலு, தலைவர் தென் இந்திய நூல் ஆலை உரிமையாளர் சங்கம், தபால் பெட்டி எண் 96, கோயம்புத்தூர். | தொழில். |
| 5. | தலைமை மின்சார பொறியாளர், தக்ஷிண இரயில்வே, சென்னை—3. | போக்குவரத்து. |
| 6. | திரு. ஆர். சீனிவாச அய்யர், ஆத்தூர், செங்கற்பட்டு. | விவசாயம். |
| 7. | திரு. ஆர். எம். முனிரத்தினம், செயலாளர், தமிழ்நாடு தேசிய மின்சார தொழிலாளர்கள் சங்கம். | மின்சார விநியோகத் தொழிலில் பணிபுரியும் தொழிலாளர்கள். |
| 8. | திரு. ஜி. வெங்கட்ராமன், எம். எல். ஏ., சேலம். | மின்சாரம் துய்ப்போர். |
| 9. | திரு. வி. சங்கரன், எம். எல். ஏ., மதுரை. | ,, |
| 10. | திரு. பி. ஆர். சீனிவாச படையாச்சி, எம். எல். ஏ., தென் ஆர்க்காடு. | ,, |
| 11. | திரு. எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டியார், எம். எல். சி., கோயம்புத்தூர். | ,, |
| 12. | திரு. கே. ராமதாஸ், எம். எல். சி., வழுவத்தூர் கிராமம், திருக்கழுக்குன்றம், செங்கற்பட்டு மாவட்டம். | ,, |

(பொதுப் பணித்துறையின் 27-12 1966 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 3036.)

# கிராம நலம் சந்தாதாரர்களுக்கு

கீழ்க்கண்டுள்ள சந்தா எண்களுடைய "கிராம நலம்" சந்தாதாரர்களின் ஆண்டுச் சந்தா 1967–ம் ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களுடன் முடிவடைகிறது. 'கிராம நலம்' இதழ்களைத் தொடர்ந்து பெறுவதற்கு, இந்தச் சந்தா எண்களுடைய சந்தாதாரர்கள், தங்களுடைய சந்தா எண்ணைக் குறிப்பிட்டு, ஆண்டுச் சந்தா ரூ. 2 வீதம் சந்தாத் தொகையை "கிராம வளர்ச்சி நெறியாளர், செயிண்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9" என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் அனுப்பக் கோரப்படுகிறார்கள். சந்தா எண் "கிராம நலம்" இதழ்கள் அனுப்பப்படும் மேல் உறையில் சந்தாதாரரின் முகவரிக்கு மேல் பொறிக்கப்பட்டிருக்கிறது.

**சந்தா எண்கள்**

1967 மார்ச்சு மாதத்துடன் 'கிராம நலம்' சந்தா முடிவடைவது —

| | | | |
|---|---|---|---|
| 28854 | | | |
| 29070 | முதல் | 29209 | வரை |
| 30098 | ,, | 30125 | ,, |
| 30127 | ,, | 30329 | ,, |
| 30331 | ,, | 30333 | ,, |
| 30335 | ,, | 30339 | ,, |
| 30342 | ,, | 30349 | ,, |
| 30351 | ,, | 30370 | ,, |
| 30372 | ,, | 30377 | ,, |

1967 ஏப்ரல் மாதத்துடன் 'கிராம நலம்' சந்தா முடிவடைவது :—

| | |
|---|---|
| 28518 | |
| 30059 | |
| 1 முதல் 14 வரை | 106 |
| 16 | 107 |
| 26 | 114 |
| 27 | 124 முதல் 127 வரை |
| 29 | 131 ,, 137 ,, |
| 32 | 147 |
| 33 | 149 |
| 44 | 150 |
| 63 | 151 |
| 66 | 227 |
| 74 | 229 |
| 86 | 234 |
| 87 | 236 |
| 88 | 240 |
| 95 | 244 |
| 96 | 245 |
| 105 | |

**ஆணையாளர்கள் கவனத்திற்கு :**

*** பஞ்சாயத்து யூனியன்**

| | | | |
|---|---|---|---|
| 1 B | முதல் | 9 B | வரை |
| 12 B | ,, | 14 B | ,, |
| 16 B | ,, | 24 B | ,, |
| 29 B | ,, | 32 B | ,, |
| 34 B | ,, | 39 B | ,, |
| 43 B | | | |
| 45 B | ,, | 49 B | ,, |
| 51 B | | | |
| 60 B | | | |
| 61 B | | | |

## இந்த இதழில்

பக்கம்.


முன்னேறும் தமிழகத்தின் பெருமை வாய்ப்புகள். 1

வரண்ட பூமிக்கு ஒரு வானமுதம் 3

மக்கள் உணர்வைப் பண்படுத்தி, பரவசமூட்டும் கிராமக் கலைகள் 7

வசந்தம் வந்தது, மார்கழியில்! 9

சீரிய நல்வாழ்வுக்கு சிறு சேமிப்பு 13

மரங்களின் பராமரிப்பு—பஞ்சாயத்து நிறுவனங்களின் பொறுப்புகள் 21

புதிய பஞ்சாயத்தும் விவசாய வளர்ச்சியும் 25

கிராம மனித சக்தி திட்டம் 30

உணவு உற்பத்தியில் கிராம வாலிபர் மன்றங்களின் பங்கு 33

அடித்தளம்—(சிறுகதை)— 48


## அடுத்த இதழில்...

"கல்வெட்டுக்கள்"—(கவிதை)

திரு நடராஜன்,

உணவைப் பெருக்க உரம்

கேள்வியும்—பதிலும்

'நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்'


வெளியிடுபவர் :

திரு கா. திரவியம், ஐ.ஏ.எஸ்.

ஆசிரியர் :

திரு எஸ். வேங்கடசாமி, எம்.ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Director of Rural Development, Madras-9



# சர்வோதய தினம் (ஜனவரி 30-ம் தேதி)

சத்திய, அகிம்சை நெறிகளால், உலகத்திற்கே வழிகாட்டிய உத்தமர் அமரரான தினம், "தியாகிகள் தின"மாகவும், ஹரிஜன நல விழாவாகவும், "சர்வோதய தின"மாகவும் கொண்டாடப்படுகிறது.


# தமிழ் நாட்டில் வள்

## குடிநீ

REGD.NO.M.7277
© தமிழ் நாடு அரசாங்கம்
1967

அடுத்த
[196

**6500**
**கிராமங்களுக்கு**
குழாய் மூலம், குடிநீர் வசதி



மேல் நிலைத் தொட்டிகளில்
(OVER HEAD TANKS)
நீரைத் தேக்கி, குழாய் மூலம் குடிநீர் வசதி உள்ள
கிராமங்கள்:
**1971**

**எல்லா கி**
போதுமான அளவு,
குடி

**தமிழ் நா**
இப்போதுள்
எ
சுட
கிராமங்
REVENUE V
(மஜிரா

1196
2556